உ

வேலுமயிலுந் துணை.

சேது நாட்டுப் புலவர் திலகர்

**பகழிக்கூத்தர்**

இயற்றியருளிய

# திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்

**பண்டித நா. கனகராஜையர்**

இயற்றிய

**உரையுடன்.**

மதுரை. பி. நா. சி. பிரதர்ஸ், புக் ஷாப்,

ஏஜண்டு

**மு. கிருஷ்ண பிள்ளை அவர்களால்**

1939

மதுரை

விவேகாநந்தா பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

பதிப்புரிமை] [விலை ரூ 1-8-0

4533

## மகாமகோபாத்தியாய, தாக்ஷிணாத்திய கலாநிதி திராவிட வித்யாபூஷணம் பிரமஸ்ரீ

# Dr. உ. வே. சாமிநாதையரவர்கள்

## எழுதியுதவிய முன்னுரை.

---

கலிதீர்த்தருளும் கந்தவேளே கலியுகவரதராக யாவராலும் கொண்டாடப்படுகிறார். தமிழுக்கும் தலைவராகிய தெய்வம் அக்கடவுளே. இக்காலத்தில் ஆங்காங்கு முருகவேளைப் பலவாறு தொழுது இன்புறும் ஜனங்கள் மிகப் பலர். அக்கடவுளின் அரிய பெரிய திருவிளையாடல்களை நன்றாகக் கற்றறிந்து தொழுபவர் நற்பயனை அடைவாரென்பது திண்ணம். அதற்குச் சாதனமாக இருப்பவை சிறந்த தமிழ் வித்வான்கள் குகப்பெருமான் விஷயமாக இயற்றியுள்ள துதிநூல்களேயாகும்.

புதுக்கோட்டை 'ஜனமித்திரன்' அதிபராகிய ஸ்ரீமான் பி. எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள் சமீபத்தில் திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழை வெளியிட்டிருக்கிறார்கள். இது, பண்டித, வித்வான் நா. கனகராஜையரவர்கள் எழுதிய விரிவுரையுடன் கூடியது. அவருடைய பாஷைப் பயிற்சியையும் நூலாராய்ச்சி வன்மையையும் தமிழுலகம் நன்கு அறியுமாதலால் நான் அதைப்பற்றி எழுதுவது மிகையாகும்.

முருகக்கடவுளின் பக்தர்கள் இந்நூலை வாங்கிப் படித்துப்பார்த்து நற்பயன் அடைவார்களென்று மனமுவந்து தெரிவிக்கின்றேன்.

இன்னும் இவர்கள் மேற்கொண்டிருக்கும் முயற்சிகள் இனிது நிறைவேறும்படி செய்விக்கும் வண்ணம் செந்திலாண்டவனைத் துதிக்கின்றேன்.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

# நூலாசிரியர் வரலாறு.

5 MAY 1975

திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் என்ற அமுதகவியை அருளிய பகழிக்கூத்தர் என்ற புலவர் சேதுநாட்டகத்ததாகிய சன்னாசிக் கிராமம் என்ற சிற்றூரிற் பிறந்தவர். திருப்புல்லணைப் பெருமாளிடம் பக்திமிக்க வைணவராகிய தர்ப்பாசனர் என்பார் இப்புலவரது தந்தையாராவர். பகழிக்கூத்தர் என்னும் பெயர் சேது நாட்டில் உள்ள புகலூர் ஐயனார் திருப்பெயராகும். வைணவப் பெரியாராகிய தர்ப்பாசனர் தம் புதல்வரை அரிகர புத்திரர் பெயரால் அழைக்கக் கருதியது பின்னாளில் சைவ வைணவ மதபேதம் கருதாத ஒழுக்கினராக வாழும் பேற்றை நோக்கி யமைந்தது போலும்.

பகழிக்கூத்தர் என்ற புலவர் இளம் பருவத்தே வடமொழி தென்மொழிப் பயிற்சியில் வேட்கை மிக்குடையராய்த் தக்க ஆசிரியர்களை அடுத்து நன்கு பயின்றார். முருகனருளால் வரகவியாகவும் அறிஞருள் மிக்கவராகவும் அரசர் போற்றும் பெருமை பெற்றார். தமிழகத்துப் புலவர் பெருமக்கள் மிக்க விருப்போடு பயிலும் ஐம்பெருங் காப்பியங்களுட் சிறந்ததாகிய சீவக சிந்தாமணியைக் கற்றாரன்றி மற்றாரும் உற்றுணர்ந்து இன்புறல் வேண்டும் என்ற எண்ணத்தோடு 'சீவக சிந்தாமணிச் சுருக்கம்' என்ற செய்யுள் நூல் ஒன்று இயற்றினார். அஃது புலவர்க்கு விருந்தாய் விளங்கும் பேறு பெற்றது.

ஒரு சமயம் வயிற்று நோயால் மிகவும் வருந்தி மணி மந்திரம் மருந்து முதலிய ஒரு வகையாலும் நோய் நீக்கம் பெறாது கலியுக வரதனாகிய முருகப்பெருமானை மனமார நினைந்து உருகித் திருச்செந்திற் பிள்ளைத் தமிழ் பாடி அவன் கழன் மலரிற் சூட்டி உடல் நோயும் வினை நோயும் ஒழிந்து இன்புறும் பேறு பெற்றார். பின்பு திருச்செந் தூர்க்கு இந்நூலைக் கொண்டு சென்று அத்தலத்து உரிமை யாளர் முன்னிலையில் தமிழ்க்கடவுள் செவியேற்க அரங் கேற்றினார். அக்காலத்தே தலத்தார் புலவர்க்குத் தக்க மரியாதை செய்யச் சிறிது தாழ்த்தனரென்றும் முருகப் பிரானே தமது மாணிக்கப் பதக்கத்தைத் தமிழ்ப் புலமைப் பரிசிலாக உதவித் தனது தமிழறிவை வெளியாக் கினன் என்றும் ஒரு கர்ண பாரம்பரைச் செய்தி வழங்கு கின்றது. இங்ஙனம் தெய்வத்திருவருள் பெற்ற புலவ ரைப் பின்பு செந்திற் பதியாரும் பிற தமிழறிஞர்களும் உவந்து பாராட்டிப் போற்றினர்.

முருகனருளுக்கு உரிமை பூண்ட புலவர் திலகராகிய பகழிக்கூத்தர் திருச்செந்தூர்த் திருப்பதியிலேயே பல வாண்டுகள் வாழ்ந்திருந்து பின்பு தமது புகழுடம்பை நிலையுற நிறுத்தி இறைவன் கழன்மலர் சேர்ந்தனர் என்பர். இப்புலவர் தாம் பாடிய சீவக சிந்தாமணிச் சுருக்கத்தில் தம்மைப் பற்றிக் கூறிக் கொண்ட செய்தி பின்வரும் செய் யுளால் அறியப்படும்.

ஆர நாண் மலர்நெட்டிதழ்க்குவளை யகவயலில்
அகடுநொந் தொரு கோடி சங்கு
அடை கிடக்கக் குருகு பெடை யெனச் சிறகால்
அணைத்திடுஞ் செம்பி நாட்டு
வீர நாராயணச் சதுர்வேதமங்கலம்
விளங்கவே வந்த நெடுமால்
வேதியர் குலாதிபதி தர்ப்பாதனன் புதல்வன்
மிக்க பகழிக் கூத்தனே.

வீர நாராயண சதுர்வேதமங்கலம் என்பது பகழிக் கூத்தர் பிறப்பிடமாம். அதுவே சன்னசிக்கிராமம் எனப் பட்டது. இப்புலவர் மிகவும் சமீபகாலத்தவரேயாயினும் இன்னவாண்டில் வாழ்ந்தனர் என்று அறுதியிட்டுரைக்கத் தக்க ஆதாரவுகள் இந்நாளில் அகப்படவில்லை. தமிழ்த் தெய்வத்தின் அருளாற் பின் என்றேனும் புலப்படுமாயின் வெளியிடப்படும்.

# உரைப்பாயிரம்.

---

தமிழ்வளம் பொலியும் பாண்டிவள நாட்டின் தென் பால் உள்ள திருச்செந்தூர் என்னும் திருப்பதியிற் கோயில் கொண்டருளும் முருகப்பிரான் கழன் மலரிற் பதித்த மன முடைய பகழிக்கூத்தர் என்ற புலவர் திலகர் அருளிய பிள்ளைத் தமிழ், திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் என்ற பெய ரால் வழங்குகின்றது. பிள்ளைத்தமிழ்ப்பிரபந்தங்கள் பெரும் பான்மையாகத் தத்தமக்குரிய பாட்டுடைத் தலைவர் பெய ரோடு இணைந்து வழங்குவதே முறையாம். இம்முறை பற்றியன திருவெண்ணீற்றுமை பிள்ளைத் தமிழ், முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் முதலிய பலவாம். அபூர்வ மாகத் தலப் பெயரோடு பொருந்தி வழங்கும் பழனிப் பிள்ளைத் தமிழ் போல இப்பிள்ளைத் தமிழும் தலப் பெய ரோடு பொருந்தி வழங்குகின்றது. திருச்செந்தூரிற் கோயில் கொண்ட முருகப்பிரானைப் பிள்ளைப் பருவத்தின னாகப் பாவித்துப் பாடிய பிரபந்தம் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் எனப்பட்டது.

பிள்ளைத் தமிழ் என்பது தமிழ் மொழியில் அமைந்த தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகும். பாட்டுடைத் தலைவரைப் பிள்ளைப்பருவத்தினராகப் பாவித்து அவர்க்கு ஏற்பப் பத்துப் பருவங்கள் வகுத்துப் பாடப்பெறும் இப்பிரபந்தம் ஆண்பாற் பிள்ளைத் தமிழ் என்றும் பெண்பாற் பிள்ளைத் தமிழ் என்றும் இருவகைப் படும். இருதிறப் பிள்ளைத் தமிழிலும் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி என்ற ஏழு

பருவங்களும் பொதுவாக அமையும். ஆண்பாற் பிள்ளைத் தமிழிற் சிறுபறை சிற்றில் சிறுதேர் என்பன பின்மூன்று பருவங்களாம். பெண்பாற் பிள்ளைத் தமிழில் அம்மானை கழங்கு ஊசல் என்பன பின்மூன்று பருவங்களாம்.

இப்பிரபந்த விலக்கணத்தை வகுத்த சங்கத்துச் சான்றோர் மூன்று முதலாக மூவேழு திங்களளவும் பாடலாகும் என்றும் ஒன்று முதல் ஐந்தாண்டு வரையிலும் பாடலாகும் என்றும் இருபாற்படக் கூறினர். அவருள் இந்திர காளியார் என்ற புலவர் ஆண்பாற்கு ஈரெட்டாண்டளவும் பெண் பாற்குப் பூப்பு நிகழ்வளவும் என்று வகுத்து உணர்த்திய விதியும் உளது. அரசர் முடிசூடிய பிறகு பிள்ளைப் பாட்டு எற்றுக்கொள்ளார் என்று பரணர் கூறினர். பிள்ளைத் தமிழ்க்குரிய பருவத்தை அறுதியிட்டுரைத்திடல் இம் முன்னோர் சூத்திரங்களைப் பின்பற்றிய பின்னோர் நூல்களில் எழுந்த கொள்கைகளேயாகும். பெண் பாற் பிள்ளைத் தமிழிற் சிற்றில் இழைத்தல் சிறுசோறு ஆக்கல் ஊசல் காமனோன்பு என்ற பருவங்களை அமைத்தல் பொருத்தமாம் எனச் சங்கப்புலவர் கருதினர். ஆண்பாற் பிள்ளைத் தமிழ்க்குச் சிற்றில் சிதைத்தலை அமைத்த புலவர் பெருமக்கள், பெண்பாற் பிள்ளைத் தமிழ்க்குச் சிற்றில் அமைத்தலை வைத்ததும் பொருத்தமே. இதுவன்றி, பிறப்பு, ஓகை காப்பு, வளர்ச்சி அச்சமுறுத்தல், செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிற்றில், குழமகன் ஊசல், என்று பருவங்களை அமைத்த சூத்திரமும் சங்கப்புலவர் வாக்காக வழங்குகிறது. இம்முறையிலே ஆண்பாற்கும் பெண்பாற்கும் உரியவற்றை அறிந்து அமைத்துக்கொள்ளல் வேண்டும் என்பர்.

பின்னாளிலே பாட்டியல் இலக்கணம் வகுத்த புலவர்கள் பெண்பாற் பிள்ளைத் தமிழிற் பின் மூன்று பருவங்கள் கழங்கு அம்மானை ஊசல் எனவும் கழங்கினை நீக்கி நீராடல் கொள்ளலாம் எனவும் கொள்வாராயினர். காப்புப் பருவமே முதற்கண் அமைதற் குரிய பருவம் என்பது இருதிறப் புலவர்க்கும் ஒப்ப முடிந்ததாம். இப்பருவத்தே திருமால் துதி முதற்கண் அமைதல் வேண்டும் என்பதற்கு

"காப்பின் முதலெடுக்குங் கடவுடானே
பூக்கமழ் துழாய் முடி புனைந்தோனாகும்"

அவன்றான்

காவற் கிழவன் ஆகலானும்
பூவின் கிழத்தியைப் புணர்தலானும்
முடியும் கடகமும் மொய்பூந் தாரும்
குழையும் நூலும் குருமணிப் பூணும்
அணியுஞ் செம்மல் ஆகலானும்
முன்னுற மொழிதற் குரிய னென்ப"

(பன்னிருபாட்டியல்)

என்ற சூத்திரங்கள் விதி வகுப்பனவாம். காப்புப் பருவத்தே இன்னின்ன கடவுளரைப்பாடுதல் முறைபாகும் என்று முன்னோர் வகுத்துவைத்திருப்பினும் இம்முறை மாறித் தம் மனத்துக்கு உவப்பாகிய துதி கவிகளைப் பாடிய புலவரும் உளர். அத்தெய்வங்கள் பாட்டுடைத் தலைவரைக்காக்க என்று பாடுவதே காப்புப்பருவம் அமைதற்குரிய முறையாம் என்பது சங்கத்துசான்றோர் கருத்தாகும். திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழிலேயே இம்முறைக்கு மாறாக வந்த செய்யுட்களும் உள. கலைமகளைப் பராவிய செய்யு

ளின் இறுதியையும் அரிகரபுத்திரன் பகவதி காளி முதலிய கடவுளர் துதிகளின் வேண்டுகோண் முறையையும் நோக்கின் இவ்வேறுபாடு விளங்கும்.

சங்கத்துச் சான்றோர், பிள்ளைத் தமிழ் முதலிய பல வகைப் பிரபந்தங்கட்கு இலக்கணம் வகுத்திருப்பினும் அந்நாளில் அமைந்த பழமையான பிரபந்தங்கள் என்று கூறத் தக்கவை இந்நாளில் ஒன்றேனும் இல்லை. ஆயினும் இம்முறையைச் சிவனடியார்களும் திருமால் அன்பர்களும் நன்குணர்ந்து தத்தம் அருளிச் செயல்களிலே ஏற்ற வண்ணம் அமைத்துச் சென்றனர் என்பது வெளியாகின்றது. நாலாயிர திவ்யப் பிரபந்தத்திலே, முதலாயிரத்தில் உள்ள பெரியாழ்வார் திருமொழியில் முதற்பத்து, கண்ணன் திருவவதாரச்சிறப்பு, கண்ணனது திருமேனியழகைப் பாதாதி கேசாந்தமாக அனுபவித்தல், கண்ணனைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுதல் (தாலப்பருவம்) சந்திரனை அழைத்தல் (அம்புலிப் பருவம்) தவழ்கையில் தலைநிமிர்த்து முகமசைத்தாடுதல், (செங்கீரைப் பருவம்) கைகொட்டி விளையாடுதல் (சப்பாணிப் பருவம்) தளர் நடை நடத்தல், அணைத்துக் கொள்ள அழைத்தல், தன் முதுகைக் கட்டிக் கொள்ளும்படி கண்ணனை அழைத்தல் என்ற முறைவைப்பும் இரண்டாம் பத்தில் பூச்சி காட்டி விளையாடுதல், பாலுண்ண அழைத்தல், காது குத்தல், நீராட அழைத்தல் குழல் வாரக் காக்கையை அழைத்தல், திருவந்திக்காப்பிட அழைத்தல், காக்கையைக் கோல் கொண்டுவா என்றல், பூச்சூட அழைத்தல், ~~திருவந்திக் காப்பிட அழைத்தல்~~, பாலக்கிரீடை விசேடங்கள் முதலியனவாகப் பின்னமைந்த முறைவைப்பும் பெரும்பாலும் பிள்ளைத்தமிழ் இலக்கணத்துக்குப் பொருந்த அமைந்திருப்பது கவனிக்கத்

தக்கது. இவ்வாழ்வார் அருளிச் செயல்கள் மிக்க ஈடுபாட்டுடன் கண்ணனைப் பலபடப் பாராட்டிப் பிள்ளைப் பாட்டுப் பாடுவதிற் பெரிதும் முனைகின்றன. (பிள்ளைத் தமிழ் முறையிலே இவ்வருளிச் செயல்களுக்கு முன்னமைந்த செய்யுட்கள் இந்நாளில் அகப்படவில்லையென்பது தமிழர் அனைவரும் அறிந்த உண்மையே.)

இங்ஙனம் மனத்தை ஈடுபடுத்திச்சைசவபாவனையோடு தெய்வத்தின் மேற் பாடுதற்குரிய பாட்டே பிள்ளைத் தமிழ் என்பதும் முறைபாகும். அரசரையும் குருவாரையும் வள்ளலாரையும் புகழ்ந்து பாடிப் பின்னுளிலே சில பிள்ளைத் தமிழ்கள் எழுந்தன. அவை புலவரது புலமைத் திறத்தைப் பலபடியாக விளக்கப் பயன்படுவனவாயின. சமீப காலத்துப்புலவர் பெருமானுகிய திரிசிரபுரம் மீனுக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய சேக்கிழார் பிள்ளைத்தமிழ், தமிழ் பயில்வார் உள்ளத்தை உருக்கவல்ல பக்திச் சுவை சொட்டுவது. சேக்கிழார் என்ற புலவர் பெருமானைப் பாராட்டிப் பாடிய அப் பிள்ளைத் தமிழ், காப்புப் பருவத்தே வேறு எந்தப் பிள்ளைத் தமிழிலும் இல்லாத ஒரு புதுமையைக் கொண்டுளது. காப்புச் செய்யுட்கள் எல்லாம் சுந்தரர் அருளிய திருத்தொண்டத் தொகைச் செய்யுட்களின் முறையே அமைந்த அடியார்களைப் பரவுவனவாம். இம்முறை ஆசிரியப் பெருந்தகையாரது அடியார் பக்தியை நன்கு விளக்குவதாம்.

ஒவ்வொரு பருவத்துக்கும் பத்துச் செய்யுட்கள் அமைத்துப் பாடுவதே முறையென்று இலக்கண நூல்கள் கூறும். ஆயினும், ஒவ்வொரு பருவத்துக்கும் எவ்வேழு

செய்யுட்களை யுடைய சிவந்தெழுந்த பல்லவராயன் பிள்ளைத் தமிழும் ஐவைந்து செய்யுட்களையுடைய கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழும் மும்மூன்று செய்யுட்களையுடைய பழனிப் பிள்ளைத் தமிழும் இம்முறைக்கு மாறாக அமைந்துள்ளன. இலக்கணம் அமைத்தோர் அமைத்த வண்ணமே யாவும் இயலுதல் வேண்டும் என்பது உண்மைப் புலமை படைத்த புலவரிடம் செல்லாது என்பதே இதற்குச் சமாதானமாகும்.

திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் இனிய ஓசை நயத்துடன் செம்பாகமான நடையில் அமைந்துளதாயினும் அபூர்வமாகச் சில சில விடங்களில் கொண்டு கூட்டு முறையாற் பொருள் செய்தற் குரியதாக இருக்கின்றது. மூல பாடமுள்ள அச்சுப் புத்தகங்கள் சுத்த பாடம் இதுவென்று அறியக் கூடாத நிலையிற் பிழை பொதிந்துள்ளன. ஏட்டுப் பிரதிகளையோ கையெழுத்துப் பிரதிகளையோ தேடிப் பெற்று ஆராய்ந்து உண்மை காண்டற்குரிய சௌகரியங்கள் வாய்ப்பது அரிது. இறைவன் அருளைத் துணை கொண்டு நன் முயற்சி யொன்றில் இறங்கத் துணிவோர் இடர்ப் படுதலிலர் என்ற நியதியைக் கொண்டு இவ்வுரை எழுதப் படுகின்றது.

நா. கனகராஜையர்.

# சிறப்புப் பாயிரம்.

---

## நேரிசை வெண்பா.

செந்தமிழ்க்கு வாய்த்ததிருச் செந்திற் பதிவாழுங்
கந்தனுக்குப் பிள்ளைக் கவிசெய்தா—னந்தோ
திருமாது சேர்மார்பன் றேர்ப்பாகற் கன்பு
தருமால் பகழிக்கூத் தன்.

(இதன் பொருள்)

திருமாது-திருமகள், சேர்மார்பன்-ஸ்ரீவத்ஸம் என்ற மறுவின் உருவமாக வந்து பொருந்திய திருமார்பினையுடையானும், தேர்ப்பாகன் கு-பாரத யுத்தத்திலே அருச்சுனனுக்குத் தேர்ச்சாரதியாய் நின்றவனுமாகிய திருமாலுக்கு, அன்புதரும்-தமது மனத்துள் எழுந்த அன்பை அர்ப்பணம் செய்த, மால்-பெருமை யுடையாராகிய, பகழிக்கூத்தன்-பகழிக்கூத்தர் என்ற புலவர் பெருமான், செந்தமிழ்க்கு-செம்மையாய் அமைந்த தமிழ் மொழிக்கு, வாய்த்த-பரம குருவாய் அமைந்த, திருச்செந்திற்பதி - திருச்செந்தூர் என்னும் திருப்பதியிலே, வாழும்-கோயில் கொண்டருளுகின்ற, கந்தனுக்கு-முருகப்பிரானுக்கு, பிள்ளைக்கவி-திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் என்ற இப்பிள்ளைக் கவியை, செய்தான்-இயற்றிச்சமர்ப்பித்தார்.

இச்சிறப்புப்பாயிரம் "தன் ஆசிரியன் தன்னொடு கற்றோன் தன் மாணுக்கன் தகுமுரைகாரன்" என்ற இந்நால்வருள் எவர் இயற்றியது எனக் கூறப்படவில்லை. வடநூலார் வழக்குப்பற்றித் தமிழ்ப் பிரயோக விவேகம் இயற்றிய திருக்குருகூர் சுப்பிரமணிய தீக்ஷிதர் தம் நூற்குத் தாமே

உரையும் இயற்றிச் சிறப்புப்பாயிரமும் கூறினார். அதுபோல இப்பாயிரமும் இயன்றிருக்கலாம். பகழிக்கூத்தரே இச்செய்யுளையும் அவையடக்கம் நூற்பயன் என்று பின்வரும் செய்யுட்களையும் பாடிக்கொண்டார் என்று துணிவது பொருத்தமே. பகழிக்கூத்தர் வைணவராகையால் திருமாது சேர் மார்பனுக்கு அன்பு தருமால் எனப்பட்டார். செந்தமிழ்க்கு வாய்த்த என்ற அடைமொழியைக் கந்தனோடு பொருத்துவதேயன்றித் திருச்செந்திற்பதியோடும் பொருத்தலாம். தமிழ்ப் புலவர் பலர் பிறந்த பதியாகையாலும் தமிழ்ப் பெருமாள் வீற்றிருக்கும் பதியாகையாலும் தமிழ்ப் பிரபந்தங்கள் பலவற்றையேற்றுக்கொண்ட பதியாகையாலும் இது தகும். தனிச் சொல் 'அந்தோ' என்பது அசையாகும். நந்தேர் என்றபாடமும் உளது. அந்தப் பாடத்திற்குச் சங்கு வளையல்களால் அழகுபெறும் திருமகள் எனவும், சங்கம்தாங்கி அழகுபெறும் திருமால் என்றும் பொருள் கூறலாம். தேர்ப்பாகற்கு அன்புதரும் என்ற தொடர், பார்த்தசாரதித் திருக்கோலம் பூண்ட திருமாலிடம் ஆசிரியர் விசேஷ பக்தி பூண்டிருந்தார் என்பதை விளக்கும். திருமாலின் சௌலப்ய குணங்களை விளக்கும் திருக்கோலங்களுள் பார்த்தசாரதித்திருக்கோலம் மிகவும் சிறந்ததாகும் என்பது கிருஷ்ணகர்ணாமிருதத்தால் அறியப்படும். கந்தன் என்னும் சொல் ஆறுதிருவுருவங்களையும் ஒன்றாய் இணைத்து அறுமுகமும் பன்னிருகையும் பொருந்தவமைத்த திருக்கோலத்துக்குள்ள பெயராகும்—ஸ்கந்த: என்ற வடமொழி கந்தன் என்று வந்தது.

## அவையடக்கம்.

அத்தனையும் புன்சொல்லே யானாலும் பாவேந்தர்
எத்தனையுங் கண்டுமகிழ்ந் தெய்துவார்—முத்தி
புரக்குமரன் றந்தகந்தன் பூணணிமுந் நான்கு
கரக்குமரன் பிள்ளைக் கவி.

(இ-ள்) முத்தி புரக்கும் - தன்னை நினைவார்க்குப் பேரின்ப வாழ்வை அருளும், அரன் தந்த - சிவபிரான் அருளிய, கந்தன் - முருகனும், பூண் அணி - திருவாபரணங்களைப் பூண்ட, முந்நான்கு கரக்குமரன் - பன்னிருகைகளையுடைய குமரவேளும் ஆகிய பெருமானுக்குச் சூட்டப் பெற்ற, பிள்ளைக்கவி - திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ், அத்தனையும் - செய்யுள் எல்லாம், புன்சொல்லே ஆனாலும் -பொருள் பொருந்தாச் சொற்களாகவே அமைந்திருப்பினும், பாவேந்தர் - செய்யுள் செய்வதும் அதன் சுவையறிவதும் ஆகிய தமிழ்ப் பணியில் தலைமை பூண்ட பெரும் புலவர்கள், எத்தனையும் - எங்ஙனமாயினும், கண்டு - அந்நூலைப் பார்த்து, மகிழ்ந்து - இன்புற்று, எய்துவார் - அதனுள் அடங்கிய பொருளை அறிவார்கள்.

நூல் செய்வோர், தமது அடக்கத்தை நல்லவையோர்க்கு வெளியிடும் நோக்கத்தால் இயற்றுவது அவையடக்கமாம், அவை ஸபா என்ற வட சொற் சிதைவு. அவையடக்கம் நான்காம் வேற்றுமைத் தொகை— ஆசிரியர் தம் வாய்ப் பிறந்த சொற்களாகையால் புன் சொல் என்று கூறினரேயாயினும் குமரன் அடிமலரிற் சாத்திய பிள்ளைக் கவியாதலால் பாவேந்தர் அறிந்து மகிழ்தற்குத் தக்கதேயாகும் என்று குறிப்பித்தார். சொல்லினும் பொருள்சிறந்ததே. அப்

பொருள் இங்கு முருகன் துதியாதலால் புலவர்க்கு உவப்பு விளைத்தல் இயல்பு.

## நூற்பயன்.

மருநாண் மலர்ப்பொழி லுடுத்ததட மெங்குமலை
வாய்கொழித் தெறியுமுத்தை
வண்டலிடு மெக்கர்புடை சூழ்திருச் செந்தில்வரு
மயில்வா கனக்கடவுளெங்
குருநாத னொருதெய்வ யானைதன் பாகன்
குறக்கொடிக் குந்தழைசிறைக்
கோழிக் கொடிக்குங் குமார கம்பீரன்
குறுப்பிறை முடிக்கும்பிரான்
இருநாழி நெற்கொண்டு முப்பத்தி ரண்டறமு
மெங்கு முட்டாதளக்கு
மிறைவிதிரு முலையமுத முண்டுஞா னம்பெருகு
மெம்பிரா னினியபிள்ளைத்
திருநாம மெழுதுவார் கற்பார் படிப்பார்
செகம்பொது வறப்புரந்து
தேவாதி தேவரும் பரவுசா யுச்சியச்
சிவபதம தெய்துவாரே.

(இ-ள்) மரு-மணம் பொருந்திய, நாள்மலர்-அன்றலர்ந்த மலர்கள் நிறைந்த, பொழில் உடுத்த-சோலைகளாற் சூழ்ந்த, தடம் எங்கும்-இடங்களிலெல்லாம், அலைவாய்-கடல் அலைகள், கொழித்து எறியும்-வாரி வீசுகின்ற, முத்தை-முத்துக்களை, வண்டல் இடும்-குப்பையாகக் குவிக்கின்ற, எக்கர்-மேடுகள், புடைசூழ்-பக்கங்களிலே சூழ்ந்திருக்கும், திருச்செந்தில்-திருச்செந்தூர்த் திருப்பதியிலே, வரும் மயில்வாகனக் கடவுள்-கோயில் கொண்ட மயில்வாகனப்

பெருமான், எம் குருநாதன்-எமது செந்தமிழ்ப் பரமாசாரியன், ஒரு-ஒப்பற்ற, தெய்வயானைதன் பாகன்-தெய்வயானை என்றதேவியை ஒரு பாகத்திலுடையான், குறக்கொடிக்கும்-குறவர் குலத்திலே வளர்ந்த பூங்கொடிபோன்ற வள்ளிநாயகிக்கும், தழைசிறை-தழைக்குஞ்சிறகுகளையுடைய, கோழிக்கொடிக்கும்-சேவற்கொடிக்கும், குமாரகம்பீரன்-உரிமை பூண்ட கம்பீரத்தோற்றம் உடைய குமரப்பிரான், குறும்பிறை-இளம்பிறையை, முடிக்கும்-தலையிற் சூடிய, பிரான்-தலைவன், இருநாழி நெல்கொண்டு-இருநாழி அளவேயாக இருந்த நெல்லைக்கொண்டு, முப்பத்திரண்டு அறமும்-முப்பத்திரண்டு வகைப்பட்ட அறங்களையும், எங்கும் - உலகம் எங்கும், முட்டாது - குறைவின்றி, அளக்கும் - காஞ்சியில் இருந்து அளந்தருளிய, இறைவி-உமாதேவியாரது, திருமுலையமுதம் - திருமுலைப்பாலை, உண்டு-பருகி, ஞானம் பெருகு-ஞானம் வளரப்பெற்ற, எம்பிரான்-எமது தலைவன், (என்ற இவையெல்லாமாகிய திருச்செந்திற் குமரவேளுக்குரிய) பிள்ளைத் திருநாமம்-பிள்ளைக்கவிதை, எழுதுவார்-எழுதுபவர்களும், கற்பார்-பயில்பவர்களும், படிப்பார்-பாடுபவர்களும், செகம் - உலகம் முழுவதையும், பொது அறம்-பிறர்க்குப் பொதுஎன்பதின்றித் தாமேதனியாசாய் இருந்து, புரந்து-அரசாண்டு, தேவாதிதேவரும்-தேவர்கள் தலைவர்களாகிய தேவர்களும், பரவு-புகழத்தக்க, சாயுச்சியச்சிவபதம் அது-சிவ சாயுச்சியபதத்தை, எய்துவார்-அடைவார்.

ஏ: ஈற்றசை; வண்டல் என்னும் சொல் மகளிர் விளையாடும் ஒருவகை விளையாட்டையும், தெளிந்த பொருள் போக அடியில் நின்ற அழுக்குப் பொருளையும் குறிக்கும். இச்செய்யுளிலே, வண்டல் என்ற சொற்குக் குப்பை என்ற

பொருள் குறிக்கப்பட்டது. முத்துக்கள் பொருட்படுத்தப் பெறுமல் குவிந்துகிடக்கும் என்று குறித்தவாறு. வண்டல் என்னும் விளையாட்டு நீரில் மூழ்கியும் மணலிற் புரண்டும் இளமகளிர் விளையாடுவதாம். அங்ஙனம் விளையாடும்போது முத்துக்களை வாரியும் வீசியும் விளையாடுவர் என்று கூறுதலும் பொருத்தமே. கொடி என்ற சொல் இருமுறை வெவ்வேறு பொருளில் அமைந்தது சொன்னயம் கருதியாகும். சிவபிரானுக்கு உரிய முக்கண் பிறை முதலிய சின்னங்களை அவன் மக்களுக்கும் ஏற்றிச் சொல்லுதல் மரபாதலால் இங்கு முருகன் குறும்பிறை முடிக்கும்பிரான் எனப்பட்டான். முப்பத்திரண்டு அறங்கள் "ஆதுலர் சாலையையம் அறுசமயத்தோர்க்குண்டி" முதலியனவாக நிகண்டுகளிற் கூறப் படுவனவாம். இறைவன் அருளிய இருநாழி நெல்லைக் கொண்டு இறைவி உலகவுயிர் அனைத்துக்கும் பயன்படுமாறு முப்பத்திரண்டு அறங்களும் நிகழ்த்திய வரலாற்றைக் காஞ்சிப் புராணத்தால் அறியலாம். பிள்ளைத் திருநாமம் என்ற தொடர்மொழி இங்கு பிள்ளைக்கவி என்ற கருத்தில் வந்தது. ஊசற் றிருநாமம் என்று கூறும் வழக்காறுபோல இதுவும் கொள்ளத்தக்கது. சாலோகம், சாமீபம், சாரூபம் சாயுச்சியம் என்ற நான்குநிலைகளில் இரண்டறக் கலக்கும் உயர்ந்த நிலை இங்குக் கூறப்பட்டது. இறைவி திருமுலையமுதம் உண்டு ஞானம்பெருகும் எம்பிரான் என்பது திருஞானசம்பந்தப் பெருமானைக் குறிப்பது என்று கொள்ளினும் பொருந்தும். முருகப்பிரான் அவ்வமுதம் உண்டு ஞானம் பெற்ருன் என்று கூறுவதைக் காட்டிலும் இதுவே சிறப்பாகும். சம்பந்தர் முருகப்பிரான் அவதாரம் என்பது சைவர் துணிபு. இப்பிள்ளைத்தமிழிலும் அவ்வரலாறு பின்னே பலவிடங்களில் வருவது காணலாம்.




திருச்சீரலைவாய் சுப்பிரமணியக் கடவுள்.

சண்முக நாதா எனக்கருள் தாதா

உ

வேலுமயிலுந் துணை.

# பகழிக்கூத்தர்

அருளிச்செய்த

# திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்.

(உரையுடன்)

---

## நூல்.

---

### காப்புப் பருவம்

---

காப்புப் பருவம் என்பது பாட்டுடைத் தலைவனைக் கடவுளர் காக்க என அமைத்துப் பாடும் பருவமாம். 'இப் பருவத்தே பாடுதற்குரிய கடவுளர், திருமால், சிவபிரான், பிரமதேவன், விநாயகன், முருகவேள், சூரியன், வயிரவக் கடவுள், சத்த கன்னியர், இந்திரன், அரிகாபுத்திரன், குபேரன், காளி, முப்பத்து மூவர், திருமகள், நாமகள், சந்திரன் என்பாராவர்' என்று பன்னிரு பாட்டியல் கூறும். காப்புப் பருவம் ஒன்பது செய்யுளாலேனும் பதினொரு செய்யுளாலேனும் பாடப்படல் வேண்டும் என்பது விதியாகும். இங்குக் கூறிய கடவுளருட் சிலரை யொழித்தும் வேறுசிலரைச் சேர்த்தும் பாடும்புலவரும் உண்டு.

காப்புப் பருவத்தே கடவுளரைப் பாடும் பொழுது கொலை யும் கொடுமையும் கூறாது மங்களகரமாகப் பெயருஞ் சின்னமும் பிறவும் தோன்றப் பாடுதல் வேண்டும் என்பர். இந்நூலிற் காப்புப் பருவச் செய்யுட்கள் பத்தாம்.

## திருமால்.

1. பூமா திருக்கும் பசுங்களபப்
புயபூ தரத்துப் புருகூதன்
போற்றக் ககன வெளிமுகட்டுப்
புத்தேள் பரவப் பொதிகைமலைக்
கோமா முனிக்குத் தமிழுரைத்த
குருதே சிகனைக் குரைகடற்குக்
குடக்கே குடிகொண் டிருந்தசெந்திற்
குமரப் பெருமான் றனைக்காக்க
தேமா மலர்ப்பொற் செழும்பொகுட்டுச்
செந்தா மரையில் வீற்றிருக்கும்
தேவைப் படைத்துப் படைக்குமுதல்
சேரப் படைத்துப் படைக்குமுயி
ராமா றளவுக் களவாகி
யனைத்துந் தழைக்கும் படிகருதி
யளிக்கும் படைக்குத் தனியேசங்
காழி படைத்த பெருமாளே.

(இ-ள்) தேமா மலர் - தேன் நிறைந்து திருமகள் கோயி லாம் பெருமை பொருந்திய மலராகிய, பொன் செழும்பொகுட்டு —பொன் மயமான செந்நிறப் பூங்கொட்டையையுடைய, செந் தாமரையில் - செந்தாமரை மலரில், வீற்றிருக்கும் - கோயில் கொண்டருளும், தேவை - பிரமதேவனை, படைத்து - முதற்கண் தனது உந்தியிற் பிறப்பித்து, படைக்கும் முதல் - படைப்புத்

தொழிற்கு முதற் காரணமாய் நின்ற வேதங்களை, சேரப் படைத்து - ஒருங்கே அவனுக்கு அருளி, படைக்கும் உயிர் - அந் நான்முகன் படைக்கின்ற உயிர்த் தொகைகள், ஆமாறு - நன்கு வாழ்ந்து வளர்வுறுமாறு, அளவுக்கு அளவாகி - அவற்றின் அள வுக்குத் தானே ஒரு அளவையாகி, அனைத்தும் -அவையெல்லாம், தழைக்கும்படி கருதி - நல் வாழ்வு பெறத் திருவுளங் கொண்டு, அளிக்கும் படைக்கு - காவற்றொழிலுக்குரிய படைகளாக, தனியே - தனக்கு உரிமையாக, சங்கு ஆழி - சங்கு சக்கரங்களை, படைத்த - தாங்கிய, பெருமாள் - திருமாலாகிய தேவதேவன், பூமாது - மலர் மகள், இருக்கும் - வெற்றிக்கு அறிகுறியாகவந்து பொருந்திய, பசுங்களபம் - பசுமையான கலவைச் சாந்தணிந்த, புயபூதரத்து - தோள்களாகிய மலைகளைச் சுமந்த, புருகூதன் - இந்திரன், போற்ற-வணங்கித்துதிக்கவும், ககனவெளி-ஆகாயவெளியின், முகடு - உச்சியில் உள்ள, புத்தேள்-தேவனாகிய நான்முகன், பரவ - புகழவும், பொதிகைமலை - பொதிய மலையில் வாழ்கின்ற, கோ மா முனிக்கு - முனியரசாகிய அகத்தியர்க்கு, தமிழ் உரைத்த - தமிழ் இலக்கணம் பயிற்றிய, குருதேசிகனை - பரம குருவாகிய, குரை கடற்கு - அலைமுழங்கும் தென் கடலுக்கு, குடக்கே - மேல் பால் அமைந்த திருக்கோயிலில், குடிகொண் டிருந்த - குடிகொண்டு வீற்றிருந்த, செந்திற் குமரப் பெருமான் தனை - திருச்செந்தூர் முருகப் பெருமானை, காக்க - காத்தருள் வானாக.

சங்காழி படைத்த பெருமாள் குமரப் பெருமாள் தனைக் காக்க என வினை முடிவு செய்க. இந்திரன் அசுரரால் நேர்ந்த தன் துயர் தீரும் பொருட்டும் பிரமன் பிரணவப் பொருள் அறியும் பொருட்டும் முருகனைப் போற்றினர். படைத்தல் என்ற சொல்லைப் பன் முறை அடுக்கியது சொற் பொருட் பின்வரு நிலை. தேவர்கள் தலைவனாகிய இந்திரனும் மறை நான் குணர்ந்த நான்முகனும் எளிதிற் பெறுப் பேற்றைத் தமது தவச் சிறப்பால் எளிதிற் கைவரப்பெற்றார் ஆதலால் அகத்தியர்

பொதிகை மலைக் கோமாமுனி எனப்பட்டார். வேதம் சப்த தத்வமாகையாலும் ஆகாயம் சப்த குண முடையது ஆகையாலும் வேத முணர்ந்தே படைப்புத் தொழில் பிரமனால் தொடங்கப்பட்டது என்பராகையாலும் ஆகாயத்திலிருந்து வாயுவும் வாயுவிலிருந்து தேயுவும் தேயுவிலிருந்து அப்புவும் அப்புவிலிருந்து பிருதிவியும் முறையே தோன்றுமென்பராகையாலும் படைக்கு முதல் என்ற தொடர்க்கு வேதம் என்ற பொருள் கூறப்பட்டது. (1)

## சிவபெருமான்.

2. உடல்வளை குழவி மதியமு நதியு
முரகமு மொழுகு செஞ்சடைக் காட்டின
ருமைமுலை குழைய மருவிய புனித
ருரைகொடு பரவு தொண்டரைக் காத்தவ
ருமிழ்திரை மகர சலதியில் விளையு
முறுவிட வடவை கண்டமட் டேற்றின
ருடைமணி கனக பரிபுர முரல
வொருமுறை பவுரி கொண்டமெய்க் கூத்தினர்
வடவரை முதுகு நெளிநெளி நெளிய
வரிசிலை யெனவொ ரம்பினைக் கோத்தவர்
மறுவறு முழுவெ ணிலவெழு முறுவல்
வளரொளி யிருள்வ னங்கெடப் பூத்தவர்
மருவிய சகள வடிவின ரரிய
வடகலை தமிழ்வ ளம்பெறச் சேர்த்தவர்
மதுரையி லிறைவ ரிரசத பொதுவர்
மணமலி பதயு கங்களைப் போற்றுது
மிடவிய மதுர வரியளி குமுறி
யிடறிய களப குங்குமத் தூட்பொதி

யிமசல மொழுகு கன்தன விரக
மெழுகுறவனிதை சிந்தையிற் சேர்ப்பனை
யிடிபடு முரச முழவுட னதிர
வெதிர்பொரு நிருதர் தம்படைப் போர்க்கள
மிடமற முதிய கழுதுக ணடன
மிடவடல் புரியு மொய்ம்பனைத் தூற்றிய
கடதட வழுவை முகமுள கடவுள்
கருணையின் முதிய தம்பியைப் பார்ப்பதி
கரமல ரணையில் விழிதுயின் மருவி
களிபெறு குதலை மைந்தனைப் பூப்பயில்
கடிகமழ் தருவி னிறைமகள் புதிய
கலவியின் முழுகு கொண்கனைப் போற்றிசெய்
கலைமகள் பரவு குமரனை மதுர
கவிதரு குரிசில் கந்தனைக் காக்கவே.

(இ-ள்) இடவிய-மிகுந்த, மதுரம்-தேன் உண்ணும், வரி அளி-வரிகளையுடையவண்டுகள், குமுறி-ரீங்காரம் செய்துகொண்டு, இடறிய-எற்றிச்சென்ற, களபம் - கலவைச் சாந்தாகிய, குங்குமம் தூள் பொதி-செந்நிறத்தூள் நிறைந்த, இமசலம் ஒழுகு-குளிர்ந்த நீர் ஒழுகுகின்ற, கன தனவிரகம்-பெரிய தனங்களால் தோற்று விக்கப்பெற்ற விரகவேதனை, எழுகுற-வளர்தலால், வனிதை-தெய்வயானை தேவியார், சிந்தையில்-மனத்திலே, சேர்ப்பனை-நிறுத்தி நினைக்கும் தலைவனை, இடிபடும்-இடிபோல முழங்குகின்ற, முரசம்-முரசவாத்தியம், முழவுடன்-குடமுழாவுடன், அதிர-பெருமுழக்கம் எழுப்ப, எதிர்பொரு-எதிர்த்துநின்று போர்புரிந்த, நிருதர் தம்-அசுரர்களுடைய, படை-படைகள் நிறைந்த, போர்க்களம்-போர்க்களத்திலே, இடம் அற-நிற்க இடமில்லாது, முதிய கழுதுகள்-ஆண்டு முதிர்ந்த பேய்கள், நடனம் இட-நர்த்தனம் செய்ய, அடல்புரியும்-அவ்வசுரரைக் கொன்ற, மொய்ம்பனை-தோள் வலிமையுடைய முருகப்பிரானை, தூற்றிய-நாற்புறமும்

சிதறுகின்ற, கடதடவழுவை- மதம்பாயும் யானையின், முகம் உள-
முகத்தையுடைய, கடவுள்-விநாயகக்கடவுளின், கருணையில்முதிய-
கருணையில் மிகுந்த, தம்பியை-இளவலை, பார்ப்பதி-பார்வதி தேவி
யின், கரமலர்அணையில்-கைம்மலராகிய மெல்லியஅணையிலே, விழி
துயில் மருவி-விழிகள் முகிழ்க்கும் உறக்கம்கொண்டு, களிகொள்,
ஆனந்தம் அடைகின்ற, குதலை-மழலை மொழிபேசும், மைந்தனை-
குழவியை, பூ பயில்-மலர்கள் நிறைந்த கடிகமழ்-மணம் கமழ்
கின்ற, தருவின்-பஞ்ச தருக்களின் நிழலில் வாழும், இறை-இந்
திரன், மகள்-மகளாக வளர்த்த தேவசேனையார், புதிய கலவியில்-
புதுமையான போகத்திலே, முழுகு-மூழ்குகின்ற, கொண்கனை-
நாயகனை, போற்றி செய்-துதிக்கும் இயல்புடைய, கலைமகள்-சரசு
வதி தேவி, பரவு-புகழும், குமரனை-முருகவேளை, மதுரகவி தரும்-
அடியவர்க்கு மதுரகவிபாடும் வாக்கு நயத்தை அருளும், குரிசில்
கந்தனை-தலைவனாகிய கந்தனை, காக்கவே-காப்பானாகவென்று,
உடல்வளை-தன் உடம்பு வளைந்த, குழவி மதியமும்-இளம்பிறையும்,
நதியும்-கங்காநதியும், உரகமும்-பாம்புகளும், ஒழுகு-திரிகின்ற,
செஞ்சடைக்காட்டினர்-செந்நிறமான சடைக்காட்டை யுடைய
வரும், உமைமுலைகுழைய-உமாதேவியார் தனங்கள் குழையும்படி,
மருவிய-தழுவிக்கொண்ட, புனிதர்-பரிசுத்தரும், உரைகொடு-நன்
மொழிகளைத்தொடுத்து, பரவு-துதிக்கின்ற, தொண்டரைக்
காத்தவர்-பக்தர்களைக் காத்த கடவுளும், உமிழ்திரை-அலைகளை
வீசுகின்ற, மகர சலதியில்-சுறாமீன்கள் வாழும் பெருங்கடலில்
(பாற்கடல்), விளையும்-தோன்றிய, உறுவிடம் வடவை-பெரிய
விஷமாகிய (ஆலாலம்) வடவைத் தீயை, கண்டம் மட்டு
ஏற்றினர்-கழுத்தளவு ஏற்றிய நீலகண்டரும், உடைமணி-
மாணிக்கம் முதலிய சிறிய மணிகளைப் பரலாகவுடைய, கனக
பரிபுரம்-பொன் சிலம்பு, முரல-ஒலி செய்ய, ஒருமுறை-ஒரு
சமயம், பவுரிகொண்ட-கூத்தாடிய, மெய்க்கூத்தினர்-மெய்ப்
பொருள் விளக்கும் நடன சபாபதியும், வடவரை-வடக்கின் கண்
உள்ள மகாமேருமலையின், முதுகு-புறம், நெளி நெளி நெளிய-
மிகவும் வளைய, வரிசிலையென-அதனை வரிந்து கட்டிய வில்

லெனக் கொண்டு, ஒரு அம்பினைக் கோத்தவர் - திருமாலாகிய ஒப்பற்ற அம்பைத் தொடுத்தவரும், மறு அறு-குற்றம் அற்ற, முழுவெண்ணிலவு எழு-பூரண சந்திரனது வெண்ணிலாவைப் போலத் தோன்றும், முறுவல்வளர் ஒளி-தமது பற்களிலே நகைப்பால் தோன்றிய ஒளி, இருள்வனம் கெட-அஞ்ஞான இருள் குடிகொண்ட காடாகிய திரிபுரங்கள் அழியும்படி, பூத்தவர்-தோற்றுவித்தவரும், மருவிய - பொருந்திய, சகளவடிவினர்-பௌதிக சம்பந்தமாகக் தோன்றும் திருவுருவத்தையுடையவரும், அரிய - அருமைமிக்க, வடகலை - வடமொழிக்கல்வியும், தமிழ்-தமிழ்க்கல்வியும், வளம்பெற - செழிக்க, சேர்த்தவர் - அவற்றை வளர்த்தவரும், மதுரையில் இறைவர் - மதுரையிற் கோயில் கொண்ட தலைவரும், இரசதபொதுவர் - வெள்ளியம்பலத்திருக் கூத்தாடிய பரம்பொருளும் ஆகிய சிவபெருமானது, மணமலி-மணம் நிறைந்த, பதயுகங்களை - இணையடிகளை, போற்றுதும்-வணங்கி வாழ்த்துவோம்.

உரகம் - மார்பால் நகர்வது, வடமொழி, காரணப் பெயர். குழவிமதி உரகம் நதி - என்ற மூன்றும் ஒழுகுதற்கு ஏற்பச் சடையைக் காடு என்று உருவகம் செய்தார். உமா, போக வேண்டாம் என்ற பொருள் உள்ள வட சொல், பார்வதி தேவியார்க்கு பெற்றோரால் தவஞ் செய்ய வேண்டா என்று தடுக்கப் பெற்றபோது அமைந்ததிருநாமம். ஜலதி-நீர் நிறைந்தது கடலுக்குக் காரணப் பெயர். பாற்கடலில் தோன்றிய ஆலாலம் என்னும் விடம் வெப்பத்தாலும் நிறப்பிடத்தாலும் வடவைக்கு நிகர் எனப்பட்டது. கண்ட மட்டு என்ற தொடர், கண்டம் மட்டு எனவும் கண்ட மட்டு எனவும் பிரிபடும். கண்டவளவில் உலகமறிய எற்றினர் என்பது இரண்டாம் பொருள், நெளி, நெளி நெளி, என்று மும்முறை அடுக்கியது வளையாத மலைக்கு வந்த பெரு வளைவை விளக்க அமைந்த தொடர். சகள வடிவினர்-நிட்கள வடிவினராயிருப்பது அவர்க்கு இயல்பு, உயிர்கள் நலம் பெறும் பொருட்டுச் சகளவடிவும் தாங்குகின்றார் என்பது. தேவாரத்தும், ஆழ்வார் வாக்குக்களிலும் இறைவனை வடமொழி தமிழ்மொழி

யுருவமுடையான் என்று புகழப்பட்டிருப்பது இங்கு நினைக்கத் தக்கது. பொதுவிலே சிவபிரானை வாழ்த்தத்தக்க இச்செய்யுளில் சிறப்பாக, வெள்ளியம்பலவாணனை வாழ்த்தியது பாண்டிய நாட்டின் திருப்பதிகளுட்சிறந்த துவாதசாந்த க்ஷேத்திரமாகிய திருவாலவாயின்கண் அடியார் பொருட்டு எம்பெருமான் கால் மாறியாடியஅருள் நெறியை நினைந்து அமைத்ததாகும். பதயுகம்-வடசொற்றொடர், மதுரம்-தேன், வழுவை - யானை, பார்ப்பதி - பார்வதி என்ற வடசொற் சிதைவு. குமரனைக் கலைமகள் பரவுகின்றாள் என்று கூறுவது அருணகிரிநாதர் கருத்தைத் தழுவியது. மதுரகவிதருகுரிசில் என்று செந்திற் குமரனைப் புகழ்ந்தது, தமக்கு மதுரகவி அருளிய அருள் வெள்ளம் பராவியவாறும். (2)

### உமையவள்.

3. அரிபிரமர் சந்த தம்பு கழ்ந்திடு
பரசுடைய நம்பர் பங்கின் மென்கொடி
யகில லோகமு மாதரத் தாற்படைத்தவ

ளரிவைமட மங்கை மென்க ணங்குழை
திரிபுரைய ணங்கு கங்கை யம்பிகை
யகள மாயனு பூதியிற் பூத்த பொற்கொடி

யபிநவை முகுந்தர் தங்கை சுந்தரி
யுரகபண பந்தி கொண்ட கங்கணி
யமுத மூறிய பாடலுக் கேற்ற சொற்குயி

லறுசமய முங்க லந்து நின்றவண்
மறலிபர வும்ப்ர சண்ட சங்கரி
யழகெ லாமிது தானெனப் போற்று சித்திர

முரிபுருவ வஞ்சி திங்க டங்கிய
திருமுகம லர்ந்த பைங்க ருங்கிளி
முதல்வி பூரணி ஞானவித் தாய்க்கி ளைத்தவண்

முருகுவிரி கொந்த ளம்பி றங்கிய
மணிமவுலி மண்ட லங்கொள் செஞ்சடை
முடிம ணேன்மணி வாலைவற் ருக்கு ணக்கடன்

முகிண்முலைசு மந்து நொந்த சைந்திறு
மிறுமெனம ருங்கி ரங்க வின்புறு
முறுவ லாடிய கோமளத் தாற்பெ ருத்தவண்

முறைமுறைமு ழங்கு கின்ற கிண்கிணி
பரிபுரம லம்பு செம்ப தம்புரை
முளரி நாண்மலர் வாழ்வெனப் போற்றி நிற்குது

முரியபதி னெண்க ணங்க ளுஞ்சது
மறைமுனிவ ரும்ப ரிந்து நின்கழ
லுறுதி தானென நாவெடுத் தேத்தி நித்தலு

முளமிகம கிழ்ந்து செங்க ரங்களின்
மலர்கொடுவ ணங்கி யஞ்ச லென்றெமை
யுடைமை யாயரு ணீயெனக் காத்த நட்பனை

யுடுமுகட திர்ந்து விண்ட லங்களு
மரியபகி ரண்ட மும்பி ளந்திட
வுதறு தோகைம யூரனைத் தோற்ற முற்றெழு

முபநிடத மந்த்ர தந்தி ரந்தனி
லசபையில டங்கு மைம்பு லன்களி
லுவகை கூருமனேகரக் கூத்த னைப்பொரு

தரியலர்நெ ருங்கு செங்க ளம்புகு
நிசிசரர்து ணிந்த வேம்ப றந்தலை
தழுவு பாடல்வி சாகனைப் பாற்க டற்றரு

தாளநகை செங்க ருங்க ணிந்திரை
குறமகண்ம ணம்பு ணர்ந்த திண்புய
சயில மோகன மார்பனைத் தோட்டி தழ்ப்பொதி

தழைமுகையு டைந்து விண்ட ரும்பிய
புதுநறவு சிந்து பைங்க டம்பணி
தருண சீதள வாகனைக் கோட்ட கத்துயர்

சரவணமி லங்க வந்த கந்தனை
முருகனைவி ளங்கு செந்தில் வந்திடு
சமர மோகன வேலனைக் காத்த ளிக்கவே.

(இ-ள்) உரிய - பணியும் உரிமையுடைய, பதினெண் கணங்களும் - பதினெண் வகையான தேவகணத்தவரும், சதுமறை - நான்கு வேதங்களை ஓதியுணர்ந்த, முனிவரும் - இருடிகணங்களும், பரிந்து - பக்தியுடன், நின்கழல்தான் உறுதிபென— உன்னுடைய பாதமே எங்கட்கு உறுதிப் பொருள் என்று, நா எடுத்து எத்தி - தம் நாவினால் உயர்த்திப் புகழ்ந்து, நித்தலும்— நாள்தோறும், உளம் மிகமகிழ்ந்து—மனம் மிகவும் மகிழ்ந்து, செங்கரங்களில் - தமது செந்நிறமான கைகளிலே, மலர் கொடு- புது மலர்களைக் கொணர்ந்து, வணங்கி—பணிந்து, அஞ்சல் - நீவிர் அஞ்சுதல் வேண்டா, என்று - என்று அருளிச் செய்து, எமை உடைமையாய் - எம்மை அடிமைகொண்ட தெய்வமே, நீ அருள் என—நீ அருள் புரிவாயாக என்று வேண்ட, காத்த - அவர்களைக் காத்தருளிய, நட்பனை - அன்பும் அருளும் நிறைந்த தண்ணளியாளனை, உடுமுகடு - நக்ஷத்திரங்கள் ஒளிவிடும் உயர் நிலவானம், அதிர்ந்து - அதிர்ச்சி பெற்று, விண்தலங்களும்—

மற்றுள்ள தேவலோகங்களும், அரிய - அருமையான, பகிரண்டமும் - வெளியண்டமும், பிளந்திட - பிளவுபட்டு நிலைகுலைய, உதறு - வீசுகின்ற, தோகை - தோகையையுடைய, மயூரனை - மயிலை வாகனமாய் உடையபெருமானை, தோற்றம் உற்று எழும்— இயல்பாகவே பிறர் படைக்காமல், அபௌருஷேயமாகத் தோன்றி யெழுந்த, உபநிடத— உபநிடதங்களிலே (வேத சிரசு) சொல்லப்படுகின்ற, மந்த்ர தந்திரங்களில்—மந்திர தந்திரங்களில், அசபையில் - அசபை என்ற பெயர் உடைய பெருமந்திரத்தில், அடங்கும் - அடங்கியிருக்கும், ஐம்புலன்களில் - ஐம்பொறிகளிலே, உவகை கூரும்—மகிழ்ச்சி மிகுகின்ற, மனோகரக்கூத்தனை—அன்பர் மனங்கவர நடமாடும் பொருளை, பொரு— போர் செய்கின்ற, தரியலர் - பகைவர்கள், நெருங்கி—நெருங்கி யெதிர்த்த, செங்களம் - உதிரவெள்ளத்தாற் சிவந்த போர்க் களத்திலே, புகும் - புகுந்து போராடிய, நிசிசரர்—இரவிற் சரிக்கும் ஆற்றலுடைய அசுரர்கள், துணிந்த—வெட்டுண்டு வீழ்ந்த, வெம்பறந்தலை - வெம்மைமிக்க போர்க்களமாகிய வறுநிலத்தை, தழுவு - பற்றிய, பாடல் - பாடல்களை உவந்தேற்கும், விசாகனை—விசாக நக்ஷத்திரத்துக்கு உரிமையுடைய முருகப்பிரானை, பாற்கடல்தரு—பாற்கடல் பெற்ற, தரளம் நகை - முத்துநிகர்த்த பற்களும், செங்கருங்கண் - செவ்வரி படர்ந்த கருங்கண்களும் உடைய, இந்திரை—இந்திரன் மகளாகிய தேவசேனையும், குறமகள்—குறக்குலத்து வளர்ந்த வள்ளிநாயகியும், மணம்புணர்ந்த— வந்துபொருந்திய, திண்புயம் - உறுதியான தோள்களையும், சயில மோகன - மலைகளை மயக்கும் திண்மையுடைய,மார்பனை—மார்பையும் உடைய குமரவேளை, தோடு இதழ்பொதி—தோடுகளும் இதழ்களும் குவிந்திருந்த, தழைமுகை—தழைத்த மொட்டு, உடைந்து விண்டு—வாய்மலர மலர்ந்து, அரும்பிய—அதிலிருந்து தோன்றிய, புதுநறவு சிந்து - புதுமையான தேன் சிந்துகின்ற, பைங்கடம்பு—பசுமையான கடம்ப மலர் மாலையை, அணிதருண சீதள வாகனை - அணிந்த இளமையும் குளிர்ச்சியும் பொருந்திய தோள்களையுடையானை, கோட்டகத்துயர்—கரையின் அகத்தே உயர்

ந்துவிளங்கும், சரவணம் - நாணற்காட்டில், இலங்க வந்த -
விளக்கமுற அவதரித்த, கந்தனை முருகனை—கந்தனும் முருகனும்
ஆகிய கடவுளை, விளங்கு - விளக்கம் மிக்க, செந்தில் வந்திடு -
திருச்செந்தூரிலே கோயில் கொண்டருளும், சமர மோகன
வேலனை - போரில் எதிர்த்தாரை மயக்கும் வேலாயுதத்தைத்
தாங்கிய செந்திற் குமரனை, காக்க - காப்பாற்றுவாளாக என்று,
அரிபிரமர்—திருமாலும் பிரமதேவனும், சந்ததம் - தினந்தோ
றும், புகழ்ந்திடு—புகழ்ந்து போற்றுகின்ற, பரசு உடைய நம்பர்—
மழுப்படை ஏந்திய பரமேசுவரனது, பங்கின் - இடப்பாகத்தில்
அமர்ந்த, மென்கொடி—மெல்லிய பூங்கொடி போல்வாள், அகில
லோகமும்—எல்லா உலகங்களையும், ஆதரத்தால்—அன்பினால்,
படைத்தவள் - அன்னையாய் ஈன்றருளியவள், அரிவை—அரிவைப்
பிராயமுடையாள், மடமங்கை—இளமங்கைப் பருவத்தாள், மென்
கனங்குழை - மெல்லிய கனத்த குண்டலங்களை அணிந்த செவி
களையுடையாள், திரிபுரை - திரிபுர தகனம் செய்த தேவியா
வாள், அணங்கு—தேவர் மகள், கங்கை அம்பிகை—கங்கையும் பார்
வதியும் ஆவாள், அகளமாய் - வெளித்தோற்றத்தாலன்றி ஆன்மா
னுபவத்தால் அறியத்தக்க பொருளாய், அனுபூதியிற் பூத்த -
சுவானுபூதியிலே தோன்றுகிற, பொற்கொடி-பொன்கொடிபோல்
பவள், அபிநவை - புதியாள், முகுந்தர் தங்கை - திருமால்தங்கை,
சுந்தரி - அழகிய உருவினள், உரக பணபந்தி - அரவப்பட வரி
சையால் அமைந்த, கங்கணி—கங்கணம் உடையாள், அமுதம்
ஊறிய—அமுதம் பெருக்கெடுக்கின்ற, பாடலுக்கேற்ற—அருளிச்
செயல்களுக்குப் பொருந்திய, சொல்குயில் - சொற்களை அரு
ளும் குயில்போல்வாள், அறுசமயமும்—மதங்கள் ஆறினும்,
கலந்து நின்றவள்—நிறைந்து நின்றவள், மறலி—இயமன், பரவும்—
போற்றும், ப்ரசண்ட - மிக்க வன்மையுடைய, சங்கரி—சங்கரி
யென்ற பெயருடையாள், அழகு எலாம் இதுதான்—அழகு
என்று கூறப்படுவன எல்லாம் இதுவே, என—என்று, போற்று—
தீட்டிப்போற்றிய, சித்திரம் - சித்திரமாவாள், முரிபுருவவஞ்சி—
வளைந்த புருவத்தையுடைய வஞ்சிக்கொடிபோல்வாள், திங்கள்

தங்கிய—சந்திரன்போன்ற, திருமுகம் மலர்ந்த—அழகிய முகம் மலர்ச்சி பெற்ற, பைங்கருங்கிளி—பசுமையும் கருமையும் கலந்த நிறமுடைய கிளிபோல்வாள், முதல்வி—முதற்பொருளாயவள், பூரணி—எங்கும் நிறைந்தவள், ஞானவித்தாய்—ஞானத்தின் மூலப்பொருளாய், கிளைத்தவள்—வளர்ந்தவள், முருகுவிரி—மணம் இயற்கையிலேயே விரிகின்ற, கொந்தளம்—கூந்தல், பிறங்கிய—விளங்குகின்ற, மணிமவுலி மண்டலம்கொள்—இரத்தினங்கள் பதித்த வட்டவுருவமான கிரீடத்தை அணிந்த, செஞ்சடை—சிவந்த சடைவளர்ந்த, முடி—திருமுடியினையுடைய, மனோன்மணி—மனோன்மணியென்ற பெயரினள், வாலை - என்றும் இளையாள், வற்றாக் குணங்கடல்—வற்றாத குணங்களுக்கிடமாகிய கடல்போல்வாள், முகிழ்முலை சுமந்து - மலர்முகிழ் போன்ற தனங்களைச் சுமந்து, நொந்து அசைந்து—வாடி அசைந்து, இறும் இறும் என மருங்கு இரங்க—ஒடிந்துவிடுமோ என்று இடை இரங்க, இன்புறும்—இன்பமிக்க, முறுவல் ஆடிய - நகைசெய்த, கோமளத்தாற் பெருத்தவள் - அழகே யுருவமாகிய பெருமையினையுடையாள் ஆகிய பார்வதிதேவியின், முறைமுறை—முறைப்படி, முழங்குகின்ற - ஒலி செய்கின்ற, கிண்கிணி - சதங்கையும் பரிபுரம்—சிலம்பும், அலம்பு—அசைகின்ற, முளரிநாள் மலர்புரை—அன்றலர்ந்த தாமரைப் பூப்போன்ற, செம்பதம்—சிவந்தகழல்களை, போற்றி நிற்குதும்—வணங்கி நிற்போம்.

அரிவை மங்கை என்னும் பெயர்கள் பெண் என்ற பொருள் தருமளவில் நின்றன என்றலும் அமையும். இச்செய்யுளில் வடசொற்கள் பல வந்திருத்தல் காண்க. திரிபுரை கங்கை, மனோன்மணி, வாலை என்பன வெவ்வேறு சக்தியின் பெயர்கள் வெவ்வேறு சக்திகளாக விளங்கும் தெய்வமும் அம்பிகையாகிய பார்வதியேயென்பது கருத்து. குண்டலினி யோகம் வகுக்கும் சாக்தேய மதத்தர் இத்தேவியர்க்கு உடலில் வெவ்வேறிடம் வகுப்பர். உடைமையாய்-விரித்தல் விகாரம் செய்யுள் ஓசை நயம் கருதி அவ்வணம் அமைந்தது. அசபை என்னும் மந்திரம்

உபநிடதங்களால் விளங்குவது. விநாயகனருளால் ஔவை அறிந்த மந்திரம் இதுவே என்பர். செம்பதம்புரை முளரி நாண்மலர் என்ற தொடர், முளரி நாண்மலர் புரை செம்பதம் எனப் பிரித்துக் கூட்டப்பட்டது.

### விநாயகர்.

கருணையின் வழிபடு முதியவ டனையுயர்
கயிலையி னொருமுறை யுய்த்த விதத்தினர்
கனவட கிரிமிசை குருகுல மரபினர்
கதைதனை யெழுதிமு டித்த கருத்தினர்
கலைமதி யினையிரு பிளவுசெய் தொருபுடை
கதிரெழ நிறுவிய வொற்றை மருப்பினர்
கடுநுகர் பரமனை வலமுறை கொடுநிறை
கனிகவர் விரகுள புத்தி மிகுத்தவர்
பொருவரு மிமகிரி மருவிய பிடிபெறு
பொருகளி றெனமிகு பொற்பு விளைத்தவர்
பொதியவிழ் நறுமல ரணைமிசை தமதுடல்
புளகம தெழவொரு சத்தி தரித்தவர்
பொதுவற விடுசுடர் முழுமணி யொளிவிடு
பொலிவெழு பவளம தித்த நிறத்தினர்
புகர்முக முடையவர் குடவயி றுடையவர்
புகழிரு செவியினி றுத்தி வழுத்துது
மிருமையு முதவிய சிவபர சமயமு
மிமையவ ருலகுமளித்த களிப்பனை
யினசமுரன் மதுகரம் முறைமுறை பெடையுட
னிட்டிய முகைவிரி செச்சை வனப்பனை
யிளகிய புளகித மலைமுலை யரமக
ளிகலிய புலவிய கற்று மழுப்பனை

யிகல்புரி பரநிசி சரர்குல கலகனை
யெனைவழி யடிமைப டைத்தி டுநட்பனை
அருமறை யுரைதரு பிரமனை யமரரு
மடிதொழ விடுசிறை விட்ட திறத்தனை
யடியவர் கொடுவினை துகள்பட நடமிடு
மழகிய சரணம ளித்த வர்த்தனை
யளவறு கலவியின் முழுகிய குறமக
ளழகினி லொழுகியி ருக்கு மயக்கனை
யலையெறி திருநகர் மருவிய குமரனை
யறுமுக முருகனை நித்தல் புரக்கவே.

(இ-ள்) இருமையும் உதவிய-இம்மை மறுமை என்ற இருவகைப் பேற்றையும் உதவிய, சிவபர சமயமும்-சிவபிரானைப் பரம்பொருளாகக் கொள்ளும் பெருமை வாய்ந்த சைவ மதத்தையும், இமையவர் உலகமும்-இமையாத விழிகளையுடைய தேவர் உலகத்தையும், அளித்த களிப்பனை - காத்தருளிய இன்பவுருவுடைய முருகனை, இசைமுரல் - இசை பாடுகின்ற, மதுகரம் - வண்டுகள், முறை முறை - முறைப்படியே, பெடையுடன்-தத்தம் பெடைகளுடன், இடறிய - எற்றி நடந்த, முகைவிரி - அரும்பு அவிழ்ந்த, செச்சை வனப்பனை-வெட்சி மாலையால் அழகு பெற்ற பெருமானை, இளகிய - நெகிழ்ந்த, புளகித - புளகம் போர்த்த, மலைமுலை அரமகள் - மலைபோன்ற தனங்களையுடைய தேவசேனையார், இகலிய - மாறுபட்ட, புலவி - பிணக்கை, அகற்று-போக்குகின்ற, மழுப்பனை - சமாதானம் வல்லோனை, இகல்புரி - பகை பூண்ட, பரநிசிசரர் - அயலாராகிய அசுரர்களின், குலகலகனை - குலநாசம் செய்த போர்வீரனை, எனைவழி யடிமை படைத்திடு நட்பனை - அடியேனை வழி வழி யடிமையாய் எற்றுக்கொண்ட அருளுடையானை, அருமறை - அரிய நான்கு வேதங்களை, உரைதரு-ஓதிய, பிரமனை- நான்முகனை, அமரரும் அடி தொழ-தேவர்களும் வணங்கியதால், இடுசிறைவிட்ட திறத்தனை -தானே இட்ட சிறையினின்றும் விடுவித்தருளிய திறமுடையானை, அடியவர் -

தன் அடியார்களது, கொடுவினை - கொடிய தீவினை, துகள்பட-பொடிபடும் வண்ணம், கடமிடும்-திருநடனம் புரிகின்ற, சரணம்-பாததாமரைகள், அளித்த வரத்தனை - கொடுத்த வரங்களை யுடையானை, அளவறு கலவியில்-அளவில்லாத புணர்ச்சி யின்பத்தில், முழுகிய-மூழ்கியுள்ள, குறமகள்-குறப் பெண்ணாகிய வள்ளி நாயகியின், அழகினில் ஒழுகியிருக்கும் மயக்கனை-அழகில் ஈடுபட்டிருக்கும் மயக்கமுடையானை, அலையெறி திரு நகர்-அலை வீசுகின்ற திருச்செந்தூரில், மருவிய-வாழ்கின்ற, குமரனை-குமர வேளை,அறுமுக முருகனை-ஆறு திருமுகங்களையுடைய முருகப் பிரானை, நித்தல் - தினந்தோறும், புரக்க-காப்பாற்றுவாராக என்று, கருணையின்-அருளினால், வழிபடு - தன்னை வணங்கிப் பூசித்த, முதியவள் தனை - ஔவையாரை, உயர் கயிலையில் - உயர்வு மிக்க திருக்கயிலாயத்திலே, ஒருமுறை - ஒரு சமயம், உய்த்த விதத்தினர்-கொண்டு சேர்த்த திறமுடையார், கன வட கிரிமிசை-மேகங்கள் படிகின்ற மாமேரு மலையின்மேல், குரு குலமரபினர்-குருவமிசத்துப் பிறந்த பாண்டவ தார்த்தராஷ்டிரர்களின், கதை தனை-வரலாறாகிய மகாபாரதத்தை, எழுதி முடித்த-எழுதி நிறைவேற்றிய, கருத்தினர்-திருவுளப் பாங்குடையார், கலை மதியினை-கலைகளையுடைய பிறைச் சந்திரனை, இருபிளவு செய்து-இரண்டு பிளவாகச் செய்து, ஒருபுடை-ஒருபக்கத்திலே, கதிர் எழ-ஒளி விளங்கும்படி, நிறுவிய-நிறுத்தியது போன்ற, ஒற்றை மருப்பினர்-ஒற்றைக் கொம்புடையார், கடுநுகர்-ஆலால விடத்தை உட்கொண்ட, பரமனை-சிவபிரானை, வலமுறை கொடு-பிரதக்ஷிணம் செய்து, நிறைகனிகவர்-முதிர்ந்து பழுத்த மாங்கனியைக் கவர்ந்துகொள்ளும், விரகுஉள-தந்திரம் உள்ள, புத்தி மிகுத்தவர்-அறிவு மிக்கவர், பொரு அரும்-ஒப்பு இல்லாத, இம கிரி-இமாலயத்து, மருவிய-வளர்ந்த, பிடிபெறு-பெண் யானை போன்ற பார்வதீதேவியார் பெற்ற, பொருகளிறு என-போர்த் திறம் மிக்க ஆண்யானை யென்னுமாறு, மிகுபொற்பு விளைத்தவர்-மிக்க அழகுடையவர், பொதி அவிழ்-அரும்பு மலர்ந்த, நறுமலர் அணைமிசை-மணம் பொருந்திய மலர்களால் அமைந்த பாயலின் மேல், தமது உடல் புளகம் அது எழ-தமது உடல் புளகாங்கிதம்

கொள்ள, ஒரு சத்தி தரித்தவர்-வல்லபை யென்ற ஒப்பற்ற சக்தியைத் தரித்துக்கொண்டவர், பொது அற-சிறப்பாக, விடு சுடர்-வீசும் கதிர்களையுடைய, முழுமணி ஒளிவிடு-நிறைந்த அழகிய ஒளி வீசுகின்ற, பொலிவு எழு-அழகு மிகுந்த, பவளம் மதித்த நிறத்தினர்-பவளம் போன்ற நிறம் உடையார், புகர் முகம் உடையவர்-புள்ளி பொருந்திய யானை முகம் உடையார், குடவயிறு உடையவர்-குடம்போன்ற வயிறுடையார்,(ஆகிய விநாயகக் கடவுளின்) புகழ்-திருப்புகழை, இரு செவியில்-இரண்டு செவிகளிலும், நிறுத்தி-நிறுத்தி, வழுத்துதும்-துதிப்போமாக.

வழிபடு முதியவள்-ஔவையார். அவரைக் கயிலையில் உய்த்த கதை:— சேரமான் பெருமாள் நாயனாரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் கயிலை சென்ற போது ஔவையார் வேண்டியவாறு விநாயகர் தமது தும்பிக்கையால் அவரைக் கயிலை யேற்றியதாக வழங்கும் வரலாறாகும். "குதிரையுங் காதம் கிழவியும் காதம் குலமன்னனே" என்ற ஈற்றடியுடைய செய்யுளை இவ்வமயத்தில் ஔவையார் பாடியதாகக் கூறுவர். வடகிரிமிசை குருகுல மரபினர் கதையை எழுதிய செய்தி வில்லி பாரதக் காப்புச் செய்யுளாகிய

"நீடாழி யுலகத்து மறைநாலொ டைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதஞ் சொன்னநாள்
ஏடாக வடமேரு வெற்பாக வங்கூ ரெழுத்தாணிதன்
கோடாக வெழுதும்பி ரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ,"

என்ற செய்யுளிற் கூறப்பட்டுளது. "கடுநுகர் பரமனை வலமுறை கொடு கனிகவர் வரலாறு:- சிவபிரான் கரத்தில் ஒரு மாங்கனியைக் கண்ட முருகப் பிரானும் விநாயகரும் அக்கனியைக் கைக்கொள்ள விரும்பினர். சிவபிரான் "உலகமுழுவதையும் விரைவில் வலம் வருவோர்க்கு இக்கனி உரியதாகும்" என்று அருளிச் செய்தனர், முருகன் மயில் வாகனத்திலேறி உலகை வலம் வரச் சென்றனன், விநாயகர் இருந்த இடத்தை விட்டு அசையாமலே

யிருந்து ஒரு கொடியில் தம் அன்னை தந்தையராகிய பார்வதீ பரமேசுவரரைப் பிரதக்ஷிணம் செய்து 'கனியைத் தருக' என்றனர். சிவபிரான் அவர் அறிவின் திறத்தையும், தந்திரத்தையும் வியந்து அக்கனியை அவர்க்கே கொடுத்தனர். சிறிது நேரத்திலே உலகை வலம் வந்த மயிற் பரிப் பெருமாள் விநாயகர் கரத்தில் மாங்கனியைக் கண்டு தந்தையாரை அதன் காரணம் கேட்க, இறைவன் "குழந்தாய், உல்கமும் உயிரும் யாவுமாகிய என்னை வலம் வந்து விநாயகன் வெற்றி பெற்றான்—நீ விரைவிலே உலகத்தைச் சுற்றி வந்தும் தோற்றாய்" என்று கூறியருளினர். அது கேட்டுச் சினம் அடங்காத முருகப் பிரான் தனிப்படப் பழனி மலையில் வந்து கோயில் கொண்டிருந்தனர். அங்கு எழுந்தருளிய சிவ பரஞ்சுடர் "தமிழ்க் குழவியே, பழம் நீயே யன்றோ, உனக்கு யான் வேறு பழம் தருதலும் வேண்டுமோ?" என்று கூறிச் சமாதானப் படுத்தினர். என வழங்கும் பழனித் திருத்தல வரலாறுகும். விநாயகர் களிறெனப்படுவதற் கேற்ப இமகிரி மருவிய பிடி என்று உமாதேவியாரைக் கூறியது சிந்திக்கத்தக்கது. பொதுவற விடுசுடர் மழுமணி யென்பது மாணிக்கம் என்றும் கூறலாம். மாணிக்கம் போன்ற செந்நிற வொளி வீசுகின்ற பவளம் போன்ற மேனியுடையார் என்னும்போது, உவமைக்கு உவமை கூறுவதாகத் தோன்றும். [தேவசேனபதியாய் இருந்து இமையவருலகு காத்தருளியதே யன்றி உலகினர் இருள் வழியகன்று அருள் வழி படரச் சிவபர சமயம் வளர்வுறுமாறு திருஞான சம்பந்தப் பெருமானாக அவதாரம் செய்தருளிய கருணையங்கடல் என்றும் குறிப்பித்தவாறும்.] வெட்சி என்பது ஒரு செந்நிறப்பூ. அயலகங்களுக்குப் போர் செய்யப் போவோர் அணிதற்குரியது. முருகன் போர்த் தலைவன் ஆதலால் அதனை அணிந்தவன் எனப் பட்டான்—செச்சை—வெட்சி, அரமகள்—தேவமகள், இங்கு தேவசேனையாரைக் குறித்தது. [எனை வழியடிமை படைத்திடு நட்பன் என்றது-வைணவ குலத்திலே பிறந்திருந்தும் ஆசிரியர் தம் முன்னோர் சென்ற வழிபற்றி முருகனை வழிபட்டார் என்ற உண்

மையை விளக்கும். பிரமனைச் சிறையிட்டது பிரணவப்பொருள் அறியாமையால் எனவும் சிறை வீடு செய்தது இறைவன் வேண்டலால் எனவும் கந்த புராணத்துக் கூறப்படும். சரணம் அளித்த ரவர்த்தன் என்பது சரணத்தின் மகிமையைப் பரவிய வாறும்.

## கலைமகள்.

5. அவனி பருகிய மாறிரு வுந்தியி
லமரு மொருபிர மாவெனு மந்தண
னரிய சதுமறை நாவிலி ருந்தவ
ளளவில் பலகலை யோதியு ணர்ந்தவள்
தவள முளரியில் வாழ்வுபு ரிந்தவள்
தவள மணிவட மாலைபு னைந்தவள்
தவள வடிவுள வாணிசு மங்கிலி
தனது பரிபுர பாதமி றைஞ்சுது
முவரி முதுதிடர் பாயவி டம்பொதி
யுரகன் மணிமுடி தூள்பட மந்தர
முலைய வெறிசுழன் மாருத மெங்கணு
முதறு சிறைமயில் வாகன னின்புறு
கவரில் வரிவளை சூல்கொடு தங்கிய
கமட முதுகினி லேறநெ டுந்திரை
கதறு கடலலை வாய்முரு கன்பெறு
கருணை தருகவி மாலைவி ளங்கவே.

(இ-ள்) உவரி - பெருங்கடல்கள், முதுதிடர் பாய - பழமையான மேடாக, விடம்பொதி-விஷம் நிறைந்த, உரகன் மணிமுடி-ஆதிசேடனது மாணிக்கமுடைய தலையானது, தூள்பட-பொடிபட, மந்தரம் உலைய-மந்தர மலையானது நிலைகுலைய, எறி சுழல் மாருதம்-வீசுகின்ற சுழல் காற்றை, எங்கணும்-எங்கும், உதறு-உதறுகின்ற, சிறை-சிறகுகளையுடைய, மயில் வாகனன் - மயில்

வாகனம் உடைய தலைவனாகிய, இன்புஉறு-இன்பம் மிகுந்த, கவ ரில்-வெடிப்பில் இருந்த, வரிவளை-வரிகளையுடைய சங்குகள், சூல் கொடு தங்கிய-கருமுதிர்ந்திருந்த, கமட முதுகினில் - ஆமையின் முதுகில், ஏற-ஏற, நெடுந்திரை-நீண்ட அலைகள், கதறு-முழங்கு கின்ற, கடல் அலைவாய்-கடல் அருகுள்ள திருச்சீரலைவாய் என்ற திருச்செந்தூரிற் கோயில் கொண்டருளும், முருகன் பெறு-முரு கப் பெருமான் ஏற்றுக்கொண்டருளிய, கருணை தரு-அவனது கருணையால் தோன்றிய, கவிமாலை-கவிமாலையாகிய இச்செய்யுள், விளங்க-நிலைபெற்று விளக்கமெய்தும் வண்ணம், அவனி பருகிய- உலகங்களை யெல்லாம் விழுங்கி வயிற்றுள் அடக்கிய, மால்-திரு மாலின், திருவுந்தியில்-திருவுந்தியில் மலர்ந்த தாமரையில், அம ரும்-வீற்றிருக்கின்ற, ஒரு பிரமா எனும் அந்தணன் - ஒப்பற்ற பிரமா என்னும் கிருபா மூர்த்தியின், அரிய-அரிய பொருள்கள் பொருந்திய, சது மறை-நான்கு வேதங்களையும் ஓதிஉணர்ந்த, நாவில் இருந்தவள்-நாவகத்து அமர்ந்திருந்தவள், அளவில்-அள வற்ற, பலகலை-பலதிறப்பட்ட சாஸ்திரங்களையும், ஓதியுணர்ந் தவள்-தானே பயின்று அறிந்தவள், தவள முளரியில்-வெண்ணிற மான தாமரையில், வாழ்வு புரிந்தவள்-வாழ்வதில் விருப்பமுடை யாள், தவள மணிவடம்-வெண்ணிற முத்துவடங்களாலும், படிக வடங்களாலும் ஆகிய, மாலை புனைந்தவள்-மாலையை அணிந்தவள், தவள வடிவு உள-வெண்ணிறமான திருமேனியையுடைய, வாணி- நாமகளாகிய, சுமங்கிலி தனது-மங்களச் செல்வியின், பரிபுர பாதம்-சிலம்பணிந்த பாதங்களை, இறைஞ்சுதும்-வணங்குவோம்.

கவி மாலை விளங்கப் பாதம் இறைஞ்சுதும் என வினை முடிவுசெய்க. மயிலின் சிறைக்காற்றால் நிலையாய பொருள்களும் நிலைகுலையும் என்று கூறுவதில் இவ்வாசிரியர்க்கு விருப்பம் உண்டு என்பதை,

"உடு முகடு அதிர்ந்து விண்டலங்களும்
அரிய பகிரண்டமும் பிளந்திட
உதறுதோகை மயூரனை"

என்று முன் ஒரு செய்யுளில் வந்த தொடராலும் அறிய லாம். அவனி பருகிய மால் என்பது பிரளய காலத்திலே உலகங் களையும் உயிர்களையும் தன் வயிற்றகத்தடக்கிப் பள்ளி கொண்டி ருக்கும் திருமால் திருக் கோலத்தைக் குறிப்பது. பல கலை ஓதி யுணர்ந்தவளாய் இருக்கும் இயல்பிற் கேற்பக் கலைமகள், பிரமா எனும் அர்தணனது அரிய சது மறை நாவில் இருந்தவள் எனப் பட்டாள். வாணி-வாக்தேவி; உவரி-உப்புள்ள நீர் நிறைந்த கட லுக்குக் காரணப் பெயர், உவர்-உப்புச் சுவை, உரகன்-மார்பால் நகரும் பாம்புக்குக் காரணப் பெயர், வட மொழி, கவர்-வெடிப்பு, கடற் கரையில் உள்ள வெடிப்புக்களில் வரிகளையுடைய சங்குகள் சூலோடு தங்கிய என்று பொருள் கூறப்பட்டது. வளைகள் சூல் கொண்ட கமட முதுகில் ஏறும் என்றது இயற்கை நயம் பட அமைந்துளது. முருகன் பெறு கருணை தருகவி மாலை என்ற தொடர், முருகன் பெறு கவிமாலை என்றும் முருகன் கருணை தரு கவிமாலை என்றும் இயைக்கப்படும். இச் செய்யுளில் காப்புப் பருவச் செய்யுள் அமைதற்குரிய முறைக்கு மாறாக, "முருகன் கவிமாலை விளங்க வாணி சுமங்கலி தனது பாதம் இறைஞ்சுதும்" என்று வேண்டியது சிந்திக்கத்தக்கது. சிவபிரான் துதியாக அமைந்த செய்யுளின் இறுதியில், 'கலை மகள் பரவு குமரன்' என்று பாடத் துணிந்த இப்புலவர் "முருகனைக் கலை வாணி காத் தருள்க" என்று கூறற்குரிய இச் செய்யுளில் முருகனது இயற் பெருமைக்கு அங்ஙனம் கூறுதல் தகாது என்று கருதிச் செய் யுளைக் காக்க என்று கூறினர் போலும். இம் முறை பற்றியே மகா வித்வான் திரிசிரபுரம் மீனாக்ஷி சுந்தரம்பிள்ளையவர்கள் அகி லாண்ட நாயகி பிள்ளைத் தமிழ், காந்திமதி யம்மை பிள்ளைத் தமிழ் முதலியவற்றிற் காப்புப் பருவம் அமைத்திருக்கின்றனர். பிற பெரியோர் செய்யுட்களிலும் இங்ஙனம் அமைந்த ஆட்சி முறையைக் காணலாம்.

அரிகர புத்திரன்.

6. வரியு நீள்சடி லத்திடை மகுட ராசித ரித்தவர்
வளையு நீடுக ருப்புவில் மதுர வாளிதொ டுத்தவர்
அரிய பூரணை புட்கலை யரிவை மாரிரு பக்கமு
மழகு கூரும கிழ்ச்சிய ரடிவி டாமல்வ ழுத்துத
முரிய நான்மறை நித்தலு முறுதி யாகவ ழுத்திய
வுவகை யாசுக வித்துறை யுதவு நாவலன் முற்றிய
பரிய வாளைகு தித்தெழு பறவை சூழுந கர்க்கிறை
பழனி வேலவ னைப்புகழ் பனுவன் மாலைத
[ழைக்கவே.

(இ-ள்) உரிய பிறப்புக் காரணமாகத் தமக்கு உரிமையாகிய, நான் மறை-நான்கு வேதங்களையும், நித்தலும்-தினந்தோறும் உறுதியாக - மனவுறுதியுடன், வழுத்திய-ஓதிய, உவகை - படிப்பார்க்கு மகிழ்ச்சி விளைக்கும், ஆசுகவித்துறை-விரைந்து பாடும் செய்யுளமைதி முறையை, உதவு-அருளிய, நாவலன்-புலவர் பெருமானும் எதிர்த்தாரை வெல்லும் நாவன்மை படைத்தவரும் ஆகிய பகழிக் கூத்தர், முற்றிய-பாடி நிறைவேற்றிய, பரிய வாளை குதித்தெழு-பெரிய வாளை மீன்கள் குதித்துப் பாய்கிற, பரவை சூழும் நகர்க்கு இறை-கடல் சூழ்ந்த திருச்செந்தூர்த் தெய்வமாகிய, பழனி வேலவனை-பழனி வேலவனை, புகழ்-புகழ்ந்த, பனுவல் மாலை-செய்யுள் மாலையாகிய இந்நூல், தழைக்க-தழைத்து ஓங்குமாறு, வரியும்-வரிந்து கட்டிய, நீள் சடிலத்திடை-நீண்ட சடை முடியின் மேல், மகுட ராசி தரித்தவர்-கிரீடங்களைத் தரித்தவரும், வளையும் நீடு கருப்புவில்-வளைந்து நீண்ட வுருவமுள்ள கரும்பு வில்லிலே, மதுர வாளி தொடுத்தவர்-தேன் பொருந்திய பூக்களாகிய அம்புக்களைத் தொடுத்தவரும், அரிய-அருமையான குணங்களையுடைய பூரணை புட்கலை அரிவைமார்-பூரணை புட்கலை யென்ற தேவியர், இருபக்கமும்-

இரண்டு பக்கங்களிலும், அழகு கூரும்-அழகு மிக அமர்ந்திருக்கும், மகிழ்ச்சியர்-மகிழ்ச்சியுடையவரும் ஆகிய அரிகர புத்திராது அடி-பாதங்களை, விடாமல்-இடை விடாமல், வழுத்து தும்-துதிப்போம்.

ஐயனர் என்றும் சாத்தன் என்றும் சாமானியமாய்க் கூறப் பெறும் ஹரிஹர புத்திரர், சேது நாட்டிலே, இந் நூலாசிரியர் பிறந்த கிராமத்துக்கடுத்துள்ள புகலூரிலே புகழிக்கூத்தர் என்ற பெயரோடு விளங்குகின்ருர். அவரிடம் சிறந்த பக்தி பூண்ட ஆசிரியர் இக்காப்புச் செய்யுளிலே தம்மைப் பற்றி "உரிய நான் மறை நித்தலும் உறுதியாக வழுத்திய வுவகையாசு கவித்துறை யுதவு நாவலன்" என்று கூறிக் கொண்டனர். முற்றிய என்ற பெயரெச்சம் பனுவல் மாலை என்ற தொடரைத் தழுவுகின்றது. பகழிக் கூத்தர் என்னும் இவ்வையனர் கரும்பு வில்லும் மலரம்பும் உடையார் போலும். ஹரி ஹர புத்திரராகையால் தாயாகிய அரியின் மற்ருெரு மகனன மன்மதனுக்குரிய சின்னங்கள் இவர்க்கும் கூறப்பட்டன என்றும் கொள்ளலாம். திருச்செந்தில் வேலவனைப் பழனி வேலன் என்று புகழ்ந்தது ஆறு படை வீடுகளிலும் கோயில் கொண்டிருப்போன் ஒருவனே என்னும் துணிபால் ஆகும். இச் செய்யுளில் காப்புப் பருவ முறைக்கு மாருக, பனுவல் மாலை தழைக்கப் பூரணை புகட்கலை மகிழ்ச்சியர் அடி வழுத்துதும் என்று கூறியது சிந்திக்கத்தக்கது. ஐயனர் தேவியர் பெயர், பூரணை புட்கலை என்பது புராணங்களால் அறியப்படும். ஆசுகவித் துறை யுதவு நாவலன், என்னும் தொடர் சுப்பிரமணிய புஜங்கம் பாடித் திருச்செந்திற் குமரனைப் பராவிய ஸ்ரீ சங்கராசாரியரைக் குறிப்பது என்று கூறலுமாம். அவர் நான்மறை வழுத்திய நாவினராதலாலும் பல மதவாதிகளை வென்ற வெற்றியினராதலாலும் செந்திலைப் புகழ்ந்தார் ஆதலாலும் இங்கு நினைக்கத் தக்கவரே.

## பகவதி.

7. விளையுஞ் செழிந்தே னுடைந்தமுகை விண்டெழுகு
வெண்டா மரைப்பொருட்டு
வேதா முடித்தலை முடிக்குஞ் சடாடவியள்
வெங்கொலை மடங்கலேறி
வளையும் பனிப்பிறை மருப்புக் குறுங்கணெடு
மயிடா சுரன்சிரத்தில்
வலியகட மிடுகுமரி பகவதி சரோருக
மலத்தாள் வணக்கமுறுவா
முளையுந் தடந்திரைத் திமிரதம ரக்குழி
யுவர்ப்பறு மகரவேலை
யொலியிடுங் குண்டகழி சுவறிமே டாகவே
லுள்ளுறை கழித்துநிருதக்
களையுங் களைந்துகல னணிபுலோ மசைதன்மங்
கலநா ணளித்தபெருமாள்
கடியமயில் வாகனப் பெருமா ளுவந்தெனது
கவிமாலை கொண்டருளவே.

(இ-ள்) உளையும்-ஒரு நிலையின்றி அலைந்த, தடம்திரை-பெரிய அலைகளையுடைய, திமிரம்-இருளும், தமரம்-முழக்கமும் உள்ள, குழி-குழிகளையுடைய, உவர்ப்பு அறு-உவர்ப்பு நீங்காத, மகர வேலை-சுறாமீன்கள் நிறைந்த கடலாகிய, ஒலியிடும் குண்டு அகழி-முழக்கம் மிக்க ஆழமான அகழியானது, சுவறி-நீர்வற்றி, மேடு ஆக-மேடு ஆகும் வண்ணம், வேல்-தமது வேலாயுதத்தை, உள்ளுறை கழித்து-அதற்கு அமைந்த உறையினின்று உருவி, நிருதக்களையும் - அசுரர்களாகிய களைகளையும், களைந்து-வேரறுத்து, கலன் அணி-ஆபரணங்களை அணிந்துள்ள, புலோமசை தன்-இந்திராணியினுடைய, மங்கல நாண்-திருமங்கல நாணை;

அளித்த-காத்தருளிய, பெருமாள்-பெருமாளும், கடிய-வேகமாகச் செல்லும், மயில்வாகனப் பெருமாள்-மயில் வாகனத்தை ஊரும் பெருமாளும் ஆகிய முருகப்பெருமான், உவந்து-மனம் மகிழ்ந்து, என் கவிமாலை-எனது கவிகளால் அமைந்த மாலையைக் கொண்டருள - ஏற்றுக்கொண்டருளுமாறு, விளையும்-இயற்கையிலே விளைகின்ற, செழுந்தேன்-செழித்த தேனனது, முகை உடைந்து-அரும்புகள் மலர்வதால், விண்டு ஒழுகு-திறந்து ஒழுகுகின்ற, வெண்டாமரைப் பொகுட்டு-வெண்கமலத்தின் இடை நிலத்தில் வீற்றிருக்கும், வேதா-பிரமதேவனது, முடித்தலை-சடைமுடியோடு விளங்கும் தலையை (வெண்டலைமாலை),முடிக்கும் சூடிய, சடாடவியள்-சடைக்காட்டை யுடையாளும், வெங்கொலை-கொடுங் கொலைபுரியும் இயல்புள்ள, மடங்கல் ஏறி-சிங்கவாகனத்தின்மேல் அமர்ந்து, வளையும்-வளைந்த, பனிப்பிறை-குளிர்ச்சி பொருந்திய பிறைபோன்ற, மருப்பு-கொம்புகளையும், குறுங்கண்-சிறுகண்களையும் உடைய, நெடு-நீண்ட உருவத்தினதாகிய, மயிடாசுரன்-எருமை யுருவம் தாங்கி எதிர்த்துப் போராடிய அசுரனது, சிரத்தில்-தலையின்மேல், வலிய நடமிடு குமரி-வன்மையோடு நடமாடிய குமரியும் ஆகிய, பகவதி-பகவதி அம்பிகையின் சரோருக மலர்த்தாள்-தாமரை மலர்போன்ற பாதங்களை, வணக்கம் உறுவாம்-வணங்குவோம்.

மஹிஷாஸுரமர்த்தனி என்று தேவி பாகவதத்தாற் புகழப்பெறும் துர்க்காதேவியே இச்செய்யுளாற் புகழப் பெற்றாள். சடா + அடவி - சடைக்காடு வடசொற் புணர்ச்சி, வேதா (வடசொல்)-பிரமன். சிங்க வாகனத்து அமர்ந்து, உலகவுயிர்களுக்கு இன்னலே விளைத்த மகிடாசுரனை வதைத்தாள் என்பது புராண வரலாறு. எருமை யுருவம் பெற்று எதிர்த்ததால் அவன் அப்பெயர் பெற்றான். சிவபிரான் பல பிரமர் தலைகளை மாலையாகப் பூண்டுளான் என்று கூறுவது போலச் சிவையாகிய தேவி இங்கு வேதா முடித்தலை முடிக்கும் சடாடவியள் என்று புகழப் பெற்றாள். திருச்செந்திற்கு இயற்கை யகழியாகவே அமைந்த

தாகையால், கடல் இங்கு மகரவேலை ஒளியிடும் குண்டகழி எனப் பட்டது. புலோமசை மங்கலநாண் அளித்த பெருமாள் என்றது அசுரரால் மிகவும் வருந்திச் சிறைப்பட்டிருந்த இந்திரனை உயிரோடு மீட்ட முருகப் பெருமான் அருட்டிறத்தை வெளியிடுவது ஆகும். புலோமசை-புலோமரிஷியின் மகள் இந்திராணி. இச்செய்யுளிலும் காப்பு அமைதி புதுமையான முறை பற்றியுளது.

## காளி.

8. காயுங் கொடும்பகைத் தாருக விநாசினி
கபாலிகங் காளிநீலி
காளிமுக் கண்ணியெண் டோளிமா தரிவீரி
கவுரிகலை யூர்திகன்னி
பாயுந் தழற்புகைப் பாலைக் கிழத்திவெம்
பண்ணம் பணத்திமோடி
பரசுதர னுடனடன மிடுசூலி சாமுண்டி
பாதார விந்தநினைவாம்
ஆயும் பெரும்பனுவ லாசுகவி மதுரகவி
யரியசித் திரகவிதைவித்
தாரகவி யிடுமுடிப் புக்குளை மயங்காம
லடியவர்க் கருள்குருபரன்
றேயும் பனிப்பிறைத் திருநுதற் கடன்மகளிர்
தெண்ணித் திலங்கொழித்துச்
சிற்றில்விளை யாடல்புரி யுந்திருச் செந்தில்வரு
சேவகன் புகழ் பாடவே.

(இ-ள்) ஆயும் பெரும்பனுவல்-ஆராய்தற்குரிய பெருஞ்செய்யுள்களாகிய, ஆசுகவி-ஆசுகவியும், மதுரகவி-மதுரகவியும், அரிய சித்திர கவிதை-அருமையான அமைப்புக்களையுடைய சித்திர கவியும், வித்தாரகவி-வித்தாரகவியும், இடும்-அமைக்கின்ற, முடிப்

புக்கு-அரிய அமைப்புக்களுக்கு, உளம் மயங்காமல்-மனம் மயங்காமல், அடியவர்க்கு-பக்தர்களுக்கு, அருள் குருபரன்-அருள் புரியும் பெருங்குருவும், தேயும்-தேய்ந்த குறையுருவமுடைய, பனிப்பிறை-குளிர்ந்த சந்திரன்போன்ற, திருநுதல்-அழகிய நெற்றியையுடைய, கடல் மகளிர்-கடல் துறையில் உள்ள நுளைச்சியர்கள், தெள் நித்திலம் கொழித்து-தெளிவாகிய முத்துக்களைக் கொழித்து, சிற்றில்-சிறு வீடுகளில், விளையாடல் புரியும்-விளையாடுகின்ற, செந்தில்வரு-திருச்செந்தூரிலே கோவில் கொண்டருளிய, சேவகன்-தலைவனுமாகிய முருகப்பிரானது, புகழ் பாட-திருப்புகழைப் பாடும் ஆற்றல் பெறும் பொருட்டு, காயும்-வெறுத்த, கொடும் பகை-கொடிய பகைவனுகிய, தாருக விநாசினி-தாருகாசுரனை அழித்தவளும், கபாலி-கபாலம் ஏந்தியவளும், காங்காளி-எலும்புகளை ஆபரணமாய் அணிந்தவளும், நீலி-நீலநிறமுடையாளும், காளி-கருநிறமுடையாளும், முக்கண்ணி-மூன்று கண்களையுடையாளும், எண் தோளி-எட்டுத் தோள்களைஉடையாளும், மாதரி-அழகுடையாளும், வீரி-வீரம் உடையாளும், கவுரி-கவுரநிறம் உடையாளும், கலையூர்தி-மான் வாகனம் உடையாளும், கன்னி-என்றும் இளமையேயாக அமைந்த திருமேனியினை உடையாளும், பாயும் தழற்புகை-பாய்ந்தெரியும் நெருப்புப் புகையையுடைய, பாலைக்கிழத்தி-பாலை நிலத்துக்குரியவளும், வெம்பண்ணம் பணத்தி-மிகப்பெரிய உருவமுடையவளும், மோடி-காட்டுக்குரிய தெய்வமாயவளும், பரசுதரனுடன் - மழுப்படைதாங்கிய பரமேசுவரனுடன், நடனமிடு-திருநடனமாடிப,சூலி-சூலப் படைதாங்கிய தேவியும், சாமுண்டி-சாமுண்டியென்னும் பெயரினளுமாகிய காளிதேவியின், பாத அரவிந்தம்-பாத தாமரைகளை, நினைவாம்-தியானிப்போம்.

ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம், என்பன நால்வகைக் கவிகள்-ஆசு-விரைவிற் பாடப்படுவன, மதுரம்-இனிமை பொருந்தப் பாடப்படுவன, சித்திரம்-சித்திரங்களுள் அமையுமாறு பாடப்படுவன, வித்தாரம்-பிரபந்தலக்ஷணம் அமையப் பாடப்படுவன.

இந்நால்வகைக் கவிபாட வல்ல புலவரும் தம்தம் தகுதிக்கேற்ற பெயரே பெறுவர். கவி, என்னும் சொல் புலவரையும் செய்யுளையும் குறிக்கும். கவிதை என்பது செய்யுளையே குறிக்கும். இச் செய்யுளில் கவிதை என்ற சொல் வந்திருத்தலால் நான்கு சொற்களும் செய்யுட்களையே குறிப்பனவாம். [இக்கவிகளின் முடிப்புள் மயங்காமல் மனத்தின் தூய்மையே காரணமாக அன்பர் அன்பிற்கிடுபடுவோன் என்று முருகன் புகழப்பட்டான்.] தேவ விரோதியாகிய தாருகனைக் கொன்ற தேவியாதலால், காளிதாருக விநாசினி எனப் பெற்றாள். மாதரி என்னும் சொல்லுக்குச் சத்த மாதராகக் காட்சி கொடுப்பவள் என்றும் கூறலாம். சத்த மாதர் ஆவார், பிராமி, மயேச்சுரி, கௌமாரி, நாராயணி, வராகி, இந்திராணி, காளி என்போராம். பணம் என்னும் சொல் பெருமை என்னும் பொருள்தருவது. பண்ணம் பணத்தி என்பது பெண்ணம் பெரியாள் என்பதுபோன்ற வழக்குச்சொல் ஆகும். பரசுதரனுடன் நடனமிட்ட வரலாறு சிதம்பரத்தில் விசேஷமாய்ச் சொல்லப்படுவதுண்டு. தில்லைக்காளி என்ற திருநாமம் பூண்ட தேவதை, நடராஜமூர்த்தியோடு நடனமாடியதாகவும், இவ்விருவர் நடனத்தையும் பார்த்து முடிவு கூறுதற்குக் கோவிந்தராஜர் சபாநாயகராய் இருந்தார் என்றும் கூறுவது உண்டு. தில்லைக் காளி கோயில் இன்றும் அத்தலத்தில் உள்ளது. கோவிந்தராஜரும் பள்ளிகொண்டருள்கின்றார். மதுரையிலும் சுந்தரேச ஸந்நிதியில் காளியும் சிவபிரானும் தாண்டவஞ் செய்யும் ஐதிஹ்யத்தை விளக்கும் சிலையுருவங்கள் உண்டு. சிவபிரான் ஊர்த்துவ தாண்டவமாடியதும் காளி அதனால் தோல்வி எய்தியதும் சிற்பத்தால் அங்கு நன்கு விளக்கப்பட்டுள்ளன. பாலைக்கிழத்தி என்னப்பட்ட இத்தெய்வத்தைப்பற்றி இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தின் வேட்டுவவரியில் நன்கு விவரித்துள்ளனர். அவர் செய்யுட்களுள் இங்கு சில காட்டப்படும்.

ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்
கானத் தெருமைக் கருந்தலைமேல் நின்றாயால்
வானோர் வணங்க மறைமேன் மறையாகி
ஞானக்கொழுந்தாய் நடுக்கின்றி யேநிற்பாய்.

வரிவளைக்கை வாளேந்தி மாமயிடற் செற்றுக்
கரியதிரி கோட்டுக் கருந்தலைமேல் நின்றாயால்
அரியரன்பூ மேலோன் அகமலர்மேன் மன்னும்
விரிகதிரஞ் சோதி விளக்காகி யேநிற்பாய்.

சங்கமும் சக்கரமும் தாமரைக் கையேந்திச்
செங்க ணரிமான் சினவிடைமேல் நின்றாயால்
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை யுருவாய் மறையேத்த வேநிற்பாய்.

இச்செய்யுளால், உமை, பகவதி, துர்க்கை, காளி, என்ற வெவ்வேறு பெயரால் வழங்கும் தெய்வம் ஒன்றே என்பது விளக்க மெய்தும்.

ஆதித்தர்.

9. வெள்ளப் பெருந்துளி யிறைக்கும் பெருங்காற்று
வெண்டிரையின் மூழ்கியேழு
வெம்புரவி யொற்றையா ழித்தடந் தேரேறி
வேதபா ரகரிறைஞ்சப்
பள்ளக் கடற்றிரை கலக்கியூ ழியினிருட்
படலமுழு தந்துடைத்துப்
படர்சுடர் விரித்துவரு பன்னிரு பதங்கர்பொற்
பாதமலர் சென்னிவைப்பாம்.

உள்ளக் களிப்பறு வரிவண்டு பண்பாட
வோதிம நடிக்கமுள்வா
யுட்குடக் கூன்வலம் புரிமுத்த முமிழநீ
ரோடையிற் குருகுகாணக்
கள்ளக் கருங்கட் சிவந்தவாய் வெண்ணகைக்
கடைசியர் நுளைச்சியருளங்
களிகூரு மலைவா யுகந்தவே லனையெங்கள்
கந்தனைக் காக்கவென்றே.

(இ-ள்) உள்ளக் களிப்பு - மனத்தில் உள்ள 'மதுமயக்கம்,' அறு-நீங்காத, வரிவண்டு-வரிகளையுடைய வண்டுகள், பண்பாட-இசைபாட, ஓதிமம்-அன்னங்கள், நடிக்க-நடனம் ஆட, முள்வாய்-வெளிப்புறத்தில் முள்பொருந்திய, உட்குட-உட்புறம் வளைந்த, வலம்புரி - வலம்புரிச் சங்கங்கள், முத்தம் உமிழ - முத்துக்களைக் கக்க, நீர் ஓடையில்-நீர் நிறைந்த ஓடையிலே, குருகு காண-நீர் நாரைகள் இக்காட்சியைக் காண, கள்ளம்-கள்ளம் பொருந்திய, கருங்கண் - கரிய கண்களையும், சிவந்தவாய் - சிவந்த வாயையும், வெள்நகை-வெண்மையான பற்களையும் உடைய, கடைசியர்-உழத்தியர்களும், நுளைச்சியர்-பரத்தியர்களும், உளம் களிகூரும்-மனமகிழ்ச்சி மிகுகின்ற, அலைவாய்-திருச்சீரலைவாய் என்ற திருப்பதியில், உகந்த-விருப்பொடு கோயில்கொண்ட, வேலனை-வேலவனை, எங்கள் கந்தனை-எங்களை ஆட்கொண்டருளிய கந்தனைக், காக்க என்று - காப்பாற்றுவாராக என்று, வெள்ளம் - நீர்ப்பெருக்கின், பெருந்துளி-பெரிய துளிகளை, இறைக்கும் - வீசுகின்ற, பெருங்காற்று-பெரிய காற்றையுடைய, வெண்திரையில்-வெண்ணிறமான அலைகளையுடைய கடலில், மூழ்கி-முழுகி, எழு வெம்புரவி-வேகமாய்ச் செல்லும் எழு குதிரை பூட்டிய, ஒற்றையாழி-ஒற்றைச் சக்கரத்தையுடைய, தடம்தேர் ஏறி-பெரிய தேரின்மேல் ஏறி, வேதபாரகர்-வேதங்களைக் கரைகண்ட அந்தணர்கள், இறைஞ்ச-வணங்க, பள்ளம்-ஆழமாய் உள்ள, கடற்றிரை கலக்கி-நாற்றிசைக்

கடல்களின் அலைகளைக் கலக்கிக்கொண்டு, ஊழியின் - ஊழிக் காலத்துத் தோன்றிய, இருட் படலம்-இருட் பிழம்பு, முழுதும் துடைத்து-முழுவதும் துடைத்து, படர் சுடர்-மிக்க ஒளியை, விரித்துவரு-பரப்பிவருகிற, பன்னிரு பதங்கர்-பன்னிரு ஆதித்தியர்களின், பொன்-பொன்னிறம் பொருந்திய, பாதமலர்-பாத தாமரைகளை, சென்னிவைப்பாம்-தலைவைத்து வணங்குவோம்.

ஆதித்தியர் பன்னிருவர் ஆவார்; மித்திரன், இரவி, சூரியன், பானு, ககன் பூஷன், இரணிய கருப்பன், மரீசி, ஆதித்தியன், ஸவிதா, அருக்கன், பாஸ்கரன், என்போர். எழு புரவி-ஏழாகிய குதிரைகள் எனவும், எழு என்னும் பெயர் உள்ள ஒரு குதிரை எனவும் சொல்லப்படும். வேத பாரகர் - வேதத்தின் கரைகண்ட அந்தணர் வேதியர் சூரியனை இறைஞ்சுதல், முச்சந்தியிலும் அவர்க்குரிய நித்ய கர்மானுஷ்டானமாகும். அவர்கள், உதயகாலத்தின் முன்பே, நீராடிக் காயத்திரி மந்திரங்களை உச்சரித்துச் சூரியன் பொருட்டுக்கொடுக்கின்ற அருக்கிய நீரால், சூரிய விரோதிகளாகிய அசுரர் அழிகின்றனர் என்பது ஐதிஹ்யம். அருக்கிய நீரே வச்சிர வுருவம் அடைந்து அவ்வசுரர்களை மந்தேஹாருணத்வீபத்தில் தள்ளுவதாகக் கூறும் மந்திரங்களும் உண்டு. வேத பாரகர் இறைஞ்சுதல் வேறொரு கருத்தையும் விளக்குவதாம். சூரியனது வெம்மையை உலகவுயிர்கள் பொறுக்கும் வலியற்றனவாதலால் அருளே குணமாகவுடைய முனிவர் சிலர், காற்றையே உணவாகக்கொண்டு சூரியன் கூடவே காலை முதல் மாலை வரையில் விண்ணில் இயங்கித் தம் தவவன்மையால் அவன் வெப்பத்தைக் குறைத்து மண்ணவர்க்கு அவன் கதிர்களை விடுகின்றனர் என ஒரு பழமைச் செய்தி வழங்குகின்றது. இவ்வரலாறு புறநானூற்றிலே,

"நிலமிசை வாழ்நர் அலமரத் தீரத்
தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக்
காலுண வாகச் சுடரொடு கொட்கும்
அவிர்சடை முனிவர்" என்று வந்துளது.

இம் முனிவரைக் காத்தருளும் பொறுப்பை முருகப் பிரானே ஏற்றுக்கொண்டிருக்கிறான் என்பதைத் திருமுருகாற்றுப் படையிலே வரும் "விண் செலன் மரபின் ஐயர்க்கேந்திய தொருகை" என்னும் அடியால் அறியலாம். இம் முனிவர்கள் சூரியனை இறைஞ்சி அவனுடன் திரிவது உலக நலத்தின் பொருட்டேயாகும். வண்டுகள் பாட, அன்னங்கள் நடனமிட, வலம்புரிச் சங்குகள் முத்துக்களைப் பரிசிலாக வழங்க, குருகுகள் காண, நிகழும் நெய்தல் நிலக்காட்சியை, அந்நிலத்துக்குரிய நுளைச்சியர்களும் மருத நிலத்துக்குரிய கடைசியரும் கண்டு மன மகிழ்வர் என்று வருணித்த இயற்கை யழகு சிந்தித்து இன்புறற் குரியதாம். இச் செய்யுளில் முறைப்படி கந்தனைக் காக்க, என்றே பாடியிருப்பது கவனிக்கத் தக்கது.

10. பொதுவி லாடு மத்தற்கு நீடு
பொருளை யோதி யொப்பித்த சீலர்
புணரி தோய்ந கர்க்குச்ச காயர்
புலமை நீதி யொப்பற்ற கேள்வர்
குதலை வாய்மொ ழிச்சத்தி பாலர்
குருதி பாய்க திர்க்கொற்ற வேலர்
குறவர் பாவை சொற்கத்தின் மோகர்
குமரர் காவ லுக்கொத்த காவன்
மதுர கீத விற்பத்தி வாணர்
மகுட வேணி முத்துத்த ரீகர்
மவுன மோன பத்திக்க லாபர்
மனையில் வாழ்வு வைப்புற்ற நேயர்
முதுமை யான சொற்பெற்ற நாவர்
முனிவர் வேள்வி யிச்சிக்கு மூணர்
முடிவி லாத கற்பத்தி லூழி
முதல்வர் தேவர் முப்பத்து மூவரே.

(இ-ள்) மதுரம்-இனிய, கீதம்-சங்கீத சாஸ்திரத்திலே, விற்பத்தி வாணர்-புலமை மிக்கவர்களும், மகுடவேணி-சடைமுடியையும், முத்து உத்தரீகர்-முத்துமாலையையும் அணிந்தவர்களும், மவுன மோன-செம்மையான மவுன நெறியைப் பின்பற்றிய, பத்திக்கலாபர்-பக்தி மிக்க கூட்டத்தினர்களும், மனையில் வாழ்வு-இல்லத்தே வாழ்வதில், வைப்புற்ற நேயர்-பொருந்திய அன்புடையவர்களும், முதுமையான - பழமையான, சொல் - தேவ பாஷையை, பெற்ற - பேசப்பெற்ற, நாவர் - நாவினையுடையவர்களும், முனிவர்-முனிவர்கள் இயற்றுகிற, வேள்வி - யாகங்களை, இச்சிக்கும் ஊணர்-விரும்பும் உணவையுடையவர்களும், முடிவிலாத-முடிவு கூறுதல் அரிதாகிய, கற்பத்தின்-கற்பகால வாழ்வையுடைய, ஊழி முதல்வர்-யுகாரம்பகாலத் தலைவர்களுமாகிய, தேவர் முப்பத்து மூவர்-முப்பத்து மூன்று தேவர்கள், பொதுவில்-சிற்சபையிலே, ஆடும்-நடனமிடுகிற, அத்தற்கு - சிவபிரானுக்கு, நீடு-உயர்ந்த, பொருளை-பிரணவப்பொருளை, ஓதிஒப்பித்த-உபதேசித்தருளிய, சீலர்-குணசீலரும், புணரி தோய் நகர்க்கு - கடல் அருகிலே உள்ள திருச்செந்தூர்க் குரிய, சகாயர் - துணைவரும், புலமை நீதி-புலமைத்திறத்திலும் நீதியிலும், ஒப்பற்ற-ஒப்பில்லாத, கேள்வர்-தலைவரும், குதலை வாய் மொழி - மழலை மொழி பேசுகின்ற, சத்தி பாலர் - உமா தேவியின் குமாரரும், குருதி பாய்-உதிரம் பாய்கின்ற, கதிர்-ஒளிபொருந்திய, கொற்ற வேலர்-வெற்றிதரும் வேற்படையுடையவரும், குறவர் பாவை-குறப்பெண்ணாகிய வள்ளிநாயகியின், சொற்கத்தில்-இன்பத்தில், மோகர்-ஆசையுடையவரும் ஆகிய, குமரர்-முருகப்பெருமானது, காவலுக்கு ஒத்த காவல்-காப்புக்குப் பொருந்திய காவலர் ஆவார்கள்.

தேவர் முப்பத்து மூவர், குமரர் காவலுக்கொத்த காவல் என வினைமுடிவு செய்க. சொற்கம் இங்கு இன்பம் என்னும் பொருளில் வந்துளது. தேவர் முப்பத்து மூவர், ஆதவர் பன்னிருவர், உருத்திரர் பதினொருவர், மருத்துவர் இருவர், வசுக்கள்

எண்மர் என்போராவார். உத்தரீயம்-மேல் வஸ்திரம், இங்கு முத்தாகையால் மாலை எனப்பட்டது.

## இரண்டாவது.

---

### செங்கீரைப் பருவம்.

செங்கிரைப் பருவம் என்பது, குழவி, ஒருகாலை முடக்கி ஒரு காலை நிமிர்த்து இருகரங்களையும் நிலத்தில் ஊன்றித் தலைநிமிர்ந்து செவிலித் தாயார் பயிற்றும் சிறிய சொற்களைக்கூறும் பருவமாம். கிரையாடுதல் என்ற தொடர்க்கு சொற்களைச் சொல்லித் தலையாடுதல் சொற்களைப் பேசுதல் என்ற இருபொருளும் பொருந்தும். செங்கிரை - இனிய மழலைச்சொற்கள். கிரை என்பது கீ; என்ற வடசொல்லின் சிதைவு. கிர் என்று ஆகிப் பின்பு கிரை என்றே வழங்கிவருகின்றது. இப்பருவத்து அமைப்பினைச் சிவஞான யோகிகள் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழிலே "இருகை மலரும் புவிபதித்தொரு முழந்தாள் இருத்திபொரு தாள்மேல் நிமிர்த்து... திருமுக நிமிர்த்து......செங்கிரை யாடியருளே" என்று குறித்திருக்கின்றனர். மகாவித்வான் திரிசிரபுரம் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள் திருக்குடந்தை மங்களாம்பிகை பிள்ளைத் தமிழிலே, "ஒரு தாளிருத்தி யொருதாளெடுத்தே, யெழினனி கனிந்த முகதாமரை மலர்ந்தசைய விருமணிக்குழைவில் வீசத் தேனமர் நறுங்குதலை சீர்ப்ப மங்கள வல்லி செங்கிரை யாடியருளே," என்று குறிப்பிட்டிருக்கின்றனர். இவற்றால் செங்கிரைப் பருவத்தின் இலக்கணம் விளங்கும்.

11. வெங்காள கூடவிட மொழுகுபற் பகுவாய்
விரித்துமா சுணமுமிழ்ந்த
வெங்கதிர் மணிக்கற்றை யூழியிரு ளைப்பருக
வேய்முத் துதிர்ந்து சொரியக்

கங்காளர் முடிவைத்த கங்கா நதிக்கதிர்
கடுப்பக் குறுங்கவைக்காற்
கவரியின் பருமுலைக் கண்டிறந் தொழுகுபால்
கதிர்வெயிற் படமுரிந்து
மங்காம லிரசதத் தகடெனச் சுடர்விட
மலைக்குறவர் கண்டெடுத்து
வண்டினைக் கெருவிடுஞ் சாரலிற் கரியகுற
மகளிருள மூசலாடச்
செங்காவி விழிபருகு பன்னிருகை மேகமே
செங்கீரை யாடியருளே
திரையெறியு மலைவா யுகந்தவடி வேலனே
செங்கீரை யாடியருளே.

(இ-ள்) வெங்காளகூடவிடம் - கொடிய காலகூடம் என்னும் விஷம், ஒழுகு பல் - ஒழுகுகிற நச்சுப் பற்களையுடைய, பகுவாய்-பிளந்த வாயை, விரித்து - அகலத்திறந்து, மாசுணம் - பெரும் பாம்பு, உமிழ்ந்த - கக்கிய, வெங்கதிர்மணி - வெய்ய ஒளியை யுடைய மாணிக்கமணியின், கற்றை - ஒளிப்பிழம்பானது, ஊழி யிருளைப் பருக - யுகாந்த காலத்து இருள்போன்ற பேரிருளை விழுங்க, வேய்முத்து உதிர்ந்து சொரிய - மூங்கிலின் முத்து நிலத்திலே சிதறி ஒளிபரப்ப, கங்காளர் - எலும்பணிந்த சிவ பிரான், முடிவைத்த-தலையிலணிந்த, கங்காநதி - கங்கை நதியின், கதிர்கடுப்ப - ஒளியையொப்ப, குறுங்கவைக்கால் - சிறிய பிளவு பட்ட குளம்பினவாகிய கால்களையுடைய, கவரியின் - கவரிமா னின், பருமுலைக்கண் திறந்து - பெரிய மடுவின் கண்திறந்து, ஒழுகுபால் - ஒழுகுகிற பாலானது, கதிர் வெயில்பட - சூரியன் ஒளிபடுதலால், முரிந்து - நன்கு காய்ந்து, மங்காமல்-ஒளி குறை யாமல், இரசதத்தகடென - வெள்ளித் தகடுபோல, சுடர்விட-ஒளிவிட, மலைக்குறவர் - மலையில் வாழும் குறவர்கள், கண்டு எடுத்து - அதனைக் கண்டெடுத்து, வண்திணைக்கு - வளமிக்க

தினைப்பயிர்க்கு, எருஇடும்-எருவாக உபயோகிக்கின்ற, சாரலில்-மலைச்சாரலிலே, கரிய - கருநிறமுடையோராகிய, குறமகளிர் உளம் - குறப்பெண்டிர்மனம், ஊசல் ஆட - முருகப்பெருமான் பாலும் தாம் மேற்கொண்ட தினைகாக்கும் தொழிலின் மேலும் ஆக இருபாற்பட்டு ஊசலாட, செங்காவி விழிபருகு - அவர்களது செங்குவளை மலர்போன்ற விழிகளைக் கொள்ளைகொண்ட, பன்னிருகை மேகமே - பன்னிருகைகளையுடைய மேகமே, செங்கீரை ஆடியருள் - செங்கீரை யாடியருள்வாயாக, திரை எறியும் - அலை வீசுகின்ற, அலைவாய் உகந்த - திருச்சீரலைவாயை விரும்பிய, வடிவேலனே - கூரியவேற்படை யுடைய முருகனே, செங்கீரை யாடியருள் - செங்கீரை யாடியருள்வாயாக.

குறிஞ்சி நிலத்தின் இயற்கை யழகு விளங்க இச்செய்யுளில் ஆசிரியர் சித்திரித்திருக்கிருர். பாம்பு, வேய், கவரிமான், தினைப் பயிர், என்பன குறிஞ்சி நிலத்துக்குரியவையாம். நாகமணியின் ஒளியும் வேய்முத்தின் ஒளியும் விளங்கும் குறிஞ்சி நிலத்திலே கவரியின் காய்ந்த பால் எருவாக இட்டுக் குறவர் தினைப்பயிர் வளர்ப்பர் என்பதும், அத்தினைப்புனங்களிலே காவலாய் இருக்கும் குறமங்கையர் முருகனிடம் ஈடுபட்ட மனமுடையராய் இருப்பர் என்பதும் இங்கு கூறப்பட்ட பொருளாம். முருகனை மேகமே என்று விளித்தது அவன் தண்ணளி கருதியாகும்.

12. கறைகொண்ட முள்ளெயிற் றுத்துத்தி வரியுடற்
கட்செவிப் பஃறலை நெடுங்
காகோ தரச்சிர நெளிக்கவட பூதரங்
கால்சாய மகரமெறியுந்
துறைகொண்ட குண்டகழ்ச் சலராசி யேழுஞ்
சுறுக்கெழ முறுக்கெயிற்றுச்
சூரன் பயங்கொளச் சந்த்ரசூரியர்கள்செந்
தூளியின் மறைந்திடத்திண்

பொறைகொண்ட சுரர்மருவு மண்டகோ ளகைமுகடு
பொதிரெறிய நிருதருட்கப்
பூச்சக்ர வாளகிரி கிடுகிடென வச்சிரப்
புருகூதன் வெருவி வேண்டுந்
திறைகொண் டளக்கவரு மயிலேறு சேவகா
செங்கீரை யாடி யருளே
திரையெறியு மலைவா யுகந்தவடி வேலனே
செங்கீரை யாடியருளே.

(இ-ள்) கறைகொண்ட-கருமை நிறம் பொருந்திய, முள் எயிற்று-முட்போன்ற பற்களையுடையதும், துத்தி-படப்புள்ளியை யுடையதும், வரிஉடல் - வரிகள் அமைந்த உடலையுடையதும், கண் செவி - கண்ணே காதாக உடையதும், பல்தலை - பலதலைகளை யுடையதும் ஆகிய, நெடுங்காகோதரம் - பெரும் பாம்பாகிய ஆதிசேடன், சிரம்நெளிக்க - தலை அசைக்கவும், வடபூதரம்-வடமலையாகிய மகாமேருவானது, கால்சாய - அடியோடு சாய்வுறவும், மகரம் எறியும்-சுறுமீன்களை வீசுகின்ற, துறைகொண்ட-பல துறைகளையுடைய, குண்டு அகழ் - ஆழம் மிகுந்த, சலராசியேழும் - எழு சமுத்திரங்களும், சுறுக்கெழ - வெப்பத்தாற் காய்ந்து வற்றவும், முறுக்கு எயிற்று - கோரப் பற்களையுடைய, சூரன் பயங்கொள - சூரபதுமன் அஞ்சவும், சந்திர சூரியர்கள்-சந்திரனும் சூரியனும், செந்தூளியின் மறைந்திட-போர்க்களத்தி லிருந்து எழுந்த செந்நிறமான புழுதியிலே மறையவும், திண் பொறை கொண்ட - உறுதியான பொறுமைகொண்ட, சுரர்மருவும் - தேவர்கள் வாழ்கின்ற, அண்டகோளகை முகடு - வானகோளத்தின் உச்சிப்பகுதி, பொதிர் எறிய - நடுக்கங்கொள்ளவும், நிருதர் உட்க - அசுரர் நடுங்கவும், பூச்சக்கர வாளகிரி - உலகங்களைச் சுற்றி யமைந்த சக்கர வாளகிரியானது, கிடுகிடு என-கிடுகிடுஎன்று ஆடவும், வச்சிரப் புருகூதன் - வச்சிராயுதம் தாங்கிய இந்திரன், வெருவி - அஞ்சி, வேண்டும் திறைகொண்டு அளக்க-வேண்டியவளவு திறையைக் கொண்டுவந்து அளக்கவும்,

வரும் - சூர சம்மாரப் போர்க்குப் புறப்பட்டு வரும், மயில்ஏறு சேவகா -மயில்வாகனத்தமர்ந்த வீரனே, செங்கீரை யாடியருள்- செங்கீரை யாடியருள்வாயாக, திரை எறியும் - அலைவீசுகின்ற, அலைவாய் உகந்த வடிவேலனே-திருச்சீரலைவாய் என்னும் திருப் பதியை விரும்பிய வடிவேற் பெருமாளே, செங்கீரை யாடியருள்- செங்கீரை யாடியருள்வாயாக.

துத்தி-பாம்பின் படத்தில் உள்ள புள்ளிகள், பஃறலை,பல்+ தலை—பலதலை என்பது பொருள்; ஆதிசேடனுக்கு ஆயிரந் தலை கள் உள்ளதால் அது பஃறலை நெடுங்காகோதரம் எனப் பட்டது. காக+உதரம் - காகோதரம், காகம் போன்ற வயிற்றையுடையது பாம்பு; வடசொற்றொடர், காரணப்பெயர், பூதரம்-மலை, வடசொற்றொடர், காரணப்பெயர், சலராசி -கடல், வடசொற்றொடர்; காரணப்பெயர், பொதிர்-நடுக்கம், முதனிலைத் தொழிற்பெயர்; ஆதிசேடன் தலையசைய, வடமேருகால்சாய, சலராசியேழும் வற்ற, சூரன்பயங்கொள, சந்திர சூரியர் செந்து ளியில் மறைய, சுரர்மருவும் அண்டகோளகைமுகடு பொதிர் எறிய நிருதர்உட்கப் பூச்சக்ரவாளகிரி நடுங்க, புருகூதன் திறை யளக்க, மயிலேறிய முருகன், என மேற்சொல்லிய செயல்கள் மயிலுக்கும் அதனையூர்ந்த முருகனுக்கும் அடைமொழியாகின் றன. எழு கடல்கள், உவர் நீர்க்கடல், கருப்பஞ் சாற்றுக்கடல், கட்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், பாற்கடல், நன்னீர்க்கடல் என்பனவாம். இவை உலகைச் சுற்றியிருப்பதாகப் புராணங் களாற் சொல்லப்படும்.

13. ஏர்கொண்ட பொய்கைதனி னிற்குமொரு பேரரசி
னிலைகீழ் விழிற்பறவையா
மிதுநிற்க நீர்விழிற் கயலாமி தன்றியேரி
ரிலையங்கு மிங்குமாகப்
பார்கொண்ட பாதியும் பறவைதா னுகவப்
பாதியுஞ் சேலதாகப்

பார்கொண் டிழுக்கவது நீர்கொண் டிழுக்கவிப்
படிகண்ட ததிசயமென
நீர்கொண்ட வாவிதனி னிற்குமொரு பேழ்வாய்
நெடும்பூத மதுகொண்டுபோய்
நீள்வரை யெடுத்ததன் கீழ்வைக்கு மதுகண்டு
நீதிநூன் மங்காமலே
சீர்கொண்ட நக்கீர னைச்சிறை விடுத்தவா
செங்கீரை யாடியருளே
திரையெறியு மலைவா யுகந்தவடி வேலனே
செங்கீரை யாடியருளே.

(இ-ள்) ஏர்கொண்ட - அழகுபொருந்திய, பொய்கைதனில்- ஒரு இயற்கை நீர்நிலையில், நிற்கும்-வளர்ந்த; ஒரு பேரசின்-ஒரு பெரிய அரசமரத்தின், இலை-இலையொன்று, கீழ்விழில் நிலத்திலே விழுந்தால், பறவையாம்-பறவையாக மாறிப் பறந்து போம், இதுநிற்க-இது இங்ஙனம் இருக்க, நீர்விழில் கயலாம்- அவ்விலைதானே அப்பொய்கை நீரில் விழுந்தால் மீனாக மாறி நீர்க்குட் சென்றுவிடும், இதுஅன்றி-இந்நெறி யில்லாமல், ஓர் இலை-ஒரு இலை தானே, அங்கும் இங்குமாக-நிலத்திலும் நீரிலு மாக விழுமாகில், பார்கொண்ட பாதியும்-நிலத்தில் விழுந்த பாதி யும், பறவைதான் ஆக-பறவையாய்விட, அப்பாதியும் - எஞ்சிய மற்றொரு பாதியும், சேலதாக-மீனாய்விட, (இது) பார்கொண்டு இழுக்க-நிலத்தில் விழுந்த பகுதி பறவையாகியதால் நிலப்பக்கம் இழுக்க, அதுநீர்கொண்டிழுக்க-நீரில் விழுந்த மற்றொரு பகுதி மீனாகியதால் நீர்க்குள் இழுக்க, இப்படி கண்டது-இங்ஙனம் கண் டது, அதிசயம் என- அற்புதக் காட்சியென்று நினைத்து மயங்கி நின்ற சமயத்தில், நீர் கொண்ட-நீர் நிறைந்த, வாவிதனில்-அப் பொய்கையிலே, நிற்கும்-நிலைபெற்றிருந்த, ஒரு பேழ்வாய் நெடும் பூதமது-பிளந்த வாயையுடைய பெரும் பூதம் ஒன்று, கொண்டு போய்-எடுத்துக்கொண்டுபோய், நீள்வரை எடுத்து-பெரிய மலைப் பாறை ஒன்றை எடுத்து, அதன் கீழ்வைக்கும் அதுகண்டு-அதன்

கீழ் உள்ள முழையிலே சிறையிட்ட கொடுமையைக்கண்டு, நீதி நூல் மங்காமலே-நீதி நூல்களில் வழங்கும் வாக்கியம் பொய் படாமல், சீர்கொண்ட-சிறப்புமிக்க, நக்கீரனை-நக்கீரர் என்ற புலவர் பெருமானை, சிறைவிடுத்தவா-சிறையிலிருந்து விடுவித் தருளிய முருகப்பிரானே, செங்கீரை யாடியருள், திரை எறியும் அலைவாய் உகந்த வடிவேலனே செங்கீரை ஆடியருள்.

இச்செய்யுளில் நக்கீரரைப்பற்றி வழங்கும் வரலாறு ஒன்று சொல்லப்பட்டுளது. அது இரண்டு விதமாக உள்ளது.

1. "கொங்குதேர் வாழ்க்கை" என்று தொடங்கும் செய்யுள் காரணமாகச் சிவபிரானோடு மாறுகொண்ட நக்கீரர் அப்பொழுது அடைந்த வெப்புநோய் தணியும் பொருட்டுக் கயிலை நோக்கிச் சென்றார். வழியிலே ஒரு பொய்கையையும் ஆலமரத்தையும் கண்டு, சிவ பூசை செய்ய உட்கார்ந்து சிவ பூசைசெய்து கொண்டிருந்தனர். அப்பொழுது அம்மரத்தின் இலை ஒன்று பாதி நிலத்திலும் பாதி நீரிலுமாக விழுந்தது. நிலத்திலே விழுந்த பகுதி பறவையாகி மேலே இழுக்க, நீரில் விழுந்த பாதி மீனாகி நீர்க்குள் இழுத்தது. அன்றியும் அவை ஒன்றோடொன்று போராடி ஒன்றை யொன்று விழுங்கவும் முயன்றன. அவ்வதிசயக் காட்சியைக்கண்ட நக்கீரர் சிவ பூசையை மறந்து நின்றார். அப்பொழுது அயக்கிரீவன் என்னும் பிரம்மராக்ஷஸு ஒன்று இருமனப் பட்டுச் சிவ பூசையில் அபராதிகளாகிய காரணத்தால் முன்பு தான் சிறையிட்டிருந்த தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரோடு இவரையும் சேர்த்து ஆயிரவராக்கி அவரனைவரையும் கொன்றுண்ணத் துணிந்து மலைமுழையை மூடிவிட்டு வெளியே சென்றது. இவ்வமயத்திலே முன்பு குகையிலே அகப்பட்டிருந்த புலவர்கள், "இன்று நீர் சிறைப்பட்டதால் இந்நாள் காறும் நாங்கள் அனுப வித்துவந்த இன்ப வாழ்வை இழந்தோம். உம்முடன் யாங்களும் ஒருசேர உயிரையிழக்க இருக்கிறோம்." என்று கூறிப் பரிதபித் தனர். அது கேட்ட நக்கீரர் முருகப்பெருமானைத் தியானித்துத்

திருமுருகாற்றுப்படை பாடிச் சிறையகத்தே வருந்தியிருந்த எல்லோரையும் விடுவித்துத் தாமும் முருகனருளுக்குப் பாத்திரராயினர்.

5 MAY 1975

2. திருப்பரங்குன்றத் தல புராணத்தில் இச்செய்தி வேறு விதமாகச் சொல்லப்பட்டுளது. வடமொழியில் இயன்றுள்ள அப்புராணத்தின் ஏழாம் அத்தியாயத்திலே திருநந்திதேவர் சநத்குமார முனிவரை விளித்துப் பின்வரும் செய்தியைக் கூறுகின்றார். சங்கப்புலவருள் மிக்க புகழ்பெற்ற நக்கீரர் என்ற ஒருவர் இருந்தார். அவர் தினந்தோறும் மதுரையிலிருந்து திருப்பரங்குன்றத்துக்கு வந்து சரவணப்பொய்கையில் நீராடி அப்பொய்கைக்கரையில் உள்ள பஞ்சாக்ஷரப் பாறையில் சிவ பூஜை செய்துவிட்டு முருகனைத் தரிசியாமலே திரும்பிச்செல்வார், இதுகண்ட முருகப்பெருமான் அப்புலவரது அகந்தையை அடக்கத்திருவுளங்கொண்டு, தமது பூதகணங்களுள் உக்ரன் அண்டாபரணன் முதலிய சிலரை யழைத்து நக்கீரர்க்கு அறிவுபுகட்டுமாறு ஆணையிட்டருளினர். பூதகணத்தலைவர் அங்ஙனமே இயற்றத்தொடங்கி அச்சரவணப்பொய்கைக் கரையில் உள்ளதோர் அரசமரத்தின் இலை யொன்றை இரண்டாகக் கிழித்து, அதை மறுபடி ஒன்று சேர்த்து அந்த நீர்நிலையிலே போட்டார்கள். ஒரு பாதி பறவையாயும் மற்றொரு பாதி மீனாயும் மாறி அவ்விரு பகுதிகளும் ஒன்றையொன்று எதிர்க்கத் தொடங்கின. பறவை மீனை மூக்கினால் கொத்திக் கரையில் இழுத்தது. மீன் தற்காப்பு நியமத்தால் நீர்க்குள் இழுத்தது. நக்கீரர் இந்த ஜீவஹிம்ஸையைப் பார்க்கச் சகியாமல் பூஜையை விரைவில் முடித்துக்கொண்டு மீனைக் காப்பாற்ற எண்ணி நீரருகடைந்தனர். அந்த ஸமயத்தையே எதிர்பார்த்திருந்த கணநாயகர்கள், விரைந்து வந்து நக்கீரரைப் பிடித்துப் பாசக் கயிறுகளாற் பலமாகக் கட்டி மலைக்குகையில் அடைத்துப் பாறையால் அக்குகைவாயிலை அடைத்துவிட்டனர். முருகப்பிரானிடம் இச்செய்தியை உடனே போய்த்தெரிவித்தனர். இதற்குள் நக்கீரர் தம் கர்வம் அடங்கி

முருகன் அடிமலரைப் புகழ்ந்து பல பாடல்கள் பாடித் தமது குறை பொறுக்குமாறு வேண்டியிருந்தார். அருள் வெள்ளம் பொழியும் முருகப்பெருமான் தனது வேலாயுதத்தால் அம்மலைப் பாறையைத் தகர்த்து நக்கீரரைச் சிறைமீட்டு ஆட்கொண்டருளினன்.

இவ்விருவகை வரலாறுகளிலும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் சிந்திக்கத்தக்கன. பத்துப்பாட்டுக்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர் வேறு பல கதைகளைக் கூறியிருந்தும் இக்கதைகளுள் ஒன்றையேனும் திருமுருகாற்றுப்படை யுரையிலே கூறாமையும் கவனிக்கத்தக்கது. புராணத்தின் கதை பின் தோன்றியதாக விளங்குகிறது. பகழிக்கூத்தர், முன்சொல்லிய கதையையே கேட்டிருந்தார் என்று தோன்றுகிறது. அரும்பதவுரையோடு இப்பிள்ளைத் தமிழைப் பதிப்பித்திருக்கும் ஸ்ரீமான் மு. ரா. அருணசலக்கவிராயரவர்கள், திருப்பரங்குன்றப் புராணக் கதையை இங்கு மேற்கொண்டிருக்கிறார்கள். 'நீதிநூல் மங்காமல்' என்பது இங்கு

"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை யில." என்ற திருக்குறளை

நினைப்பிப்பதாகும் என்று தோன்றுகிறது. இதைப்பற்றிக் கவிராயர் அவர்கள் அரும் பதவுரையிலே ஒன்றும் குறிப்பிடவில்லை. இறைவணங்கிய முருகனே சினந்து சிறையிடுவித்தான் என்று கூறும் புராணகதையை ஏற்றுக்கொண்டதால் இதனைப் பற்றி ஒன்றும் கூறாது விடுத்தார்போலும். இப்பெரியோர் வெளியிட்ட திருச்செந்தூர்ப் பிரபந்தத்திரட்டுப் பல நாள் முயன்றும் இப்பொழுதுதான் பெற நேர்ந்ததால் முகவுரையிலே, இப்பிள்ளைத் தமிழ்க்கு நல்ல பதிப்புக்கள் இல்லையென்று குறித்திருப்பது இந்நல்லோர் நன்முயற்சியைத் தவிர மற்றப் பதிப்புக்களுக்கேயென்று கொள்ளத்தக்கதாகும்.

14 கந்தமலி நெட்டிதழ்க் குறுமுகைப் பாசடைக்
கமலமல ரைக்கறித்துக்
கடைவாய் குதட்டும் புனிற்றெருமை தன்குழக்
கன்றுக் கிரங்கியோடிக்
கொந்தவிழ் கருங்குவளை யோடைத் தடாகக்
குரம்பைக் கடந்துசெந்நெற்
குலைவளைக் கும்பழக் குலைமடற் கதலிக்
குருத்தற மிதித்து மீளப்
பந்தரிடு சூலடிப் பலவுதரு முட்குடப்
பழமெலா மிடறிவெள்ளைப்
பணிலஞ் சொரிந்தநித் திலமுறுத் தப்பதை
பதைத்துமுலை பாலுடைந்து
சிந்தமக ராழியலை யொடுபொருத செந்தூர
செங்கீரை யாடியருளே
செந்நிறக் குடுமிவெண் சேவற் பதாகையாய்
செங்கீரை யாடியருளே.

(இ-ள்) கந்தம்மலி-மணம் மிகுந்த, நெடுஇதழ்-பெரிய இதழ்களையும், குறுமுகை- சிறிய அரும்புகளையும், பாசடை-பசுமை நிறமுள்ள இலைகளையும் உடைய, கமல மலரை - தாமரைப் பூவை, கறித்து-கடித்து, கடைவாய் குதட்டும் - கடைவாயினால் அதக்குகின்ற, புனிற்றெருமை-ஈன்ற அணிமையையுடைய எருமையானது, தன் குழக்கன்றுக்கு-தனது இளங்கன்றுக்கு, இரங்கி-மனம் இளகி, ஓடி - ஓடி, கொந்து அவிழ் - பூங் கொத்துக்கள் மலர்ந்த, கருங்குவளை-கருங்குவளைச் செடிகளையுடைய, ஓடைத் தடாகக் குரம்பை-ஓடை தடாகங்களின் கரைகளை, கடந்து-கடந்து போய், செந்நெற்குலை-செந்நிறமான நெற் குலைகளை, வளைக்கும்-வளையச் செய்கின்ற, பழக்குலை - பழக்குலைகளையுடைய, மடற் கதலி-குருத்திலைகளையுடைய வாழை மரங்களின், குருத்து அற

மிதித்து-குருத்துக் கிழியும்படி மிதித்து, மீள-திரும்பவும், பந்தர் இடு-பந்தர்போல வளர்ந்திருக்கிற, சூல் அடி-கருவாகிய காய்களை வேரின் அருகிலேயுடைய, பலவுதரு-பலாமரங்கள் தருகிற, முட் குடப்பழமெலாம்-மேற்பகுதி முள் அமைந்த குடம் போன்ற உருவமுடைய பலாப் பழங்களை யெல்லாம், இடறி - இடறிக் கொண்டு, வெள்ளைப் பணிலம்-வெண்மை நிறம் உள்ள சங்குகள், சொரிந்த-ஈன்றுவைத்த, நித்திலம்-முத்துக்கள், உறுத்த - காலில் அழுத்த, பதைபதைத்து மிகவும் வருந்தி, முலை பாலுடைந்து-மடுவிலிருந்து பால் பீறிட்டு, சிந்த-சிதற, மகர ஆழியலையொடு-சுறுமீன்கள் நிறைந்த கடலின் அலையோடு, பொருத-எதிர்த்துச் சென்ற, செந்தூர - திருச்செந்தூரிற் கோயில்கொண்ட முருகப் பிரானே, செங்கீரையாடியருள், செந்நிறக் குடுமி-செந்நிறமான சூட்டையுடைய, வெண்சேவற்பதாகையாய்-வெண்ணிறச் சேவற் கொடியையுடைய முருகப் பெருமானே, செங்கீரை யாடியருள்.

புனிறு-ஈன்ற அணிமை அல்லது இளமை, கமல மலரைக் கடைவாயாற் குதட்டும் புனிற்றெருமை, தன் இளங்கன்றுக்கு இரங்கி ஓடித்தடாகக் குரம்பைக் கடந்து கதலிக்குருத்தை மிதித்து பலவின் பழமெலாம் இடறி நித்திலம் உறுத்தப் பதைபதைத்தும் முலைப்பால் சுரந்து சிந்திக் கடல் நீரோடு மாறுபடச்செய்யும் என்று வருணிக்கப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது. பலாப்பழம முட்குடக்கனிஎனப்படுதல் இவ்வாசிரியர் வாக்கில் பின்னும் பல விடங்களிலே காணலாம். நெய்தல் நிலத்தில் உள்ள முருகப் பிரானைப் போற்றத் தொடங்கிய இப்புலவர் இச்செய்யுளிற் பல நிலங்களின் இயல்பும் கலக்குமாறு செய்திருத்தல் சிந்திக்கத் தக்கது. பணிலம்-சங்கம், நித்திலம்-முத்தம். கொந்து-கொத்து என்ற சொல்லின் மெலித்தல் விகாரம்; செங்கீரைப் பருவத்தின் முன்மூன்று செய்யுள்களில் “திரையெறியு மலைவாயுகந்தவடி வேலனே” என்ற மகுடம் வைத்து, இங்கு செந்நிறக்குடுமிவெண் சேவற்பதாகையாய் என மாற்றிவைத்தார். இம்மகுடத்தோடு ஒரு மூன்று செய்யுட்கள் அமைந்துள்ளன.

15 வீறாட வெங்கதிர்ப் புகர்முகக் கூரிலை
மிகுத்தவே லுறைகழித்து
வெவ்வாய் பிளந்துசிறு கட்பே ரிடாகினிகள்
விளையாட வெங்கவந்த
மாறாட முதுபகட் டுயர்பிடர்க் கரியநிற
மறலியிரு கைசலித்து
மன்றாட வுடல்விழிக் குரிசில்கொண் டாடநெடு
மாகமுக டிடை வெளியறப்
பாறாட வம்பொற் கிரீடம் பறித்தலகை
பந்தாட விந்தாடவிப்
பாலைக் கிழத்திமுக் கவரிலைச் சூலம்
பசுங்கொழுங் குருதிவெள்ளச்
சேறாட வென்றுசிறு முறுவலா டுங்குமர
செங்கீரை யாடியருளே
செந்நிறக் குடுமிவெண் சேவற் பதாகையாய்
செங்கீரை யாடியருளே.

(இ-ள்) வெவ்வாய் பிளந்து-தமது கொடிய வாயைப் பிளந்து கொண்டு சிறுகண்-சிறிய கண்களையுடைய, பேரிடாகினிகள்—பெரிய இடாகினிப் பேய்கள், விளையாட-விளையாடிக் கொண்டிருக்க, வெம் கவந்தம்-கொடிய குறைத்தலைமுண்டங்கள், மாறாட-அவற்றுக்கு எதிராக ஆட்டமிட, முதுபகட்டு உயர் பிடர்-பெரிய எருமைக்கடாவின்உயர்ந்தபிடரின் மேலமர்ந்த, கரிய நிற மறலி-கரு நிறத்தையுடைய இயமன், இருகை சலித்து-தனது இருகைகளும் சலித்து, மன்றாட-என்னால் இத் தொழில் செய்ய இயலவில்லையென்று இரந்து பின்னிற்க, உடல் விழிக் குரிசில்-உடலிலே ஆயிரம் விழிகள் படைத்த தலைவனாகிய தேவேந்திரன், கொண்டாட-மகிழ்ச்சி பெற்றுப் பாராட்ட, நெடு மாக முகடு—

நீண்ட வானத்தின் உச்சிநிலை, இடைவெளி அற-இடைவெளி யில்லாமற் போகும்படி, மாறு ஆட-கழுகுகள் ஆட, அம்பொற் கிரீடம்-அசுரர்க் குரிய அழகிய பொன்மயமான கிரீடங்களை, பறித்து-அவர்கள் தலைகளிலிருந்து பற்றிக்கொண்டு, அலகை-பேய்கள், பந்தாட-பந்து ஆடிக் கொண்டிருக்க, விந்தாடவி-விந்த மலைக் காட்டில் வாழும், பாலைக் கிழத்தி-பாலை நிலத்துக் குரிய துர்க்கை தேவதையின், முக் கவரிலைச் சூலம்-மூன்று கவர் பட்ட இலை போன்ற உருவம் உடைய சூலப் படையானது, பசுங் கொழுங் குருதி-பசுமையும் கொழுமையும் உடைய இரத்தமாகிய, வெள்ளச் சேறு ஆட-வெள்ளச் சேற்றிலே ஆட, என்று-இங்ஙன மெல்லாம் அமையும்படி, வீறு ஆட-வெற்றி தோன்ற, வெங்கதிர்ப் புகர்—சூரியன் போன்ற செந்நிற முடைய, முகம் கூர் இலைமிகுத்த-முற் பகுதி கூர்மையாயமைந்த தகட்டுத் தன்மையை யுடைய, வேல்-வேலாயுதத்தை, உறைகழித்து-அதற்குரியஉறையிலிருந்து எடுத்து, சிறு முறுவல் ஆடும்-புன் சிரிப்பு சிரித்த, குமர-முருகப் பிரானே, செங்கீரையாடியருள், செந்நிறக் குடுமி வெண் சேவற் பதாகையாய் செங்கீரை யாடியருள்.

ஆடுதல் என்னும் சொல், இச்செய்யுளிற் பல பொருள் பெற்றிருத்தல் காணலாம். இடாகினிகள் என்போர் அம்பிகை யேவல்பூண்ட மாதர்கள். கௌதம ரிஷி சாபத்தால் ஆயிரங் கண்ணனுகிய இந்திரன் இங்கு உடல்விழிக் குரிசில் எனப் பட்டான். பரித்து என்று ஒரு பாடபேதம் உண்டு. அது தாங்கி என்ற பொருள் தரும். பந்தாடுதலுக்குப் பறித்து என்று இருத் தலே சிறப்பாம். போர்க்கலங்களிலே முன்னிற்கும் பொறுப்புப் பாலைக் கிழத்திக்குரிது என்பது சிலப்பதிகார வேட்டுவவரியி லும் புறப்பொருள் வெண்மாலையிலும் விளக்கப்பட்டுளது. புறப் பொருள் வெண்பா மாலையிலே வெட்சிப்படலத்துக் கொற்றவை நிலையென்னும் துறைக்கு உதாரணமாகிய

"ஆளி மணிக் கொடிப் பைங்கிளிப் பாய்கலைக்
கூளி மலி படைக் கொற்றவை—மீளி
யரண் முருங்க வாகோள் கருதி னடையார்
முரண் முருங்கத் தான்முந் துறும்".

என்னும் செய்யுள் துர்கை போர்க்களத்தில் முன்னிற்றலைக் கூறுகின்றது. இங்ஙனமே, சிலப்பதிகார வேட்டுவவரியில் உள்ள,

"கள்விலை யாட்டி மறுப்பப் பொருமறவன் கைவிலேந்திப்
புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரைகருதிப் போகும் [போலும்
புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரைகருதிப் போகுங் [காலைக்
கொள்ளுங் கொடியெடுத்துக் கொற்றவையுங் கொடுமர [முன் செல்லும் போலும்."

என்ற செய்யுளும் கூறுகின்றது.

முருகன் சிறு முறுவலாடியதால் நிகழ்ந்த செயல்கள் ஒவ்வொன்றாக மேலே விளக்கப்பட்டன, இடாகினிகள் வாய் பிளந்து விளையாடக் கவந்தம் மாறாட மறலிகைசலித்து மன்றாட உடல் விழிக்குறிசில் கொண்டாட மாகமுகடு இடை வெளியின்றிக் கழுகுகள் பறந்தாட அலகைகள் கிரீடம் பறித்துப் பந்தாடப் பாலைக்கிழத்தியின் சூலம் குருதிச் சேறாடகூரிலைவேல் உறை கழித்துச் சிறுமுறுவலாடும் குமர செங்கீரை யாடியருள்க என்று வினைமுடிவு செய்க,

16 மகரசல ராசிதனில் வருணன்வந் தடிபரவி
வைத்த மணி முத்துமாலை
வடபூத ரத்தில்விழு மருவியென வுத்தரிக
மார்பினூ டாட மன்னும்
தகரமல ரிதழ்முருகு கொப்புளிக் குஞ்சிகைத்
தமனியச் சுட்டி யாடத்

தவளமுழு மதியமுத துளியெனத் திருமுகத்
தரளவெயர் வாடமுழுதும்
பகரவரு மறைமுனிவர் கொண்டாட மழுவாளி
பங்காளி திருமுலைப்பால்
பருகக் குழைந்துசிறு பண்டியுந் தண்டையும்
பாதமும் புழுதியாடச்
சிகரவரை யரமகளிர் சிறுமுறுவ லாட நீ
செங்கீரை யாடியருளே
செஞ்சிறக் குடுமிவெண் சேவற் பதாகையாய்
செங்கீரை யாடியருளே.

(இ-ள்) மகரசலராசிதனில்-சுருமீன்கள் நிறைந்த கடலிலே, வருணன் வந்து அடிபரவி-வருணதேவன் வந்து பாதங்களை வணங்கிப் புகழ்ந்து, வைத்த-சமர்ப்பித்த, மணி-அழகிய, முத்து மாலை - முத்துமாலையானது, வடபூதரத்தில் - மஹாமேருமலையிலே, விழும் அருவியென-விழும் அருவிபோலே, உத்தரிக மார்பில்-உத்தரியம் விளங்கும் மார்பிலே, ஊடாட - இங்குமங்கும் அசைய, மன்னும்-பொருந்திய, தகரம்-மயிர்ச்சாந்தும், மலர் இதழ்-மலரிதழ்களும், முருகுகொப்புளிக்கும்-மணம் கமழ்கின்ற, சிகை-குஞ்சியிலுள்ள, தமனியச்சுட்டி ஆட—பொன்மயமான சுட்டி என்னும் ஆபரணம் ஆட, தவளமுழுமதி-வெண்ணிறமான பூரண சந்திரனிலிருந்து துளிக்கும், அமுததுளி-அமிர்தத் துளி போல, திருமுகம்-அழகிய முகத்திலே அரும்பிய, தரள வெயர்வு ஆட-முத்துப்போன்ற வேர்வைப் புள்ளிகள் அசைய, முழுதும் பகரவரும்-தம்உள்ளக்கருத்தையெல்லாம் சொல்ல வருகின்ற, மறைமுனிவர்-வேதமோதியமுனிவர்கள்,கொண்டாட-பாராட்ட, மழுவாளி - மழுப்படையேந்திய சிவபெருமானது, பங்காளி - இடப்பாகத்துக்குரிமை பூண்ட பார்வதி தேவியாரது, திரு முலைப்பால் பருக-திருமுலைப்பால் பருகுதற்குப், 'குழைந்து-உள்ளம் குழைந்து, சிறுபண்டியும் - சிறிய வயிறும் தண்டையும்-

காலணியும், பாதமும்-திருவடிமலரும், புழுதியாட-புழுதிபடிய, சிகரவரை-சிகரங்களையுடைய மலைகளில் வாழ்கின்ற, அரமகளிர்-தேவமாதர், சிறு முறுவல் ஆட-புன் சிரிப்புக் கொள்ள, நீ செங்கீரை யாடியருள்-நீ செங்கீரை யாடியருள்வாயாக, செந்நிறக் குடுமிவெண்சேவற்பதாகையாய் செங்கீரை யாடியருள்.

வருணன் முத்துமாலை சமர்ப்பித்து வணங்கியது, சூரசம்ஹார சமயத்தில் ஆகும். முருகன் திருமார்பு வடபூதரத்துக்கு நிகர் எனப்பட்டது. வண்ணம் வடிவம் என்ற இரண்டு காரணங்களாலுமாகும். முகத்திலே தோன்றும் வேர்வை, சந்திரனிடம் தோன்றும் அமுதத் துளிகளுக்கு நிகராக உரைக்கப்பட்டது. அம்பிகை மழுவாளி பங்காளி எனப்பட்டது நயமுடையது. சிறு பண்டியும் தண்டையும் பாதமும் புழுதி யாடக் குழவியர் தாயரிடம் பால் பருகவரும் இயற்கை யழகு நன்கு வருணிக்கப் பட்டுளது. பண்டி-வயிறு, பூதரம்-மலை; சலராசி, கடல் இவையிரண்டும் வடசொற்றொடர்களாம்.

17 இந்திர னுஞ்சசி யும்புர வும்படி யிங்கே வந்தார்கா
ணிந்திரை யுங்கர சங்கமு குந்தனு மிந்தா வந்தார்பா
ரந்தண னுங்கலை மங்கையு நின்சர ணஞ்சேர் கின்றார்போ
யண்டரு டன்பல தொண்டர்ப ணிந்தன ரஞ்சே லென்
[றருளாய்
முந்துத டந்திரை யுந்துவ லம்புரி மொண்டே கோண்
[டேக
முன்றிரு றுந்தர ளங்களு மிழ்ந்திட முந்தூர் நந்தூருஞ்
செந்தில்வ ளம்பதி வந்தரு ளுங்குக செங்கோ செங்கீரை
தென்றன்மணங்கமழ் குன்றுபுரந்தவ செங்கோசெங்கீரை.

(இ-ள்) இந்திரனும் சசியும்-இந்திரனும் இந்திராணியும், பரவும்படி-புகழும் பொருட்டு, இங்கேவந்தார்காண்-இங்கு வந்துளார்கள் காணாய், இந்திரையும்-திருமகளும், கரசங்க முகுந்தனும்-கரத்திலே சங்குதரித்த திருமாலும், இந்தா வந்தார் பார்-இதோ

வந்திருக்கிறார்கள் காணாய், அந்தணனும் கலைமங்கையும்-பிரமதேவனும் கலைமகளும், நின் சரணஞ் சேர்கின்றார்-உனது பாதங்களை அடைகின்றார்கள், அண்டரும்-தேவர்களுடன், பல தொண்டர் பணிந்தனர்-பக்தர் பலர் பணிந்தார்கள், போய்-அவர்கள் அருகிலே போய், அஞ்சேல் என்று ஆளாய்-நீங்கள் அஞ்சற்க என்று திருவாய் மலர்ந்து ஆட்கொள்வாய், முந்து தடந்திரை-முன்வந்து பாயும் பெரிய அலைகள், உந்து-முன்னே தள்ளிய, வலம்புரி-வலம்புரிச் சங்கங்கள், மொண்டே கொண்டேக-மொண்டு கொண்டுவர, முன்றில்தொறும்-வாயில்கள்தோறும், தரளங்கள்-முத்துக்கள், உமிழ்ந்திட-சிந்த, முந்து ஊர் நந்துஊரும்-முன்னே ஊர்ந்து வந்த நத்தைகள் அவற்றின்மேல் மெல்ல ஊர்ந்து செல்லும், செந்தில் வளம்பதி-திருச்செந்தூர் என்னும் வளம் மிக்க திருப்பதியிலே, வந்தருளும் குக-வந்தருளிய முருகப்பெருமானே, செங்கோ செங்கீரை-செங்கீரையாடுக, தென்றல் மணம் கமழ்-தென்றற் காற்றின் நன்மணம் கமழ்கின்ற, குன்று புரந்தவ-தென்னாட்டுக் குன்றங்களிலே கோயில் கொண்டருளியமுருகப்பிரானே, செங்கோ செங்கீரை-செங்கீரை யாடியருள்வாயாக.

இந்திரனும் இந்திராணியும் திருமகளும் திருமாலும் கலைமகளும் பிரமதேவனும் அண்டரும் தொண்டரும் பணிந்தனர் அஞ்சேல் என்று ஆளாய், என்று வேண்டினர். சசி-இந்திராணி, இந்திரை-திருமகள், அந்தணன்-பிரமன், நந்து-நத்தை, செங்கோ செங்கீரை-செங்கீரையாடுக என்பதனோடு சேர்த்தற்குரிய ஒரு தொடர். செங்கோ என்பதற்குப் பொருள் இல்லை. செங்கீரை என்பதன் மரூஉமொழி என்று உரைப்பாரும் உளர்.

18 வரைபொரு புளகித மலைமுலை யரிவையர்
வந்தார் பந்தாட
மறிகட லிறைதரு நவமணி வடமது
வண்டார் தண்டார்பா
ருரைபொரு கவிஞரு முனிவரு மமரு
முன்போ லுண்டோதா

னுரையெமர் வழிவழி யடிமையி துளதென
வுன்பா லன்பானார்
கரைபொரு கடறிட ரெழமயின் மிசைவரு
கந்தா செந்தூரா
கழிமட வனமொடு முதுகுரு கொருபுடை
கண்சாய் தண்கானற்
றிரைபொரு திருநகர் மருவிய குருபர
செங்கோ செங்கீரை
செருவினி லெதிர்பொரு நிசிகரர் தினகர
செங்கோ செங்கீரை.

(இ-ள்) வரைபொரு-மலையை நிகர்த்த, புளகிதம் மலை-புளகம் போர்த்த, முலை அரிவையர்-தனங்களையுடைய இளம் பெண்டிர், பந்தாட வந்தார்-பந்து விளையாட வந்தார்கள், மறிகடல் இறை-அலைமோதுகிற கடலின் தலைவன் ஆகிய வருணன், தரு நவ மணிவடம்-தந்த நவரத்ன மாலையானது, மதுவண்டு ஆர் தண் தார் பார்-தேன் உண்ணும் வண்டுகள் நிறைந்த குளிர்ந்த மாலை போல் விளங்குகிறது, உரைபொரு - சொற்பொருளமைப்பிலே தமக்குத்தாமே நிகராகிய, கவிஞரும்-புலவர்களும், முனிவரும்-முனிவர்களும், அமரரும்-மரணம் இல்லாதவர்களாகிய தேவர்களும், உன்போல்-உனக்கு நிகராக, உண்டோதான்-ஒருதெய்வம் உளதோ!, உரை - நீயே சொல்வாய், எமர்-எம்போன்றவர்கள், வழிவழி அடிமை-உனக்கு வழிவழி அடிமைகளாவோம், இது உள்ளது என-இது மெய்யே என்று கூறி, உன்பால் அன்பானார்-உன்னிடம் அன்பு பூண்டனர், கரைபொருகடல் - கரையோடு மோதும் கடலானது, திடர்எழ - மேடாகும்படி, மயில்மிசை வரு-மயில் வாகனத்தில் மேல் அமர்ந்துவருகின்ற, கந்தா செந்தூரா-கந்தபிரானே திருச்செந்தூர்முருகவேளே, கழிமட அன மொடு-மிகவும் இளம்பருவமுள்ள அன்னப்பறவையோடு, முது குருகு-முதிய நாரைகள், ஒருபுடை - ஒருபக்கத்தில், கண்சாய்-

தூங்குகின்ற, தண்கானல் - குளிர்ந்த கழிக்கரைகளையுடைய, திரைபொரு-அலைமோதும், திருநகர் மருவிய குருபர - அழகிய நகரில் வாழும் குமரகுருபரனே, செங்கோ செங்கீரை-செங்கீரை யாடியருள்க, செருவினில் எதிர்பொரு–போரில் எதிர்த்துப் போராடிய, நிசிசரர் தினகர-அசுரராகிய இருளை யொழிக்கும் சூரியன்போன்றவனே, செங்கோ செங்கீரை-செங்கீரை யாடி யருள்க.

மறிகடல் இறைதரு நவமணிவடம், மகரசலராசிதனில் வருணன் வந்தடிபரவி வைத்த மணிமுத்துமாலை என்று முன் னும் கூறப்பட்டது. நவமணிகள் கலந்து தொடுத்த அம்மாலை வண்டுகள் படியும் பலதிற மலர்களால் கொடுத்த மாலைக்கு நிகரா கும் எனப்பட்டது. பார் என்பது முருகனை நோக்கிப் 'பாராய்' என்று கூறும் பொருளில் வந்துளது; அசையும் ஆகும். கடல்திட ரெழ மயில்மிசை வருதல், சூரசம்மார காலத்தில் அசுரரைக் கொன்று குவித்த செயலைக் குறிப்பிப்பதாகும். நிசிசரர் தினகரன் என்பது நிசிசரராகிய இருளை ஒழிக்கும் சூரியன் என்று பொருள் படுவது; ஏகதேச வருவகம்: முருகனைத் தினகரனுக்கு ஒப்பாக உரைத்து நிசிசரரை இருளுக்கு ஒப்பாக உரையாமல் உய்த்துணர வைத்ததால் அவ்வணியாகும். நிசிசரர்-இருளிற் சஞ்சரிப்போர், தினகரன்-பகல் செய்வோன்-சூரியன்.

19 உரைசெய் வரையர மகளிர் முறைமுறை
யுன்பேர் கொண்டாட
வுலகு மிமையவ ருலகு மரகர
வுய்ந்தோ மென்றாட
வரைசெய் வனமுலை மகளி ரெழுவரும்
வந்தே பண்பாட
மலய முனியொடு பிரம முனிதொழ
வந்தார் கண்டாயே

கரையின் மணலிடு கழியி னெடியக
லஞ்சே ருஞ்சாற்பிற்
கரிய முதுபனை யடியில் வலைஞர்க
ணஞ்சூழ் மென்கானிற்
றிரையில் வளை தவழ் நகரில் வருகுக
செங்கோ செங்கீரை
செருவி னிசிசர திமிர தினகர
செங்கோ செங்கீரை.

(இ-ள்) உரைசெய்-புகழ்ந்து பாடும், வரையரமகளிர்-மலையில் வாழும் தேவ மகளிர், முறைமுறை-கிரமப்படி, உன்பேர் கொண்டாட-உனது பேர்களைக்கூறிப் பாராட்ட, உலகும்-மண்ணுலகும், இமையவர் உலகும்-தேவர் உலகமும், அரகரஹரஹர, உய்ந்தோம்-நாம் உஜ்ஜீவனம் பெற்றோம், என்று ஆட-என்று கூறிக்கொண்டு ஆட, வரைசெய்-மலைபோன்ற, வனமுலை மகளிர்-அழகிய தனங்களையுடைய பெண்டிர், எழுவரும்-ஒரெழுவரும், வந்து பண்பாட-முன்வந்து பாடல்பாட, மலயமுனியொடு-பொதிய மலையில் வாழும் அகத்திய முனிவரோடு, பிரமமுனி தொழ-பிரமதேவர் போற்ற, வந்தார் கண்டாய்-வந்தார்கள் பாராய், கரையில் மணல் இடு-கரையிலே மணலைத் தள்ளுகிற, கழியில்-உப்பங்கழிகளில், நெடிய கலஞ்சேரும் சார்பில்-பெரிய, மரக்கலங்கள் வந்து சேரும் இடங்களில்,கரிய-பெரிய, முதுபனை அடியில்-முதிர்ந்த பனைமரத்தின் அடியில், வலைஞர்கணம் சூழ்-வலைஞர் கூட்டம் சூழ்ந்த, மென்கானில் - மெல்லிய காடுகளில், திரையில் வளை-அலைகளால்வந்த சங்குகள், தவழ்-தவழுகிற, நகரில் வருகுக-செந்தில் நகரிற் கோயில்கொண்ட முருகப்பிரானே, செங்கோ செங்கீரை-செங்கீரையாடியருள்க,செருவில்-போரிலே, நிசிசரதிமிர தினகர-அசுரராகிய இருளுக்குச் சூரியன்போன்றவனே, செங்கோ செங்கீரை-செங்கீரை யாடியருள்க.

உலகும் இமையவர் உலகும் என்றதால் முன் கூறிய உலகம் மண்ணுலக மக்களைக் குறிக்கிறது. வரைசெய் எனும்போது செய் என்பது உவம வுருபு, மகளிர் எழுவர்-சத்தகன்னியர், மலயமுனி, தமிழ் இலக்கணம் பயிலற் பொருட்டும் பிரமமுனி பிரணவப் பொருளுணரும் பொருட்டும் வணங்கினர். திரையில் வளை, கரையில் மணவிடுகழியிலும் நெடியகலஞ்சேரும் சார்பிலும், பனையடியிலும், வலைஞர் கணஞ்சூழ் மென்கானிலும், தவழும் நகரம் எனத் திருச்செந்தில் புகழப்பட்டது. திமிரம்-இருள், நிசிசரர் என்னும் இருளுக்குச் சூரியன் என்றது உருவகவணி.

20 குறுமுகை விண்ட நெட்டிலைத் தாழை
யடியில்வி ளைந்த முட்குடக் காயி
லினிய குவளை யோடையில்
விண்டோ யுந்தேவர்
குணலைபு ரிந்த கற்பகச் சோலை
நிழலிடு பந்த ரிட்டபொற் றாணி
லளவர் குடிலில் வாசலி
னின்றே டுந்தோணி
குழுவொடு வந்து விட்டிளைப் பாறு
துறைமணல் வண்ட லிட்டுவற் றுத
பழைய குமிழி வாவியில்
வண்டா னந்தாவுங்
குரவுநெ ருங்கு மெக்கரிற் கான
லுழுநர்ப ரம்பி னெற்குலைத் தாளி
லிளைய குமர ரூர்சிறு
திண்டேர் மென்காவி
லிறுகுகு ரும்பை யொத்தபொற் பார
நகிலரி ருந்து வைத்தவைப் பூச

லருகி விளைஞ ரூடவில்
வண்டார் தண்டாரி
லெவருமகிழ்ந்த சித்திரச் சாலை
நிழன்மணி துன்று தெற்றியி றேவர்
மகுட மிடறு பூமியில்
வங்கா ளஞ்சின
மெனமொழி தங்குமற்புதத் தீவின்
வணிகரின் வந்த மிக்கபட் டாடை
வகையி லெறியு மாரவ
டப்பூ ணும்பூணி
விரைகவர் ஞெண்டு முக்குளித் தூறு
மளறுகி டங்கில் வித்துவித் தாரத்
துரவி லிடுமுள் வேலியில்
வெங்கா மன்காண
முறுகவி ளைந்து முற்றிமுத் தேறு
கரியக ரும்பு சுற்றுசிற் றாலை
நிலையின் முதிய தாழியில்
வெந்தா றும்பாகின்
முடியைவி ளம்பி வைத்துமுட் டாது
கடைசிதர் கின்ற கட்குடப் பானை
முதுகின் முளைகொள் சாலியின்
மென்பூ கந்தோறு
முருகுத ளும்பு கொத்துடைப் பாளை
சிதரியு திர்ந்த பித்திகைப் பீட
மறுகின் முதல்வர் தேவியர்
பந்தா டுங்காவின்
முனிவர்வி ரும்பு கற்புடைப் பான்மை
மகளிர்கள் மொண்டெ டுத்தகைச் சாலின்

மடுவின் முழுகு மேதியில்
வம்பே செஞ்சேல்பாய்
செறுவில்வி ளைந்த நெற்குலைக் காயி
லுழவிலு டைந்த கட்டியிற் பார
மதகு செறியு மேரியின்
மண்டு கப்பானல்
செருமிமு ழங்கு கற்பிளப் பான
புடையின்வி ழும்பு னற்பெருக் கான
தமர திமிர வாவியி
லெங்கே யுந்தாவும்
திரையில்வ லம்பு ரிக்கணத் தோடு
பணிலமு ழங்கு பட்டினக் காவல்
திகிரி முருக வேலவ
செங்கோ செங்கீரை.
தினகர ரஞ்ச விட்புலத் தேவர்
மகபதி முன்கு வித்தவித் தார
மவுலி திறைகொள் சேவக
செங்கோ செங்கீரை.

(இ-ள்) குறுமுகை விண்ட-சிறிய அரும்புகள் மலர்ந்த, நெடு இலை தாழை-நீண்ட இலைகளையுடைய தாழைப் புதரின், அடியில்-அடியில், விளைந்த முட்குடக்காயில்-நன்கு முதிர்ச்சிபெற விளைந்திருக்கிற முட்குடம்போன்ற உருவம் உள்ள காய் உள்ள இடங்களிலும், இனிய குவளை ஓடையில்-இனிய மணமுடைய குவளை மலர்கள் மலர்ந்த ஓடைகளிலும், விண் தோயும்-ஆகாயத்தை அளாவிய, தேவர் குணலை புரிந்த-தேவர்கள் (பொழுதுபோக்கும் பொருட்டு) கூத்தாடிய, கற்பகச் சோலை-கற்பக மரம் வளரும் சோலையிலே, நிழல் இடு-நிழல் படர்கின்ற, பந்தர் இட்ட பொற்றூணில்-பூம்பந்தர்களாக அமைத்த பொன் மயமான தூண்களினிடையிலும், அளவர் குடிலில்-நெய்தல் நில

மக்கள் வாழும் குடிசைகளிலும், வாசலில்-வாயில்களிலே, நின்று ஓடும் தோணி - நின்றுஓடுகின்ற தோணிகளை, குழுவொடுவந்து-கூட்டமாக வந்து, விட்டு இளைப்பாறு-நிலத்தருகில் கட்டிவிட்டு இளைப்பாறுகிற, துறை மணல் - கடல் துறையின் மணல், வண்டல் இட்டு - பெண்கள் வண்டலாடி, வற்றுத-வற்றாமல் நிறைந்துள்ள, பழைய குமிழி-பழமை பொருந்திய சிறு நீர்க்குமிழிகளையுடைய, வாவியில் - தடாகத்திலும், வண்டானம் தாவும்-நீர் நாரைகள் தாவுகின்ற, குரவு நெருங்கும் எக்கரில்-குராமரங்கள் நெருங்கி வளரும் மேடுகளிலும், கானல் உழுநர் பரம்பில் - கடற்றுறைக் காடுகளை உழுகின்றவர்களுடைய நிலங்களிலே, நெற்குலைத்தாளில் - குலை குலையாக நெற்பயிர்கள் நிறைந்த இடங்களிலும், இளைய குமரர்-இளஞ்சிறுர்கள், ஊர்-செலுத்துகிற, சிறு திண்தேர்-சிறிய உறுதியான தேர்களையுடைய, மென்காவில்-மெல்லிய சோலைகளிலும், இறுகு-ஒன்றோடொன்று நெருங்கிய, குரும்பை ஒத்த-தென்னங் குரும்பைகள்போன்ற, பொற்பாரம் - பொன்னணிகளைச் சுமந்த, நகிலர்-தனங்களையுடைய பெண்டிர், இருந்து-அமர்ந்து, வைத்த-ஆடும்பொருட்டு வைத்த, வைப்பூசல் - செயற்கையாய் அமைந்த ஊசல்களின், அருகில்-சமீபத்தில் நிகழ்கின்ற, இளைஞர் ஊடலில்-யௌவன பருவமுடையார்களது ஊடல் விளையாட்டுக்களிலும், வண்டுஆர்-வண்டுகள் நிறைந்த, தண் தாரில்-குளர்ச்சிபொருந்திய மாலைகளினுலே, எவரும் மகிழ்ந்த-எவரும் பார்த்து மகிழ்ந்த, சித்திரச்சாலை-சித்திரச்சாலைகளின், நிழல் மணி துன்று தெற்றியில்-ஒளி பொருந்திய மணிகள் அழுத்திய திண்ணைகளிலும், தேவர் மகுடம் இடறு பூமியில்-தேவர்கள் கிரீடங்கள் சிதர்கின்ற நிலத்திலும், வங்காளம் சீனம் என-வங்காளம் சீனம் என்று சொல்லப்படுகிற, மொழி தங்கு-பாஷைகள் பேசப்படுகின்ற, அற்புதத்தீவில்-அற்புதமான இயற்கையழகுள்ள தீவுகளிலிருந்து, வணிகரின் வந்த மிக்க பட்டாடை - வணிகரால் வந்து சேர்ந்த விலைமதிப்புமிக்க பட்டுவஸ்திரங்களின், வகையில்-வகைகளிலும், எறியும் ஆரவடம்-ஒளிவீசும் முத்துமாலைகளை, பூணும் பூணில்-

அணியும் ஆபரணங்களிலும், இரைகவர் - தனக்குரிய உணவுப் பொருளைக் கவர்ந்துகொள்ளும், ஞெண்டு - நண்டுகள், முக் குளித்து ஊறும்-நீரில் மூழ்கி ஊறுகின்ற, அளறு கிடங்கில் - சேறு நிறைந்த கிடங்குகளிலும், வித்துவித்தாரத் துரவில்-வித் துக்கள் விசாலமாக விதைக்கப்பட்டிருக்கும் நாற்றங்கால்களி லும், இடுமுள் வேலியில் - அருகே இட்டிருக்கும் முள்வேலிகளி லும், வெங்காமன் காண - விருப்பத்தை விளைக்கும் மன்மதன் காண, முறுக விளைந்து-நன்கு விளைந்து,முற்றி-முதிர்ந்து, முத்து ஏறு-முத்துக்கள்தோன்றிய, கரிய கரும்பு - பெரிய கரும்புகள், சுற்று - சாற்றின்பொருட்டுச்சுட்டுகிற, சிறு ஆலை நிலையில் - சிறிய ஆலைகள் உள்ள இடங்களிலும், முதிய தாழியில் - பெரிய ஆலைப்பாத்திரங்களிலே, வெந்து ஆறும் பாகில்- காய்ந்துஆறும் தேம்பாகுஉள்ள இடங்களிலும், முடியை விளம்பி வைத்து-அளவைச் சொல்லிவைத்து, முட்டாது-குறையாமல், கடைசிதருகின்ற-வாயிலிருந்து சிந்துகின்ற, கட்குடப்பானை முதுகில்-கள் நிரம்பியபெரும் பானைகளின் பக்கங்களிலும், முளை கொள்-முளைகிளம்பியுள்ள, சாலியில்-நெல்லின் அருகிலும், மென் பூகந்தோறும்-மெல்லிய கமுக மரங்களிலெல்லாம், முருகு துளும்பு-மணம் விரிகின்ற, கொத்துடைப் பாளை-பாக்குக் கொத் துக்களை இடையிடையே உடைய பாளைகள், சிதறி உதிர்ந்த-காற் றால் அலைந்து சிந்திய, பித்திகைப் பீடம் மறுகில்- ஆதனமாய் அமைக்கப்பெற்ற சிறுசிறு பகுதிகளையுடைய திண்ணைகளைக் கொண்ட வீதிகளிலும், முதல்வர் தேவியர்-தலைவர்களது தலை வியர்கள், பந்து ஆடும் காவில்-பந்து ஆடும் சோலைகளிலும், முனிவர்-அந்தணர்கள், விரும்பு-விரும்பத்தக்க, கற்புடைப் பான்மை-கற்பொழுக்க இயல்பையுடைய, மகளிர்கள்-பெண்டிர், மொண்டு எடுத்த-நீரைமொண்டு எடுத்த, கைச்சாலில்-சிறியமண் பாண்டங்களிலும், மடுவில் முழுகுமேதியில்-ஆழமான நீர் நிலை களிலே முழுகுகிற எருமைகளிலும், வம்பே-புதுமையாக, செஞ் சேல்பாய்-செந்நிறமாய்த் தோன்றுகிற கெண்டைமீன்கள் பாய் கிற, செறுவில்-வயல்களிலே, விளைந்த நெற்குலைக்காயில்-விளைந்

திருக்கும் நெற்குலைகளின் இடையிலும், உழவில்-உழுதல் காரண மாக, உடைந்த-உடைந்துபோன, கட்டியில்-மண்ணாங்கட்டியிலும், பாரமதகுசெறியும் ஏரியில்-பெரிய மதகுகள் அமைக்கப்பெற்ற ஏரிகளிலும், மண்டூகம்-தவளைகள், பானல் செருமி-ஆம்பல் மலர் களைவிழுங்கி, முழங்கு-ஒலிசெய்கிற, கற்பிளப்பான-கற்பிளவுகளா யுள்ள, புடையின்-பக்கங்களிலும், விழும்புனற் பெருக்கான-மழை விழுந்ததால் அமைந்த நீர்ப்பெருக்காகிய, தமர திமிர வாவியில்-முழக்கம் மிக்க ஆழ்ந்திருண்ட வாவிகளிலும், எங்கேயும் தாவும் திரையில்-எங்கெங்கும் தாவுகிற அலைகளிலும், வலம்புரிக் கணத் தோடு-வலம்புரிச் சங்கக்கூட்டங்களோடு, பணிலம் முழங்கு-இடம்புரிச் சங்குகளும் கலந்து முழங்குகின்ற, பட்டினக்காவல்-பட்டினத்தின் காவல்பூண்ட, திகிரி முருக-ஆணைச்சக்கரத்தை யுடைய முருகப்பிரானே, வேலவ செங்கோ செங்கீரை-வேல வனே செங்கீரை யாடியருள்க, தினகரர்-பன்னிரு சூரியர்கள், அஞ்ச-அஞ்சவும், விட்புலத்தேவர்-விண்ணுலகில் வாழும் தேவர் கள் தலைவனாகிய, மகபதி முன்-இந்திரன் என்பான் முன்னிலே, குவித்த-கைகுவித்துத் தலையிலே சூட்டிய, வித்தார மவுலி-பெரிய கிரீடத்தை, திறைகொள் சேவக-திறையாகக்கொண்ட வீரனே, செங்கோ செங்கீரை-செங்கீரை ஆடியருள்க.

தாழையடியில், பலவினடியில், குவளையோடையில், பொற் றாணில், குடிலில், வாவியில், எக்கரில், பரம்பில், தாளில், காவில், ஊடலில், தெற்றியில், தீவில், பூணில், கிடங்கில், ஆலைநிலையில், பாகில், முதுகில், மறுகில், சாலில், மேதியில், காயில், கட்டியில், ஏரியில், புடையில், வாவியில், பணிலம் முழங்கும் பட்டினம் என்று இயைத்து, வினை முடிவுசெய்க. குணலை-ஆட்டம்; அளவர், நெய்தல் நிலமக்கள், வண்டல்-மகளிர் விளையாட்டு அழுக்குமண், வண்டானம்-நீர்நாரை, குரவு-குராமரம், எக்கர்-மணல்மேடு, உழுநர்-உழுவோர்; பரம்பு நிலம்-பரம்பு என்னும் சட்டமும் ஆம், குரும்பை-தேங்காயின் பிஞ்சு, நகில்-தனம், தெற்றி - திண்ணை, ஞெண்டு-நண்டு, அளறு-சேறு, துரவு-சிறு நிலம், கிணறுமாம்,

சாலி-நெல், பூகம்-கமுகு, பித்திகை-படங்கு, பீடம் - ஆதனம், மறுகு-வீதி, மேதி-எருமை, வம்பு-புதுமை, செறு-வயல், மண்டூகம்-தவளை, பானல்-ஆம்பல், செருமுதல்-விழுங்குதல், தமரம்-ஓசை, திமிரம்-இருள், பணிலம்-சங்கு, மவுலி-கிரீடம். தேவர்கள் கற்பகச்சோலையில் நிழலிடு பந்தர் நிலத்தில் உள்ளது. வங்காளம், சீனம் என மொழி தங்கும் அற்புதத் தீவுகளிலிருந்து வணிகர்களால் தமிழ்நாட்டுக்குப் பட்டாடை வருவிக்கப்பெற்ற செய்தி இச்செய்யுளிற் கூறப்பட்டது. சீனம் பட்டுப்பிறப்பிடம் ஆதலாலும் வங்காளம் பெரிய இறக்குமதி வியாபாரஸ்தலம் ஆதலாலும் இது பொருந்தும். பன்னிரு கதிரவர்களைக் காட்டிலும் ஒளிமிகுந்த பெரிய இரத்தின கிரீடத்தை தேவேந்திரன் சூட்ட முருகப்பெருமான் ஏற்றுக்கொண்டது, சூரசம்மாரத்தின் பிறகு தேவயானைத் தேவியாரை மணம்புரிந்துகொள்ள மனமுவந்த சமயத்திலாகும். முருகப்பிரான், உக்கிரகுமாரனாக அவதரித்தான் என்று கூறும் திருவிளையாடற் புராணத்திலே அவ்வுக்கிர குமார பாண்டியன் மேகம் பெறும்பொருட்டு இந்திரன் உலகுசென்று அவன் அணிவித்த மிக்க கனமுள்ள மாலையையும் கிரீடத்தையும் அணிந்துகொண்டு அவற்றால் தளராமல் நின்றான் என்று கூறும் செய்தியைக் குறிப்பித்ததாகவும் கொள்ளலாம். மகபதி - நூறு யாகங்களைச் செய்த காரணத்தால் இந்திர பட்டம் பெறுவோன்.

## மூன்றாவது

# தாலப்பருவம்.

---

தாலப் பருவம் என்பது, குழவியைத் தொட்டிலில் வளரச் செய்து உரிமை மகளிர் நாற்புறமும் சூழ நின்று, தம் நாவினாற் பாடி அத்தொட்டிலை யாட்டும் பருவமாம். தாலு என்னும் வட சொல் 'நா' என்ற பொருள் பெறும். இது தமிழ் மொழியில்

தால் என்றும் தாலம் என்றும் வழங்குகின்றது. பாடுதற்பொருட்டு நாவசைத்தலால் தாலப்பருவம் எனப்பட்டது. தாலாட்டுப் பருவம் என்றும் கூறுவது உண்டு. இப்பருவத்துச் செய்யுட்கள் 'தாலோ தாலேலோ' என்ற சொற்களால் முடிவுபெறும். இங்ஙனம் பாடும் பாட்டு, தாலாட்டுப் பாட்டு எனப்பெறும். இப்பாட்டுப் பாடுதல் **தாலோலித்தல்** என்று சொல்லப் படுவது உண்டு. பெரியாழ்வார் அருளிச் செயல்களிலே தேவகி புலம்பலாக அமைந்துள்ள பாசுரங்களில் ஒன்று "ஆலை நீள் கரும்பன்னவன் தாலோ" என்று தொடங்கி, "தாலொலித்திடுந் திருவினை யில்லாத் தாயரிற் கடையாயின தாயே" என்று முடிவு பெற்றிருத்தல் இங்கு கவனிக்கத் தக்கது. தாலொலித்தல் என்ற தொடர் நாவாற் பாடுதல் எனவும் தாலோ என்று பாடுதல் எனவும் இரு பொருள் பயக்கவல்லதாம். குழவியை முதன் முதவில் நன்னாளொன்றிலே தொட்டிலிற் கிடத்தித் தாலாட்டும் பொழுது உரிமையாளர் பலரும் தம் தம் நிலைக்கேற்பப் பொன்னாலும், பொருளாலும் சிறப்புச் செய்தல் மரபாம். இதனை நன்கமைத்துப் பாடப்பெற்றுளள பெரியாழ்வார், 'தாலப் பருவப் பாசுரங்கள்' இங்கு சிந்திக்கத் தக்கன. பின்னுளிலே தாலாட்டுப் பாட்டுக்களைத் தனிப்படப்பாடிய புலவர்களும் பிள்ளைத்தமிழிலே தாலப்பருவம் பாடிய புலவர் பெரு மக்களும் இம்மரபிற் சிறிது சிறிது கூறிவைத்தனர்.

**21.** ஆடரும் பருநவ மணிமுடி யமரரு
மமரர்க் கிறைவனுநீ
டளகைந ராதியு மீரொன் பதின்மரு
மருமறை முனிவோருஞ்
சுடருந் தருமிரு சுடரும் பரவிய
தோகைய ரெழுவருமுத்
தொழின்முக் கடவுளு மவரவர் தங்குறை
சொல்லித் துதிசெய்தார்

படருங் கிரணப் பரிதி நெடுங்கதிர்
பாயும் பகிரண்டம்
பழுமர மென்னப் பனையென நிமிரும்
பாழிக் கைநீட்டித்
தடவும் புகர்முக தந்திக் கிளையாய்
தாலோ தாலேலோ
சந்த மணங்கமழ் செந்திற் பதியாய்
தாலோ தாலேலோ.

(இ-ள்) அடரும்-நெருக்கமாய் இழைத்த, பரு நவமணி-பெரிய நவரத்தினங்களால் அழகு பெற்ற, முடி - கிரீடங்களை அணிந்த, அமரரும்-தேவர்களும், அமரர்க்கு இறைவனும்-தேவர்க்கு அரசனாகிய தேவேந்திரனும், நீடு-அகன்ற நகராகிய, அளகை-அளகாபுரியின், நராதியும்-அரசனாகிய குபேரனும், ஈரொன் பதின்மரும்-பதினெண் கணத்தவரும், அருமறை முனிவோரும்-அரிய வேதங்களை ஓதியுணர்ந்த முனிவர்களும், சுடரும் தரும் இரு சுடரும்-ஒளியை உதவுகின்ற சூரிய சந்திரர்களும், பரவிப-புகழும் இயல்பினராகிய, தோகையர் எழுவரும் - சத்த கன்னியர்களும், முத் தொழில் முக் கடவுளும்-படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தொழில்களை இயற்றும் அயன் அரி, அரன் என்னும் மூன்று கடவுளர்களும், அவரவர் தம்குறை சொல்லி-அவரவர் தத்தமக்குள்ள குறைகளை வெளியிட்டுரைத்து துதி செய்தார்- துதித்தார்கள், படரும்-உலகெங்கும் பரவுகின்ற, கிரணம்-கதிர்களையுடைய,பரிதிநெடுங்கதிர்-சூரியன துநீண்டகரங்கள்பாயும் பகிரண்டம்-பாய்ந்து செல்லும்பகிரண்டத்தை,பழுமர மென்ன-பழங்கள் பழுத்த ஆலமரம் என்று எண்ணி, பனையென நிமிரும்-பனைமரம் போல் உயர்ந்த, பாழிக்கை நீட்டி-பெரிய தும்பிக்கையை நீட்டி, தடவும்-தடவுகிற, புகர் முகம் - புள்ளிகள் நிறைந்த முகத்தையுடைய, தந்திக்கு இளையாய் - விநாயகருக்கு இளைய பெருமானே, தாலோ தாலேலோ - தாலாட்டுப் பாடலைச்

செவியேற்றுக் கண் வளர்ந் தருள்வாயாக. சந்தம்-சந்தனத்தின், மணம் கமழ்-மணம் கமழ்கின்ற, செந்திற் பதியாய்-திருச் செந்திற்பதியிலே வாழும் முருகப்பிரானே, தாலோ தாலேலோ.

நராதி நர+ஆதி-அரசன். ஈரொன்பதின்மர்-தேவ கணத்தவர் பதினெண்மர், சிவகணத்தார் பதினெண்மர் என்றும் உரைக்கலாம். சத்த கன்னியர் இன்னவர் என்பது முன்னொரு செய்யுளிற் குறிக்கப்பட்டது. தேவர் பலரும் அவரவர்க்குள்ள குறைகளைச் சொல்லித் துதி செய்தார்கள். நீ பள்ளி வளர்ந் தருளுக என்று தாலாட்டுப் பாடுகின்றார். நெடுங்கதிர் பாயும் பகிரண்டம் பழுமரத்துக்கு நிகர் எனப்பட்டது. விநாயகர் புகர் முக தந்தி எனப்பட்டார். தந்தம் உடையது தந்தி- செந்திற் பதி தென்னாட்டில் இருத்தலாலும் சந்தனம் வளரும் பொதிய மலைக்கு அருகில் இருப்பதாலும் சந்தமணங்கமழ் செந்திற் பதி எனப்பட்டது.

22\. கங்குல் பொருந்திய குவளைக் குழியிற்
கழியிற் பழனத்திற்
கரையிற் கரைபொரு திரையில் வளைந்த
கவைக்கால் வரியலவன்
பொங்கு குறுந்துளி வாடையி னொந்து
பொறாதே வெயில்காயும்
புளினத் திடரிற் கவரிற் றூரவிற்
புன்னை நறுந்தாதிற்
கொங்கு விரிந்த மடற்பொதி தாழைக்
குறுமுட் கரியபசுங்
கோலச் சிறிய குடக்கா யிற்புயல்
கொழுதுஞ் செய்குன்றிற்

சங்கு முழங்கிய செந்திற் பதியாய்
தாலோ தாலேலோ
சமய விரோதிகள் திமிர திவாகர
தாலோ தாலேலோ.

(இ-ள்) கங்குல் பொருந்திய - இரவிலே குவிந்த, குவளைக் குழியில்-குவளை மலர் நிறைந்த குழிகளிலும், கழியில்-உப்பங்கழிகளிலும், பழனத்தில்-அருகில் உள்ள வயல்களிலும், கரையில்-கடற் கரையிலும், கரை பொரு-கடற் கரையோடு மோதுகின்ற, திரையில்-அலைகளிலும், வளைந்த கவைக்கால்-வளைந்த உருவமாய் அமைந்த பிளவுற்ற கால்களையுடைய, வரி அலவன் - வரிகளையுடைய நண்டுகள், பொங்கு குறுந்துளி-நிறைந்த சிறிய நீர்த்துளிகளை வீசுகிற, வாடையில் நொந்து - வாடைக்காற்றால் வருந்தி, பொறாது-அதைப் பொறாமல், வெயில் காயும்-வெயிலிலே குளிர் காய்கிற, புளினத்திடரில்-மணல் மேட்டிலும், கவரில்-வெடிப்புக்களிலும், துரவில்-கிணறுகளிலும், புன்னை நறுந்தாதில்-புன்னை மரத்தின் மணம் பொருந்திய மகரந்தப் பொடி விழுதலால், கொங்கு விரிந்த-மணம் மிகுந்துள்ள, மடல் பொதி - மடல்கள் நிறைந்த, தாழை-தாழையின், குறுமுள்-சிறிய முட்களையுடைய, கரிய பசுங்கோலம்-கரிய நிறமுள்ள பசுமையும் அழகும் பொருந்திய, சிறிய குடக்காயில்-சிறிய குடவுருவமுள்ள தாழைக் காய்களிலும், புயல்-மேகங்கள், கொழுதும்-கிண்டுகிற, செய்குன்றில்-செயற்கைச் சிறு குன்றுகளிலும், சங்கு முழங்கிய - சங்குகள் முழங்கிய, செந்தில் பதியாய் - திருச்செந்தூர்த் திருப்பதியிற் கோயில் கொண்ட முருகப்பிரானே, தாலோ தாலேலோ, சமய விரோதிகள்-சைவ சமயத்துக்குப் பகைவர்களாகிய சமணர்கள் என்னும், திமிர திவாகர-இருளுக்குச் சூரியன் போன்றவனே, தாலோ தாலேலோ.

குழியில், கழியில் பழனத்தில், கரையில், திரையில், திடரில் கவரில், துரவில், குடக்காயில், செய்குன்றில் சங்கு முழங்கிய செந்திற்பதி என வருணிக்கப்பட்டது. சமய விரோதிகள்

இருளாகவும், முருகன் திவாகரனுகவும் உருவகம் செய்யப் பட்டனர். திமிரதிவாகரன்-இருளுக்குப் பகலவன். திவாகரன்-பகல் செய்வோன்.

23 தண்டே னொழுகு மொழிமடவார்
தாமங் கொழுதிச் சுருண்டிருண்டு
தமரக் களிவண் டடைகிடந்து
தழைத்து நெறித்த குழற்பாரங்
கொண்டே மெலிந்த தல்லாது
குரும்பைக் களப முலைசுமந்து
கொடிபோன் மருங்குல் குடிவாங்கக்
குழையிற் குதித்த விழிக்கயலைக்
கண்டே வெருவிக் கயன்மறுகக்
கனக வெயின்மா ளிகையுடுத்துக்
ககனந் தடவுங் கோபுரத்தைக்
கருதி வடவெற்பெனக் கதிரோன்
றிண்டேர் மறுகுந் திருச்செந்தூர்ச்
செல்வா தாலோ தாலேலோ
தெய்வக் களிற்றை மணம் புணர்ந்த
சிறுவா தாலோ தாலேலோ.

(இ-ள்) தண்தேன் ஒழுகும் மொழி-குளிர்ந்த தேன் ஒழுகு கிற மொழிகளைப் பேசுகிற, மடவார்-இளம் பெண்கள், தாமம் கொழுதி-மாலைகளிலே கிண்டி, சுருண்டு இருண்டு-அங்கு சுருண்டு கருநிறமுடையதாய், தமரக் களிவண்டு - பாட்டொலி செய்யும் மதங்கொண்ட வண்டுகள், அடைகிடந்து - தங்கி, தழைத்து நெறித்த - தழைத்து நெறிப்பு அமைந்துள்ள, குழல் பாரம் - கூந்தலாகிய பாரத்தை, கொண்டே-தாங்கியதால், மெலிந்ததல் லாது - மெலிவுற்றதல்லாமல், குரும்பை - தென்னங் குரும்பை

போன்ற, களபமுலை சுமந்து-சந்தனக்கலவை திமிர்ந்த தனபாரங்களைச் சுமந்ததாலும், கொடிபோல் மருங்குல் - கொடிபோன்ற உருவம் உள்ள இடையானது, குடிவாங்க-இருந்த இடம் தெரியாமல் மறைய, குழையில் குதித்த - செவியணியாகிய பொன் குண்டலங்களை நோக்கிப் பாய்ந்த, விழிக்கயலை-விழிகளாகிய கெண்டை மீன்களை, கண்டு வெருவி-பார்த்து அஞ்சி, கயல்மறுக-கெண்டை மீன்கள் மனம் கலங்க, கனக வெயில்-பொன்னிறமான வெயில் படிகிற, மாளிகை உடுத்து-மாளிகைகளாற் புடைசூழப் பெற்று, ககனம் தடவும்-ஆகாயத்தைத் தொடுகின்ற, கோபுரத்தை-கோபுரத்தை, வடவெற்பெனக்கருதி-வடதிசையில் உள்ள மகாமேரு மலை யென்று கருதி, கதிரோன்-சூரியனுடைய, திண்தேர் மறுகும்-உறுதியான ஒற்றையாழித்தேர் மேற்செல்ல வழியறியாது கலங்குகிற, திருச்செந்தூர்ச் செல்வா-திருச்செந்தூர்த் திருப்பதியில் மேவும் செல்வனே, தாலோ தாலேலோ, தெய்வக் களிற்றை-தேவயானைத் தேவியாரை, மணம் புணர்ந்த சிறுவா-மணம்புரிந்த இளங்குமாரா, தாலோ தாலேலோ.

மடவார் மொழியில் தேன் ஒழுகும் என்றார்; இனிமை கருதி. வண்டுகள் மடவார் தாமங்களிற் கிண்டிக் குழலில் அடை கிடக்கும் என்றார். அக்குழற் பாரத்தைச் சுமந்து மெலிந்ததே யன்றி முலைப்பாரஞ் சுமந்ததாலும் கொடிபோல் மருங்குல் குடி வாங்கும் என்றார். குடிவாங்குதல்-குடியோடுதல் இருந்த இடத்தைவிட்டு அகலுதல், கால்வாங்குதல் என்னும் தொடர் போல இதுவும் வழங்கும். விழிக்கயலைக்கண்டு கயல் மறுகும் என்றது அழகால் வெற்றிபெற இயலாமையைக் குறித்தது. மாளிகைகளை உடுத்த கோபுரம் வடவெற்புக்கு நிகராம் எனப்பட்டது. கதிரவன் திண்டேர் வடவெற்பை ஒரு முறை சுற்றுதல் முறை, வடக்கே இருத்தற்குரிய வடவெற்புத் தெற்கிலும் காணப்பெற்றதால் அத்தேர் செல்லும் வழியறியாது மறுகும் என்றார். தெய்வக் களிறு என்று தேவசேனை தேவியாரைக் கூறுதல் மரபு.

24. பாம்பா லுததி தனைக் கடைந்து
படரும் கொடுங்கார் சொரிமழைக்குப்
பரிய வரையைக் குடைகவித்துப்
பசுக்கள் வெருவிப் பதறுமற்
காம்பா லிசையின் றொனி யழைத்துக்
கதறுந் தமரக் காளிந்திக்
கரையி னிரைப்பின் னேநடந்த
கண்ணன் மருகா முகையுடைக்கும்
பூம்பா சடைப்பங் கயத்தடத்திற்
புனிற்றுக் கவரி முலைநெரித்துப்
பொழியு மமுதந் தனைக்கண்டு
புனலைப் பிரித்துப் பேட்டெகினந்
தீம்பால் பருகுந் திருச் செந்தூர்ச்
செல்வா தாலோ தாலேலோ
தெய்வக் களிற்றை மணம் புணர்ந்த
சிறுவா தாலோ தாலேலோ.

(இ-ள்) பாம்பால்-வாசுகி என்னும் பெரும் பாம்பால், உததி தனை-பாற்கடலை, கடைந்து-கடைந்து, படரும்-படர்ந்துவரும், கொடுங்கார்-கொடிய மேகங்கள், சொரி மழைக்கு - சொரிந்த மழைக்கு, பரிய-பெரிய, வரையை-கோவர்த்தன கிரியை, குடை கவித்து-குடையாகப் பிடித்து பசுக்கள் வெறுவிப் பதறுமல் - பசுக்கள் அஞ்சிப் பதறுவண்ணம், காம்பால்-புல்லாங் குழலால், இசையின் தொனி அழைத்து-இசையொலியை வருவித்து, கதறும் தமரம்-கதறுகிற முழக்கமுள்ள; காளிந்திக் கரையில்-யமுனைக்கரையிலே, நிரைப்பின்னே நடந்த-பசுக்களின் பின்னே நடந்த, கண்ணன் மருகா-கண்ண பிரான் மருகனே, முகை உடைக்கும்-அரும்புகளை மலரச் செய்யும், பூம்பாசடை - அழகிய பசிய இலைகள் நிறைந்த, பங்கயத் தடத்தில்-தாமரைத் தடா

கத்தில், புனிற்றுக் கவரி-ஈன்ற அணிமையுள்ள எருமைகள், முலைநெரித்துப் பொழியும் - மடுவை நெரித்துப் பொழிகின்ற, அமுதம் தனைக்கண்டு-பாலைப்பார்த்து, புனலைப் பிரித்து-நீரைப் பிரித்து, பேடு எகினம்-அன்னப்பேடு, தீம்பால் பருகும் - இனிய பாலைப்பருகும், திருச்செந்தூர்ச் செல்வா தாலோ தாலேலோ, தெய்வக் களிற்றை மணம்புணர்ந்த சிறுவா தாலோ தாலேலோ.

பாசடை பசுமை+அடை-பசுமையான இலை. பங்கயத் தடம்-தாமரைத் தடாகம். புனிற்றுக்கவரி-இளமையும் ஈன்ற அணிமையும் உள்ள எருமை. அமுதம்-பால், பேடு-பெண்பால். தாமரைத் தடாகத்திலே எருமை பொழியும் பாலை அன்னங்கள் நீரைப் பிரித்துப் பருகும் திருச்செந்தூர் என்று வருணித்தார். பாம்பால் உததிதனைக் கடைந்தது, தேவாசுரர் பெரும் போர் புரிந்து மடிந்துகொண்டிருக்கையில் தேவர்க்கு அமரவாழ்வு தரத்திருவுளங்கொண்ட திருமால் பாற்கடலை மந்தரமத்தால் வாசுகித்தாம்பாற் கடைந்து அமுதம் எடுத்துக் கொடுத்தருளிய வரலாறுகும். கார் சொரி மழைக்கு வரையைக் குடை கவித்தது, கண்ணபிரான், இந்திரனுக்கு உரிய பொங்கல் இடவேண்டாம் என்று ஆயர்களுக்குக் கூறிக் கோவர்த்தன கிரியின் முன் பூசை போடச்செய்து அது கண்டு சினங்கொண்ட இந்திரன் கடுமழை பொழிந்து ஆயர்களையும் ஆநிரைகளையும் அழிக்கத் துணிந்த போது கோவர்த்தனகிரியையே குடையாகக்கொண்டு தம்மை அண்டிய கோகுலத்தாரைக் காத்தருளிய வரலாறுகும். பசுக்கள் வெருவிப் பதறுமல் காம்பால் இசையின் தொனி அழைத்தது, யமுனைக் கரையில் உள்ள காடுகளிலே பசுக்களை மேய்த்து அவை ஒரு சமயம் வழியறியாது சென்றபொழுது வேணுகானத்தால் திருக்கண்ணபிரான் அழைத்தருளிய வரலாறுகும். இங்ஙனம் திருவிளையாடல்கள் புரிந்த கண்ணன் மருகனே என்று முருகப் பிரானை அழைத்துப் பாடினர்.

25 மங்கல மங்கலநூ லெங்குமொ ழிந்தனர்காண்
வானோ ரேனோர்போய்
வந்துவ ணங்கினர்மே லந்தர துந்துபிகேள்
வாரூ டாடாதே
கொங்கைசு மந்திடைநூ லஞ்சும ணங்கனையார்
கூடா தூடாரோ
கொண்டவ ரந்தருவா யண்டர்பெ ருந்தவமே
கோமா னுமாரீ
செங்கம லங்களிலே பைங்குமு தங்களிலே
சேல்பாய் வானூடா
தென்றலு டன்றமிழ்தேர் தென்பொதி யம்பயில்
தேனூர் தார்மார்பா [வாழ்
சங்குவ லம்புரிசூழ் செந்தில்வ ளம்பதியாய்
தாலோ தாலேலோ
சங்கரி தன்குமரா மங்கையர் தங்கணவா
தாலோ தாலேலோ.

(இ-ள்) மங்கலம்-உலகவுயிர்களுக்கு நலம் விளைக்கின்ற, மங்கல நூல்-சிவமய வாழ்வை விளக்கும் வேத சாஸ்திரங்களை, எங்கும் மொழிந்தனர்-நாடெங்கும் ஓதினர்கள், வானோர் ஏனோர்-தேவரும் பிறரும், போய்வந்து-தத்தம் நாடுகளிலிருந்து போவதும் வருவதுமாகி, வணங்கினர்-நின்னை வணங்கினர்கள். மேல்-விண்ணுலகிலே (முழங்குகிற,) அந்தர துந்துபிகேள்-தேவ துந்துபியின் முழக்கத்தைக் கேட்டருள்வாயாக. வார் ஊடு ஆடாது-கச்சு இடையில் அசையாமல் (அமைந்து,) கொங்கை சுமந்து-தனங்களைத்தாங்குவதால், இடை நூல்-இடையாகிய நூல் (அற்றுப் போமோ என்று) அஞ்சும்-அஞ்சுகின்ற, அணங்கனையார்-தெய்வ மகளிர்போன்ற பெண்கள், கூடாது ஊடாரோ-(அவர்கள் கேட்கும் வரங்களை நீ கொடாதிருப்பாயாயின்) உன்னோடு கூடாமற்

குணங்க மாட்டார்களோ? அண்டர் பெருந்தவமே-தேவர்கள் பெருந்தவம் புரிந்து பெற்ற பேறே, கொண்டவரம் தருவாய்-அப் பெண்டிர் தம்மனத்திற் கருதிய வரங்களைத் தந்தருளுவாய், நீ கோமான் ஆமா? (அவர்கள் வேண்டிய வரங்களைத் தந்தருளா திருப்பாயாயின்) நீ தலைவன் ஆவையோ? செங்கமலங்களிலே-செந்தாமரை மலர்களிலும், பைங்குமுதங்களிலே - பசுமையான குமுத மலர்களிலும், சேல் பாய்-கெண்டைமீன்கள் பாய்கின்ற, வான் நாடா-உயர்வுமிக்க பாண்டிய நாட்டுத் தெய்வமே, தென்ற லுடன்-தென்றற் காற்றுடன், தமிழ்தேர் - தமிழ் மொழியையும் தேர்ந்து கொடுத்த, தென்பொதியம் பயில்வாழ்-தெற்கில் உள்ள பொதிய மலையிலே பயின்று வாழ்கின்ற, தேன் ஆர் தார் மார்பா-தேன் நிறைந்த மாலையை அணிந்த மார்பையுடையாய், சங்கு வலம்புரி சூழ்-இடம்புரிச் சங்கங்களும், வலம்புரிச் சங்கங்களும் சூழ்ந்து விளையாடுகின்ற, செந்தில் வளம்பதியாய்-திருச்செந்தூர் என்னும் வளமிக்க திருப்பதியிற் கோயில்கொண்ட முருகப் பிரானே, தாலோ தாலேலோ, சங்கரி தன் குமரா-உலகவுயிர் களுக்கும் நன்மையே விளைக்கின்ற உமாதேவியார் குமாரனே, மங்கையர் தம் கணவா-வள்ளி தெய்வயானை என்ற இரு மகளிர் தலைவனே, தாலோ தாலேலோ.

மங்கல மங்கலநூல்-வேதம். அணங்கனையார் வரம் தராயா யின் ஊடுவர் ஆதலால் அவர் மனங்கொண்ட வரம் தருவாய் என்றார். தென்றல் பிறக்கும் இடம் ஆதலாலும் அகத்தியர் குடி கொண்ட நிலைபாதலாலும் பொதியமலை தென்றலுடன் தமிழ் தேர் தென் பொதியம் எனப்பட்டது.

26. மரகத வடிவஞ் செங்கதிர் வெயிலால்
வாகாய் வாடாதோ
மதிமுக முழுதுந் தண்டுளி தாவே
வார்வேர் சோராதோ

கரமல ரணைதந் தின்புறு மடவார்
காணு தேபோமோ
கனமணி குலவுங் குண்டல மரைஞா
ணோடே போனல்வார்
பொருமிய முலையுந் தந்திட வுடனே
தாய்மார் தேடாரோ
புரவல ரெவருங் கண்டடி தொழுவார்
போதாய் போதாநீள்
சரவண மருவுந் தண்டமிழ் முருகா
தாலோ தாலேலோ
சதுமறை பரவுஞ் செந்திலை யுடையாய்
தாலோ தாலேலோ.

(இ-ள்) மரகத வடிவம்-நினது தாயாகிய உமாதேவியின் மரகத மணி போன்ற பசிய வடிவம், செங்கதிர் வெயிலால்-சூரியனது வெயிலால் (உன்னைத் தேடித்திரிதலால்), வாகாய்-சிறிது சிறிதாய் ஒழுங்காக, வாடாதோ-வாடப் பெறுதோ, மதி முகம் முழுதும்-அவளது சந்திரன் போன்ற முகம் முழுவதும், தண்துளி தர-குளிர்ந்த துளிகள் தோன்ற, வார் வேர் சோராதோ-வடியும் வேர்வை பெருகாதோ, கரமலர் அணைதந்து-தமது கைம்மலராகிய அணையைக்கொடுத்து, இன்புறு மடவார் - மகிழ்கின்ற கார்த்திகைப் பெண்கள், காணுதேபோமோ-காணுவண்ணம்போகலாமா, கனமணி குலவும்-கனமிக்க மணிகளால் விளங்கும், குண்டலம் - காதணியோடும், அரைஞாணோடு - அரையில் அணியும் அரை நாணோடும், போனல்-நீ வெளியேஓடினல், வார்பொருமிய, கச்சினுள் அடங்காமல் இறுமாந்த, முலையும் தந்திட - முலைகளிலிருந்து பெருகும் பால் கொடுக்கும் பொருட்டு, உடனே - விரைவிலே, தாய்மார் தேடாரோ-செவிலித்தாயர் தேடமாட்டாரோ, புரவலர் எவரும்-அரசர் பலரும், கண்டு அடிதொழுவார்-பார்த்து வணங்குவர், போதாய்-வந்தருள்வாய், போதா-பெருநாரைகள்

உள்ள, நீள் சரவணம் மருவும் - நீண்ட சரவணப் பொய்கையில் விளையாடிய, தண் தமிழ் முருகா-குளிர்ச்சி பொருந்திய தமிழ் அறியும் பெருமானாகிய முருகப்பிரானே, தாலோ தாலேலோ, சதுமறை பரவும்-நான்கு வேதங்களும் புகழ்கின்ற, செந்திலை உடையாய்-திருச்செந்தூர் உடையானே, தாலோ தாலேலோ.

நற்றாயும் பிறதாயரும் தேடுவர் என்றது இப்பருவத்துக்கு ஒருவாறு பொருத்தமாகும். கார்த்திகைப் பெண்கள் கரமலர் அணைதந்து முருகனைத் தாலாட்டிப் பாலூட்டி வளர்க்கும் பேறு பெற்றனர் என்பது புராண வரலாறு. போதா-பெரு நாரை, சரவணம்-நாணற்காடு, இங்கு சரவணப் பொய்கை எனப்பட்டது. குமரேச சதகத்திலே, 'பூமிக்கோராறு தலையாய் வந்து சரவணப் பொய்கை தனில் விளையாடியும்' என்று பாடியது இங்கு சிந்திக்கத் தக்கது.

27. கூருமிகல் சாய்த்த வீரா தீரா
தார் மார்பா
கூறுமியல் பார்த்துன் மேலே யாரார்
பாடாதார்
மேருவரை நாட்டு வாழ்வார் வாணு
டாள்வார் போல்
வேளையென மீட்டுன் மேலே வீழ்வார்
சூழ்வார்பா
ராருமிரை பார்த்து நீணீ ரூடே
தாராமே
யானகழி நீக்கி மேலே நாவா
யோடேசேல்

சேருமலை வாய்க்கு நாதா தாலோ
தாலேலோ
தேவர்சிறை மீட்ட தேவா தாலோ
தாலேலோ.

(இ-ள்) கூரும்-மிகுந்த, இகல் சாய்த்த - அசுரப் பகையை அழித்த, வீரா தீரா-வீரமும் தீரமும் உடையாய், தார் மார்பா, மாலையணிந்த மார்பையுடையாய். கூறும் இயல் பார்த்து-உலகம் கூறும் உனது நல்லியல்புகளைப் பார்த்து, உன்மேலே யாரார் பாடாதார்-உன்மேல் பாடாதார் யார் உளர், மேருவரை நாட்டு வாழ்வார்-மேருமலையைத் தம் உரிமையாகக்கொண்ட பாண்டிய நாட்டில் வாழ்வார்கள், வானுடு ஆழ்வார்போல்-தேவர் உலகத்தை ஆளும் தேவர்கள் போல, வேளை என மீட்டு உன் மேலே வீழ்வார்-இதுவே தக்க வேளை யென்று வேறு வழியிற் சென்ற உளத்தை மீட்டு உன்மேலே அன்பு கொள்வார்கள், சூழ்வார் பார்-உன்னையே வலம் வருவார் பாராய், ஆரும் இரை பார்த்து-தனக்குப் பொருத்தமான இரையைப் பார்த்து, நீள் நீருடே-பெரு நீரினிடையிலே, தாராமேய்-தாராக்கள் மேய்கின்ற, ஆன கழி நீக்கி-நிறைந்த உப்பங்கழிகளைவிட்டு, மேலே-கடல்நீருள்ளே, நாவாயோடே-மரக்கலங்களோடு, சேல் சேரும்-கெண்டை மீன்கள் பாய்கிற, அலைவாய்க்கு நாதா - திருச்சீரலைவாய்க் குரிமை பூணும் தலைவனே, தாலோ தாலேலோ, தேவர் சிறை மீட்ட-தேவர்களை அசுரர் இட்ட சிறையிலிருந்து விடுவித் தருளிய, தேவா-தேவனே, தாலோ தாலேலோ.

'உன் இயல்பை அறிந்தும் உன்மேற் பாடாதிருக்க வல்லார் யார்' என்றார். மேருமலையிலே பாண்டியன் ஒருவன் செண்டால் அடித்து மீனம் பொறித்தானதலால் அது பாண்டியர்க் குரிமையாயிற்று. அதனாற் பாண்டிய நாட்டை மேருவரை நாடு என்றார். வீழ்வார்-அன்பு செய்வார், தாரா ஒரு நீர்ப்பறவை, நாவாய்-மரக்கலம்.

28 அரைவடமுந் தண்டையு மின்புரை
யரை மணியுங் கிண்கிணி யுங்கல
னணியு மாரு வீரூர் சீ
ரறுமுகமுந் தொங்கல்சு மந்தப
னிருகாமுங் குண்டல முங்குழை
யழகு மாரார் பாராதார்
விரைபொ ருமென் குஞ்சிய லம்பிய
புழுதியுமங் கங்குழை பண்டியு
மெலியு மேலே வீழ்வார்பார்
வெகுவிதமுங் கொண்டுத வழ்ந்திடி
லவரவர்தங் கண்கள்ப டுப்பிழை
விளையு மேதே னேகாதே
வரைமணியுந் தங்கமு மொன்றிய
கனபரியங் கந்தனி லின்றுகண்
வளர வாராய் வாழ்வேநீ
மணிநகையுங் கொண்டுது யின்றிலை
விரலமுதங் கொண்டுகி டந்தனை
மதுரமாய்நீ பேசாயோ
திரைபொருதென் செந்தில்வ ளம்பதி
வளரவருங் கந்தசிவன்பெறு
சிறுவா தாலோ தாலேலோ
திசை முகனுஞ் சங்கரி யுஞ்சது
மறையுமிறைஞ் சும்பரை யம்பிகை
சிறுவா தாலோ தாலேலோ.

(இ-ள்) அரைவடமும்-அரைஞாணும், தண்டையும்-காலணியும், மின்புரை - மின்னல்போன்ற ஒளியுள்ள, அரைமணியும் -

அரையிற் கட்டும் சதங்கையும், கிண்கிணியும் - காலில் அணியும் சதங்கையும், கலன் அணியும் - பிற அழகிய ஆபரணங்களும், மாறு-நீங்காத, வீறு ஆர்சீர்-பெருமை மிக்க சிறப்பையுடைய, அறுமுகமும்-ஆறுமுகங்களும், தொங்கல் சுமந்த - கடம்ப மலர் மாலையைத் தாங்கிய, பன்னிரு கரமும்-பன்னிரு கைகளும், குண்டலமும் குழை அழகும்-குண்டலமும் காதணியும் பொருந்திய அழகையும், பாராதார் ஆர் ஆர்-பார்த்து மகிழாதவர் யாருளர், விரைபொரும்-மணம் பொருந்திய, மென் குஞ்சி-மெல்லிய குஞ்சியை, அலம்பிய புழுதியும்-பற்றியுள்ள புழுதியும், அங்கங்குழை பண்டியும்-உடம்பிலே குழைந்திருக்கும் சிறு வயிறும், மெலியும்-வாடும், மேலே-நின்மேலே, வீழ்வார் - பலர் அன்பு கொள்வர், பார்-பூமியில், வெகுவிதமும் கொண்டு - பலவிதமாக, தவழ்ந்திடில்-நீ தவழ்ந்து விளையாடினுல், அவரவர் தம் கண்கள் படும் பிழை-அங்கு வருவார் பலருடைய கண்படும் (கண்ணேறு) குற்றம், ஏதேன் விளையும்-ஏதேனும் உண்டாகும், ஏகாதே-ஆதலால் நீ போகாதே, வரைமணியும்-மலையிற் பிறந்த மணிகளும், தங்கமும்-பொன்னும், ஒன்றிய-பொருந்திய, கன பரியங்கம் தனில்-பெரிய அமளிக் கட்டிலில், இன்று கண்வளர வாராய் - இன்று துயில்கொள்ள வந்தருள்வாய், வாழ்வே நீ-உயிர்களுக்கு உயர் வாழ்வருளும் முதற்பொருளே நீ, மணிநகையும் கொண்டு துயின்றிலை-அழகிய நகைகொண்டு தூங்கவில்லை, விரலமுதம் கொண்டு கிடந்தனை-காற் பெருவிரலைச் சுவைத்துக்கொண்டு கிடந்தாய், மதுரமாய் நீ பேசாயோ-இனிமையாய் நீ பேச மாட்டாயோ, திரை பொரு-அலை மோதும், தென் செந்தில் வளம்பதி - தென்னாட்டில் உள்ள திருச்செந்தூர் என்ற வளநகரிலே, வளர வரும் கந்த-வாழ்வுபெற வந்தருளும் கந்தப்பிரானே, சிவன் பெறு-சிவபிரான் பெற்றருளிய, சிறுவா-குமரனே, தாலோ தாலேலோ, திசை முகனும்-பிரமதேவனும், சங்கு அரியும் - சங்கம் ஏந்திய திருமாலும், சது மறையும்-நான்கு வேதங்களும், இறைஞ்சும்-வணங்கும், பரைஅம்பிகை-பரமேச்சுவரியின், சிறுவா-குழவியே, தாலோ தாலேலோ.

உன் அழகைப் பாராதார் யார், புழுதியலம்பிய குஞ்சியும் சிறு பண்டியும் கண்டு உன்மேல் அன்பு செய்வர். நீ தவழ்ந்திடிற் கண்படும் பிழை விளையும். பரியங்கந்தனிற் கண்வளர வாராய் நகைகொண்டு துயின்றிலை விரலமுதங்கொண்டு கிடந்தனை மதுரமாய் நீ பேசாய், என்று வினைமுடிவு செய்க. குஞ்சி யலம்பிய புழுதி என்பதைப் புழுதியலம்பிய குஞ்சி என்று மாற்றிப் புழுதி கழுவிய குஞ்சி என்றும் பொருள் உரைக்கலாம். ஏதேன் என்பது ஏதேனும் என்பதன் விகாரம். பரியங்கம்-திருப்பள்ளி, சங்கரி-சங்கு அரி-திருமால்.

29 அரவுசிறு பிறையிதழி திரிபதகை பொதிசடிலர்
பாலா வேலாதே
ரருணவெயி லிரவிசுழ லிமகிரியி லரிவைபெறு
வாழ்வாய் வாழ்வோனே
குரவருள மகிழவுயர் குருவடிவு தருபெருமை
கோடாய் தாடாளா
குமரகுரு பரமுருக குதலைமொழி தெரியவுரை
கூறாய் மாறாதே
யிரவலரு முனிவர்களு மிமையவரு முனதடிமை
யாமே யாமேநீ [யெண
யெமைமுனியி லொருதுணையு மிலையடிமை யடிமை
வீழ்வார் சூழ்வார்பார்
பரசமய குலகலக சிவசமய குலதிலக
தாலோ தாலேலோ
பணிலமுமிழ் மணியையலை யெறியுநகர் வருகடவுள்
தாலோ தாலேலோ.

(இ-ள்) அரவு-பாம்பும், சிறுபிறை-இளம்பிறையும், இதழி-கொன்றையும், திரிபதகை-கங்கை நதியும், பொதிசடிலர் - சேர்ந்

துள்ள சடையையுடைய சிவபிரானது, பாலா - குமாரனே, வேலா-வேற்படையையுடையாய், தேர் - ஒற்றையாழித் தேரின் மேல் வருகின்ற, அருணவெயில்-செந்நிறமான வெயிலையுடைய, இரவிசுழல் - செங்கதிர்க்கடவுள் வலம் வருகின்ற, இமகிரியில் அரிவை-இமாலய மலையிலே பிறந்த பார்வதி தேவியார், பெறு வாழ்வாய்-பெற்ற பெரும் பேருக, வாழ்வோனே - வாழும் முரு கப்பிரானே, குரவர் உளம் மகிழ - தந்தையர் ஆகிய சிவபிரான் திருவுள்ளம் மகிழும்படி, உயர் குருவடிவு -உயர்வுமிக்க குருமூர்த் தத்தை, தரு - மேற்கொண்ட, பெருமை கோடாய் - பெருமை சிதையாத பெரியோய், தாடாளா - பெருமுயற்சியுடையாய், குமரகுருபர முருக - குமரக்கடவுளே, பரமகுருவே, முருகப் பிரானே, மாருது-எம்மிடம் மனம் மாறுபடாமல், குதலை மொழி தெரிய-மழலைச்சொல் விளங்கும்படி, உரை கூருய் - பேசுவாய், இரவலரும்-இரப்போரும், முனிவர்களும் - முனிவர்களும், இமையவரும்-தேவர்களும், யாம் உனது அடிமை ஆம் - நாங்கள் உன் அடிமைகள் ஆவோம் என்பது உண்மை, நீ எமை முனியில்-நீ எங்களை வெறுத்தால், ஒரு துணையும் இலை-எங்களுக்கு வேறு ஒரு துணையும் இல்லை, அடிமை அடிமை என-நாங்கள் உன் அடி யார்க்கு அடியர் ஆவோம் என்று சொல்லி, வீழ்வார் சூழ்வார் பார்-உன்மேல் அன்பு பூண்டு உன்னை வலம் வருவார்கள் பாராய், பரசமய குலகலக-சமண முதலிய புறச்சமயத்தார்களின் குலங் களை அழித்த சம்பந்தப் பெருமானே, சிவசமய குலதிலக-சைவ சமயத்திலே சிறந்ததோர்குலமாகிய கவுணியகுலத்துத்திலகமே, தாலோ தாலேலோ, பணிலம் உமிழ் - சங்குகள் உமிழ்கிற, மணியை-முத்தை, அலை எறியும்-அலைஎடுத்து வீசுகிற, நகர்வரு கடவுள் - திருச்செந்தூர் நகரில் எழுந்தருளிய தெய்வமே, தாலோ தாலேலோ.

இதழி-கொன்றை மலர், திரிபதகை - சுவர்க்கம் மத்தியம் பாதாளம் என்ற மூன்று உலகங்களிலும் பெருகிய கங்கை, மூன் ருகப் பிரிந்த கங்கை, சடிலம்-சடை, அருணம் - செந்நிறம், குரு-தந்தை, குரவர் - உயர்வு கருதி பன்மை, தாடாளன் - பெரு

முயற்சியுடையான் திருமங்கையாழ்வார் திருமாலைத் தாடாளன் என்று துதித்தார். பரசமய குலகலகன் சிவசமய குலதிலகன் என்று கூறியது திருஞானசம்பந்தப் பெருமான் வரலாற்றை நினைப்பிப்பதாகும்.

30 பங்கயன் முதலோ ரிந்திர னிமையோர்
பாரோ ரேனோர்பார்
பண்புட னுனையே சிந்தையி னினைவார்
பானீ மால்கூராய்
வெங்கட கரிசூ ழெண்டிசை யுறைவார்
வீணாள் காணாதே
மின்பரி புரதாள் பொன்புரை முடிமேல்
வேய்வார் வீறுலே
செங்கனி மணிவாய் தங்கிய நகைதா
தேவா சீறாதே
திண்டிறன் முருகா தண்டமிழ் விரகா
சேரார் போரேறே
சங்கரி மருகா சங்கரி சிறுவா
தாலோ தாலேலோ
சந்தத மியறேர் செந்திலை யுடையாய்
தாலோ தாலேலோ.

(இ-ள்) பங்கயன் முதலோர்-பிரமன் விஷ்ணு மயேச்சுரன் என்ற முத்தேவர்களும், இந்திரன் இமையோர் - இந்திரனும் தேவர்களும், பாரோர்-நிலமக்களும், ஏனோர் - மற்றும் உள்ளவர்களும், பண்புடன்-பக்தியுடன், உனையே சிந்தையில் நினைவார்பார்-உன்னையே மனத்தில் தியானிப்பார்கள் பாராய், பால் நீ மால் கூருய், அவர்களிடம் நீ அன்பு கொள்வாய், வெங்கடகரி சூழ்-கொடிய மதங்கொண்ட திக்கஜங்களாற் சூழப்பெற்ற, எண் டிசை உறைவார்-எட்டுத் திசையிலும் வாழும் திக்பாலகர்கள், வீணாள் காணாது-தமது வாழ் நாட்களை வீண் நாட்கள் ஆக்காமல்,

மின்பரிபுரதாள்-மின் ஒளி பொருந்திய சிலம்பு அணிந்த உனது பாதங்களை, பொன்புரை முடிமேல்-தமது பொன்போன்ற தலைகளின்மேல், வீருலே வேய்வார் - பெருமையாகத் தரிப்பார்கள், தேவா-தேவனே, சீருது - சினவாமல், செங்கனி - சிவந்த கனி போன்ற, மணிவாய்-அழகிய வாயில், தங்கிய நகை தா - தங்கிய சிரிப்பைத் தந்தருளுவாய், திண்டிறல் முருகா - திண்மையான திறமையுடைய முருகப்பிரானே, தண் தமிழ் விரகா - தண்மை பொருந்திய தமிழறியும் பெருமானே, சேரார் போர் ஏறே-பகைவர்களாகிய யானைகளுக்குப் போரிலே சிங்கம் போன்றவனே, சங்கு அரி மருகா-சங்கு தாங்கிய திருமால் மருகனே, சங்கரி சிறுவா-உமாதேவியார் திருக்குமாரா, தாலோ தாலேலோ, சந்தம்-எப்பொழுதும், இயல்தேர்-இயற்றமிழை ஆராயும், செந்திலையுடையாய்-செந்திற் பதியையுடைய முருகப்பிரானே, தாலோ தாலேலோ.

பங்கயன்-தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன், பால்-எழனுருபு, மால்-ஆசை, எண்டிசையுறைவார்-அஷ்டதிக் பாலகர், இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்போர். வீணுள் காணுது என்பதற்கு வீணன நாட்களைக் காணுமல் என்றும் உரைக்கலாம். வீறு-பெருமை, பரிபுரம்-சிலம்பு, தண்டமிழ் விரகன் என்பது அகத்தியர்க்குச் செந்தமிழ் அறிவுறுத்த பரமாசாரியனுகையால் முருகப்பிரானைக் குறிக்கும். விரகு-அறிவு, சம்பந்தப்பெருமானுக்கு முத்தமிழ் விரகர் என்றே ஒரு பெயர் உண்மையால் தண்டமிழ் விரகனென்பது அவரையும் குறிப்பதாகலாம். சேரார்-பகைவர், இயல்தேர் செந்திலையுடையாய் என்பதற்கு இயற்றமிழ் தேர்ந்த புலவர்கள் வாழும் திருச்செந்தூர்ப்பதியை உடையாய் என்றும் பொருள் கூறலாம். இயறேர் என்னும் விசேடணம் இப்பொருளில் செந்திலை விசேடிக்கும். முன் கூறிய பொருளில் உடையானை விசேடிக்கும் சங்கு + அரி-திருமால்.

## நான்காவது சப்பாணிப் பருவம்.

சப்பாணிப் பருவம் என்பது குழந்தை கைகொட்டி விளையாடும் பருவமாகும். கொட்டுக சப்பாணி, சப்பாணி கொட்டியருள் முதலிய பல தொடர் மொழிகளால் இப்பருவத்துச் செய்யுட்கள் முடிக்கப் பெறும் 'சப்' என்ற ஒலி உண்டாகும்படி பாணி (கை)யைக்கொட்டுதலால் இப்பருவம் சப்பாணிப்பருவம் எனப் பட்டது என்பர்.

31 பரவரிய நவமணி யழுத்துகல னுக்கழகு
பாலித்து வீறுபெற்ற
பன்னிரு புயங்குலுங் காமனீள் குழைதொறும்
பருவயிர குண்டலங்க
ளிரவியொளி மட்கநின் றசையாம லமுதொழுகு
மிந்துமுக மண்டலத்தி
லெழுதரிய திருநுதற் புண்டரங் குறுவெயர்
விறைக்கச் சிதைந்திடாமற்
கரகமல மலர்விரல் சிவப்புறு மற்கடக
கங்கண மொலித்திடாமல்
கழிவண் டலம்புங் கருங்குவளை யோடைசூழ்
கழிதொறுங் கானரூேறுங்
தரளமுழு மணிநிலவு தருசெந்தில் வேலவா
சப்பாணி கொட்டியருளே
சமரமுக ரணவீர பரசமய திமிராரி
சப்பாணி கொட்டியருளே.

(இ-ள்) பரவ அரிய-புகழ்வதற்கு அரிய, நவமணி - நவரத்தினங்களை, அழுத்து கலனுக்கு-பதித்த தோள்வளைக்கு, அழகு பாலித்து-அழகு கொடுத்து, வீறுபெற்ற-பெருமைபெற்ற, பன்னிருபுயம் குலுங்காமல்-உனது பன்னிரண்டு தோள்கள் குலுங்காமலும், நீள் குழைதொறும்-ஆறுமுகங்களிலும் அணியப்பெற்ற

நீண்ட காதணிகள்தோறும், பருவயிர குண்டலங்கள்-பெரிய வயிரம் அழுத்திய குண்டலங்கள், இரவி ஒளி மட்க-சூரியன் ஒளி மழுங்கும்படி, நின்று அசையாமல்-நின்று அசையாமலும், அமுது ஒழுகும்- அமிர்தம் ஒழுகுகிற, இந்து முகமண்டலத்தில்-சந்திரன் போன்ற முகமண்டலத்திலே, எழுதரிய-எழுதுவதற்கு அருமையான அழகையுடைய, திருநுதற் புண்டரம்-திருநுதலில்அணிந்த திரிபுண்டரம், குறு வெயர்வு இறைக்க-சிறு வெயர்வை படிதலால், சிதைந்திடாமல்-அழியாமலும், கரகமல மலர் விரல்-கையாகிய தாமரை மலரில் உள்ள விரல்கள், சிவப்புறுமல் - சிவப்பெய்தாமலும், கடக கங்கணம் ஒலித்திடாமல்-கையில் அணிந்த கடகங்களும் கங்கணங்களும் ஒலி செய்யாமலும், கழி வண்டு அலம்பும்-மிகுந்த வண்டுகள் திரிகின்ற, கருங்குவளை ஓடை சூழ்-கருங்குவளை மலர்கள் மலர்ந்த ஓடைகளாற் சூழப்பெற்ற, கழி தொறும்-உப்பங்கழிகள் தோறும், கானல் தோறும் - கடலோரத்தில் உள்ள நிலங்கள் தோறும், தரள முழுமணி-பெரிய முத்து மணிகள், நிலவுதரு-ஒளி வீசுகின்ற, செந்தில் வேலவா-திருச்செந்தூர் முருகனே, சப்பாணி கொட்டியருள் - சப்பாணி கொட்டியருள்வாயாக, சமரமுக ரணவீர-போர்முகத்திலே திறமை மிக்க போர்வீரனே, பரசமய திமிர அரி-புறமதங்களாகிய இருளுக்கு சூரியன் போன்ற தெய்வமே, சப்பாணி கொட்டி அருள் - சப்பாணி கொட்டி அருள்வாயாக.

செந்தில் வேலவா, புயங் குலுங்காமல், வயிர குண்டலங்கள் அசையாமல், திருநுதற்புண்டரம் சிதைந்திடாமல், கரகமல மலர் விரல் சிவப்புறுமல், கடக கங்கணம் ஒலித்திடாமல் சப்பாணி கொட்டியருள் என்று வினைமுடிவு செய்க. பாவித்தல்-கொடுத்தல், பரவுதல்-புகழ்தல், குழை என்னும் சொல்-குண்டலம் என்ற பொருள் தருவது, இங்கு "நீள் குழைதோறும் பருவயிர குண்டலங்கள் அசையாமல்" என்று பாடியிருத்தலால், நீள்குழை என்ற தொடர்மொழி காதைக்குறிப்பதாகவும் கொள்ளலாம். குழை என்பது காதைக் குறிக்கையில் தானியாகு

பெயராம். கரகமலம்-உருவகம், விரல்-அக்கமலத்தின் இதழ் என்று கொள்ளலாம். கழிவண்டு எனும்போது கழி உரிச்சொல்; பரசமய திமிர அரி என்னும் தொடர்மொழி முருகனை நேர்படக் குறிப்பதேயன்றித் திருஞான சம்பந்தப் பெருமானையும் குறிப்பதாகும். சமரம்-போர், முகம் - நிகழும் இடம், ரணம் - போர், திமிர + அரி-திமிராரி, அரி என்ற சொல் இங்கு, பகை, சூரியன் என்ற இருபொருளும் தரவல்லது.

32 அண்டர்தந் துயரொழித் தனமென்று கொண்டாடி
யாவலங் கொட்டமன்னு
மயிராணி கலவியமு துண்டன மெனத்தேவ
ரரசிரு கரங்கள்கொட்டத்
துண்டவெண் பிறைபுரை யெயிற்றுவெஞ் சூருளந்
துண்ணெனப் பறைகொட்டநீள்
சுருதியந் தணரிடந் தொறுமங் கலப்பெருந்
தூரியங் கொட்டமுட்டப்
பண்டரு பெருங்கவிப் புலமைக்கு நீசொன்ன
படிதிண்டி மங்கொட்டவெம்
பகைநிசா சரர்வளம் பதிமுழுது நெய்தலம்
பறைகொட்ட வெள்வளைதருந்
தண்டாள மலைமொண்டு கொட்டுநக ராதிபா
சப்பாணி கொட்டியருளே
சமரமுக ரணவீர பரசமய திமிராரி
சப்பாணி கொட்டியருளே.

(இ-ள்) அண்டர்-தேவர்கள், தம் துயர் ஒழித்தனம்என்று-அசுரரால் தமக்கு நேரும் துன்பங்களை ஒழித்துக் கொண்டோம் என்று, கொண்டாடி-மகிழ்ந்து, ஆவலங்கொட்ட-துதித்து ஆடிக் கைகொட்ட, மன்னும்-நிலைபெற்ற, அயிராணி - இந்திராணியின், கலவியமுது-புணர்ச்சி யமுதத்தை, உண்டனம் என - உண்பது

உறுதியென்று, தேவர் அரசு - தேவேந்திரன், இரு கரங்கள் கொட்ட-தனது இருகைகளும் கொட்ட, துண்ட வெண் பிறை புரை - வெண்ணிறமான இளம் பிறை போன்ற, எயிறு - வக்ர தந்தங்களையுடைய, வெஞ்சூர்-கொடிய சூரபதுமனது, உளம் துண்ணெனப் பறை கொட்ட - மனம் நடுங்கிப் பறையறைய, நீள்சுருதி-அளவுகடந்த வேதங்களையோதிய, அந்தணர் இடம் தொறும்-வேதியர் வாழும் இடங்களிலெல்லாம், மங்கலப்பெருந் தூரியம் கொட்ட-பெருமை சிறந்த மங்கள வாத்தியங்கள் முழங்க, முட்டப் பண்தரு-பிறர் அறிவுக்கு விளக்கம் பெறுத செய்யுளால் அமைத்த, பெருங்கவிப் புலமைக்கு - பெரு நூலாகிய இறையனுர் அகப்பொருளுக்கு, நீ சொன்னபடி-நீ ஏற்றுக் கொண்டபடியே உண்மையுரையாகும் என்று, திண்டிமம் கொட்ட - உனது வெற்றிக்கு அறிகுறியாக டிண்டிமம் என்ற பறை முழங்க, வெம்பகை-கொடும் பகைஞராகிய, நிசாசரர்பதி முழுதும்-அசுரர் நகரம் முழுவதும், நெய்தலம் பறை கொட்ட-அவர்கள் மரணத்தைக் குறிப்பிடும் சாப்பறையாகிய நெய்தற் பறை முழங்க, வெள்வளை தரும்-வெண்மை நிறமுள்ள சங்குகள் ஈன்ற, தண்தரளம்-குளிர்ந்த முத்துக்களை, அலைமொண்டு கொட்டும்-அலைகள் முகந்து கொட்டுகிற, நகர அதிபா-திருச்செந்தூர்த் தலைவனே, சப்பாணி கொட்டியருள், சமரமுக ரணவீர பரசமய திமிராரி சப்பாணி கொட்டியருள்.

ஆவலம் கொட்டுதல்-பகைவரை இகழ்ந்து கைகொட்டுதல், ஆடிப்பாடிக் கைகொட்டுதல்; தூரியம்-வாத்தியம், புலமை இங்கு ஆகுபெயராய் நூலைக்குறித்தது, திண்டிமம் - டிண்டிமம், பறை. நெய்தற் பறை-இழவோசை தரும் பறை, சாப்பறை - அண்டர் ஆவலங்கொட்டத் தேவராசு இருகரங்கள் கொட்ட சூர் உளந் துண்ணெனப் பறைகொட்ட அந்தணர் இடந்தோறும் மங்கலதூரியம் கொட்ட திண்டிமம் கொட்ட நிசாசரர்பதியில் நெய்தற்பறை கொட்ட நீ சப்பாணி கொட்டியருள் என்று வினை முடிவு செய்க.

முருகப்பிரான் இறையனுர் களவியல் உரையை அங்கீகரித்த வரலாறு:—

கடைச்சங்க காலத்தே பாண்டியநாட்டிற் பன்னிரண்டு ஆண்டு கருப்புக்காலம் ஆயிற்று. அந்நாளில் அரசுபூண்டிருந்த பாண்டியன் புலவர்களை அழைத்து "ஐயன்மீர் இனி யான் உங்களைக் காப்பாற்றவல்லேனல்லேன். நீங்கள் செழிப்புள்ள அயல் நாடுகட்குச் சென்று சிலவாண்டுகள் வாழ்ந்திருந்து பின்பு இங்கு வருக" என்று கூறினன். புலவர்கள் விடைபெற்றுச் சென்றனர். பல்லாண்டுகளின் பின்பு மழை மிகப் பொழிந்து நாடு வளம் பெற்றது. அந்நாளிற் பாண்டியன் புலவர்களைத் தேடுவித்தான். எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் பொருளதிகாரம் என்ற மூவகைப் பாகுபாடுள்ள இலக்கணத்தில் முன்னிரண்டு அதிகாரங்களும் வல்ல புலவர் பலர் வந்தனர். பொருளதிகாரம் வல்லார் சிலரேனும் வந்திலர். அரசன் பொருளதிகாரம் வல்ல புலவரைப் பெறவில்லையே என்று வருந்தினுன். இதனை அறிந்த ஆலவாய்ச் சிவபெருமான் இறையனுர் அகப்பொருள் என்ற அறுபது சூத்திரங்களை யெழுதித்தன துபீடத்தின் கீழ் மறைத்து வைத்தான். மறுநாள் தேவாலய பூசகர் ஒருவர் அச்சூத்திரங்களை எழுதிய மூன்று செப்பேடுகளையும் கண்டு எடுத்து அரசனிடம் சேர்ப்பித்தார். அரசன் அதனைப் புலவர்களால் ஆராய்வித்தான். புலவர்கள் அது இறைவன் அருளிய பொருளதிகாரம் என்று உணர்ந்து பொருள் செய்யப் புகுந்தனர். நல்லிசைப் புலவர் ஒவ்வொருவரும் தத்தமக்குத் தோன்றிய வண்ணம் அந்நூற்குப் பொருள் கூறியதால் அரசன் எண்ணம் நிறைவேறவில்லை. பின்பு அரசன் புலவர் வேண்டுகோளால் தெய்வத்திருவருளைத் துணைக்கொண்டு மதுரையில் உப்பூரிகுடிகிழார் மகனுக உருத்திரசன்மன் என்னும் பெயரோடு அவதரித்திருந்த முருகப்பிரானைப் புலவர் அவைக்களத்துக்குத் தலைமை வகிக்க அனுப்பினுன். ஐந்து ஆண்டுகளே நிரம்பிய சிறுவனுகவும் மூங்கைப்பிள்ளையாகவும் இருந்த அவ்வுருத்திரசருமன் மெய்

யான உரையைப் புலவர் கூறக் கேட்ட பொழுது கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்த்துத் தனது உட்கருத்தை விளக்கிஞன். மெய்யல்லாத உரை கூறக் கேட்டபொழுது வாளாவிருந் தான். இக்குறிப்பிஞல் மதுரை மருதனிளநாகஞர் உரைத்த வுரையிற் சில பகுதிகள் தகுதியுடையவையாய் இருந்தனவென் றும் நக்கீரர் உரையே முழுவதும் பொருத்தமாய் இருந் தது என்றும் அங்கே குழுமிய புலவர்கள் அறிந்தனர். இதஞல் இறையஞர் அருளிய களவியலுக்கு உரைகாணும் அரும்பணியில் முருகப்பிரான் துணை நின்ருன் என்று சொல்லப்படும். இவ்வர லாற்றை "பண்டரு பெருங்கவிப் புலமைக்கு நீ சொன்னபடி திண்டிமங்கொட்ட" என்று பகழிக்கூத்தர் குறிப்பிட்டனர்.

உக்கிரப்பெருவழுதியும் முருகப்பிரான் அமிசம்உடையாஞத லால் அம்மன்னன் திருவள்ளுவர் திருக்குறளைக் கடைச்சங்கத் தில் அரங்கேற்றுவித்த வரலாற்றையும் குறிப்பித்ததாகக் கொள் ளலாம். தமிழகமெங்கும் முத்தமிழ் விரகர் என்னும் விரு தோடு இறைவன் அருளிய முத்துச்சிவிகையில் பலவகைத் தூரியம் முழங்கத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழ் வாசிக்கத் தேவாரம் அருளிச்செய்து பவனிவந்த திருஞானசம்பந்தப் பெருமானையும் குறிப்பிப்பதாகக் கொள்ளலாம்.

33 பௌவமெறி கடலாடை யுலகிலொரு வேடுவன்
பறவைக்கு நிறைபுகுந்த
பார்த்திவன் பாவையு மியற்குலச் சிறையும்
பணித்தருள மதுரைபுக்குத்
தெவ்வரிடு திருமடத் தெரிசெழிய ஞடலுறச்
சென்று பற்றனு மெவர்க்குந்
தீராத வடவையனல் வெப்புமுது கூனுந்
திருத்தியொரு வாதுவென்று

வெவ்வழலி லெழுதியிடு மேடும் பெருங்காற்று
விட்டதமி ழேடுமொக்க
வேகாம லெதிரே குடக்கேற வெங்கழுவில்
வெய்ய சமண் மூகரேறச்
சைவநெறி யீடேற வருகவுணி யக்குழவி
சப்பாணி கொட்டியருளே
சமரமுக ரணவீர பரசமய திமிராரி
சப்பாணி கொட்டியருளே.

(இ-ள்) பௌவம் எறி-அலை எறிகின்ற, கடல் ஆடை உலகில்-கடலாகிய ஆடையை அணிந்த உலகில், ஒருவேடுவன் பறவைக்கு-ஒரு வேடனால் தொடரப்பட்ட பறவையின் பொருட்டு, நிறை புகுந்த-துலையில் ஏறிநின்ற, பார்த்திவன் பாவையும்-சிபியின் மரபிற் பிறந்த மங்கையர்க்கரசியாரும், இயல்-நற்குணங்கள் நிரம்பிய குலச்சிறையும்-குலச்சிறை நாயனாரும், பணித்தருள-தூதர் மூலம் அழைத்ததால், மதுரை புக்கு-மதுரை நகரிற் புகுந்து, தெவ்வர் இடு-பகைஞராகிய சமணர்கள் கொளுத்திய, திருமடத்து எரி-திருமடத்தின் தீச்சுடரானது, செழியன் உடல் உற-பாண்டியன் உடலிலே வெப்புநோயாய்ப் பொருந்த, சென்று பற்றலும்-போய்ப் பற்றிக்கொள்ளவும், எவர்க்கும் தீராத - எத்தகையவராலும் பரிகரிக்க வியலாத, வெப்பும்-அவ்வெப்பு நோயையும், முதுகூனும்-முன்னமே அவன் உடலில் இருந்த கூனலையும், திருத்தி-போக்கியருளி, ஒரு வாதில் வென்று-அங்கு சமணரோடு நேர்ந்த மதவாதத்திலே வெற்றி பெற்று, வெவ்வழலில்-வெப்பம் மிக்க நெருப்பில், எழுதியிடும்-எழுதிப்போட்ட, ஏடும்-ஏடும், பெருக்கு ஆற்றுவிட்ட-வெள்ளம் பெருகி ஓடும் ஆற்றில் விட்ட, ஏடும்-ஏடும், ஒக்க-ஒரே தன்மையாக, வேகாமல் - நெருப்பிலிட்டது வேகாமலும், எதிரே குடக்கேற - ஆற்றிலிட்டது எதிர்த்து மேற்கு நோக்கிச் செல்லவும், வெய்ய சமண்மூகர்-கொடிய சமணர்கள், வெங்கழுவில் ஏற-கொடிய கழுவில் ஏறவும், சைவநெறி ஈடேற-சைவ மார்க்கம் உயர்வு பெறவும், வருகவுணியக் குழவி-

அவதரித்த கவுணியகுலத் தோன்றலாகிய திருஞான சம்பந்தப் பெருமானே, சப்பாணி கொட்டியருள், சமரமுக ரணவீர பர சமய திமிராரி சப்பாணி கொட்டியருள்.

இச் செய்யுளில் திருஞான சம்பந்தப் பெருமான் அவதார வைபவம் நன்கு விளக்கப் பட்டுளது. மங்கையர்க் கரசியாரை வேடுவன் பறவைக்கு நிறை புகுந்த பார்த்திவன் பாவை என்றார். சிபி சோழ வமிசத்து முன்னைய மன்னருள் ஒருவன் என்ற கொள்கையை இப்புலவர் ஏற்றுக்கொண் டிருக்கின்றார். இதனை மாறோக்கத்து நப்பசலையார் என்ற பெண்பாற் புலவர், புறத்தில்,

"புறவி னல்லல் சொல்லிய கறையடி
யானை வான்மருப் பெறிந்த வெண்கடைக்
கோனிறை துலாஅம் புக்கோன் மருக" என்று

கூறியிருக்கின்றனர். வல்லூறு புறாவைத் தொடர்ந்து வந்ததாகச் சொல்வதே பெருவழக்காயினும் வேடன் ஒருவன் ஒரு புறாவைத் தொடர்ந்து வந்து சிபியின் முன் வழக்காடியதாக வழங்கும் கதையை இவ்வாசிரியர் எடுத்தாண்டிருக்கின்றனர்.

கூன்பாண்டியன் தேவியாகியமங்கையர்க்கரசியார் அந்நாளிற் சோழநாடாண்ட சோழ மன்னன் மகளாராவர். திருஞான சம்பந்தப் பெருமான் மதுரைக்கு வந்தருளியது அம்மங்கையர்க் கரசியாரும், குலச்சிறை நாயனாரும் வேண்டிக்கொண்டதாலாகும். இச் செய்தியை இவ்வாசிரியர், 'பார்த்திவன் பாவையும் இயற் குலச் சிறையும் பணித்தருள மதுரை புக்கு' என்று கூறினர். இங்கு பணித்தருள என்ற சொற்றொடர் ஏவியருள என்ற பொருள் தரவல்லது. திருஞான சம்பந்தரை ஏவியருளும் நிலையில் மங்கையர்க்கரசியாரும் குலச்சிறை நாயனாரும் இருந்தார் என்று பெரிய புராணம் இயற்றிய சேக்கிழார் சுவாமிகளும் பிற சிவனடியார்களும் துணிந்து கூறார். பகழிக்கூத்தர் வைணவரே

யாயினும் சைவர் கருத்துக்களை நன்குணர்ந்து முன்னும் பின்னும் பாடியுளராதலால் அவரும் இங்ஙனம் கூறக்கருதார். ஆகையால், இத்தொடர் மொழிக்கு, தூதர்களை ஏவியனுப்ப என்று பொருள் கொள்ளவேண்டும். பாண்டிமா தேவியாராகிய மங்கையர்க்கரசி யாரைத் தேவாரப் பாடல் ஒன்றில் சம்பந்தப்பெருமான் வளவர் கோன் பாவை என்று விளித்தார். அதன் உட்கருத்தை உய்த் துணர்ந்தே இவ்வாசிரியர் 'பறவைக்கு நிறைபுகுந்த பார்த்திவன் பாவை, என்று கூறினர்.

"**மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை** வரிவளைக் கைம் [மடமாணி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி பணிசெய்து நாடொறும் [பரவப்
பொங்கழ லுருவன் பூதநாயகனல் வேதமும் பொருள்களு [மருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த ஆலவா யாவதும் [இதுவே.

சம்பந்தர் தேவாம்.

இப்பதிகத்திலேயே சம்பந்தர் குலச்சிறையாரையும் பாராட் டியிருக்கின்றனர்.

சமணர்கள் சைவ மடத்தில் எரிகொளுத்தச் சம்மந்தப் பெருமான் அதனையுணர்ந்து அருளிய பதிகத்து ஒரு செய்யுள் வருமாறு:—

"செய்ய னேதிரு வாலவாய் மேவிய
ஐய னேயஞ்சல் என்றருள் செய்யெனைப்
பொய்ய ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே.

இப்பாசுரத்தில் 'பைய' என்ற வினையெச்சம் சம்பந்தர் அருட்சிறப்பை நன்கு விளக்குவதாகும். சமணர் தீக்கொளுவப்

பாண்டியர்க்கு வெப்பு நோய் வருமாறு அருளியது. அரசன் தன் கடமையை நன்கு நிறைவேற்ருமையைக் குறிப்பித்தற் பொருட்டேயாகும். பாண்டியனது வெப்பு நோய் தீர்த்தற்குப் பாடிய பதிகம் திருநீற்றுப் பதிகமாகும். கூன் தீர்த்தற்கும் சம்பந்தர் அருள் வெள்ளமே துணை புரிந்தது. சமணரோடு வாது செய்தற்குச் சம்பந்தர் சிவனருள் பெற்றுக்கொண்டார். இச் செய்தியைத் தேவாரத்தில்,

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி யமணொடு தேரரை
வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே
பாதி மாதுட ஞய பரமனே.''
கூடல் ஆலவாய்க் கோனை விடைகொண்டு
வாடல் மேனி யமணரை வாட்டிட
மாடக் காழிச் சம்பந்தன் மதித்தவிப்
பாடல் வல்லவர் பாக்கிய வாளரே.

என்ற பாசுரங்களால் அறியலாம்.

கனவில் எழுதியிட்ட ஏட்டில் இருந்த பாசுரம்,

"போக மார்த்த பூண்முலையாள் தன்னொடும் பொன்னகலம்
பாக மார்த்த பைங்கண்வெள் ளேற்றண்ணல் பரமேட்டி
யாக மார்த்த தோலுடையன் கோவண வாடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான்மேயது நள்ளாறே'' என்பதாம்

இத்திருப்பாட்டை அழலிலிடும்போது இது பழுதுப்படாது சைவ நெறியின் மெய்ம்மை தெரிக்க என்று அருளிச்செய்த

தளிரிள வளரொளி தனதெழில் தருதிகழ் மலைமகள்
குளிரிள வளரொளி வனமுலை யிணையவை குலவலில்
நளிரிள வளரொளி மருவுநள் ளாறர்தம் நாமமே
மிளிரிள வளரெரி யிடிலிவை பழுதிலை மெய்ம்மையே

என்ற பாசுரமும் நினைக்கத் தக்கது.

பெருக் காற்றில் விட்ட ஏட்டில் எழுதிய பாசுரம்

வாழ்க வந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

என்பதாகும். இப்பதிகத்தின் ஒவ்வொரு பாசுரத்தையும் உள்ள முறச் சுவைத்துச் சேக்கிழார் சுவாமிகள் பாடிய பாடல்கள் இங்கு சிந்திக்கத் தக்கன. வையையாற்றில் இட்ட ஏடுகள் மேற்கு நோக்கி ஏறிச்சென்று திருவேடகத்தில் நின்றன. அங்கு சிவபிரான் திருவேடகநாதராய்க் காட்சி கொடுத்தருளினார்.

'சமண் மூகர் கழுவில் ஏற' என்றது நன்கு சிந்திக்கத்தக்கது. மூகர்-ஊமர், வாயை நல்வழியிற் பயன்படுத்தாமையால் சமணர், மூகர் எனப்பட்டனர். சம்பந்தப் பெருமானோடு வாதிட்டு மும் முறையால் தோல்வியுற்ற சமணர்கள் தங்கள் வாய் மொழிக் கேற்பப் பாண்டியன் பலவந்தமின்றித் தாங்களாகவே கழுவில் ஏறி உயிர் விட்டனர் என்பது வரலாறு. இதனைச் சேக்கிழார் சுவாமிகள் நன்கு விளக்கினர். கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக் கூத்தரும் தாம் பாடிய தக்க யாகப் பரணியிலே, எடுத்துரைத் தனர். திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்திலே பெரும்பற்றப் புலியூர் நம்பியும் சம்பந்தப் பெருமான் அருளையே விளக்கினர். கழுவேற்றிய செய்தி என்று பின்னாளில் வழங்கு வது உண்மையிற் கழுவேறிப செய்தியேயாம் என்பது இவற் றால் உணரப்படும்.

34 பைந்தா டழைச்சிறைக் கானவா ரணமருவு
பந்தரிடு முல்லைவேலி
பாயுமுட் பணைமருப் பேறுதழு வியுமுடைப்
பாலரு மேனிமடவார்
கொந்தார் குரும்பையிள வனமுலை முகக்கோடு
குத்தச் குருந்தொசித்தும்

குறுங்கழைத் துண்டந் தனிற்சிறு துளைக்கருவி
குன்றுருக நின்றழைக்குஞ்
செந்தா மரைக்கைவிரல் கொடுபுதைத் துஞ்சுருதி
தெரியவிரன் முறையில்விட்டுந்
தேனுவின் பிறகே திரிந்துங் கவுட்குழி
திறந்துமத மாரிசிந்துந்
தந்தா வளந்தனக் குதவுதிரு மான்மருக
சப்பாணி கொட்டியருளே
தாளமெறி கரையில்வளை தவழ்செந்தில் வேலவா
சப்பாணி கொட்டியருளே.

(இ-ள்) பைந்தாள் - பசுமையான பாதங்களையும், தழைச் சிறை-தழைத்த சிறகுகளையும் உடைய, கான வாரணம் மருவு-காட்டுக் கோழிகள் வாழ்கின்ற, பந்தர் இடும் முல்லைவேலி-பந்தராக வளரும் முல்லைக்கொடிகள் நிறைந்த முல்லை நிலத்திலே, பாயும்-பாய்கின்ற இயல்புடைய, முள்பணை மருப்பு - முள்ளைப் போலக் கூரிய கொம்புகளையுடைய, ஏறு தழுவியும் - ஆனேறுகளைத் தழுவியும், முடைப் பாலருமேனி மடவார் - பாலிற் பல நாளும் பயின்றுவரும் கொச்சை நாற்றமுள்ள மேனியுடைய ஆயர் பெண்டிரின், கொந்து ஆர்-பூங் கொத்துக்களால் நிறைய அலங்கரிக்கப் பெற்ற, குரும்பை-தென்னங் குரும்பை போன்ற, இளவன முலை-இளமையும் அழகும் உடைய முலைகளாகிய, முகக் கோடு குத்த-முன்புறத்துள்ள கொம்புகள், குத்த-நேர் தோன்ற, குருந்து ஒசித்தும்-குருந்த மரத்தை முறித்தும், குறுங் கழைத் துண்டம் தனில்-சிறிய மூங்கில் துண்டத்தில் அமைத்த, சிறு துளைக்கருவி-சிறிய துளைகளையுடைய கருவியாகிய புல்லாங்குழலை ஊதி, குன்று உருக நின்று அழைக்கும்-மலைகளும் உருகும்படி நின்று ஆனிரைகளை அழைக்கின்றசெயலிலே, செந்தாமரைக் கை விரல்கொடு-செந்தாமரை மலர்போன்ற கையில்உள்ள விரல்களைக் கொண்டு, புதைத்தும்-ஒருகால் அடைத்தும், சுருதிதெரிய-ஸப்த

ஸ்வரங்களும் நன்குஒலிக்கும்படி, விரல் முறையில்விட்டும்-விரல்களை முறைப்படி விட்டும், தேனுவின்பிறகே திரிந்தும்-பசுக்களின் பிறகே திரிந்தும், கவுட்குழி திறந்து-கன்னக்குழி திறந்து, மதமாரி சிந்தும்-மதமழை பொழிகின்ற, தந்தாவளந்தனக்கு-கஜேந்திரன் என்னும் யானைக்கு, உதவு-அருள் புரிந்த, திருமால் மருக-திருமாலின் மருகனே, சப்பாணி கொட்டியருள், தரளம் எறி-அலைகள் முத்துக்களை வீசுகின்ற, கரையில்-கடற்கரையிலே, வளை தவழ்-சங்குகள் தவழுகிற, செந்தில் வேலவா - திருச்செந்தூர் முருகப்பிரானே, சப்பாணி கொட்டியருள்.

முருகனைத் திருமால் மருகன் என்று விளிப்பதற்குப் பொருந்த இச்செய்யுளிலே திருமால் கிருஷ்ணவதார காலத்திலே இயற்றிய திருவிளையாடல்கள் சில முற்பகுதியிற் கூறப்பட்டன. ஏறுதழுவுதல் முல்லை நிலத்து ஒழுக்கமாதலால் 'முல்லைவேலியில் ஏறுதழுவியும்' என்று கூறப்பட்டது. ஆயர் மடவாரை முடைப்பாலரு மேனிமடவார் என்றது "கொச்சையிடையர் மகளிர்" என்று வில்லிபுத்தூரர் கூறியதுபோல்வதாம். 'குறுங்கழைத் துண்டந்தனிற் சிறு துளைக்கருவி' என்றது புல்லாங்குழலை. இத்தொடர் மொழி மிகவும் நயமுற அமைந்துளது. இசைக்கருவிகள், தோற் கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி என ஐவகைப்படும். அவற்றுள் வேய்ங்குதல் துளைக்கருவியின் பாற்படும். கண்ணன் வேய்ங்குழல் ஊதிய சிறப்பு "செந்தாமரைக் கைவிரல்கொடு புதைத்தும் சுருதிதெரிய விரல் முறையில் விட்டும்" என்று மிகவும் அழகாக வருணிக்கப்பட்டுளது. வேய்ங்குழல் ஊதுவோர் அதன்கண் அமைந்துள்ள எட்டுத் துளைகளைத் தமது இருகரங்களின் பெருவிரல் ஒழிந்த எட்டு விரல்களால் அடைத்துக்கொண்டு அவ்வவ்வமயங்களில் வேண்டிய சுருதிக்கேற்ப ஒவ்வொரு விரலாகத் திறந்து இசைத்தல் மரபு என்பதை ஆசிரியர் கண்ணன் செயலாக விளக்கினர். கண்ணபிரான் கன்று காலிகளைப் பிருந்தாவனத்திலே மேய்த்த சிறப்பு 'தேனுவின் பிறகே திரிந்தும்' என்று விளக்கப்பட்டது. கஜேந்திர ஆழ்வானுக்குக் காட்சி

கொடுத்த அருட் சிறப்பு, தந்தாவளந்தனக்குதவு திருமால் என்னும் தொடர்மொழியால் விளக்கப்பட்டது.

கண்ணபிரான் நப்பின்னைப்பிராட்டியின் திருமணத்தின் முன்பு எழு விடைகளைத் தழுவினன். 'எழுவிடையும் தழுவியொரு விடைமலையில் இருப்பாய்' என்பது அழகர் கலம்பகம். ஆயர் மகளிர் யமுனையாற்றிலே நீராடியிருக்கையில் அவர்களது ஆடைகளை மறைத்துவைத்துக் குருந்தமரத்தில் வீற்றிருந்து பின்பு அவர்கள் வேண்ட மரக்கிளையோடு முறித்து அருளினன். கண்ணன் குழல் ஊதிய சிறப்பு ஆழ்வார்களால் மிகவும் பாராட்டப்பட்டுளது.

சிறுவிரல்கள் தடவிப் பரிமாறச்
செங்கண் கோடச் செய்யவாய் கொப்பளிப்ப
குறுவெயர்ப் புருவம் கூடலிப்பக்
கோவிந்தன் குழல்கொ டூதினபோது
பறவையின் கணங்கள் கூடுதுறந்து
வந்துசூழ்ந்து படுகாடு கிடப்பக்
கறவையின் கணங்கள் கால்பரப்பிட்டுக்
கவிழ்ந்திறங்கிச் செவியாட்டகில்லாவே.

—பெரியாழ்வார் திருமொழி.

கஜேந்திரனுக்கு அருளிய அருட் சிறப்பு "வேழம் முதலை என வழைப்ப என்னென்றான் எங்கட்கிறை" என்று புகழேந்தியாரால் வழுத்தப்பட்டது. வாரணம்-கோழி, கொந்து-கொத்து (மெலித்தல் விகாரம்) ஒசித்தல் - முறித்தல், தேனு-ஆனிரை, கவுட்குழி-கன்னத்தில் உள்ளகுழி, யானைகளுக்கு மதம் பொழிவது எழு வழிகளால் என்பர். கன்னக்குழி அவற்றுள் ஒன்றாகும். தந்தாவளம்-யானை.

35 கார்கொண்ட பேரண்ட கூடமோ ரேழுநீ
கற்பிக்கு மந்த்ரசாலை
கற்பதா ருவுநின் புயத்தினுக் கணிமாலை
கட்டவளர் நந்தனவனஞ்
சீர்கொண்ட புருகூத னுந்தேவர் குழுவுநின்
திருநாம மறவாதபேர்
சிகரகன காசலமு முனது திரு வாபரண
சேர்வைசேர் பேழைகடனீர்
போர்கொண்ட வேலின் புலால்கழுவு நீரேழு
பொழிலுமத் தனைதீவுமோர்
பொலிவினுட னேநின் கலாபமயில் வையாளி
போய்மீளும் வீதியெனவே
தார்கொண்ட மணிமார்ப செந்தில்வடி வேலனே
சப்பாணி கொட்டியருளே
தாளமெறி கரையில்வளை தவழ்செந்தில் வேலவா
சப்பாணி கொட்டியருளே.

(இ-ள்) கார்கொண்ட-மேகங்கள் படிகின்ற, பேரண்ட கூடம் ஓரேழும்-பெரிய உலகங்கள் ஏழும், நீ கற்பிக்கும் மந்த்ரசாலை-நீ பிரணவப் பொருளைக் கற்பிக்கும் மந்திரசாலையாகும். கற்பதாருவும்-கற்பக விருக்ஷமும், நின் புயத்தினுக்கு-உனது தோள்களுக்கு, அணிமாலை கட்ட - அழகிய மாலை தொடுக்கும் பொருட்டு, வளர் நந்தனவனம் - வளரும் நந்தவனமாகும். சீர்கொண்ட - சிறப்புடைய, புருகூதனும்-இந்திரனும், தேவர் குழுவும்-தேவர் கூட்டமும், நின் திருநாமம் மறவாதபேர்-உன் திருநாமம் மறவாத அடியார்கள், சிகரகனகாசலமும்-பொற்கோட்டையுடைய மேருமலையும், உனது திருவாபாரண சேர்வை சேர் பேழை-உனது அழகிய பூண்களைச் சேர்த்துவைக்கும் பெட்டியாகும். கடல் நீர்-கடலின் நீர், போர் கொண்ட-நீ அசுரரோடு போர்புரியும்போது பிரயோ

கித்த, வேலின் புலால் கழுவும்-நீர் வேலாயுதத்தில் உள்ள புலா லைக் கழுவும் நீராகும். எழு பொழிலும்-எழு உலகங்களும், அத்தனை தீவும்-எழு தீவுகளும், ஓர் பொலிவினுடனே-ஒப்பற்ற அழகுடன், நின் கலாபமயில்-உனது தோகைமயில், வையாளி போய் மீளும் வீதி எனவே - ஓடி விளையாடிவரும் வீதி என்று கொண்டருளும், தார்கொண்ட மணிமார்ப - மாலையணிந்த மார்புடையாய், செந்தில் வடிவேலனே - திருச்செந்தூர் முருகப்பிரானே, சப்பாணி கொட்டியருள், தாளம் எறிகரையில் வளைதவழ் செந்தில் வேலவா சப்பாணி கொட்டியருள்.

அண்ட கூடம் எழும், நீ கற்பிக்கும் மந்திரசாலை என்றார். பிரமனுக்குப் பிரணவப்பொருள் கூறி உலகனைத்துக்கும் அதன் பொருள் விளங்குமாறு செய்ததால், கற்பதரு உன் புயத்தினுக்கு மாலை கட்ட வளர் நந்தனவனம் என்றார். கற்பக மலர்மாலையைத் தேவர் அரசும் பிறரும் சூட்ட முருகன் சூடுதலால். புருகூதன்-புருக்களால் அழைக்கப்படுவோன், புருக்கள் யாக கர்த்தாக்களில் ஒருவகையினர். இந்திரனை அழைத்தற்கென்றே சில விசேஷ மந்திரங்களைக்கூறி அழைப்பர். அதனால் இந்திரன் புருகூதன் எனப்பட்டான். பொன்மலை பணிப்பேழையாம். கடல்நீர் வேற் புலால் கழுவும் நீராம். எழு பொழில்களும் தீவுகளும், மயில் போடும் வையாளி வீதி ஆகும். வையாளி வீதி - சுற்றியோடும் வீதி.

36 கவளமத வெற்புநிலை யுலகுபர வப்ரபைகொள்
கைத்தா மரைக்கடகபூண்
கதிரொளி விரிக்கவளர் சிகையினிடு சுட்டிமிசை
கட்டாணி முத்தொளிரவே
பவளவிதழ் புத்தமுத மொத்தமத லைக்குதலை
பப்பாதி சொற்றெரியவே
பரிபுரமொ லிக்கவரு குறுநகையெ ழுப்பியிடு
பைச்சேட னுச்சிகுழிபா

யுவளகம னைத்துமிள வரிவளைமு ழக்கவெடி
யுற்றேபெ ருத்தகயல்போ
யொருபுடை குதிக்கவரி யலவனளை யிற்புகுத
வுப்பூறு நெட்ட கழிதோய்
தவளமணி முத்தையலை யெறியுநக ருக்கதிப
சப்பாணி கொட்டியருளே
சருவிய புறச்சமய விரதியர் குலக்கலக
சப்பாணி கொட்டியருளே.

(இ-ள்) கவளம்-பெரிய உருண்டைகளாய் உணவையுட்கொள்ளும் இயல்புடைய, மதவெற்பு-மதங்கொண்ட மலைபோன்ற அட்டதிக்கயங்களால், நிலை உலகு-நிலைபெறும் உலகில் வாழும் உயிர்களெல்லாம், பரவ-புகழ, பிரபைகொள்-ஒளிபொருந்திய, கைத்தாமரை-கையாகிய தாமரை மலரில் உள்ள, கடகபூண் - பொற்கடகம் என்னும் ஆபரணம், கதிர் ஒளி விரிக்க-சூரியன் ஒளி வீச, வளர் சிகையின் இடு-மென்மேலும் வளர்கிற குஞ்சியில் அணிந்துள்ள, சுட்டிமிசை-சுட்டி என்னும் அணியின்மேல், கட்டு ஆணி முத்து ஒளிர-கட்டித் தொங்கவிடப்பெற்ற உயர்ந்த முத்துக்கள் ஒளிசெய்ய, பவளஇதழ்-பவளம்போன்ற செந்நிறம் உடைய இதழிலிருந்து புறப்படும், புத்தமுதம் ஒத்த-புதிய அமுதம்போன்ற, மதலைக்குதலை பப்பாதி சொல் தெரிய-இளங் குழவிக் குரிய மழலைச் சொல்லாகிய நிரம்பாத சொற்கள் தெரிய, பரிபுரம் ஒலிக்க-சிலம்பு ஒலிசெய்ய, வருகுறுநகை எழுப்பியிடு-தோன்றுகிற புன்னகையை எழுப்பிவிடுகிற, பைச்சேடன் உச்சி குழிபாய்-ஆயிரம் படங்களையுடைய ஆதிசேடனது உச்சி குழியும்படி பாய்கின்ற, உவளகம் அனைத்தும்-நீர் நிலைகளிலே, இளரிவளைமுழக்க-இளமையான வரிகளையுடைய சங்குகள் ஒலிசெய்ய, வெடியுற்று-எழுந்து பாய்ந்து, பெருத்தகயல்-பெரிய கயல் மீன்கள், போய் ஒரு புடை குதிக்க - போய் ஒரு பக்கத்திற் குதிக்க, வரியலவன்-வரிகளையுடைய நண்டுகள், அளையிற் புகுத-வளைகளில் நுழைய,

உப்பு ஊறு-உப்பு வளர்கிற, நெட்டகழி-நீண்ட கடலகழியிலே, தோய்-தோய்ந்துள்ள, தவள மணி முத்தை-வெண்ணிறமுள்ள அழகிய முத்தங்களை, அலை எறியும் நகருக்கு அதிப - அலைகள் வீசுகிற திருச்செந்தூரின் தலைவனே, சப்பாணி கொட்டியருள், சருவிய-நெருங்கிவந்த, புறச்சமய விரதியர் - சமணமதத் துறவிகளின், குலக்கலக-குலநாசம் செய்த சைவ சமயாசாரியரே, சப்பாணி கொட்டியருள்வாயாக.

உலகு பரவ, கடகபூண் கதிர் ஒளி விரிக்க, சுட்டிமிசைக் கட்டாணி முத்து ஒளிர, பவள விதழ் பப்பாதி சொல் தெரிய, பரிபுரம் ஒலிக்க குறுநகை யெழுப்பி, சப்பாணி கொட்டியருள் என்று முடிக்க, பைச்சேடன் உச்சிகுழிபாய் என்று தொடங்கிய சொற்றொடர்கள் அலையெறியும் நகரை விசேடிப்பனவாம். பற்பாதி என்றும் பாடம் உண்டு.

சருவுதல்-நெருங்குதல், உவளகம்-குளம், புறச்சமய விரதியர்-சமணர், அவர் குலக்கலகன்-சம்பந்தப்பெருமான்.

37 கருதிய தமனிய மணியரை வடமிடு
கட்டுவ டத்தோடும்
கழலிடு பரிபுர மொலியெழ மணியுமிழ்
கைக்கட கப்பூணும்
இருகட ரொளிபெற மருவிய தளர்நடை
யிட்டும திப்பாக
வெழுமதி புரைதிரு முகமலர் குறுவெய
ரிட்டுவ ரத்தாமஞ்
சொருகிய நறுமலர் முகையவிழ் சிகையிடு
சுட்டிநு தற்றுழத்
தொழுதுனை வழிபடு மடியவ ரிளையவர்
சொற்படி தப்பாமற்

குருமணி யலையெறி திருநக ரதிபதி
கொட்டுக சப்பாணி
குருபர சரவண பவசிவ மழவிடை
கொட்டுக சப்பாணி.

(இ-ள்) கருதிய - தெரிந்தெடுக்கப் பெற்ற, தமனிய மணி-பொன் மணிகளால் அமைந்த, அரைவடம் இடு - அரை ஞாணக அணியப்பெற்ற, கட்டு வடத்தோடும்-தொங்கல் வடத்தோடும், கழல் இடு-பாதங்களில் அணிந்த, பரிபுரம்-சிலம்புகளில், ஒலி எழ-ஒலி உண்டாக, மணி உமிழ்-அழகு மிக்க நவரத்தினங்கள் இழைத்த, கைக் கடகப்பூணும்-கையில் அணியும் கடகம் என்னும் ஆபரணமும், இருசுடர் ஒளிபெற-சூரிய சந்திரர்போல் ஒளி வீச, மருவிய தளர்நடையிட்டு-பொருந்திய தளர்நடை நடந்து, மதிப்பாக-பெருமையாக, எழு-உதிக்கிற, மதிபுரை-சந்திரன் போன்ற, திருமுகமலர்-அழகிய முகத்தாமரை, குறுவெயர் இட்டுவர-சிறு வேர்வை துளிக்க, தாமம் சொருகிய-மாலை செருகப்பெற்ற, நறுமலர் முகை அவிழ்-மணமிக்க மலர் அரும்புகள் அவிழ்கின்ற, சிகை இடு-தலையில் அணிந்த, சுட்டி - சுட்டி என்னும் அணி, நுதல் தாழ-நெற்றியில் தாழ, தொழுது உனை வழிபடும் அடியவர்-உன்னை வணங்கி வழிபடுகின்ற அடியவர்களாகிய, இளையவர்-அடிமைகளின், சொற்படி-வேண்டுகோட்கு இணங்கி, தப்பாமல் - தவறாமல், குருமணி - பல நிறம் தோன்றும் முத்துக்களை, அலைஎறி - அலைகள் கரையில் வீசுகின்ற, நகர் அதிபதி - திருச்செந்தூர்த் தலைவனே, கொட்டுக சப்பாணி - சப்பாணி கொட்டியருள்க. குருபர-பரம குருவே, சரவணபவ - நாணற் காட்டிற் பிறந்த குழவியே, சிவமழவிடை - சிவபிரானது இளங் குழந்தையே, கொட்டுக சப்பாணி-சப்பாணி கொட்டியருள்க.

'வடத்தோடும், பரிபுரம் ஒலியெழ, கடகப்பூணும் ஒளிபெற, தளர் நடையிட்டு, முகமலர் குறுவெயர் இட்டுவர, சிகையிடு சுட்டி நுதல் தாழ வழிபடும் அடியவர் இளையவர் சொற்படி தப்பாமல் சப்பாணி கொட்டுக' என்று வினை முடிவுசெய்க.

தபனியம்-ஒளிசெய்யும் பொன், வடசொல்; தமிழில் தபனியம் என்றும் தமனியம் என்றும் வழங்கும். சொருகுதல்-செருகுதல், செருகுதல் என்பதே முன்னோர் வழங்கிய முறை, சொருகுதல் உலக வழக்காம்; இளையவர்-சேவகர் ஏவலர் என்ற பொருள் தருவது "யான் கண்டனையர் என் இளையரும்" என்று பிசிராந்தையார் பாடிய செய்யுளில் இளையர் என்ற சொல் இப்பொருள் பெறுதல் காண்க. குரு-நிறம்; குருபரன்-சிவபிரானுக்குப் பிரணவப்பொருள் உபதேசித்த சுவாமிநாத மூர்த்தம்; சரவணபவன்-நாணற்காட்டிற் பிறந்தவன். சரம்-நாணல், பவன்-பிறந்தவன். சர+வனம்-சரவணம், வடமொழிச்சந்தி; பவன் என்பது பூ என்ற வடசொற் பகுதியின் அடியாய்ப் பிறந்த சொல், பூ-பிற, பவன் - பிறந்தவன்; மழவிடை - இளங்கன்று, சிவமழவிடை-சிவகுமரனாகிய இளங்கன்று என்பது பொருள்.

38 வரைபுரை புயமிசை யிடுதொடி யணிகலன்
மற்றுள முத்தார
மணிமுடி குழையிடு மிருசிகை யழகெழ
மைக்குவ ளைப்போதின்
விரைசெறி குழலியர் செவிலிய ரவரவர்
மிக்கவி ருப்பானார்
விபுதரு முனிவரு முனதடி பரவியுன்
வெற்றியு ரைப்பார்சீ
ரரைமணி யுடைமணி கணகண கணவென
வத்திமு கத்தானு
மரிபிர மனுமுமை கணவனு மனமகி
ழற்புவி ளைத்தார்பார்
குரைகட லலையெறி திருநக ரதிபதி
கொட்டுக சப்பாணி
குருபர சரவண பவசிவ மழவிடை
கொட்டுக சப்பாணி.

(இ-ள்) வரைபுரை - மலைபோன்ற, புயம்மிசை -தோள்கள் மேல், இடுதொடி அணிகலன்-அணிந்த தோள்வளை என்னும் ஆபரணமும், மற்று உள முத்து ஆரம்-வேறு உள்ள முத்து மாலைகளும், மணிமுடி-அழகிய திருமுடியிலே, குழையிடு - குழைவாகச் சுருட்டி யமைக்கப்பெற்ற, இருசிகை - முன்னும் பின்னுமாக அமைந்த இரண்டு சிகைகளும், அழகு எழ - அழகு மிகத் தோன்ற, மைக்குவளைப்போதின்-கருநிறமான நீலோற்பல மலர்களின், விரை செறி குழலியர்-மணம் மிக்க கூந்தலையுடைய பெண்டிர் ஆகிய, செவிலியர் அவரவர் - செவிலியர் ஆயமைந்த கார்த்திகைப் பெண்கள் அறுவரும், மிக்க விருப்பானார் - உன்னிடம் மிகுந்த விருப்பம் கொண்டனர், விபுதரும் முனிவரும்-தேவர்களும் முனிவர்களும், உனது அடி பரவி-உனது பாதங்களைப் புகழ்ந்து, உன் வெற்றி உரைப்பார்-உனது பிரதாபத்தைப் பேசுவார்கள், சீர் அரை மணி-சிறப்புடைய இடையிற் கட்டிய மணியும், உடைமணி-உடையோடு பொருந்திய மணியும், கண கணகண என - கணகண என்று முழங்க (நீ வருங் காட்சியைக் கண்டு,) அத்திமுகத்தானும் - யானை முகம் உள்ள விநாயகக் கடவுளும், அரிபிரமனும்-திருமாலும் பிரமதேவனும், உமை கணவனும்-உமாதேவியார் தலைவராகிய சிவபெருமானும், மனம் மகிழ்-மனம் மகிழ்கின்ற, அற்புவிளைத்தார்பார்-அன்பை உன்னிடம் கொண்டனர் பாராய், குரைகடல் அலை எறி - முழக்கம் மிக்க கடல் அலை வீசுகிற, திருநகர் அதிபதி-திருச்செந்தூர்த் திருநகர்த் தலைவனே, கொட்டுக சப்பாணி-சப்பாணி கொட்டியருள்க, குருபர-குருதேவனே, சரவணபவ - நாணற் காட்டிற் பிறந்தவனே, சிவமழவிடை-சிவபிரான் அருளிய இளங்கன்றே, கொட்டுக சப்பாணி-சப்பாணி கொட்டியருள்க.

இருசிகை-சிறு குழந்தைகளுக்கு முன்னும் பின்னும் அமையப் பின்னல் இடப்பெறும் இருதிறப்பட்ட சிகையாம். இரு பெரிய, என்று பொருள் கொண்டு பெருங்குடுமி என்று உரைப்பாரும் உளர். அழகெழ கணகணகண என கொட்டுக சப்பாணி என்று வினை முடிவு செய்தலுமாகும். அற்பு விளைத்தார் மிக்க விருப்

பானூர் முதலிய வாக்கியங்களை முன்னே சேர்க்க வேண்டும். அற்பு-அன்பு, கணகணகண ஒலிக்குறிப்பு இசைக்கும் இடைச் சொல்.

39. கந்தத் தகட்டினர விந்தத் தனிக்கடவுள்
கற்பா யெனச்சுருதிநூல்
கண்டித் துரைத்திடவு மிந்தக் கரத்திலுரை
கற்பா லுரைத்தியெனவே
யந்தப் பொருட் பகுதி யந்தத் தினைப்பகரு
மப்போ வெறுத்து முனிவா
யஞ்சத் திருக்குமய னஞ்சச் சிறைக்குளிடு
மப்பா சிறக்குமமலா
பந்தப் பிறப்பொழிய வந்தித் திருக்குமவர்
பற்றாக நிற்குமுதல்வா
பண்டைக் குடத்திலுறு முண்டச் சிறுத்தமுனி
பற்றுரை யுற்றுமிகவாழ்
சந்தப் பொருப்பிறைவ செந்திற் பதிக்குமர
சப்பாணி கொட்டியருளே
சங்கத் தமிழ்ப்புலவ துங்கக் கொடைக்குமர
சப்பாணி கொட்டியருளே.

(இ-ள்) கந்தத் தகட்டின்-மணம் பொருந்திய இதழ்களை யுடைய, அரவிந்தம்-தாமரை மலரில் வீற்றிருக்கும், தனிக் கடவுள்-பிரமதேவன், கற்பாய் என-முருகனே நீ கற்றுக்கொள்வாய் என்று, சுருதிநூல்-வேதசாஸ்திரங்களை, கண்டித்து உரைத்திடவும்-ஆசிரியர் மாணாக்கர்க்குப் போதிக்கும் முறைபற்றிக் கண்டித்துச் சொல்லவும், (அதைக் கேட்டு, அவனை நோக்கி,) இந்தக்கரத்தில் உரை-இந்த ஓரெழுத்தின் பொருளை, கற்பால்-உன் கல்வியின் துணைகொண்டு, உரைத்தி எனவே-சொல்வாய் என்று கேட்டு, அந்தப்பொருட் பகுதி-அந்தப் பிரணப்பொருட் பாகுபாட்டின், அந்தத்தினை-முடிவை, பகரும்-பிரமன் சொல்லமுயலும், அப்போ-

அப்பொழுது, வெறுத்து-(அவன் கூறிய பொருள் பொருத்த மில்லை என்ற கருத்தால்) வெறுப்புற்று, முனிவாய் - சினத் தோடு, அஞ்சத்து-அன்ன வாகனத்தின் மேல், இருக்கும் - அமர் கின்ற, அயன்-பிரமதேவன், அஞ்ச-அஞ்சும்படி, சிறைக்குள் இடு-அவனைச் சிறையிட்டருளிய, அப்பா-அப்பனே, சிறக்கும் அமலா-சிறப்பு மிக்க தேவனே, பந்தப்பிறப்பு ஒழிய - பாசத்தினால் நேர்ந்த பிறப்பு ஒழியும் வண்ணம், வந்தித்திருக்கும் அவர்-வந்தனை செய்திருக்கும் அடியார்கள், பற்றாக நிற்கும் முதல்வா-பற்றிய பொருளாக நிற்கும்முதற் கடவுளே, பண்டைக்குடத் திலுறு-பழமையான குடத்திலேபிறந்த, முண்டச் சிறுத்தமுனி-உடல் சிறுத்த அகத்திய முனிவர், பற்றாசை உற்றுமிக வாழ்-மிக்க ஆசைகொண்டு வாழ்கின்ற, சந்தப்பொருப்பு இறைவ-பொதிய மலையின் தலைவனே, செந்திற்பதிக்குமர - திருச்செந் தூர்த் தலத்திற் கோயில்கொண்ட முருகப் பிரானே, சப்பாணி கொட்டியருள் - சப்பாணி கொட்டியருள்வாய், சங்கத் தமிழ்ப் புலவ-சங்கத் தமிழைப்பயின்றறிந்த புலவர் பெருமானே, துங்கக்கொடைக்குமர - சிறந்தகொடை வள்ளலாகிய முருகப் பிரானே, சப்பாணி கொட்டியருள்-சப்பாணி கொட்டியருள்வாய்.

கந்தம்-மணம், தகடு-இதழ், அரவிந்தம் - தாமரை, சுருதி-வேதம், கேள்வி முறையாற் பயிலப்பெறுவது, அக்கரம் - எழுத்து, இந்த + அக்கரம்-இந்தக்கரம் எனப் புணர்ந்தது, கற்பு-கல்வி, அறிவு; அப்போ-அப்போது என்பதன் விகாரம் கடைக் குறை, அஞ்சம்-அன்னம், ஹம்ஸம் என்ற வடசொற் சிதைவு, கம்ஸன் என்பது கஞ்சன் என்று வருவதுபோல வந்துள்ளது. அயன்-அஜன் பிரமதேவன், வந்தித்தல்-வணங்குதல், வந்தனை என்னும் வடசொல் அடியாய்ப் பிறந்த வினைப்பகுதி, வந்தி என்பது. பற்று பற்றுப்பெறும் பொருள். பந்தம்-பாசம், பிறப் பொழிய வந்தித்திருக்குமவர் பற்றாக நிற்கும்முதல்வன் என்ற தொடர்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" என்ற குறட் கருத்தைத் தழுவியது.

முண்டச் சிறுத்தமுனி-உடல் சிறுத்த குறுமுனிவர், அகத்தியர்; பொதியமலையை முருகவேள் குன்றமென்றார் செந்திற்பதிக்கு அருகிலிருப்பதால், சங்கத் தமிழ்ப்புலவ என்றது உக்கிரப் பெருவழுதியாகவும் உருத்திரசருமனாகவும் அவதரித்துச் சங்கத் தமிழை வளர்த்த அவசரங்களை நினைப்பிப்பது. இச்செய்யுளின் முற்பகுதியில் முருகப்பிரான் பிரமதேவனைச் சிறையிட்ட வரலாறு கூறப்பெற்றுளது.

40\. புதுமலர் சிதறிம கிழ்ந்து வானவர்
பொற்றாளி னைப்பரவவே
புகலரு மிசைதெரி தும்பு ராதியர்
புக்காத ரித்துவரவே
மதுகர மிடறிய தொங்கன் மாலிகை
மற்பூத ரத்தசையவே
மணியொளி வயிரம லம்பு தோள்வளை
மட்டாய்நெ ருக்கமுறவே
சதுமறை முனிவர்க டங்க ளுயக
சப்பாணி கொட்டியருளே
சரவண பவகுக செந்தில் வேலவ
சப்பாணி கொட்டியருளே.

(இ-ள்) வானவர்-தேவர்கள், புதுமலர்-புதிய மலர்களை, சிதறி மகிழ்ந்து-தூவி மகிழ்ந்து, பொற்றாளினை - பொன்னிறமுள்ள உனது பாதங்களை, பரவ-புகழ்ந்து வணங்கவும், புகலரும்-பிறரால் சொல்வதற்கரிய பெருமையையுடைய, இசை தெரி-இசை நூல் நுணுக்கங்களை உணர்ந்து பாடும், தும்புரு ஆதியர்-தும்புரு நாரதர் முதலிய முனிவர்கள், புக்கு-நின் சந்நிதியிற்

புகுந்து, ஆதரித்துவர-பக்திசெய்துவரவும், மதுகரம் இடறிய-வண்டுகள் கிண்டிய, தொங்கல் மாலிகை-தொங்கலாய்த்தொடுத்த மாலை, மல்பூதரத்து அசைய-வலிமை மிக்க மலைபோன்ற தோள்களின் மேல் அசையவும், மணி ஒளி வயிரம் - அழகிய ஒளியையுடைய வயிரங்கள், அலம்பு தோள்வளை - ஒளி பிறழும் தோள் வளைகள், மட்டாய் நெருக்கமுற-அழகுற நெருங்கித் தோன்றவும் சதுமறை முனிவர்கள் தங்கள் நாயக - நான்கு வேதங்களை ஓதியுணர்ந்த, முனிவர்கள் தலைவனே, சப்பாணி கொட்டியருள் - சப்பாணி கொட்டியருள்வாய், சரவணபவகுக-சரவணபவனே குகப் பெருமானே, சப்பாணி கொட்டியருள்.

பூதரம்-மலை, இங்கு தோளுக்கு உருவகமாயிற்று, அலம்புதல்-அசைதல், இங்கு ஒளியின் பிறழ்ச்சியை உணர்த்தும்.

---

## ஐந்தாவது
## முத்தப்பருவம்.

---

முத்தப்பருவம்-பாட்டுடைத் தலைவனாகிய பிள்ளைப் பெருமானை முத்தம் கொடுக்க வருவாய் என்று அழைத்துப் பாடும் பருவம். இப்பருவத்திலே முத்தின் வகை பலவற்றைக்கூறி அவற்றில் உள்ள குறைகளை எடுத்துக்காட்டிப் பிள்ளையின் முத்தத்தின் பெருமையை விளக்கிப் பாடுதல் மரபாகும். இந்நெறி பற்றியே முன்னைப் புலவர் பலரும் பாடினர். இப்பிள்ளைத் தமிழிலும் முத்தப்பருவம் இங்ஙனம் இயன்றிருப்பதைக் காணலாம்.

41 கத்துந் தரங்க மெடுத்தெறியக்
கடுஞ்சூ லுளைந்து வலம்புரிகள்
கரையிற் றவழ்ந்து வாலுகத்திற்
கான்ற மணிக்கு விலையுண்டு
தத்துங் கரட விகடதட
தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை
தரளந் தனக்கு விலையுண்டு
தழைத்துக் கழுத்து வளைந்தமணிக்
கொத்துஞ் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர்முத் தினுக்கு விலையுண்டு
கொண்ட றருநித் திலந்தனக்குக்
கூறுந் தரமுண் டுன்கனிவாய்
முத்தந் தனக்கு விலையில்லை
முருகா முத்தந் தருகவே
முத்தஞ் சொரியுங் கடலலைவாய்
முருகா முத்தந் தருகவே.

(இ-ள்) கத்தும் - முழங்குகிற, தரங்கம் - அலைகள், எடுத்து எறிய-எடுத்து வீச, கடுஞ்சூல் உளைந்து-முதிர்ந்த கருப்பத்தால் வருந்தி, வலம்புரிகள்-வலம்புரிச் சங்குகள், கரையில் தவழ்ந்து-கடற்கரையிலே ஊர்ந்து,வாலுகத்தில்-மணல் மேடுகளில், கான்ற மணிக்கு விலை உண்டு - ஈன்ற முத்துக்கு விலையுண்டு, தத்தும்-பாய்ந்து ஓடுகிற, கரடம்-மதநீர்ப் பெருக்கையுடைய, விகடம்-மன மாறுபாடுள்ள, தடம் - பெரிய, தந்தி-யானையின், பிறைக்கூன்-பிறைபோல் வளைந்த, மருப்பில்விளை - கொம்பிலே விளைந்த, தரளம் தனக்கு-முத்து வகைக்கும், விலை உண்டு - ஒரு குறிப்பிட்ட விலை உண்டு, தழைத்து-தழைக்கப்பெற்று, கழுத்துவளைந்த-தலை சாய்ந்த, மணிக்கொத்தும் சுமந்த - நெல் மணிகளைக் கொத்துக் கொத்தாய்ச் சுமந்த, பசுஞ்சாலி - பசுமையான நெற்கதிரிலே

தோன்றிய, குளிர் முத்தினுக்கு-குளிர்ச்சி பொருந்திய முத்துக்கு, விலை உண்டு-ஒருவகை மதிப்பு உண்டு, கொண்டல் தரும் நித்திலம் தனக்கு-மேகத்திலே பிறக்கும் முத்துக்கும், கூறும் தரம் உண்டு - சொல்லத்தக்க மதிப்புண்டு, உன் கனிவாய் முத்தம் தனக்கு விலை இல்லை-உனது கொவ்வைக் கனிபோன்ற வாயிலிருந்து யாம்பெறத்தக்க முத்தத்துக்கு விலை மதிப்பு இன்னது என்று கூற இயலாது, முருகா முத்தம் தருகவே-முருகப்பெருமானே முத்தம் தருவாய், முத்தம் சொரியும் - முத்துக்களைச் சிதறுகின்ற, கடல் அலைவாய் - கடலருகுள்ள திருச்சீரலைவாய் என்ற திருப்பதியில் கோயில்கொண்ட முருகா முத்தம் தருக-முருகப்பிரானே முத்தம் தருவாயாக.

'வலம்புரிகான்ற முத்துக்கு விலை உண்டு. தந்திமருப்பில் விளை தாளந் தனக்கு விலையுண்டு சாலி முத்தினுக்கு விலையுண்டு கொண்டல்தரு நித்திலம் தனக்கு விலையுண்டு உன் கனிவாய் முத்தத்துக்கு விலையில்லை முருகா முத்தம் தருக' என வினை முடிவு செய்க. வாலுகம்-மணல், மணி-முத்து, கடாம்-மதம், தந்தி-தந்தத்தையுடையது யானை; மருப்பு-கொம்பு, சாலி-நெல், நித்திலம்-முத்து, தாளம்-முத்து, இச்செய்யுளில் முத்து விளையும் இடங்களில் நான்கு கூறப்பட்டன. பின்வரும் செய்யுட்களில் வேறு பிற கூறப்பட்டிருப்பது காணலாம்.

42 வளைக்குந் தமரக் கருங்கடலின்
வளைவா யுகுத்த மணிமுத்தன்
வடிவேற் கறைபட் டுடல்கறுத்து
மாசு படைத்த மணிமுத்தந்
துளைக்குங் கழையிற் பருமுத்தந்
துளபத் தொடைமா லிதழ்பருகித்
தூற்றுந் திவலை தெறித்த முத்தஞ்
சுரக்கும் புயலிற் சொரிமுத்தந்

திளைக்குங் கவன மயிற்சிறையிற்
சிறுதூட் பொதிந்த குறுமுத்தஞ்
செந்நெல் முத்தங் கடைசியர்கா
றேய்த்த முத்தஞ் செழுந்தண்டேன்
முளைக்குங் குமுதக் கனிவாயான்
முருகா முத்தந் தருகவே
முத்தஞ் சொரியுங் கடலலைவாய்
முருகா முத்தந் தருகவே.

(இ-ள்) வளைக்கும்-பூமியைச் சுற்றி வளைந்திருக்கும், தமரம்-முழக்கம் மிக்க, கருங்கடலின்-பெரிய கடலில் உள்ள, வளைவாய் உகுத்த மணிமுத்து-சங்குகள் ஈன்ற அழகிய முத்துக்கள், உன் வடிவேற் கறைபட்டு-உனது கூறிய வேலின் கறைபட்டு, உடல் கறுத்து-உடல் கறுக்கப்பெற்று, மாசு படைத்த-குற்றமுடையதாகிய மணிமுத்தம் - முத்துமணியாகும், துளைக்கும்--துளைக்கப் பெறுகின்ற, கழையில் - மூங்கிலிற் பிறந்த, பருமுத்தம் - பெரிய முத்தமானது, துளபத்தொடை-திருத்துழாய் மாலையை அணிந்த, மாலின்-கண்ணபிரானது, இதழ் பருகி-இதழில் ஊறும் நீரைப் பருகி, தூற்றுந் திவலை-அங்கிருந்து சிதறிய துளிகள், தெறித்த முத்தம்-படிந்த முத்தமாகும், சுரக்கும்-மழை பொழிகின்ற, புயலில் சொரி முத்தம்-மேகங்களிலிருந்து பிறக்கும் முத்தமானது, திளைக்கும் - விளையாடுகின்ற, கவனம் - வேகத்தையுடைய, மயில் சிறையில்-உனது மயிலின் சிறகிலிருந்து எழுந்த,சிறு தூள்-சிறிய துகள், பொதிந்த - படிந்த, குறுமுத்தம் - சிறிய முத்தம் ஆகும், செந்நெல் முத்தம்-செந்நெல்லிலிருந்து பிறந்த முத்தம், கடைசியர் கால் தேய்த்த முத்தம்-உழத்தியர் காலால் தேய்த்த முத்தமாகும், (ஆகையால் அவற்றை யாம் வேண்டேம்) செழுந்தண்டேன் - செழுமையும் குளிர்ச்சியும் உள்ள தேன், முளைக்கும் - தோன்றுகின்ற, குமுதம்-குமுத மலர்போன்ற, கனிவாயால்-அழகிய வாயால், முருகா முத்தம் தருக-முருகா முத்தம் தருவாய், முத்தம் சொரியும் கடல் அலைவாய் முருகா முத்தம் தருக.

கடல்முத்து, கழைமுத்து, புயல்முத்து, செந்நெல்முத்து என்றநால்வகை முத்துக்களும் ஒவ்வொரு குறையுடையன. உனது கனிவாய் முத்தத்துக்கு ஒரு குறையும் இல்லை. அதனை அருள்க என்றார். கடல் முத்துக்கு உள்ள குறை முருகன் கைவேலாற் கறைபட்டுக்கறுத்திருப்பதாகும். உக்கிரப் பெருவழுதியாகமுருகப் பிரான் அவதரித்திருந்தகாலத்தில், மதுரை நகரத்தை அழிக்கு மாறு கடல் பெருகிவரக்கண்டு அதன் செருக்கை யடக்குமாறு அவன் வேல்விட்டான் என்ற திருவிளையாடற் புராண வரலாறு இங்கே கூறப்பட்டது. கழை முத்தத்துக்கு உள்ள குறை கண்ணன் வாய் எச்சில் ஊறியிருப்பதாகும். கண்ணபிரான் ஆய்ப்பாடியிலே கன்று காலிகளை மேய்த்து அவற்றின் பின் நடந்தபோது வேய்ங்குழல் ஊதினன் என்ற பாகவத வரலாறு இங்கு குறிப்பிடப்பட்டது. புயல் முத்தத்துக்கு உள்ள குறை மயிற் சிறையால் எழுந்த துகள் படிந்திருப்பதாகும். முருகப் பிரான் ஊர்தியாகிய மயில் எல்லா உலகங்களும் நடுங்கும்படி விண்ணிற் பறந்துவரும் இயல்பினதாதலால் இங்ஙனம் கூறப் பட்டது. செந்நெல் முத்தத்துக்கு உள்ள குறை கடைசியர் காலால் தேய்க்கப்பெற்றிருப்பதாகும். இது இயல்பே. ஆகை யால் இக்குறைகள் ஒன்றும் இல்லாத குமுதவாய் முத்தம் தருக. என்றார். கடைசியர்-உழத்தியர், திவலை-துளி.

43 கலைப்பால் குறைத்த பிறை முடிக்குங்
கடவு ளுடலின் விளைபோகங்
கனலி கரத்தி லளிக்கவந்தக்
கனலி பொறுக்க மாட்டாமல்
மலைப்பால் விளங்குஞ் சரவணத்தில்
வந்து புகுத வோராறு
மடவார் வயிறு சூலுளைந்து
மைந்த ரறுவர்ப் பயந்தெடுப்பக்

கொலைப்பால் விளங்கும் பரசுதரன்
குன்றி லவரைக் கொடுசெல்லக்
கூட்டி யணைத்துஞ் சேரவொரு
கோல மாக்கிக் கவுரிதிரு
முலைப்பால் குடித்த கனிவாயான்
முருகா முத்தந் தருகவே
முத்தஞ் சொரியுங் கடலலைவாய்
முருகா முத்தந் தருகவே.

(இ-ள்) கலைப்பால்-கலைகளில், குறைத்த-குறைவு பெற்ற, பிறை-இளம் பிறையை, முடிக்கும்-சடைமுடியிற் சூடும், கடவுள்-சிவபெருமான், உடலின் விளைபோகம்-தமது உடலில் விளைந்த வீரியத்தை, கனலிகரத்தில் - அக்கினிதேவன்கையில், அளிக்க-கொடுக்க, அந்தக் கனலி-அந்த அங்கிவானவன், பொறுக்கமாட்டாமல்-அதனைத் தாங்கி நிற்க ஆற்றலற்றவனாய், மலைப்பால் விளங்கும்-மலைக்கருகில் விளங்குகின்ற, சரவணத்தில்-சரவணப் பொய்கையில், வந்து புகுத-வந்து அதனைப்போட, ஓராறு மடவார்-கார்த்திகைப் பெண்டிர் அறுவர், சூல் உளைந்து-கருப்பந் தாங்கி வருத்தமுற்று, மைந்தர் அறுவர்ப் பயந்து எடுப்ப-ஆறு குழவியர்களைப் பெற்றெடுக்க, சொலைப்பால் விளங்கும்-கொலைத் தன்மை விளங்குகின்ற, பரசுதரன்-மழுப்படைதாங்கிய சிவபெருமான், குன்றில் - திருக்கயிலாய மலையில், அவரை-அந்த ஆறு குழவியர்களையும், கொடுசெல்ல - எடுத்துக்கொண்டு செல்ல, கூட்டியணைத்து-ஒன்றாகக்கூட்டி மார்போடு அணைத்து, சேர ஒரு கோலம் ஆக்கி-சேர்ந்து முருகனாகிய ஒரு திருக்கோலம் ஆகச் செய்து, கவுரி திரு முலைப்பால் குடித்த-இறைவியின் திருமுலைப் பால் பானஞ்செய்த, கனிவாயால்-அழகிய வாயால், முருகா முத்தம் தருக-முருகப்பிரானே முத்தந்தருள்க; முத்தம் சொரியும் கடல் அலைவாய் முருகா முத்தம் தருக.

பிறை என்பதே குறைமதியைக் குறிக்கும் ஆற்றலுடையது ஆயினும் விளக்கமாகப் புலப்படும் பொருட்டுக் கலைகுறைத்த பிறை என்றார். போகம் என்பது ஆகுபெயராய் வீரியத்தை உணர்த்திற்று. சரவணம்-நாணற்காடு, இங்கு நாணற்காடு அடுத்த பொய்கையைச் சுட்டிற்று. கனவி-கனல்+இ-கனல்வோன், வினை முதல் விகுதி பெற்ற காரணப்பெயர், ஓராறு மடவார்-முருகனை வளர்க்கும் பேறுபெற்ற கார்த்திகைப்பெண்டிர் அறுவர். பரசு-மழு, பரசுதரன்-மழுவைத்தாங்கியவன், சிவபெருமான், கவுரி-கவுர நிறம் உடையாள், தேவி.

முருகன் திருவவதாரத்தைக் குறிக்க இவ்வாசிரியர் கூறும் வரலாற்றில் முன்னோர் கூறாத சில செய்திகள் உண்டு. கந்த புராணம்கூறும் திருவவதாரச் செய்தி வேறு. இவர் கூறுவது வேறு. புராணவரலாறு "ஓராறு மடவார் வயிறுசூலுளைந்து மைந்தாறுவர்ப்பயந்தெடுப்ப" என்று இப்புலவர் கூறும் கூற்றுக்கு ஆதரவு அளிக்கவில்லை. சிவபிரான் நுதல்விழியிலிருந்து தோன்றிய ஆறுபொறிகள் அக்கினிதேவனாலும் பிறதேவராலும் கங்கைக்கு எடுத்துச்செல்லப்பெற்றன. அங்கு அவை ஆறு குழவியர் ஆயின. கார்த்திகைப் பெண்டிர் அக்குழவியர்க்குப் பால் தரும் பேறுபெற்றனர். சிவபிரானும் உமாதேவியாரும் பின்பு அக்குழவியர்களை ஒன்று சேர்த்து அணைத்து ஸ்கந்தன் என்ற திருநாமத்தை அவன் பெறச் செய்தனர். கங்கையிற் பிறந்ததாலும் கார்த்திகைப் பெண்டிர் வளர்த்ததாலும் நாணற்காட்டிற் பிறந்ததாலும் முருகனுக்கு காங்கேயன், கார்த்திகேயன், சரவணபவன் என்ற திருநாமங்கள் வந்து பொருந்தின என்பது புராண வரலாறு. இத்திருவவதார வைபவத்தைப்பற்றிப் பத்துப்பாட்டுரையிலே நச்சினார்க்கினியர் குறிப்பிட்ட செய்தி ஒன்று உளது. அதனை அவர் சொல்லாலே இங்கு குறிப்பிடுவோம்.

"நெடும்பெருஞ் சிமயத்து நீலப்பைஞ்சுனை-நெடிய பெரிய இமவானுச்சியில் தருப்பை வளர்ந்த பசிய சுனையிடத்தே; நீலம் என்றார், அதினின்ற நீலநிறத்தையுடைய தருப்பையை. அஃது

ஆகுபெயர், என்றது சரவணப்பொய்கை என்றவாறு. ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப-விசும்பும் வளியும் தீயும் நீரும் நிலனும் ஆகிய ஐவருள் தீத் தன் அங்கையிலே ஏற்ப; சதாசிவனும் மயேச்சுரனும் உருத்திரனும் அரியும் அயனும் பூதங்கட்குத் தெய்வமாதலின் ஐவர் என்றார்; ஐவருள் ஒருவன் என்றது உருத்திரன் தெய்வமாகிய தீயை, அவன் அங்கையேற்பவென்றது-இறைவனிடத்தினின்றும் இந்திரன் வாங்கிய கருப்பத்தினை முனிவர் வாங்கித் தமக்குத் தரிக்கலாகாமையின் இறைவன் கூறுகிய அத்தீக் குண்டத்திட்டதனைக் கூறிற்று.'' அறுவர் பயந்த ஆறமர் செல்வ - அருந்ததி யொழிந்த அறுவராலே பெறப்பட்ட ஆறு வடிவு பொருந்திய செல்வ; என்றது அங்ஙனம் அங்கியின் கணிட்டுச் சத்தி குறைந்த கருப்பத்தை முனிவரெழுவரும் வாங்கித் தம் மனைவியர்க்குக் கொடுக்க அருந்ததி யொழிந்தோர் விழுங்கிச் சூன் அதிர்ந்து, சரவணப்பொய்கையிற் பதுமப்பாயலிலே பெற ஆறு வடிவாக வளர்ந்தமை கூறிற்று. ஏற்கையினாலே அறுவாற் பைஞ்சுனையிலே பயக்கப்பட்ட செல்வனென்க. இது பரிபாடலிற் பாயிரும் பனிக்கடல் என்னும் பாட்டானுணர்க.''

நச்சினார்க்கினியர் கூறும் இச்செய்திக்குப் புராணங்களில் ஆதரவு இல்லை. பிள்ளைத்தமிழுடையார் இதனையே மாறுபடக் கூறியிருக்கின்றாரோ என்று ஊகிக்க இடமுளது. இவ்வரலாற்றுப் பகுதியைப்பற்றிப் பரிபாடல் உரையிலே பரிமேலழகர் கூறும் கருத்துக்கள் பின்வருமாறு:—

"ஈசன் உமையோடு புணர்ந்து காமத்தை நுகர்கின்றவதுவை நாளின் கண் அமையாத புணர்ச்சியை ஒருகாலத்து அமைந்தானாக நெற்றிக்கண் இமையா நாட்டத்தையுடைய அவன் பக்கலிலே இந்திரன் ஒரு வரத்தைக்கொண்டு இந்தப் புணர்ச்சியாற்றோன்றிய கருவை யழிப்பாயாக' என, மழுப்படையைத் தரித்தவன் வாய்மையனாதலின் அவ்விந்திரனுக்குத் தான்

கொடுத்த வரத்தைச் செய்தற்கு அரிதென மாற்ருதே இவ்வுல கேழும் தன் மெய்ம்மையை வியக்க அதனுருவைப் பல கண்ட மாகச் சேதித்தான்; அங்ஙனம் சேதித்தலாற் கழிந்த சேயாக்கை யாதற்குரிய கருவை "இஃது அமரர் சேனைக்குத் தலைவனும்" எனச் சமாதியானுணர்ந்து இந்திரனுக் கிரதம் வாராமை கூறி அவன் பக்கலிலே பெற்றுக்கொண்டுபோன தெய்வ முனிவர்க ளெழுவரும் இறைவன் கண்டமாக வசித்ததாகிய வசிதடியை நம் மனைவியர் தரித்துச் சமைவிப்பராயின் நிறைவயிற் சாலார், அத ஞல் அங்கியாகிய தானே தரிக்கவெனவெண்ணி அம்மாதவர் அழலைவேட்டு அதன்கண் அவியுடனே பெய்தார்; பெய்ய அவ் வவியோடு குண்டங்களில் நிமிர்ந்த முத்தீக்கொள்ளுதலால் புரோ டாசமாகிய அதனை வானத்து வடவயினுறைகின்ற மகளிரெழு வருட் கடவுட் கற்பினையுடைய ஒரு மீனுகிய அருந்ததியொழிய விளங்குகின்ற கார்த்திகையாகிய அறுவரும் அப்பொழுதே யயின் ருர்-அயின்றும் தம் கணவர் வேண்ட அயின்ற புரோடாசம் ஆத லால் மறுவற்ற கற்பினையுடைய அம்மாதவவர் மனைவியர் நிறை யுடைமையினீங்காதே நின்னைச் சூற்கொண்டார்; கொண்டு பின் இமயத்துச் சரவணமென்னுஞ் சுனையில் தாமரைப் பூவாகிய பாயற் கண்ணே ஒருங்கு பெற்ருரென்று பௌராணிகர் சொல் லுவர்; முருகா! அவ்வாறு நின்னைப்பெற்ற அன்றே இந்திரன் இகன் மிகுதியால் முனிவர்க்குத்தான் கொடுத்த வாற்றைக் கடந்து வந்து வச்சிரத்தைக் கொண்டெறிந்தானுக முன் அறு வேருகிய துணியும் அறுவராய்ப் பின்னும் ஒருவனுயினை.

பகழிக்கூத்தர் பரிமேலழகர் கொள்கையையே பின்பற்றிச் சென்ருர் என்று மேற்காட்டிய வாக்கியங்களால் ஊகித்துணர லாம்.

44 கத்துங் கடலி னெடும்படவிற்
கழியிற் கழுநீ ரிற்சுழியிற்
கானற் கரையிற் கரைதிகழும்
கைதைப் பொதும்பிற் சுரும்பினங்கள்
தத்துங் கமலப் பசும் பொகுட்டிற்
சாலிக் குலையிற் சாலடியிற்
றழைக்குங் கதலி யடிமடலிற்
றழைவைத் துழுத முதுகுரம்பைக்
குத்துந் தரங்கப் புனற்கவரிற்
குவளைத் தடத்தின் மடைவாயிற்
குடக்கூன் சிறுமுட் பணிலமொரு
கோடி கோடி யீற்றுளைந்து
முத்தஞ் சொரியுங் கடலலைவாய்
முதல்வா முத்தந் தருகவே
மொழியுஞ் சமய மனைத்தினுக்கு
முதல்வா முத்தந் தருகவே.

(இ-ள்) கத்தும் கடலில்-அலை முழங்குகிற கடலிலும், நெடும் படவில்-அக்கடலில் ஓடுகிற நீண்ட தோணிகளிலும், கழியில்-கடற்கரையினோரமாயுள்ள உப்பங் கழிகளிலும், கழுநீரில்-அக்கழி களிலே மலர்ந்த கழுநீர் மலர்களிலும், சுழியில்--அக்கழிகளில் தோன்றும் நீர்ச்சுழிகளிலும், கானற் கரையில் - கடலையடுத்த சோலைகளுள்ள கரைகளிலும், கரை திகழும் - அக்கரைகளிலே விளங்குகிற, கைதைப் பொதும்பில்-தாழைப் புதர்களிலும், சுரும் பினங்கள்-வண்டுக் கூட்டங்கள், தத்தும்--விளையாடுகிற, கமலப் பசும் பொகுட்டில்-தாமரையின் இளங்கொட்டைகளிலும், சாலிக் குலையில்-நெற் குலைகளிலும், சால் அடியில் - உழுசாலின் அடியிலும், தழைக்கும்-தழைத்து வளரும், கதலி அடிமடலில்-வாழையின் அடிமடலிலும், தழைவைத்து உழுத - தழைகளை எருவாக இட்டு உழுத, முது குரம்பை - பெரிய வயல் வரப்புக்களை, குத்

தும்-மோதுகிற, தரங்கப்புனல் கவரில்--அலை நீரால் அமைந்த வெடிப்பு நிலங்களிலும், குவளைத்தடத்தில் - குவளை மலர்கள் மலரும் தடாகத்திலும், மடைவாயில்--நீர் பாயும் மடையிடங்களிலும், குடக்கூன்-குடம்போல் வளைந்த, சிறுமுள்-சிறிய முட்களையுடைய, பணிலம் - சங்குகள், ஒரு கோடி கோடி - கோடிக்கணக்காக, ஈற்றுளைந்து-வருந்திப் பெற்று, முத்தம் சொரியும்-முத்து மணிகளைச் சொரிகின்ற, கடல் அலைவாய் முதல்வா-கடல்சூழ்ந்த திருச்செந்தூர்ப் பெருமானே, முத்தம் தருக-முத்தம் தருவாயாக. மொழியும்-உலகத்தார் சொல்கின்ற, சமயம் அனைத்தினுக்கு-மதங்கள் எல்லாவற்றுக்கும், முதல்வா-தலைவனே, முத்தம் தருக-முத்தம் தருவாயாக.

கடலில், படலில், கழியில், கழுநீரிற், சுழியில் கானற் கரையில் கைதைப் பொதும்பில் கமலப்பொகுட்டில் சாலிக் குலையில் சாலடியில் கதலி மடலில் கவரில் குவளைத்தடத்தில் மடையில் பணிலம் கோடி கோடி முத்தஞ்சொரியும் அலைவாய் என வினைமுடிவு செய்க.

45 வயலுஞ் செறிந்த கதலிவன
மாடஞ் செறிந்த கதலிவன
மலர்க்கா வெங்குந் தேனினிரை
மாலை தோறுந் தேனினிரை
புயலுஞ் செறிந்த கனகவெயிற்
புடையே பரந்த கனகவெயில்
பொதும்பர் தோறு மோதிமமென்
புளினந் தோறு மோதிமஞ்செங்
கயலுஞ் செறிந்த கட்கடையார்
கலவி தரும்போர் கட்கடையார்
கருணை புரியு மடியாருன்
காதல் புரியு மடியார்சீர்

முயலும் படிவாழ் திருச்செந்தூர்
முருகா முத்தந் தருகவே
மொழியுஞ் சமய மனைத்தினுக்கு
முதல்வா முத்தந் தருகவே.

(இ-ள்) வயலும் செறிந்த கதலிவனம்-வயல்களிலே வாழை மரங்கள் மிகுதியாய் நிறைந்துள்ளன, மாடம் செறிந்த கதலி வனம்-மாடங்களிலே கொடிகளின் தொகுதிகள் முகுந்துள்ளன. மலர்க்கா எங்கும் தேனின் நிரை-மலர்ச்சோலைகள் எங்கும் தேன் இருலின் வரிசைகள் உள, மாலை தோறும் தேனின் நிரை-மாலை களிலெல்லாம் வண்டுகளின் கூட்டங்கள் உள, புயலும் செறிந்த-மேகம் படிந்துள்ள, கல் நக எயில் புடையே - கல்மலைபாகிய அரண் மதிலுக்குப் பக்கத்திலே, கனகவெயில் பரந்த - பொன் னிறமான வெயில் பரவியுள்ளது, பொதும்பர் தோறும் மோது இமம்-சோலைகள்தோறும் மோதுகிற பனி நிறைந்துளது, மென் புளினந்தோறும் ஓதிமம்-மெல்லிய மணல் மேடுகளிலெல்லாம் அன்னப்பறவைகள் உள்ளன, கயலும் செறிந்த கண் கடையார்-கெண்டை மீன்போன்ற கண்களையுடைய உழத்தியர்கள், கலவி தரும் போர்கட்கு அடையார்-கலவி நேரத்திலே தம் கணவரோடு நேரும் பிணக்குக்களில் அடங்கார், கருணை புரியும் அடி ஆர்-அடைந்தவர்க்கு அருள்புரிகின்ற திருவடிகளையுடைய, உன்காதல் புரியும் அடியார்-உன் பக்தி பூண்டிருக்கும் அடியார்கள், சீர் முயலும்படி-தமக்குச் சிறப்புண்டாகும் நெறியில் முயலும் வண் ணம், வாழ் திருச்செந்தூர் முருகா-வாழ்கின்ற திருச்செந்தூர் முருகனே, முத்தம் தருக-முத்தம் தருவாயாக, மொழியும் சம யம் அனைத்தினுக்கும் முதல்வா-உலகத்தார் சொல்லும் மதங் களுக்கெல்லாம் தலைவனே, முத்தம் தருக-முத்தம் தருவாயாக.

இச்செய்யுள் சொல்லணிகளில் ஒருவகையாகிய இறுதி மடக்கு அமையப்பெற்றுள்ளது. மடக்கப்பெற்ற சொற்றொடர் களிற் சில இயல்நெறியாற் பொருள் புலப்படுவனவாகவும் சில

திரிநெறியாற் பொருள் புலப்படுவனவாகவும் உள்ளன. கதலி-வாழை, கதலி-கொடி, "கதலிகைக் கொடியும் காழூன்று விலோதமும்" என்பது மணிமேகலை. தேன்-வண்டு, தேன்-மது; தேனினிரை என்ற தொடர் தேனுவின் நிரை என்று பிரிபட்டுப் பசுக்களின் கூட்டம் என்று பொருள் செய்தற்கும் இடந்தரும். கனகவெயில்-பொன்னிறமான வெயில், கல் நக எயில்-கல்மலையால் அமைந்த அரண், நகம்-அசையாதது மலை, எயில்-அரண், இமம்-பனி, ஓதிமம்-அன்னம், கட்கடையார் - கண்களையுடைய கடைசியர், கடைக்கண்களையுடையவர்கள் என்று இரு பொருள் தரும், அடையார்-அடங்கார்.

46 தொழுதுந் துதித்துந் துயரகற்றிச்
சுரருக் கிறையுஞ் சுரருமுடன்
சூழ்ந்த கடம்பா டவியிலுறை
சொக்கக் கடவு ளைமூன்று
பொழுதும் பரவி யெழுத்துச்சொற்
போலப் பொருளும் புகறியெனப்
புகலு மாறஞ் சிரட்டி திணைப்
பொருட்சூத் திரத்தின் பொருண்மயங்கா
தெழுதும் பனுவற் பாணன்முத
லேழேழ் பெருமைக் கவிப்புலவ
ரிதயங் களிக்க விருப்பமுட
னிறையோன் பொருட்குப் பொருள்விரித்து
முழுதும் பகர்ந்த கனிவாயான்
முருகா முத்தந் தருகவே
மொழியுஞ் சமய மனைத்தினுக்கு
முதல்வா முத்தந் தருகவே.

(இ-ள்) தொழுதும் துதித்தும்-வணங்கியும் பரவியும், துயர் அகற்றி-தமது துயரத்தைப் போக்கிக்கொண்டு, சுரருக்கிறையும்-தேவேந்திரனும், சுரரும்-தேவர்களும், உடன் சூழ்ந்த-ஏககாலத்திலே பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்த, கடம்பாடவியில் உறை-கடம்பவனத்தின் கோயில்கொண்ட, சொக்கக் கடவுள் தனை-சொக்கநாதப் பெருமானை, மூன்று பொழுதும் பரவி--முக்காலங்களில் பல நாட் புகழ்ந்து போற்றி, எழுத்து சொல் போல-எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் (வழங்குவன) போல, பொருளும் புகறி என-பொருளதிகாரமும் சொல்லி யருள்வாய் என்று பாண்டிய மன்னன் வேண்டிக்கொண்டதற் கிணங்க, புகலும்-இறையனார் அருளிச் செய்த, ஆறு அஞ்ச இரட்டி--அறுபது, திணைப்பொருட் சூத்திரத்தின்-அகத்திணைப் பொருளைப்பற்றிய சூத்திரங்களின், பொருள் மயங்காது-மெய்யானபொருள் மயங்கா வண்ணம், எழுதும் - உரை இயற்றிய, பரணன் முதல் - பரணர் முதலிய, எழேழ் - நாற்பத்தொன்பதின்மராகிய, பெருமைக் கவிப்புலவர்-பெருமை மிக்க தமிழ்ப்புலவர்கள், இதயம் களிக்க-மனம் களிகூறும்படி, விருப்பமுடன் - விருப்பத்தோடு, இறையோன் பொருட்கு-இறையனார் அருளிய அகப்பொருள் நூலுக்கு, பொருள் விரித்து - பொருளை விளக்கி, முழுதும் பகர்ந்த - முழுவதும் கூறியருளிய, கனிவாயால்--அழகிய வாயால், முருகா முத்தம் தருகவே-முருகப்பிரானே முத்தம் தருவாயாக. மொழியும் சமயம் அனைத்தினுக்கும் முதல்வா முத்தம் தருக.

இச் செய்யுளில் இறையனார் களவியலுக்கு உறை கண்ட வரலாறு முருகன் பெருமையை விளக்கத்தக்க வண்ணம் எடுத்தாளப்பட்டுளது. முருகன் உருத்திரசருமனாக, காரணிகனாக இருந்து கேட்டான் என்பது நக்கீரர் கூறும் செய்தியாம் ஆயினும், இச் செய்யுளில் உரை 'முழுதும் பகர்ந்த கனிவாய்' என்று பரவி யிருப்பது கவனிக்கத்தக்கது. இவ்வரலாற்றை இறையனார் களவியல் உரையாசிரியர் கூறும் வண்ணமே இங்கு எடுத்துரைப்போம்.

"அக்காலத்துப் பாண்டியனாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றது. செல்லப் பசி கடுகுதலும் அரசன் சிட்டரையெல்லாங் கூவி "வம்மின் யான் உங்களைப் புறந்தரகில்லேன், என் தேயம் பெரிதும் வருந்துகின்றது; நீயிர் போய் நுமக்கறிந்தவாறு புக்கு நாடு நாடாயின ஞான்று என்னையுள்ளி வம்மின்" என்றான். என, அரசனை விடுத்து எல்லாரும் போயின பின்றைக் கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது, கழிந்த பின்னர் நாடு மலிய மழை பெய்தது. பெய்த பின்றை அரசன் இனி நாடு நாடாயிற்றாகலின் நூல் வல்லாரைக் கொணர்கவென்று எல்லாப் பக்கமும் ஆட் போக்க எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலேமென்று வந்தார். வர, அரசனும் புடைபடக்கவன்று "என்னை? எழுத்தும் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமெனின் இவை பெற்றும் பெற்றிலேம்." எனச் சொல்லா நிற்ப மதுரை ஆலவாயினழனிறக் கடவுள் சிந்திப்பான்: "என்னை பாவம்! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று. அதுதானும் ஞானத்திடைய தாகலான், யாம் அதனைத் தீர்க்கற்பாலம்" என்று இவ் வறுபது சூத்திரத்தையும் செய்து மூன்று செப்பிதழகத்தெழுதிப் பீடத்தின் கீழிட்டான். இட்ட பிற்றை ஞான்று தேவர் குலம் வழிபடுவான் தேவர் கோட்டத்தை எங்குந் துடைத்து நீர் தெளித்துப் பூவிட்டுப் பீடத்தின் கீழ்ப் பண்டென்றும் அலகிடாதான் அன்று தெய்வத் தவக்குறிப்பினான் அலகிடுவனென்று உள்ளங் குளிர அலகிட்டான். இட்டாற்கு அவ்வலகினோடும் இதழ் போந்தன. போதரக்கொண்டு போந்து நோக்கினாற்கு வாய்ப்புடைத்தாயிற்றோர் பொருளதிகாரமாய்க் காட்டிற்று. காட்டப் பார்ப்பான் சிந்திப்பான்: அரசன் பொருளதிகாரம் இன்மையிற் கவல்கின்றான் என்பது பட்டுச் செல்லா நின்றதுணர்ந்து நம் பெருமான் அருளிச்செய்தானாகும்" என்று தன் அகம்புகாதே கோயிற்றலைக்கடைச் சென்று நின்று கடைகாப்பார்க் குணர்த்தக் கடைகாப்பார் அரசற் குணர்த்த அரசன் புகுதருகவென்று

பார்ப்பானைக் கூவச்சென்று, புக்குக்காட்டக் கொண்டு நோக்கி, "இது பொருளதிகாரம்! நம்பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச்செய்தானாகற் பாலது." என்று அத்திசை நோக்கித் தொழுதுகொண்டு நின்று சங்கத்தாரைக் கூவுவித்து "நம்பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச்செய்த பொருளதிகாரம்! இதனைக்கொண்டு போய்ப் பொருள் காண்மின்" என அவர்கள் அதனைக்கொண்டுபோய்க் கன்மாப் பலகை ஏறியிருந் தாராய்வுழி எல்லாருந் தாந்தாம் உரைத்த உரையே நன்றென்று சிலநாளெல்லாஞ் சென்றன; செல்ல நாம் இங்ஙனம் எத்துணை யுரைப்பினும் ஒருதலைப்படாது; நாம் அரசனுழைச்சென்று நமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டும் என்று கொண்டு போந்து அவனாற் பொருளெனப்பட்டது பொருளாய் அன்றெனப்பட்டது அன்றாய் ஒழியக் காண்டுமென, எல்லாரும் ஒருப்பட்டு அரசனுழைச் சென்றார். செல்ல அரசனும் எதிர் எழுந்து சென்று "என்னை நூற்குப் பொருள் கண்டீரோ?" என "அது காணுமாறு எமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டும்" எனப் "போமின், நமக்கோர் காரணிகனை எங்ஙனம் நாடுவேன் நீயிர் நாற்பத்தொன்பதின்மராயிற்று, நுமக்கு நிகராவார் ஒருவர் இம்மையினின்றே" என்று அரசன் சொல்லப் போந்து பின்னையும் கன்மாப்பலகை ஏறியிருந்து "அரசனும் இது சொல்லினான் யாங் காரணிகனைப் பெறுமாறு என்னை கொலென்று சிந்தித்திருப்புழிச் சூத்திரஞ் செய்தான் ஆலவாயின விர்சடைக் கடவுளன்றே! அவனையே காரணிகனையுந் தரல்வேண்டுமென்று சென்று வரங்கிடத்தும்" என்று சென்று வரங்கிடப்ப, இடையாமத்து "இவ்வூர் உப்பூரி குடிகிழார் மகனாவான் உருத்திர சன்மன் என்பான் பைங்கண்ணன் புன்மயிரன் ஐயாட்டைப் பிராயத்தான் ஒரு மூங்கைப் பிள்ளையுளன். அவனை அன்னனென்றிகழாது கொண்டு போந்து ஆசன மேலிரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைத்தாற் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்கும் மெய்யாயின உரை கேட்டவிடத்து; மெய்யல்லா உரை கேட்டவிடத்து வாளாவிருக்கும்; அவன் குமார தெய்வம்; அங்கோர் சாபத்தினாற்றோன்றினான்." என முக்காலிசைத்த குரல் எல்லார்க்கும் உடன்பாடாயிற்றாக,

எழுந்திருந்து தேவர் குலத்தை வலங்கொண்டு போந்து உப்பூரி குடி கிழாருழைச் சங்கமெல்லாஞ் சென்று இவ்வார்த்தையெல் லாஞ் சொல்லி, ஐயனுவான் உருத்திர சன்மனைத் தரல்வேண்டு மென்று வேண்டிக்கொடு போந்து வெளியதுடீஇ வெண்பூச் சூட்டி வெண்சாந்தணிந்து கன்மாப்பலகை யேற்றி இரீஇக் கீழிருந்து சூத்திரப்பொருளுரைப்ப எல்லாரும் முறையே உரைப் பக் கேட்டு வாளாவிருந்து மதுரை வாளா மருதனிள நாகனுர் உரைத்த விடத்து ஒரோவழிக் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் நிறுத்திப் பின்னர்க் கணக்காயனுர் மகனுர் நக்கீரனுர் உரைத்த விடத்துப் பதந்தொறுங் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருந்தான். இருப்ப ஆர்ப்பெடுத்து மெய்யுரை பெற்ரும் இந் நூற்கென்ருர். அதனுல் உப்பூரிகுடிகிழார் மகனுவான் உருத்திர சன்மனுவான் செய்தது இந்நூற் குரை யென்பாருமுளர். அவர் செய்திலர் மெய்யுரை கேட்டார் என்க. மதுரை ஆலவாயிற் பெருமானடிகளாற் செய்யப்பட்ட நூற்கு நக்கீரனுரால் உரை கண்டு, குமார சுவாமியாற் கேட்கப்பட்டதென்க.''

இம்மேற்கோள் சிறிது நீண்டுவிட்டதாயினும் 'தொழுதுந் துதித்தும்' என்று தொடங்கும் செய்யுளில் உள்ள வரலாற்றுப் பகுதிக்கு இதுவே பூர்வீக ஆதாரமாதலால் முன்ஞேர் மொழிந்த வண்ணமே இங்கு எடுத்துக் காட்டப்பட்டது. முருகன் உரை பகர்ந்தான் என்பது உபசார வழக்காகும்.

47 கடு நடைச்சிந் துரம ருப்பின்
கதிர்கொண் முத்துஞ் சரவைநீள்
கடல ளிக்கும் பணில முத்துங்
கழையின் முத்துங் காடுவா
னுடுமு கட்டம் புயல்க ருக்கொண்
டுமிழு முத்தங் கருகரே
ஞெழுகு பொற்பங் கயம டற்றந்
தொளிரு முத்தந் திருகல்காண்

படுக ரைக்குண் டகழி நத்தின்
பரிய முத்தந் தெரியவே
பரவை யெற்றுந் திரைகொ ழிக்கும்
படியின் முத்தஞ் சிறுமகார்
கொடுப ரப்பும் பதிபு ரக்குங்
குமர முத்தந் தருகவே
குறுமு னிக்குந் தமிழு ரைக்குங்
குமர முத்தந் தருகவே.

(இ-ள்) கடுநடை-விரைந்து நடக்கும் இயல்புடைய, சிந்துரம் மருப்பின்-யானையின் கொம்பிலே தோன்றுகிற, கதிர்கொள் முத்தும்-ஒளியுள்ள முத்து வகையும், சரவை-சரவை என்ற குற்றம் உள்ளது. நீள்-நீண்ட, கடல் அளிக்கும் - கடல் தருகின்ற, பணில முத்தும்-சங்க முத்தும், கழையின் முத்தும்-கரும்பின் முத்தும், கரடு-கரடு என்னும் குற்றம் உள்ளது, வான்-ஆகாய வீதியில், உடு முகடு அம்புயல் - நக்ஷத்திர மண்டலத்தில் ஓடுகிற அழகிய மேகங்கள், கருக்கொண்டு - நீருண்டு, உமிழும் முத்தம் கருகல்-சிந்துகிற முத்துக்கள் கருகல் என்ற குற்றமுள்ளவையாம், தேன் ஒழுகு-தேன் ஒழுகுகின்ற, பொன் பங்கயமடல்-பொன் னிறமான தாமரை யிதழ்கள், தந்தொளிரு முத்தம்-தந்து ஒளி வீசும் முத்தங்கள், திருகல்-திருகல் என்ற குற்றங்கள் உள்ளவை, படுகரை-இயல்பாய் அமைந்த கரையையுடைய, குண்டு அகழி-ஆழ்ந்த கடலாகிய அகழியிலே விளைந்த, நத்தின் பரிய முத்தம்-சங்கின் பெரிய முத்தங்கள், தெரிய-புலப்பட, பரவை எற்றும்-அக்கடல் கரையோடு மோதுகிற, திரைகொழிக்கும் - அலைகள் கொழிக்கிற, படியின் முத்தம் - படிக்கணக்காகவுள்ள முத்துக்களை, சிறுமகார் கொடுபரப்பும்-சிறு குழவியர் எடுத்துக்கொண்டு பரப்புகின்ற, பதிபுரக்கும் - திருச்செந்தூர்த் திருநகரை ஆண்டருளுகின்ற, குமர-முருகப்பெருமானே, முத்தம் தருகவே-முத்தம் தருவாய், குறுமுனிக்கும் - அகத்திய முனிவர்க்கும், தமிழ் உரைக்கும்-தமிழ் இலக்கணம் உரைத்தருளிய, குமர முத்தம் தருகவே-குமரவேளே முத்தம் தருவாய்.

கடுநடை-உரிச்சொற்றொடர், சரவை, கரடு கருகல், திருகல் என்பன முத்தின் குற்றவகைகள் இக்குற்றங்கள். முறையே யானை மருப்பு முத்திலும், சங்க முத்திலும் கழை முத்திலும், புயல் முத்திலும், பங்கய முத்திலும் உளவென்றும் இக்குறைகள் சிறிதேனும் இல்லாத, உனது வாய் முத்தமே வேண்டும் என்றும் கூறினர். 'முருகன் குறுமுனிக்குத் தமிழ் உரைத்தான்' என்பது முருகன் அகத்தியர்க்குத் தமிழறிவுறுத்தனன் என வழங்கும் பழய வரலாற்றையாகும். தொல்காப்பியப்பாயிர விருத்தியிலே சிவஞான முனிவர் வேங்கடம் வடக்கெல்லையாக உரைக்கப்பட்டதற்குக் காரணம், அகத்தியர்க்குத் தமிழ் அருளிய முருகவேள்வரைப்பாதலாம் என்று கூறுவர்.

48 பருவ முற்றுங் குடவ யிற்றொண்
பணில மொய்க்குந் துறையெலாம்
பருமு ரட்செங் கயல்கு திக்கும்
பலப டத்தெண் டிரைமுநீர்
பொருது குத்துந் திடர னைத்தும்
புறவு மொய்க்கும் புறவுசேர்
புளின வெற்பெங் கணுநி ரைக்கும்
புளின மொய்க்குங் குவளைவாய்
அரும டற்கண் டினமெ னச்சென்
றளிகண் மொய்க்கும் புதியகூ
லலவன் மொய்க்குங் குழிவ ழிச்சென்
றலைகொ ழிக்குங் கரையெலாங்
குருகு மொய்க்கும் பதிபு ரக்குங்
குமர முத்தந் தருகவே
குறுமு னிக்குந் தமிழு ரைக்குங்
குமர முத்தந் தருகவே.

(இ-ள்) பருவம் முற்றும்-பருவம் முதிர்ந்த, குடம்வயிறு-குடம் போலும் வயிற்றையுடைய, ஒள் பணிலம் மொய்க்கும் துறை எலாம்-ஒளி பொருந்திய சங்கங்கள் மொய்த்திருக்கும் துறைகளிலெல்லாம், பருமுரண் செங்கயல் குதிக்கும்-பெரிய உருவமுள்ள வலிமைமிக்க செந்நிறமான கயல்மீன்கள் குதிக்கும், பலபட-பலபடியாக, தெண்திரை-தெளிந்த அலைகள், முந்நீர் பொருதுகுத்தும்-கடலிலே மோதிக் கரையிலே குத்தும், திடர் அனைத்தும் - மேடுகளிளெல்லாம், புறவுமொய்க்கும் - புறாக்கள் நெருங்கி விளையாடும், புறவுசேர் - காடடு நிலங்களின் ஓரமாக வுள்ள, புளினதெற்பு எங்கணும்-மணல்மேடுகளாகிய குன்றுகளிலெல்லாம், நிரைக்கும்-வரிசை வரிசையாய் உள்ள, புளினம் மொய்க்கும் - பறவைக்கூட்டங்கள் கூடியிருக்கும், குவளைவாய் - குவளைச்செடியிற் பொருந்திய, அருமடற் கண்டு-அரியமலரிதழ் களைக் கண்டு-இனமென-தமது இனம் என்று கருதி, சென்று-போய், அளிகள் மொய்க்கும்-வண்டுகள் மொய்க்கும், புதிய சூல்-புதிய கருவைத் தாங்கிய, அலவன்-நண்டுகள், மொய்க்கும்-மொய்த்திருக்கும், குழிவழிச் சென்று - குழிகளின் வழியே போய், அலைகொழிக்கும்-அலைகள் கொழிக்கின்ற, கரை எலாம்-கடற்கரைகளிலெல்லாம், குருகு மொய்க்கும் - நீர் நாரைகள் மிகுந்திருக்கும், பதிபுரக்கும்- திருச்செந்தினகரைக் காத்தருளுகின்ற குமர முத்தம் தருக, குறுமுனிக்கும் தமிழுரைக்கும் குமர முத்தம் தருக.

துறைகளில் கயல் குதிக்கும், திரைபொருது குத்தும், புறவு மொய்க்கும், புளின வெற்பு எங்கணும் புளினம் மொய்க்கும், அளிகள் மொய்க்கும் அலவன் மொய்க்கும் குழிவழி அலை கொழிக்கும் கரையெலாம் குருகுமொய்க்கும் பதி என வினை முடிவு செய்க.

புறவு-முல்லை நிலம், காட்டு நிலம்
புறவு-புறா, பறவை விசேடம்,
புளினம்-மணல் மேடு
புள் இனம்-பறவையினங்கள்.

49. பையரவி னுச்சிகுழி யப்பொருங் குண்டகட்
படுகடற் பணில முத்தப்
பார்வையா லுஞ்சிறிது பாரோமி தன்றிப்
பசுங்கழை வெடித்த முத்தம்
செய்யசிந் தையினுமிது வேணுமென் றொரு
சிந்தியோ முத்தி வட்டத் [பொழுது
திரைமுழங் கக்கொழுந் திங்கள்வட் டக்குடைச்
செழு நிழற் சம்பராரி
யெய்யுமலர் வாளியை யெடுத்துத் தெரித்துநா
ணிறுகப் பிணித்த வல்வில்
லீன்றகுளிர் முத்தத்தை முத்தமென் றணுகோ
மிதழ்க்கமல முகையு டைக்குந்
துய்யமணி முத்தந் தனைத்தொடே முன்னுடைய
துகிரில்விளை முத்த மருளே
தோகைமே காரவா கனசெந்தி லாயுனது
துகிரில்விளை முத்த மருளே.

(இ-ள்) பை அரவின் - படத்தையுடைய ஆதிசேடன் என்னும் பாம்பின், உச்சி குழிய-உச்சி குழியும்படி, பொரும் - மோதுகிற, குண்டு அகழ்-ஆழ்ந்த பள்ளங்களையுடைய, படுகடல் - இயற்கையில் அமைந்த கடலிலே தோன்றுகிற, பணிலம் முத்தம்-சங்க முத்துக்களை, பார்வையாலும்-கண்களாலும், சிறிது பாரோம்-சற்றேனும் பார்க்க விரும்போம், இது அன்றி-இது அல்லாமல், பசுங்கழை-பசுமையான மூங்கிலிலிருந்து, வெடித்த முத்தம்-வெடித்த முத்துக்களை, செய்யசிந்தையினும்-செம்மையான நெறியிற் செல்லும் எமது சிந்தையினாலும், இதுவேணும் என்று-இது எமக்கு வேண்டுமென்று, ஒருபொழுது சிந்தியோம் - ஒருபொழுதும் நினையோம், உததி வட்டத்திரை முழங்க - கடலில் எழுந்த வளைந்த உருவமுள்ள அலைகள் முழங்க, கொழும் திங்கள் வட்டக்

குடை - கொழுவிய திங்கள் என்னும் வட்டக்குடை தருகின்ற, செழுநிழல்-செழித்த நிழலையுடைய, சம்பராரி- மன்மதன், எய்யும்-தான் எய்கிற, மலர் வாளியை எடுத்துத் தெரித்து-மலர் அம்புகளைத் தெரிந்து எடுத்து எய்யும்பொருட்டு, நாண் இறுகப் பிணித்த-நாணால் இறுகக்கட்டிய, வல்வில்-வலிய கருப்புவில், ஈன்ற குளிர் முத்தத்தை-ஈன்ற குளிர்ந்த முத்துக் களை, முத்தம் என்று அணுகோம்-முத்து என்று எண்ணி நெருங் கோம், இதழ்க்கமலமுகை உடைக்கும் - இதழ்களையுடைய தாமரை மொட்டு மலர்ந்து வெளிப்படுகின்ற, துய்யமணி முத் தம் தனை-பரிசுத்தமான முத்துமணியை, தொடேம்-தொடமாட் டோம், உன்னுடைய துகிரில் விளை முத்தம் அருளே-உனது பவ ளம்போன்ற வாயிலிருந்து பிறக்கும் முத்தத்தை அருள்வாயாக, தோகை-தோகையை யுடைய, மேகார வாகன - மயில்வாகன முடைய பெருமாளே, செந்திவாய் - திருச்செந்தில் முருகனே, உனது துகிரில் விளை முத்தம் அருள்.

கடற் பணில முத்தம் பாரோம்-பசுங்கழை வெடித்த முத் தம் வேண்டுமென்று சிந்தியோம், சம்பராரி வல்வில் முத்தம் முத்தமென்று அணுகோம், கமலமுத்தம் தொடோம் உனது துகிரில் விளை முத்தம் அருள்க. என்று வினை முடிவு செய்க. கடலின் ஆழத்தை நன்கு விளக்க, பையரவின் உச்சிகுழியப் பொருங்குண்டு அகழ் படுகடல் என்றார். மன்மதனுக்குரிய சின்னங்கள் சிலவற்றை விளக்கும் பொருட்டு, உததி வட்டத் திரை (முரசு) முழங்க. திங்கள் வட்டக்குடைச் செழுநிழல் சம்பராரி எய்யும் மலர் வாளியை எடுத்துத் தெரித்த நாண் இறு கப் பிணித்த வல்வில் என்று கூறினர். சம்பரன் என்னும் அவு ணனைக்கொன்ற காரணத்தால் மன்மதன் சம்பராரி எனப்பட் டான். மன்மதனுக்கு வில், கரும்பு; அம்பு, மலர்; நாண், வண்டு கள்; திங்கள், குடை; கடல், முரசு; என்ற உண்மை இங்கு விளக் கப்பட்டது. முருகனது திருவதாரத்தில் விளையும் முத்தத்தை உனது துகிரில் விளை முத்தம் அருள்-என்று கேட்டார், துகிர்- பவளம் இங்கு உருவகமாய் வாய் மலரைக் குறித்தது. மற்ற

முத்தங்கள் கேவலம் சங்கிலும், கழையிலும் கரும்பிலும் கமலத்திலும் பிறந்தவை. இம்முத்தமோ துகிரில் விளைந்தது. ஆகையால் இதுவே சிறந்தது என்று குறிப்பித்தவாறு. மேகாரவம்-மயில், மேக முழக்கம் கேட்டதும் மகிழ்ச்சிமிக்கு ஆடும் இயல்புடையதாதலால் மயில் இப்பெயர் பெற்றது. மேகாரவம் என்னும் தொடர்மொழி மேகாரம் எனச்செய்யுள் விகாரம் பெற்றுவந்தது.

50 இறுகல்கரு குதல்முரி விலட்சுமி புடாயமுள்
ளேறல்புகை யேறல் செம்ம
ணேறல்வெச் சந்திருகன் மத்தகக் குழிவன்றி
யிரவியொளி யிற்காரத்தன்
மறுவறுத கட்டிலோ ரத்திலுயர் தூக்கத்தின்
மன்னுமா தளைகவிர்ப்பு
மாந்தளிர் முயற்குருதி செவ்வரத் தங்கோப
மருவுமணி வகையளிப்பேர்
முறுகல்வளி யேறல்கல் லேறல்சிப் பிப்பத்து
முரிதறிரு குதல்சிவப்பு
முருந்திற் குருத்துச் செருந்துருவி யிடையாடி
மூரிகுதை வடிவொதுங்கல்
துறுமுகங் கக்கலொளி மட்கல்கர டென்னுத
துகிரில்விளை முத்தமருளே
தோகைமே காரவா கனசெந்தி லாயுனது
துகிரில்விளை முத்தமருளே.

(இ-ள்) இறுகல்-நெகிழ்ச்சிக் குறைவு, கருகுதல்-கறுத்திருப்பது, முரிவு-முரிந்திருப்பது, இலட்சுமி புடாயம்-ஒளிக்குறை, முள்ளேறல்—முள் ஏறியிருப்பது, புகையேறல்-புகை நிறம் படிந்திருப்பது, செம்மண் ஏறல்-செம்மண் படிந்திருப்பது, வெச்சம் திருகல்-வெச்சம் என்னும் குற்றம் திருகுதல் என்னும்

குற்றம், மத்தகக் குழிவு-தலைப்புறம் குழிந்திருப்பது, அன்றி-அல்லாமல், இரவி ஒளியிற் காத்தல்-சூரியன் ஒளியின்முன் தன் ஒளி மழுங்குதல், மறுவறு-குற்றமற்ற, தகட்டில் ஓரத்தில் உயர் தூக்கத்தில்-தகட்டுருவத்திலும் ஓரத்திலும் உயர்ந்தபகுதியிலும், மன்னு மாதளை கவிர்ப்பு-மாதளை முத்தின் நிறம் தோன்றுதல், மாந்தளிர்-மாந்தளிரின் நிறம் புலப்படுதல், முயற் குருதி-முயல் இரத்தத்தின் நிறம் தெரிதல், செவ்வரத்தம்-செந்நிற இரத்தம் போன்ற தோற்றம் உண்டாதல், கோபம்-இந்திர கோபப் பூச்சி போன்ற நிறம் இடையிடையே தோன்றுதல், மருவுமணி வகை யளிப்பேர்-பொருந்திய மணி வகைகளுக்கு உரிய குற்றமாகிய வண்டுபடிவு என்ற குற்றம், முறுகல்-முறுகுதல், வளியேறல் காற்றேறு, கல்லேறல் - கல்லேறு, சிப்பிப்பத்து- சிப்பி பற்றுதலால் உளதாகும்குற்றம், முருந்திற் குருத்து-மயிலிற கின் அடிக்குருத்துப் போன்ற தோற்றம், செருந்துருவி இடையாடி-செருந்து என்ற குற்றம் உருவிப்பாய்ந்து இடையிலே கலப்பது, மூரிகுதை-பெரிய குதையுண்டாதல், வடிவு ஒதுங்கல்-நல்ல வடிவம் அமையாமை, துறு முகம் கக்கல் ஒளிமட்கல் கரடு-துறுமுகம், கக்கல் ஒளிகுறைதல் கரடு என்ற குற்றங்கள், என்னுத-உள்ளவை என்று சொல்லப் படாத, துகிரில் விளைமுத்தம் அருளே-உனது பவளம் போன்ற வாய் மலரில் விளையும் முத்தம் தருவாய். தோகைமேகார வாகன செந்திலாய் உனது துகிரில் விளைமுத்தம் அருளே.

இச்செய்யுளில் முத்தங்களில் அமைகின்ற பலவகைக் குற்றங்களும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இவற்றைப்பற்றி விளக்கமாகக் கூறுகின்ற நூல்களைப் பயின்று அறிந்தோர்க் கன்றிப் பிறர்க்கு இவற்றின் உண்மை நன்கு விளங்குமாறில்லை. பொதுவாகச் சொற்போக்கைக்கொண்டு இச்செய்யுளுக்கு அறிதலாகும் பொருளே இங்கு விளக்கப்பட்டுளது. சிலப்பதிகாரத் தில் ஊர்காண் காதையிலே நவரத்தினங்களின் குணங் குறைகள் கூறப்படுவதுண்டு. அங்கு முத்தின் குற்றங்கள் இவை என

இங்குக் கூறியிருப்பது போல விளக்கமாகக் கூறப்படவில்லை. பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்தில் மாணிக்கம் விற்ற திருவிளையாடலில் இச்செய்தி சுருக்கமாகச் சொல்லப்பட்டது. ஆயினும் இங்கு விளங்கிய குற்ற வகைகள் அங்கும் விளக்கப்பட வில்லை. ஆதலால் இவற்றின் உண்மையை அறிந்தோர்வாய்க் கேட்டுணர்தலே சிறப்பாம்.

51 கோதிவரி வண்டுமது வுண்டுகுடி கொள்ளுமெங்
குழலுக் குடைந்து விண்ணிற்
குடிகொண்ட கொண்டற் குறுந்துளியி னித்திலக்
கோவையொரு கால் விரும்பேங்
காதிலுறும் வள்ளைமக ரக்குழை கடக்குமெங்
கண்ணுக் குடைந்து தொல்லைக்
கயத்திற் குளித்தசேல் வெண்டாள மென்னிலொரு
காலமுங் கருதி நயவேம்
போதிலுறு பசுமடற் பாளைமென் பூகம்
பொருந்துமெங் கந்தரத்தைப்
பொருவுறு வெள்வலம் புரியார மின்புறேம்
பொற்றோ டனக்குடைந்த
சோதிவேய் முத்தந் தனைத்தொடே நின்னுடைய
துகிரில்விளை முத்தமருளே
தோகைமே காரவா கனசெந்தி லாயுனது
துகிரில்விளை முத்தமருளே.

(இ-ள்) கோதி-நன்கு கோதப்பெற்று, வரிவண்டு--வரிகளை யுடைய வண்டுகள், மதுவுண்டு-தேனை உண்டு, குடிகொள்ளும்-குடிகொண்டு வாழ்கின்ற, எம் குழலுக்கு உடைந்து-எமது கருங் கூந்தலுக்குத் தோல்வியுற்று, விண்ணில்--விண்ணகத்தே, குடி கொண்ட-போய் வாழ்கின்ற, கொண்டல்-மேகத்தின், குறுந்துளி யின்-சிறு மழைத் துளிகளோடு வருகின்ற, நித்திலக்கோவை-

முத்துக்கோவையை, ஒருகால் விரும்பேம்-ஒருபோதும் விரும்போம், காதிலுறும் - எமது காதில் உள்ள, வள்ளை மகரக்குழை கடக்கும் - வள்ளை மலர்போன்ற மகரக் குழையின் மேற் பாய்கின்ற, எம் கண்ணுக்கு உடைந்து-எமது விழிகளுக்குத் தோல்வியுற்று, தொல்லைக்கயத்தில் குளித்த-பழமையான ஒரு குளத்தில் மூழ்கி மறைந்த, சேல்-மீனின் வயிற்றிலே தோன்றும், வெண்டாளம் என்னில்-வெண்முத்து என்னிலோ, ஒருகாலமும் கருதி நயவேம்-ஒருகாலமும் கருதி விரும்போம், போதில் உறு-உரிய காலத்திலே தோன்றுகிற, பசுமடல் பாளை - பசிய மடல்களை உடைய பாளைகளைக் கொண்ட, மென்பூகம்-மெல்லிய கமுகின் கழுத்தைப், பொருந்தும் எங்கந்தரத்தை--போன்றுள்ள எமது கழுத்தை, பொருவுறு - ஒப்பாகாத, வெள்வலம்புரி - வெள்ளிய வலம்புரிச் சங்கிலே தோன்றுகிற, ஆரம் - முத்தத்தை, இன்புறேம்-இன்பமுற விரும்பேம், பொற்றோள் தனக்கு உடைந்த-எமது அழகிய தோளுக்குத் தோற்ற, சோதிவேய் முத்தம் தனைத்தொடேம் - ஒளி மிக்க மூங்கில் முத்தத்தைத் தொடவும் மாட்டோம்,உனது துகிரில் விளைமுத்தம் அருள்,தோகை மேகாரவாகன செந்திலாய் உனது துகிரில் விளைமுத்தம் அருள்.

கொண்டல் முத்தம், கயல் முத்தம், வலம்புரி முத்தம், வேய்முத்தம் என்ற நான்கும் வேண்டேம் உனது துகிரில் விளைமுத்தம் அருள் என்று முருகனிடம் அன்புபூண்ட தலைவியர் கூறுவதுபோலக் கூறினர். அங்ஙனம் கூறுகையில் மற்ற நான்கு முத்தங்களுக்கும் ஒவ்வொரு குறைகூறி ஒரு குறையுமற்ற துகிரில் விளைமுத்தம் வேண்டினர்.

கொண்டல் எமது குழலுக்குடைந்து விண்ணிற் குடிகொண்டது. சேல் எம் கண்ணுக்குடைந்து கயத்திற் குளித்தது. வெள்வலம்புரி எம் கந்தரத்தைப் பொருவுறாது. வேய் எம் பொற்றோளுக்குடைந்தது. ஆதலால் யாம் இந்நான்கு இடங்களிலும் தோன்றும் முத்தங்களை மதியோம். எம்மையும் எம்

உள்ளத்தையும் கொள்ளைகொண்ட உனது துகிரில் விளைமுத்தத்தையே வேண்டுவோம் என்று தெரிவித்தனர்.

வள்ளை-காதுக்கு நிகர் எனப்படும் ஒரு கொடிமலர், பூகம்-கமுகு, கந்தரம்-கழுத்து, ஆரம்-முத்து.

---

## ஆறுவது
## வாரானைப் பருவம்.

---

தளர் நடை பயிலும் பருவத்தில் உள்ள குழந்தையை ஐவகைத்தாயரும் பிற உரிமையாளரும் வருக வருக என்று கை காட்டி அழைத்து நடப்பிக்கும் செய்தியை விளக்கும் பருவம் வாரானைப் பருவமாகும். இப்பருவத்துச் செய்யுட்கள் வருக என்ற வியங்கோள் முற்றைக்கொண்டு முடிவுபெறும். வாரானை என்பது வருதல் என்ற பொருள்தரும் தொழிற்பெயராம். வா+ரு+ஆனை. வா-பகுதி, ஆனை-தொழிற் பெயர் விகுதி, ரு-சாரியை-ஆனை என்ற விகுதி பெறும் தொழிற்பெயர் என்று இலக்கண நூல்களில் உதாரணமாய்க் காட்டப்பெறும் சொல் வாரானை என்பது ஒன்றே. முன்னுளிலே இவ்விகுதிபெற்ற வேறு தொழிற் பெயர்கள் இருந்திருக்கலாம். புதுமையாகப் படைத்து மொழிதற்கு உரிய சொல்லன்று ஆகையால் இத்தொழிற் பெயர் பண்டுமுதல் இன்றளவும் வழக்காற்றிலுள்ள அருஞ்சொல் என்றே கொள்ளத்தக்கதாகும். வருகைப் பருவத்திலே புலவர் பெருமக்கள் தமது பக்திச்சுவை விளங்கப் பாடும் செய்யுட்கள் பல உண்டு என்பதைப் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்கள் பலவற்றாலும் அறியலாம்.

52 மூரிப் பகட்டு வரிவாளை
முழங்கிக் குதிக்கக் கால்சாய்ந்து
முதிர விளைந்து சடைபின்னி
முடங்கும் பசுங்காய்க் குலைச்செந்நெல்
சேரிக் கருங்கை மள்ளர்குயந்
தீட்டி யரிந்த கொத்தினுக்குத்
தெண்முத் தளப்பச் சிறுகுடிலிற்
சேரக் கொடுபோ யவர்குவிப்ப
வேரிக் குவளைக் குழியில்வரி
வெண்சங் கினங்க ளீற்றுளைந்து
மேட்டி லுகுத்த பருமுத்தை
வெள்ளோ திமந்தன் முட்டையென
வாரிக் குவிக்குந் திருச்செந்தூர்
வடிவேன் முருகா வருகவே
வளரும் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

(இ-ள்) மூரிப்பகட்டு வரிவாளை - வரிகளையுடைய பெரிய ஆண் வாளை மீனானது, முழங்கிக் குதிக்க-பெரு முழக்கத்தோடு குதித்தலால், கால் சாய்ந்து-அடிசாய்ந்து, முதிர விளைந்து-முற்றி விளைந்து, சடைபின்னி-சடைபோலப் பின்னி, முடங்கும்-வளைந்திருக்கிற, பசுங்காய்-பசிய காய்களையுடைய, குலைச்செந்நெல் - குலைகுலையாய் வளர்ந்த செந்நெற் கதிரை, சேரிக் கருங்கைமள்ளர்-சேரியில் வாழும் பெரிய கைகளையுடைய மள்ளர்கள், குயம் தீட்டி - அரிவாளைத் தீட்டி, அரிந்த கொத்தினுக்கு - அறுத்துக் குவிந்த குவியலுக்கு, தெள்முத்து அளப்ப-கூலியாகத் தெளிவான ஒளியையுடைய முத்தை அளப்ப, சிறுகுடிலில் - தமது சிறிய குடிசைகளிலே, சேரக் கொடுபோய்-ஒருசேர எடுத்துப் போய், அவர் குவிப்ப-அவர்கள் குவிக்கவும், வேரிக் குவளைக் குழியில்-மணம் பொருந்திய குவளை மலர்கள் மலரும் குழிகளிலே,

வரிவெண் சங்கினங்கள்-வரிகளையுடைய வெள்ளிய சங்கு இனங்கள், ஈற்றுளைந்து-கருவுற்று வருந்தி, மேட்டில் உகுத்த - மேட்டிலே விடுத்துச்சென்ற, பருமுத்தை-பெரிய முத்துக்களை, வெள்ளோதிமம்-வெண்ணிறமுள்ள அன்னப் பறவை, தன் முட்டை என-தனது முட்டை என்று எண்ணி, வாரிக்குவிக்கும்-வாரிக் குவிக்கின்ற,திருச்செந்தூர்-திருச்செந்தூர் திருப்பதியில் கோயில் கொண்ட, வடிவேல் முருகா வருக-கூரிய வேல்தாங்கிய முருகப் பிரானே வருக. வளரும் களபக் குரும்பை முலை-வளர்கின்ற களபம் அணிந்த குரும்பைபோன்ற தனங்களையுடைய, வள்ளி கணவா வருக-வள்ளி தலைவனே வருக.

மள்ளர் நெல் அரிந்த கொத்தினுக்கு முத்து அளப்ப அவர் சிறு குடிலிற் கொடுபோய்க் குளிக்கக் குவளைக்குழியில் வெண் சங்கினங்கள் ஈன்று மேட்டில் உகுத்த பரு முத்தை வெள்ளோதிமம் தன் முட்டையென வாரிக் குவிக்கும் திருச்செந்தூர் என வினை முடிவு செய்க. சங்கின் முத்தை ஓதிமம் தன் முட்டையெனக் கருதும் என்பது நீர் நிலவளத்தை நன்கு விளக்கும் பொருட்டாம். குயம்-அரிவாள், ஓதிமம்-அன்னம், களபம்-கலவைச் சாந்து, வடி-கூர்மை உரிச்சொல், ஈற்றுளைதல் - பிரசவ வேதனை.

53 புள்ள மரிந்த கதிர்ச்செந்நெற்
போரிற் பகடு தனைநெருங்கப்
பூட்டி யடித்து வைகளைந்து
போதக் குவித்த பொலிக்குவையை
வீள்ள வரிய குடகாற்று
வீசப் பதடி தனைநீக்கி
வெள்ளிக் கிரிபோற் கனகவட
மேரு கிரிபோன் மிகத்தூற்றிக்

கள்ள மெறியுங் கருங்கடைக்கட்
கடைசி பிரித்த மணிமுத்தைக்
களத்தி லெறிய வம்முத்தைக்
கண்டு குடித்த கட்குவிலை
மள்ள ரளக்குந் திருச்செந்தூர்
வடிவேன் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

(இ-ள்) புள்ளம் அரிந்த-அரிவாளால் அரிந்த, கதிர்ச் செந் நெற்போரில்-செந்நெல்லின் கதிரைக்குவித்த போரிலே, பகடு தனை-காளைகளை, நெருங்கப்பூட்டி - நெருக்கமாகப் பிணைத்து, அடித்து-ஓட்டி, வைகளைந்து-வைக்கோலைப் பிரித்து, போதக் குவித்த-நன்கு குவித்த, பொலிக்குவையை - நெற்பொலிக் குவியலை, விள்ள அரிய - சொல்வதற்கரிய, குடகாற்று வீச - மேல் காற்று வீச, பதடிதனை நீக்கி-பதர்போகச் செய்து, வெள்ளிக்கிரி போல்-வெள்ளிமலை போலவும், கனகவட மேருகிரிபோல்-பொன் மயமாய் வடதிசையிலுள்ள மகாமேரு மலைபோலவும், மிகத் தூற்றி-மிகவும் காற்றுறைப்பத் தூற்றி, கள்ளம் எறியும்-உள்ளத்தில் உள்ள கள்ளத்தை வெளிப்படுத்துகிற, கருங்கடைக்கண்-கரிய கடைக்கண்களையுடைய, கடைசி-உழத்தி, பிரித்த மணி முத்தை-நெல்லிலிருந்து பிரித்தெடுத்த அழகிய முத்துமணிகளை, களத்தில் எறிய-களத்திலே எறிந்துவிட்டுப்போக, அம்முத்தைக் கண்டு - அந்த முத்தைப்பார்த்து, மள்ளர் - உழவர்கள், குடித்த கட்கு-தாம்குடித்த கள்ளின்பொருட்டு, விலை அளக்கும் - விலையாக அளந்து கொடுக்கிற, திருச்செந்தூர் வடிவேல்முருகா வருக, வளருங் களபக் குரும்பைமுலை வள்ளி கணவா வருக.

நெற்போரில் பகடுதனைப் பூட்டியடித்து வைகளைந்து போதக் குவித்த பொலிக்குவையக் குடகாற்று வீசப் பதடிநீங்கி மிகத் தூற்றி வெள்ளிக்கிரிபோல் மேருகிரிபோல் கடைசியர் பிரித்த

முத்தைக் களத்திலெறிய அம்முத்தைக் குடித்த கட்கு விலை மள்ளர் அளக்கும் திருச்செந்தூர் என்று வினை முடிவு செய்க. புள்ளம்-அறிவாள், போர்-நெற்போர், பகடு-காளை, வை - வைக்கோல், பொலிக்குவை-நெற்பொலிக் குவை, பொலியும்படி குவித்தலாற் பொலி எனப்பட்டது. குடக்கு+காற்று-குடகாற்று, 'குடக்கு-மேற்கு, பதடி-பதர், கள்ளம்-கபடம் களம்-நெற்களம், மள்ளர்-உழவர்.

54 தேட வரிய மணியரைஞாண்
சேர்க்க வருக விரற்காழி
செறிக்க வருக திலகநுதல்
தீட்ட வருக மறுகில்விளை
யாட வருக மடியிலெடுத்
தணைக்க வருக புதுப்பனிநீ
ராட்ட வருக நெறித்தமுலை
யமுதம் பருக வருகமுத்தம்
சூட வருக வுடற்புழுதி
துடைக்க வருக வொருமாற்றம்
சொல்ல வருக தள்ளிநடை
தோன்ற வருக சோதிமணி
மாட நெருங்குந் திருச்செந்தூர்
வடிவேன் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

(இ-ள்) தேட அரிய-தேடிப் பெறுதற்கு அரியவையாகிய, மணி அரைஞாண்-நவமணிகள் அழுத்திய அரைஞாணை, சேர்க்க வருக-அணிவிக்கும்பொருட்டு வருக, விரற்கு ஆழிசெறிக்கவருக-உனது திருவிரல்களிலே மோதிரம் அணிவிக்கும் பொருட்டு

வருக, திலகம் நுதல் தீட்ட வருக - திருநுதற்கண் திருநீறும் கஸ்தூரி திலகமும் தீட்டும்பொருட்டு வருக, மறுகில் விளையாட வருக-வீதியில் விளையாடும் பொருட்டு வருக, மடியில் எடுத்து அணைக்க வருக-மடியில் எடுத்து மார்போடு அணைத்துக்கொள்ளும்பொருட்டு வருக, புதுப்பனிநீர் ஆட்ட வருக-புதுமையாகிய குளிர்ந்த தண்ணீரில் திருமஞ்சன மாட்டும் பொருட்டு வருக, நெறித்த முலையமுதம் பருக வருக-நெறித்துவைத்துள்ள முலைப் பால் பருகும்பொருட்டு வருக, முத்தம்சூட வருக-முத்தாபரணங் கள் சூடும்பொருட்டு வருக, உடற்புழுதி துடைக்க வருக- உனது உடம்பிற் படிந்த புழுதியைத் துடைக்கும் பொருட்டு வருக, ஒரு மாற்றம் சொல்ல வருக-மழலை மொழி ஒன்று மொழியும் பொருட்டு வருக, தள்ளிநடை தோன்ற வருக-தளர்நடை தோன்ற நடந்து வருக, சோதி-ஒளிமிக்க, மணிமாடம் நெருங்கும் - மணிகள் அழுத்திய மாடங்கள் நெருங்கும், திருச்செந்தூர் வடிவேல் முருகா வருக, வளரும் களபக் குரும்பைமுலை வள்ளி கணவா வருக.

புதுப்பனிநீர் என்பதற்குப் புதுமையும் மணமும் பொருந்திய பனிநீர் என்றும் பொருள் கூறலாம். பனிநீர் இந்நாளிற் பன்னீர் என்று வழங்குகின்றது. முத்தம்சூட வருக என்பதற்கு முத்தம் கொள்ளவும் கொடுக்கவும் வருக என்றும் பொருள் கூறலாம். நெறித்த முலைபமுதம் என்பது குழவியர்க்குப் பாலூட்டு முன்பு தாயர் தம்கையால் முலையைச் சிறிதுபிசைந்து முதலில் வரும் பாலைச் சிந்திவிட்டுக் குழவியர் மலர்வாய்க்கேற்ற வண்ணம் மென்மையுறச் செய்து பின்பு கொடுக்கும் வழக்காற்றை விளக்குவதாம். தெறித்த என்றும் பாடபேதம் கொள்ளலாம், தெறித்தல்-முதலில் வரும் பாலைத் தெறித்துச் சுத்தம் செய்துவைத்தல், தள்ளிநடை தோன்றல்-குழவியர் நடையின் இயல்பை விளக்குவது. வினைமுடிவு எளிதில் விளங்குவதே.

55 இறுகு மரைஞா ணினிப்பூட்டே
னிலங்கு மகர குண்டலத்தை
யெடுத்துக் குழையின் மீதணியே
னினியுன் முகத்துக் கேற்கவொரு
சிறுகுந் திலகந் தனைத்தீட்டேன்
றிருக்கண் மலர்க்கு மையெழுதேன்
செம்பொற் கமலச் சீறடிக்குச்
சிலம்பு திருத்தே னெறித்துவிம்மி
முறுகு முலைப்பா லினிதூட்டேன்
முகம்பார்த் திருந்து மொழிபகரேன்
முருகா வருக சிவசமய
முதல்வா வருக திரைகொழித்து
மறுகு மலைவாய்க் கரைசேர்ந்த
மழலைச் சிறுவா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

(இ-ள்) இறுகும் அரைஞாண் இனிப்பூட்டேன் - உனது இடையில் இறுகுகிற அரைஞாணை இனிமேல் யான் பூட்டேன், இலங்கும் மகர குண்டலத்தை-விளங்குகிற மகரமீன் உருவமாய் அமைத்த குண்டலத்தை, எடுத்துக் குழையின் மீது அணியேன்- எடுத்து உனது காதின்மேல் அணியேன், இனி உன் முகத்துக் கேற்க-இனிமேல் உன் முகத்துக்குப் பொருந்துமாறு, ஒரு சிறுகும் திலகம் தனைத்தீட்டேன்-ஒரு சிறிய திலகத்தை தீட்டுவே னல்லேன், திருக்கண் மலர்க்கு-உனது அழகிய மலர் போன்ற விழிகளுக்கு, மை எழுதேன்-அஞ்சனம் தீட்டேன், செம்பொற் கமலச் சீறடிக்கு-செம்பொன்னிறமுள்ள தாமரை மலர்போன்ற சிறிய அடிகளுக்கு, சிலம்பு திருத்தேன்-சிலம்பு நலமுற அணிவி யேன், செறித்து விம்மி முறுகும்-செறிக்கப்பெற்றுப் பூரித்துப் பால் பீறிடுகின்ற, முலைப்பால் இனிது ஊட்டேன் - முலையின்

பாலை இனிது உண்பிக்கத் துணியேன், முகம்பார்த்து இருந்து மொழிபகரேன்-உனது முகத்தைப்பார்த்து இருந்துகொண்டு நான் ஏதும் பேசத்துணியேன், முருகா வருக-முருகப்பிரானே வருக, சிவசமய முதல்வா வருக-சைவசமயத்து முதற்பொருளே வருக, திரைகொழித்து மறுகும்-அலைகள் மோதித் திரும்பி விழுகின்ற, அலைவாய்க்கரை சேர்ந்த-திருச்சீரலைவாய் கடற்கரையிற் கோயில்கொண்ட, மழலைச்சிறுவா வருக-மறை மழலை மொழியும் குழவியே வருக, வளருங் களபக் குரும்பைமுலை வள்ளி கணவா வருக.

தாய் தனது குழந்தையிடம் ஆராமையாற் பேசும் சொற்கள் இச்செய்யுளில் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. தாய் பலவாறு அழைத்தும் வராமல் விளையாடிக்கொண்டிருக்கும் குழந்தையைத் தன்னருகே அழைக்கும் பொருட்டுப் பிரயோகம் செய்யும் அனுராக வாசகங்கள் இங்கு பலபடியாக அமைக்கப்பட்டுள்ளன. அரைஞாண் பூட்டேன் குண்டலம் அணியேன் திலகம் தீட்டேன் மை எழுதேன் சிலம்பு திருத்தேன் பால் ஊட்டேன் மொழி பகரேன் முருகா வருக என்று தாய் கூறுமாறு பாடினர். அரைஞாண் பூட்டவும் குண்டலம் அணியவும் அழைப்பதாயின் சிறு குழவி வாரான். உரிய உபசாரங்களைச் செய்ய விரும்பி அழைத்தாலும் வராது ஓடுவதே மழலைச்சிறுவர் இயல்பாம். இதனைப் பிள்ளைத் தமிழ்ப் பிரபந்த வியல்பிக்கேற்ப முருகன் மேலேற்றிக் கூறினர். குழை, இங்கு காது என்னும் பொருளில் வந்தது. திருத்துதல்-அணிதல். சிவசமய முதல்வன் என்றது முருகனையும் திருஞானசம்பந்தப் பெருமானையும் குறிக்கும் தொடர்மொழியாம். இருபொருளும் இங்குப் பொருந்துமாறறிக. திரைகொழித்து மறுகுதல், கடலிலே அலைகள் கரையோடு மோதித் திரும்பிச் சுருண்டு பாய்ந்து விழும் இயல்பை விளக்குவதாம். இனி என்னும் சொல் சங்கச் செய்யுட்களில் இப்பொழுது என்னும் பொருளில் வழங்கும்.

56 எள்ளத் தனைவந் துறுபசிக்கு
மிரங்கிப் பாரந்து சிறுபண்டி
யெக்கிக் குழைந்து மணித்துவர்வாய்
இதழைக் குவித்து விரித்தழுது
துள்ளித் துடைத்துப் புடைபெயர்ந்து
தொட்டி லுதைந்து பெருவிரலைச்
சுவைத்துக் கடைவாய் நீரொழுகத்
தோளின் மகரக் குழைதவழ
மெள்ளத் தவழ்ந்து குறுமூரல்
விளைத்து மடியின் மீதிருந்து
விம்மிப் பொருமி முகம்பார்த்து
வேண்டு முமையாள் களபமுலை
வள்ளத் தமுதுண் டகமகிழ்ந்த
மழலைச் சிறுவா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

(இ-ள்) எள் அத்தனை-எள்ளளவு, வந்துறு பசிக்கும்-வந்து வாட்டுகிற பசிக்கும், இரங்கிப் பாரந்து-வருந்தி வாடி, சிறு பண்டி-சிறிய வயிற்றை, எக்கிக் குழைந்து-உட்புறம் சுருக்கிக் குழைவுற்று, மணித்துவர் வாய் இதழை-அழகிய சிவந்த வாய் இதழை, குவித்து விரித்து அழுது-குவித்தும் விரித்தும் அழுது, துள்ளித் துடித்து-துள்ளியும் துடித்தும், புடை பெயர்ந்து-பக்கத்திலே அசைந்து, தொட்டில் உதைந்து-தொட்டிலைக் காலால் உதைத்துக்கொண்டு, பெருவிரலைச் சுவைத்து-காற்பெரு விரலை வாயில் வைத்துச் சுவைத்து, கடைவாய் நீரொழுக-கடைவாய் வழியே உமிழ்நீர் ஒழுக, தோளில் மகரக்குழை தவள-தோளிலே மகர குண்டலம் தவழ, மெள்ளத் தவழ்ந்து-மெள்ளத் தவழ்ந்துவந்து, குறுமூரல்விளைத்து - சிறிய பற்களைக்காட்டிச் சிரித்து, மடியின் மீது இருந்து-தாய் மடியின்மேல் அமர்ந்து, விம்மிப் பொருமி-

விம்மியும் பொருமியும், முகம்பார்த்து-தாய் முகத்தைப்பார்த்து, வேண்டும் உமையாள்-வேண்டுகிற உமாதேவியாரது, களபமுலை வள்ளத்து அமுது-கலவைச் சாந்தணிந்த முலையாகிய கிண்ணத்திலிருந்து சொரியும் பாலை, உண்டு அகம் மகிழ்ந்த-உண்டு மனம் மகிழ்ந்த, மழலைச் சிறுவா-மழலை பேசும் குழவியே, வருக-வருவாயாக. வளரும் களபக் குரும்பைமுலை வள்ளி கணவா வருக.

சிறிய குழந்தையின் தன்மையை இயற்கையோடு பொருந்த இச்செய்யுளில் நன்கு வருணித்திருப்பது ஆராய்ந்தின்புறத் தக்கது. எக்கி, குழைந்து, குவித்து, விரித்து, துள்ளி, துடித்து, தொட்டில் உதைந்து, பெருவிரல் சுவைத்து, தவழ்ந்து, விம்மி, பொருமி முதலிய சொற்கள் உலக வழக்கில் உள்ள எளிய சொற்களேயாகையால் வேறு சொற்களாற் பொருள் விளக்குதல் அரிதாம். இச்செய்யுளிலும் வினைமுடிவு எளிதில் விளங்குவதே.

57 வெண்மைச் சிறைப்புள் ளோதிமங்கள்
விரைக்கே தகையின் மடலெடுத்து
விரும்புங் குழவி யெனமடியின்
மீதே யிருத்திக் கோதாட்டி
திண்மைச் சுரிசங் கினிற்குவளைத்
தேறன் முகந்து பாலூட்டிச்
செழுந்தா மரைநெட் டிதழ்விரித்துச்
சேர்த்துத் துயிற்றித் தாலாட்டப்
பெண்மைக் குருகுக் கொருசேவற்
பெரிய குருகு தன்வாயிற்
பெய்யு மிரையைக் கூரலகு
பிளந்து பெட்பி னினிதளிக்கும்
வண்மைப் புதுமைத் திருச்செந்தூர்
வடிவேன் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

5 MAY 1975

(இ-ள்) வெண்மைச் சிறை - வெண்மையாகிய சிறகுகளை யுடைய, புள் ஓதிமங்கள்-அன்னப்பறவைகள், விரைக்கேதகை யின்-மணம் பொருந்திய தாழையின், மடல் எடுத்து-அகவிதழ் ஒன்றை எடுத்து, விரும்பும் குழவி என-விரும்பத்தக்க குழந்தை என்று எண்ணி, மடியின் மீதே இருத்தி-மடியின்மேல் வைத்து, கோதாட்டி - பாராட்டி, திண்மைச் சுரிசங்கினில் - உறுதியாய் அமைந்த வரிகளையுடைய சங்கத்தில், குவளைத்தேறல் முகந்து- குவளை மலரின் தேனை முகந்து, பாலூட்டி - பாலாக ஊட்டி, செழுந்தாமரை-செழித்து வளர்ந்த செந்தாமரை மலரின், நெட் டிதழ் விரித்து-நீண்ட இதழ்களுள் ஒன்றைப் பாயலாக விரித்து, சேர்த்து துயிற்றித்தாலாட்ட - அப்பாயலிற் கிடத்தித் துயில வைத்துத் தாலாட்ட, பெண்மைக் குருகுக்கு-பெண் நாரைக்கு, ஒரு சேவற் பெரிய குருகு - ஒரு பெரிய நாரைச்சேவல், தன் வாயிற் பெய்யும் இரையை - தன்வாயில் அகப்பட்ட இரையை, கூரலகு பிளந்து-அதன் கூரிய அலகைப் பிளந்து, பெட்பின்-பிரி யத்தோடு, இனிது அளிக்கும்-இனிமையுறக் கொடுக்கும், வண் மைப் புதுமை - புதுமையான வண்மைச் சிறப்பை விளக்கும், திருச்செந்தூர்-திருச்செந்தூர்த் திருப்பதியில் வாழும், வடிவேல் முருகா வருக, வளரும் களபக் குரும்பைமுலை வள்ளி கணவா வருக.

இச்செய்யுளில் இரண்டு வருணனைகள் அமைக்கப்பட்டுள் ளன. முற்பகுதியில் அன்னப்பறவைகள் தாழை மடலைக்குழவி யென்று கருதி மடியில் இருத்திக் கோதாட்டித் திண்மைச் சுரி சங்கினில் குவளைத் தேறல் முகந்து பாலூட்டி செழுந்தாமரை நெட்டிதழ் விரித்துத் துயிற்றித் தாலாட்டிய செய்தி சொல்லப் பட்டது. பிற்பகுதியில் பெண்மைக் குருகுக்கு ஒரு சேவற் பெரிய குருகுகூரலகு பிளந்து தன்வாய் இரையை பெட்பின் அளிக்கும் வண்மைப் புதுமை விளக்கப்பட்டது. பிற்பகுதியில் உள்ள இவ்வருணனை இவ்வாசிரியர் கலித்தொகைச் செய்யுளில்

மிக்க பயிற்சியும் உள்ளுணர்ச்சியும் உடையார் என்பதை விளக்கும்.

கலித்தொகையில் வருகிற பின்வரும் செய்யுளடிகள் இச்செய்யுளின் பிற்பகுதிக் கருத்தோடு ஒற்றுமைப்பட்டிருப்பதை ஊகித்துணரலாம்.

"அடிதாங்கு மளவன்றி யழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாய் காடென்றா ரக்காட்டுள்
துடியடிக் கயந்தலைக் கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே.
இன்பத்தி னிகந்தொரீஇ யிலைதீய்ந்த வுலவையாற்
றுன்புறாஉந் தகையவே காடென்றா ரக்காட்டுள்
அன்புகொள் மடப்பெடை யசைகிய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே.

58 ஓடைக் குளிர்தண் டுளிப்பனியா
லுடைந்து திரையிற் றவழ்ந்தேறி
யொளிரும் புளினத் திடையொதுங்கி
யுறங்குங் கமடந் தனைக்கடந்து
கோடைக் குளிர்காற் றடிக்கவுடல்
கொடுகி நடுங்கி யூன்கழிந்த
குடக்கூன் பணிலத் திட்புகுந்து
குஞ்சுக் கிரங்கி யிரைகொடுக்கும்
பேடைக் குருகுக் கொருசேவற்
பெரிய குருகின் சிறைப்புறத்துப்
பிள்ளைக் குருகு தனையணைத்துப்
பிரச மடற்கே தகைப்பொதும்பின்
வாடைக் கொதுங்குந் திருச்செந்தூர்
வடிவேன் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

(இ-ள்) ஓடை - ஓடைகளிலிருந்து எழுகின்ற, குளிர் தண் துளிப்பனியால்-குளிர்ந்த தண்ணீர்த் துளியாலாகிய பனியால், உடைந்து-வருந்தி, திரையில் தவழ்ந்து-அலைகளிலே தவழ்ந்து, எறி-கரையேறி, ஒளிரும் புளினத்திடை ஒதுங்கி-ஒளி பொருந்திய மணல் மேட்டினிடத்திலே ஒதுங்கி, உறங்கும் கமடந்தனைக் கடந்து-அங்கு உறங்கிக் கொண்டிருக்கும் ஆமையைத் தாண்டி, கோடைக்குளிர் காற்றடிக்க-குளிர்ந்த மேல்காற்று வீச, உடல் கொடுகி நடுங்கி-உடம்பு ஒடுங்கி நடுங்கி, ஊன்கழிந்த-ஊன் பற்று ஒழிந்துள்ள, குடக்கூன் பணிலத் துட்புகுந்து - குடம் போல் வளைந்த உருவமுள்ள பெரிய சங்கினுட்புகுந்து, குஞ்சுக் கிரங்கி-தனது குஞ்சின் வருத்தத்துக்கு இரங்கி, இரை கொடுக்கும்-உணவு கொடுக்கும் இயல்புள்ள, பேடைக் குருகுக்கு - பெண் நாரைக்கு உதவியாக, ஒரு சேவற் பெரிய குருகு - ஒரு பெரிய ஆண் நாரையானது, இன்சிறைப்புறத்து--தனது மெல்லிய சிறைப்புறத்தே, பிள்ளைக் குருகு தனையணைத்து-நாரைக் குஞ்சை அணைத்துக்கொண்டு, பிரச மடல் - தேன் நிறைந்த மடல்களை யுடைய, கேதகைப் பொதும்பின்-தாழைச் சோலையிலே, வாடைக்கு ஒதுங்கும் - வாடைக்காற்றுக்கு அஞ்சி ஒதுங்குகிற, திருச்செந்தூர் வடிவேல் முருகா வருக, வளருங் களபக் குரும்பைமுலை வள்ளி கணவா வருக.

கோடை - மேல்காற்று, வாடை - வடகாற்று, கொடுகுதல்-ஒடுங்குதல், பிரசம்-தேன், பெண்ணுரை குஞ்சோடு சங்கில் ஒளிக்கும், அதற்கு உதவியாக ஆணுரை, தாழைப்பொதும்பில் ஒளிக்கும் என்று வருணித்தார்.

59 விண்டு மாவின் கனதடத்தின்
மீதே வீழக் குருகினங்கள்
வெருவி யிரியக் கயல்வெகுண்டு
வெடிபோய் வீள மண்டுகம்

கண்டுபாய வரிவாளை
கழிக்கே பாயக் கழிக்கானற்
கம்புள் வெகுண்டு துண்ணெனக்கட்
கடைதான் விழித்துத் தன்பார்ப்பைக்
கொண்டு போயக் கருவாழைக்
குலைக்கே பாயக் குடக்கனியின்
குறுங்காற் பலவு வேர்சாய்ந்த
குழிக்கே கோடி கோடிவரி
வண்டு பாயுந் திருச்செந்தூர்
வடிவேன் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

(இ-ள்) மாவின் கனி-மாம்பழம் ஒன்று, விண்டு மரத்திலிருந்து விண்டு, தடத்தின் மீதே வீழ-தடாகத்தில் விழ, குருகினங்கள்-அதைக்கண்ட நீர்ப்பறவைகள், வெருவி இரிய - அஞ்சி ஓட, கயல் வெகுண்டு-கெண்டை மீன் சினங்கொண்டு, வெடிபோய் மீள-பாய்ந்தோடி மீள, மண்டுகம் கண்டு பாய - தவளை அதைக்கண்டு பாய, வரிவாளை - வரிகளையுடைய வாளை மீன்கள், கழிக்கே பாய-உப்பங்கழியிலே பாய, கழிக்கானல் - கடற்கரைச் சோலையில் வாழும், கம்புள்-சம்பங்கோழி, வெகுண்டு - கோபங் கொண்டு, துண்ணெனக் கட்கடைதான் விழித்து - விரைவாகக் கடைக்கண்ணாற் பார்த்து, தன் பார்ப்பை-தனது குஞ்சை, கொண்டு போய் -- எடுத்துக்கொண்டுபோய், அக்கருவாழைக் குலைக்கே பாய-அந்தப் பெரிய வாழைக்குலையிலே பாய, குடக் கனியின்-குடம்போன்ற கனிகளையுடைய, குறுங்காற்பலவு--குறுகிய அடிப் பகுதியையுடைய பலாமரத்தின், வேர் சாய்ந்த-வேர் சாய்ந்துள்ள குழிகளை நோக்கி, கோடி கோடி வரிவண்டு பாயும்- கோடிக் கணக்கான வரிவண்டுகள் பாய்கின்ற, திருச்செந்தூர் வடிவேல் முருகா வருக, வளரும் களபக் குரும்பைமுலை வள்ளி கணவா வருக.

மாவின் கனி விண்டு தடத்தில் வீழக் குருகினங்கள் வெருவி யிரிய கயல் வெகுண்டுபோய் மீள மண்டூகம் பாய வாளை கழிக்கே பாய கம்புள் பார்ப்பைக்கொண்டு வாழைக்குலைக்கே பாய பலவு வேர் சாய்ந்த குழிக்கே வண்டு பாயும் திருச்செந்தூர் என வினை முடிவு செய்க. கம்புள்-சம்பங்கோழி.

60 பேரா தரிக்கு மடியவர்தம்
பிறப்பை யொழித்துப் பெருவாழ்வும்
பேறுங் கொடுக்க வரும்பிள்ளைப்
பெருமா னென்னும் பேராளா
சேரா நிருதர் குலகலகா
சேவற் கொடியாய் திருச்செந்தூர்த்
தேவா தேவர் சிறைமீட்ட
செல்வா வென்றுன் றிருமுகத்தைப்
பாரா மகிழ்ந்து முலைத்தாயர்
பரவிப் புகழ்ந்து விருப்புடனப்
பாவா வாவென் றுனைப்போற்றப்
பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்
வாரா திருக்க வழக்குண்டோ
வடிவேன் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

(இ-ள்) பேர் ஆதரிக்கும்-உனது திருநாமங்களை அன்போடு ஓதுகின்ற, அடியவர்தம்-பக்தர்களுடைய, பிறப்பை ஒழித்து-

இனி வரும் பிறப்புக்களை யொழித்து, பெருவாழ்வும்-இம்மையிலே பெரு வாழ்வும், பேறும்-மறுமையிலே சிவானந்தப்பேறும், கொடுக்கவரும் - கொடுத்தருள வருகின்ற, பிள்ளைப்பெருமான் என்னும் பேராளா-பிள்ளைப்பெருமான் என்னும் பேருடையாய், சேரா நிருதர் குலகலகா-பகைவராகிய அசுரர் குலத்தை அழிக்கும் போராளா, சேவற்கொடியாய்-சேவற்கொடியை உடையாய், திருச்செந்தூர்த் தேவா-திருச்செந்தூர்த் தேவனே, தேவர் சிறை மீட்ட செல்வா-தேவர்களைச் சிறையிலிருந்து மீட்டருளிய செல்வனே, என்று-என்று கூறி, உன் திருமுகத்தைப் பார்த்து - உன் திருமுகத்தைப் பார்த்து, மகிழ்ந்து-மனமகிழ்ச்சியோடு, முலைத்தாயர் - பாலூட்டும் தாயர்கள், பரவிப் புகழ்ந்து - துதித்துப் புகழ்ந்து, விருப்புடன் அப்பா வா வா என்று உனைப்போற்ற-அன்போடு அப்பா வா வா என்று கூறி உன்னைப்போற்றும்பொருட்டு, பரிந்து மகிழ்ந்து-அன்புடன் மகிழ்ந்து, வரவழைத்தால்-உன்னை வரவேண்டி அழைத்தால், வாராதிருக்க - நீவராமல் இருக்க, வழக்கு உண்டோ-நியாயம் உண்டோ! வடிவேல் முருகா வருக, வளருங் களபக் குரும்பைமுலை வள்ளி கணவா வருக.

அடியவர்தம் பிறப்பை ஒழித்துப் பெரு வாழ்வும் பேறும் கொடுக்கவரும் பிள்ளைப்பெருமானே நிருதர் குலகலகா சேவற்கொடியாய் திருச்செந்தூர்த் தேவா தேவர் சிறைமீட்ட செல்வா என்று உன் திருமுகத்தைப் பாரா மகிழ்ந்து முலைத்தாயர் புகழ்ந்து அப்பா வா என்று உனை அழைத்தால் வாராதிருக்க வழக்குண்டோ என்று ஆற்றெழுக்காய் இச்செய்யுள் முடியுமாறு காண்க. இச்செய்யுள் பொதுமக்கள் பலரும் பாடிப் பயில்வதாம்.

61 கலைதெரி புகலி வளமுற மருவு
கவுணிய வருக வருகவே
கருணையி னுரிமை யடியவர் கொடிய
கலிகெட வருக வருகவே

சிலைபொரு புருவ வனிதைய ரறுவர்
திருவுள மகிழ வருகவே
சிறுதுளி வெயர்வு குதிகொள வுனது
திருமுக மலர வருகவே
கொலைபுரி விகட மணிமுடி நிருதர்
குலமற வருக வருகவே
குருமணி வயிர மிருசிகை நெடிய
குழைபொர வருக வருகவே
மலைமகள் கவுரி திருமுலை பருகு
மழவிடை வருக வருகவே
வளையுமிழ் தரள மலையெறி நகரில்
வரபதி வருக வருகவே.

(இ-ள்) கலைதெரி-சாஸ்திரங்களை ஆராய்ந்தறிந்த, புகலி-சீர்காழிப் பதியிலே, வளமுற-தமிழ்வளமும் சைவ வளமும் பொருந்த, மருவு-வாழ்ந்த, கவுணிய - கவுண்டின்ய கோத்திரத்திலே அவதரித்த திருஞான சம்பந்தப் பெருமானே, வருக வருக-வருவாயாக, கருணையின் உரிமை அடியவர்-உனது கருணைக்கு உரிமை பூண்ட அடியவர்கள், கலிகெட-துயரம் கெடுமாறு, வருக வருக-வருவாயாக, சிலைபொரு புருவம்-வில்லைப்போன்ற புருவங்களையுடைய, வனிதையர் அறுவர்-கார்த்திகைப் பெண்டிர் அறுவரது, திருவுளம் மகிழ வருக-மனம் மகிழுமாறு வருவாயாக, சிறு துளி வெயர்வு குதிகொள-சிறு துளிகளாக வேர்வை அரும்ப, உனது திருமுகம் மலர வருக-உனது அழகிய முகம் மலர வருவாயாக, கொலைபுரி-கொலைபுரியும் இயல்பையுடைய, விகட-மாறுபாடான குணமுடைய, மணி முடி-இரத்தின கிரீடங்களை அணிந்த, நிருதர் குலம் அற வருக வருக-அசுரர் குலம் அழியுமாறு வருவாயாக, குருமணி வயிரம்-பல நிறம் விளங்கும் வயிர மணிகளால் அலங்கரிக்கப்பெற்ற, இருசிகை-இருசிகைகளும், நெடிய குழைபொர-நீண்ட செவியணியிலே மோதுமாறு, வருக வருக - வருவாயாக,

மலைமகள்-இமயமலையரயன் மகளாராகிய, கவுரி-கவுரி தேவியின், திருமுலை பருகு-திருமுலைப்பால் பருகிய, மழ விடை - இளங் கன்றே, வருக வருக-வருவாயாக, வளையுமிழ் தாளம் - சங்குகள் எறிந்து முத்துக்களை, அலையெறி-அலைகள் கரையில் வீசுகின்ற, நகரில்-திருச்செந்தூர்த் திருப்பதியிற் கோயில்கொண்ட, வரபதி-உயர்ந்த தெய்வமே, வருக வருக-வருவாயாக.

திருஞானசம்பந்தர் முருகன் அமிசத்திற் பிறந்தவராதலால் 'கவுணிய வருக' என்றார். விகடம்-நேரின்மை, வெயர்வு-வேர்வை, வேர்ப்பு, வெயர்ப்பு என வழங்கும். இருசிகை-குழந்தைகளுக்கு முன்னும் பின்னுமாய்ப் பின்னப்பெறும் இரண்டு சிகைகள், காதருகில் உராயுமாறு அவை அமைதல் உண்டு.

62 அணிநெடு மவுலி யெறிசிறு புழுதி
யழகுட னெழுக வருகவே
யடியிடு மளவி லரைமணி முரலு
மரவொலி பெருக வருகவே
பணிவிடை புரிய வருமட மகளிர்
பாவினர் புகழ வருகவே
பலபல முனிவ ரனைவரு முனது
பதமலர் பரவ வருகவே
பிணிமுக முதுகி லரியணை யழகு
பெறவரு முருக வருகவே
பிறைபொரு சடிலர் தமதிட மருவு
பிடிபெறு களிறு வருகவே
மணியித ழொழுகு மமுதகு குதலை
மழவிடை வருக வருகவே
வளையுமிழ் தாள மலையெறி நகரில்
வரபதி வருக வருகவே.

(இ-ள்) அணிநெடுமவுலி-அழகிய நீண்ட கிரீடங்களில், எறிசிறு புழுதி - வீசிப்படிந்த புழுதி, அழகுடன் ஒழுக வருக - அழகொடு கீழே சிந்த வருவாயாக, அடியிடும் அளவில-நடக்கும் அளவில், அரைமணி முரலும்-இடையிற் கட்டிய மணிகளிலிருந்து எழுகின்ற, அரவொலிபெருக வருக-ஹரஹர சப்தம் பெருக வருவாயாக, பணிவிடைபுரிய-ஏவல்புரியும் பொருட்டு, வரும் மடமகளிர்-வருகின்ற இளம் பெண்டிர், பரவினர் புகழ வருக-போற்றிப் புகழ வருக, பலபல முனிவர் அனைவரும்-பலதிறப்பட்ட முனிவர் எல்லாரும், உனது பதமலர் பரவ வருக-உனது பாத தாமரைகளைப் புகழ வருவாயாக, பிணிமுக முதுகில்-மயில்வாகனத்தின் முதுகிலே, அரியணை அழகுபெற வரும்-சிங்காதனத்தில் அழகுற வீற்றிருக்கும், முருக வருக-முருகப்பிரானே வருக, பிறைபொரு சடிலர் தமது - இளம் பிறை பொருந்திய சடாபாரத்தையுடைய சிவபிரானது, இடம் மருவு-இடப்பாகத்தில் வீற்றிருக்கும், பிடி பெறு களிறு - பெண் யானையாகிய பார்வதிதேவியார் பெற்ற இளங்களிறே, வருக-வருவாயாக, மணி இதழ் - அழகிய இதழ்களிலிருந்து, ஒழுகும் - ஒழுகுகிற, அமுதுகு - அமுதம் கலந்த, குதலை-மழலைமொழி பேசுகின்ற, மழவிடை வருக வருக-இளங்கன்றே வருவாயாக, வளை உமிழ்-சங்குகள் உமிழ்கிற, தாளம்-முத்துக்களை, அலை எறி-அலைகள் கரையில் வீசுகிற, நகரில்-திருச்செந்தூர்த் திருப்பதியில் கோயில்கொண்ட, வரபதி வருக வருக-உயர்ந்த தெய்வமே வருவாயாக.

அரவொலி என்னும் தொடர்க்கு அரவங்களின் ஒலி என்றும் உரைக்கலாம். அன்னை தந்தையர்க்கு அரவணி உண்டாதலால் மகனுக்கும் உளதாகும் என்று உரைத்தல் ஒருவாறு பொருந்தும். பிணிமுகம் என்னும் சொல்லுக்கு மயில் என்பது பொருள். ஆயினும் நச்சினார்க்கினியர் முருகப்பிரான் ஆரோகணித்தருளும் யானை என்பர். அங்ஙனம் பொருள் கூறினும் இச்செய்யுளிற் பொருந்தும் பிணிமுக முதுகில் அரியணை என்பது யானைக்கு நன்கு அமையும். பிடி என்று உமாதேவியாரை உருவகம் செய்ததற்கு ஏற்ப முருகனைப் பிடிபெறுகளிறு என்றார்.

---

## ஏழாவது
## அம்புலிப்பருவம்.

அம்புலிப் பருவம் என்பது, குழவி சந்திரனைத் தன்னோடு விளையாட அழைப்பதாக அமைத்துப்பாடும் பருவமாம். இப் பருவத்திலே சந்திரனைப் பலபடியாகப் புகழ்ந்தும் பாட்டுடைத் தலைவனாகிய குழவிக்கும் அவனுக்கும் உள்ள ஏற்றத் தாழ்வுகளை எடுத்துரைத்தும் செய்யுட்கள் அமைத்தல் வேண்டும். ஒரு பொருளைப்பற்றியே பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்களிற் பலர் பாடினும் அவர் செய்யுட்களுட் சிலவே சிறந்தன என்று அறிஞராற் பாராட்டப்பெறுகின்றன. பிள்ளைத்தமிழில் மிகவும் நயம்பெற அமைத்தற்குரிய பகுதி அம்புலிப் பருவமாம். அப்பருவத்திலே தமது திறமை முழுவதையும் விளக்கவே ஒவ்வோராசிரியரும் முயல்வர். வெண்பா யாப்பு நன்கு அமைப்பதிற் புலவர்க்குப் பேரார்வம் உண்டு. புகழேந்தியார் பெற்ற பெருமையை அத்துறையில் இன்றளவும் வேறு எவரும் பெற்றிலர். இதனாலேயே "புலவர்க்கு வெண்பாப் புலி" என்றதோர் வாசகம் வழங்குகின்றது. சீர்தளை ஓசை முதலிய நெறிகளால் ஒரு குறிப்பிட்ட வரம்பினுள் அடங்கிச்செல்லற்குரிய வெண்பாவை நயம்பெற வமைப்பது அரிது என்று கருதப்பட்டதுபோலவே இன்றளவும் தோன்றியுள்ள நூற்றுக்கணக்கான பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு பொருளைப்பற்றியே பல்வேறு திறமாக அமையவுரிய இவ்வம்புலிப்பருவம் புலவர் திறமையைப் பரீக்ஷித்து வருகின்றது என்றே கூறலாம். 'பிள்ளைக்கவிக் கம்புலி புலியாம்' என்ற வாசகம் இக்கருத்தையே விளக்குகின்றது.

63 கலையா னிரம்பாத கலையுண் டுனக்குநிறை
கலையுண் டிவன்றனக்குக்
களங்கமரு குறைமா னுனக்குண்டு குறமான்
கருத்துண் டிவன் றனக்குத்

தொலையாத கணமுண் டுனக்குமங் கலகணத்
தொகையுண் டிவன் றனக்கு
துளியமுத முண்டுனக் கிவனுக்கு மாருத
சொல்லமுத முண்டுனக்குக்
கொலையா டராவழிப் பகையுண்டு கடுவிடங்
கொப்புளிக் குங்கட்செவிக்
கோளரா வைக்கொத்தி யெறியுமே காமிக்
குமர னுக் குண்டு கண்டாய்
அலையாழி சூழ்திருச் செந்தில்வடி வேலனுடன்
அம்புலீ யாடவாவே
அரவின்முடி நெளியமயின் முதுகில்வரு குமாரனுட
னம்புலீ யாடவாவே.

(இ-ள்) கலையால் நிரம்பாத-கலையளவால் நிரம்பாத, கலையுண்டு உனக்கு-சந்திரகலை உனக்கு உண்டு, இவன் தனக்கு-இந்த முருகப்பிரானுக்கோ, நிறைகலை உண்டு-நிறைந்த கல்வி உண்டு, களங்கம் அருகுறை-உனக்குக் களங்கமாக உன்னிடம வாழ்கின்ற. மான் உனக்கு உண்டு-முயலகன் என்னும் மான் உனக்கு உண்டு, இவன் தனக்கு-இவனுக்கோ, குறமான் கருத்து உண்டு-குறவர் குடிப்பெண்ணாகிய வள்ளிநாயகியின் மனத்தின் அன்பு உண்டு, தொலையாத - என்றும் உன்னைவிட்டுப் பிரியாத, கணம் உண்டு உனக்கு-நக்ஷத்திரக் கூட்டங்கள் உனக்கு உண்டு, இவன் தனக்கு-இவனுக்கு, மங்கலகணத்தொகை உண்டு-சிவகணத்தார் கூட்டம் உண்டு, துளி அமுதம் உண்டு உனக்கு--சிறிதளவேயாகிய தேவாமுதம் உன்னிடம் உள்ளது, இவனுக்கு மாருத சொல் அமுதம் உண்டு-இவனுக்கும் என்றும் ஒரே சுவையோடும் குறையா அளவோடும் உள்ள சொல் அமுதம் உண்டு, உனக்கு-உனக்கு, கொலை-கொலைத்தொழில் செய்யும், ஆடு - வெற்றியையுடைய, அரா-இராகுகேதுக்களின், வழிப்பகை உண்டு-வழிவழிப்பகை உண்டு,

கடுவிடம் கொப்புளிக்கும்-கடுமையான விஷத்தைக் கக்குகின்ற, கட்செவி - கண்ணே காதாகவுடைய, கோள் அராவை - கொடிய பாம்புகளை, கொத்தி எறியும் - கொத்தி எடுத்தெறியக்கூடிய, மேகாரம்-மயில் வாகனம், இக்குமரனுக்கு உண்டு கண்டாய் - இந்த முருகப்பிரானுக்கு உண்டு என்பதை உணர்வாயாக, அலை ஆழ்சூழ் திருச்செந்தில்-அலைகள் நிறைந்த கடலாற் சூழ்ந்த திருச் செந்தூரிற்கோயில்கொண்டருளும்,வடிவேலனுடன்-கூரியவேலா யுதத்தையுடைய முருகப்பிரானோடு, அம்புலீ ஆடவாவே - சந் திரனே நீ விளையாட வருக, அரவின்முடி நெளிய-ஆதிசேடன் தலைகள் நெறியும்படி, மயில் முதுகில் வருகுமரனுடன் - மயில் வாகனத்தில் அமர்ந்து நிலத்தை வலம்வருகின்ற குமரப்பிரா னுடன், அம்புலீ ஆடவாவே-சந்திரனே நீ விளையாட வருக.

கலை என்பது வட்டவடிவத்தின் சிறிய அளவுகளில் ஒன்று, கலை விகலை என்ற பகுதிகள் வட்டங்களில் உண்டு. கலை-கல்வி, மங்கல கணம்-சிவகணம், மங்கலம்-சிவம், ஆடரா-போர்செய்யும் அரவம் என்றும் உரைக்கலாம். ஆடு என்னும் சொல் முதனிலை திரிந்த தொழிற்பெயராய் வெற்றியென்னும் பொருள் பெறுகின் றது. அடு என்பது முதனிலை, "ஆடாடென்பவொரு சாரோரே ஆடன்றென்ப வொரு சாரோரே" என்பது புறம். மேகாரம்-மயில் மேக முழக்கத்தைக்கண்டு ஆடுதலால் இப்பெயர் பெற்றது போலும். எகாரம் என்று கொண்டு கேகாரவம் என்னும் வட சொல் இங்ஙனம் அமைந்துளது என்று உரைப்பினும் அமையும். அம்புலீவிளி-ஈற்றெழுத்து நீண்டது.

64 மாமோக மண்டல மகற்றியறி வென்னுமுழு
மண்டலத் தைத்தொடுத்து
வடவைமுக மண்டலத் தழலா னுருக்கியினன்
மண்டலத் தூடுபுக்குச்

சோமோத யக்கிரண மண்டலத் தமுதத்
துளித்திவலை பருகியுடலைச்
சோதிமண் டலமென விளக்குமவ ரிவனுடைய
துய்யமுக மண்டலத்தை
யேமோ கருத்துற விருத்திப் பெரும்பாத்
தெல்லைமண் டலமெய்தலா
மென்றுகொண் டிவன்மண் டலச்சக்ர நிலையா
றெழுத்திலீ டேறுவருனக்
காமோ பெருக்கமென் செந்தில்வடி வேலனுட
னம்புலீ யாடவாவே
யாவின்முடி நெளியமயின் முதுகில்வரு குமரனுட
னம்புலீ யாடவாவே.

(இ-ள்) மாமோக மண்டலம் அகற்றி-மிகுந்துள்ள அஞ்ஞான மென்னும் மண்டலத்தை அகற்றி, அறிவு என்னும்-ஞானம் எனப் படுகிற, முழுமண்டலத்தை-பூரண மண்டலத்தை, தொடுத்து-தமக்குள்ளே தோன்றவைத்து, வடவை முகமண்டலத்தழலால்-வடவா முகாக்கினிபோல் எழுகின்ற யோகாக்கினியால், உருக்கி-உடம்பை உருக்கி, இனன் மண்டலத் தூடுபுக்கு-யோக நிலையில் உயர்ந்ததோர் நிலையாகிய சூரிய மண்டலத்தினுட்புகுந்து, சோமோதயக்கிரண மண்டலத்து - புருவங்களின் இடையிலே தோன்றுகிற சந்திர உதய கிரண மண்டலத்திலேயிருந்து துளிக்கின்ற, அமுதத் துளித்திவலை பருகி-அமுதத் துளிகளாகிய திவலை களைப் பருகி, உடலை - தமது உடலை, சோதி மண்டலம் என விளக்குமவர்-தேஜோமயமான உருவம் அடைந்து விளங்கச்செய்யும் யோகிவரர்கள், இவனுடைய - இந்த முருகப்பிரானுடைய, துய்யமுக மண்டலத்தை - பரிசுத்தமான முகமண்டலத்தை, ஏமோ கருத்துற இருத்தி-எத்துறைபற்றியாயினும் தியானத்தில் நிலைபெறச்செய்து, பெரும்பாத்து எல்லை மண்டலம்-பிரம்மானந்

தானுபவத்தை, எய்தலாம் என்று கொண்டு-அடையலாம் என்று துணிந்து, இவன்-இவனுக்குரிய, மண்டலச் சக்ரநிலை-மண்டலத்திடை யமைந்த சக்கரத்தில் பல நிலைகளில் முறைப்படி அமைக்கப்பெறும், ஆறெழுத்தில்-ஷடாக்ஷர மந்திர அனுசந்தானத்தால், ஈடேறுவர்-நினைத்தபேறு பெற்றுப் பெருமை யடைவர், உனக்கு ஆமோ பெருக்கம்-ஆதலால் உனக்கு அகங்காரம் பொருந்தாது; என் செந்தில் வடிவேலனுடன் - என் உரிமைத் தெய்வமாகிய திருச்செந்திற் பிரானோடு, அம்புலீ ஆடவாவே-சந்திரனே விளையாட வருக. அரவின் முடிநெளிய மயில் முதுகில் வருகுமரனுடன் அம்புலீ ஆடவாவே.

யோக சாத்திரத்தின் நுண்ணிய கருத்துக்களிற் சிலவற்றை இச்செயுளிற் கூறுகிறார். மோக மண்டலம், அறிவென்னு மண்டலம், வடவை மண்டலம், சோமோதயக்கிரண மண்டலம், சோதி மண்டலம், முக மண்டலம், பெரும்பரத்தெல்லை மண்டலம் என்று அடுக்கிய மண்டலங்கள் சொற்சுவையின் பொருட்டு அமைந்தவை. யோக நெறியிற் சென்ற பெரியார்க்கு, உடம்பை வளர்த்தற்குரிய உணவில் நாட்டம் இராது, பலவாண்டுகள் உணவின்றியும் அவர்கள் தேஜோமயமாய் விளங்குவர். அதற்குக் காரணம் யோக சக்தியாற் அவர்கள் தம் உடலிலேயே தாமாகத் தேடிப் பெறும் அமுதத்தைப் பானம் செய்வதேயாகும். இவ்வமுதம் தாரையாகப் பெருகுவதன்று. துளி துளியாகவே திவலையுருவிலே பெறப்படுவதாம். இது தோன்றும் இடம் இருபுருவங்களின் இடைநிலை என்று அறிஞர் உரைப்பர். இத்தகைய யோகிகளும் ஷடாக்ஷர மந்திரத்திலே பக்தி பூண்டிருப்பர் என்பது சிந்திக்கத்தக்கது.

65 முதிருமிசை வரிவண் டலம்புகம லாலய
முகிழ்க்குமிரு நாலிதழ்க்குண்
முக்கோண நடுவிலொரு வட்டச் சுழிக்குண்மலர்
முகமண் டலத்துவெயிலா

லெதிருமிரு ளந்தகா ரப்படலை தள்ளிவந்
தெழுமிரவி மண்டலத்தி
லின்புற்று நீவந் தொளிக்குமிட மந்தவா
னிரவிமண் டலமுடுக்க
ளுதிருமடு செருவிலிவன் வேலேறு பட்டவ
ருகந்தபெரு வெளியாகையா
லொள்ளமு தருத்தபதி ஞறுகலை கொள்ளுமுன்
னுடலினுங் குறைபடாதோ
வதிருமக ராழிசூழ் செந்தில்வடி வேலனுட
னம்புலீ யாடவாவே
யாவின்முடி நெளியமயின் முதுகில்வரு குமரனுட
னம்புலீ யாடவாவே.

(இ-ள்) முதிரும் இசை-நிறைந்த இனிமையுள்ள இசைபாடும் வரிவண்டு-வரிகளையுடைய வண்டுகள், அலம்பு - சஞ்சரிக்கின்ற, கமலாலயம்-கமலவுருவமாய் அமைந்த மூலாதார நிலயத்திலே, முகிழ்க்கும்-தோன்றிய, இருநாலிதழ்க்குள்-எட்டு இதழ்களுள் அமைந்த, முக்கோண நடுவில்-முக்கோணத்தின் நடுவில் உள்ள, ஒரு வட்டச் சுழிக்குள்-வட்டவுருவமாய்த் தோன்றும் ஒரு சுழிக் குள்ளே, மலர்முக மண்டலத்து வெயிலால்-தோன்றுகின்ற அக்கினி முகமண்டலத்தின் ஒளியால், எதிருமிருள் அந்தகாரப் படலை-எதிரே தோன்றும் கருமை மிக்க இருட் கூட்டத்தை, தள்ளிவந்து எழும் இரவி மண்டலத்தின் - அப்புறப்படுத்திக் கொண்டு உதயமாகிற சூரியமண்டலத்திலே, இன்புற்று-மகிழ்ச்சி யோடு, நீ வந்து ஒளிக்குமிடம் - அமாவாசையன்று நீ வந்து அடங்கியொடுங்கும் இடம், அந்த வான் இரவி மண்டலம்-அந்த உயர்வுமிக்க சூரிய மண்டலமும், உடுக்கள்- நக்ஷத்திரங்களும், உதிரும் - உதிரத்தக்க, அடுசெருவில் - கொல்லும் போரிலே, இவன்-இந்த முருகப்பெருமானது, வேலேறுபட்டவர் - வேல்

பாய்ந்து வீர சொர்க்கம் புகுந்தவர், உகந்த பெருவெளியாகை யால்-விருப்பத்தோடு குடிகொண்ட பெருவெளியாகையால், ஒள் ளமுது உகுத்த-ஒளி பொருந்திய தேவாமுதத்தைச் சிந்துகிற, பதினறு கலை கொள்ளும்-பதினறு கலைகளையுடைய, உன் உடலி னும் குறைபடாதோ - உனது உடம்பினும் குறைபாடு உண்டா காதோ, (ஆகையால்) அதிரும் மகராழிசூழ் செந்தில் வடிவேல னுடன்-அலை முழங்குகிற சுறு மீன்கள் நிறைந்த கடல் சூழ்ந்த திருச்செந்தூர்ப் பதியிற் கோயில்கொண்ட முருகப்பிரானோடு, அம்புலீ ஆடவாவே - அம்புலீ விளையாட வருக, அரவின்முடி நெளிய மயில் முதுகில் வரு குமரனுடன் அம்புலீ ஆடவாவே.

அமாவாசையன்று சந்திரன் சூரியனிடம் சென்று தான் இழந்த கலைகளைப் பெருகின்றான் என்பது ஐதிகம், 'மித்திரற் கவைகொடுத்துமுன் மீளவும் கவர்வோன்' என்றார் வில்லிபுத் தூரார். கமலாலயம் எனப்பட்டது மூலாதாரஸ்தானம். அங்கு இருக்கும் அக்கினியின் திறம் உரைக்கப்பட்டது. நீ விண்ணில் ஒளிக்கும் இடம் முருகன் வேலேறுபட்டவர் நிற்கும் இடம் ஆத லால் உன் உடலிலும் குறைபாடு உண்டாகும். ஆதலால் முருக னுடன் விளையாட வருக என்றார். வேலேறு-வேல் பாய்ந்த புண், பெரு வெளி-விண்ணுலகம்.

66 வெறியா ரிலைத்தொடைத் தக்கனழல் வேள்வியை
வெகுண்டுபகல் பல்லுகுத்து
வெள்ளிவிழி யைக்கெடுத் தயிரா வதப்பாகன்
வேறுருக் கொடுபறக்கச்
செறியா டகத்தகட் டிதழ்முளரி நான்முகன்
சென்னியைத் திருகிவாணி
செய்யதுண் டந்துண்ட மாக்கியத் தக்கன்
சிரத்தையொரு வழிபடுத்திப்

பொறியா ரழற்கடவுள் கைத்தல மறுத்துவிட்
புலவர்முப் பத்துமூவர்
போனவழி யொருவர்போ காமலுன் னுடலையும்
புழுதியிற் றேய்த்ததெல்லா
மறியாத தல்லநீ செந்தில்வடி வேலனுட
னம்புலீ யாடவாவே.
யாவின்முடி நெளியமயின் முதுகில்வரு குமாரனுட
னம்புலீ யாடவாவே.

(இ-ள்) வெறி ஆர்-மணம் நிறைந்த, இலைத்தொடை-இலைகளால் தொடுத்த மாலைகளை அணிந்த, தக்கன்-தக்ஷப்பிரஜாபதி (தொடங்கிய), அழல்வேள்வியை - அக்கினி முகமாக நிகழும் யாகத்தை, வெகுண்டு - கோபித்து, பகல் - சூரியனுடைய, பல் உகுத்து - பற்களைச் சிந்தி, வெள்ளி - சுக்கிரனது, விழியைக் கெடுத்து-விழிகளுள் ஒன்றைக்கெடுத்து, அயிராவதப் பாகன்-அயிராவதத்தைச் செலுத்தும் இந்திரன், வேறு உருக்கொடு பறக்க-குயில் என்ற வேற்றுருவம் பூண்டு பறக்க, செறி ஆடகத் தகடு-நெருக்கமான பொற்றகடுபோன்ற, இதழ்--அகவிதழ்களையுடைய, முளரி - தாமரைப்பூவில் வீற்றிருக்கும், நான்முகன்-பிரமதேவனது, சென்னியைத்திருகி - தலையைத்திருகி, வாணி-ஸரஸ்வதிதேவியின், செய்ய துண்டம்-சிவந்த நாசியை, துண்டம் ஆக்கி-அறுத்தெறிந்து, அத்தக்கன் சிரத்தை-அந்த வேள்வி தொடங்கிய தக்கனது முடியை, ஒருவழிபடுத்தி - முன்னிருந்த நிலைமைக்கு மாறாக ஆட்டின் சிரம் ஆக்கி, பொறியார்-தீப்பொறிகளையுடைய, அழற்கடவுள் - அக்கினிதேவனது, கைத்தலம் அறுத்து-கைகளை அறுத்து, விட்புலவர் முப்பத்துமூவர்--விண்ணுலகத்துத் தேவர் முப்பத்து மூவர்களும், போனவழி ஒருவர் போகாமல்-ஒருவர் போனவழி ஒருவர் போகாமல் ஓடியொளிய, உன் உடலையும்-சந்திரனே உன் உடம்பையும், புழுதியில் தேய்த்த தெல்லாம்-புழுதியில் வைத்துத் தேய்த்ததெல்லாம், நீ அறியாதது அல்ல-நீ அறியாத செயல்கள் அல்ல, ஆகையால் செந்தில்

வடிவேலனுடன் அம்புலீ ஆடவாவே, அரவின் முடிநெளிய மயில் முதுகில்வரு குமரனுடன் அல்புலீ ஆடவாவே.

துண்டம்-மூக்கு, புலவர்-தேவர். இச்செய்யுளில் தக்க யாகம் வருணிக்கப்பட்டுளது. கந்த புராணத்திலே, தக்ஷகாண்டத்து யாக சங்காரப்படலத்திலே இச்செய்தி நன்குவிளக்கப்பட்டுளது. அங்கு வீரபத்திர தேவர் செய்த செயல்கள் பலவாகக் கூறப்பட்டுள்ளன. முதலில் தக்கன் கதையால் அடியுண்டு விழுந்தான். பிரமன் தன் தலையில் ஒரு குட்டுப் பெற்றான். ஸரஸ வதி தேவி நாசியும் தனமும் அறுப்புண்டான். சந்திரன் நிலத்திலே தேய்ப்புண்டான். சூரியன் கவுளில் அறைபட்டுப் பல் இழந்தான். பகல் என்னும் சூரியன் கண் இழந்தான். கூற்றுவன் தலையை இழந்தான். இந்திரன் குயிலுருக்கொண்டு ஓடினன். அக்குயிலும் வெட்டுண்டு இறக்க நேர்ந்தது. அக்கினி தேவன் கையறுப்புண்டான். எழுநாக்களையும் இழந்தான். சுவாகாதேவி நாசி இழந்தாள். நிருதி தண்டினாற் புடைப்புண்டான். குபேரன் முத்தலைக்கழுவால் உயிரிழந்தான். யாகதேவதை வில்லால் இறந்தனன். தக்கன் தலையை இழந்தான். அக்கினி தேவன் அவன் தலையைத் தின்றான். பின்பு ஆட்டின் தலையை ஒட்டிவைத்து யாகம் நிறைவேற்றப்பட்டது. இவை புராண வரலாறு. ஒட்டக்கூத்தர் இயற்றிய தக்க யாகப் பரணியில், காளிக்குக்கூளி கூறியது என்னும் பகுதியில் நூறு தாளிசைகளுக்கு மேலாக இச்செய்தி புது முறையில் விரித்து விளக்கப் பட்டுளது. பிள்ளைத்தமிழாசிரியர் சொல்லிய செய்திகளுள் ‘வெள்ளிவிழியைக்கெடுத்தது’ புதுமையாயுள்ளது.

**67 விடமொழுகு துளைமுள் ளெயிற்றுவன் கட்செவி**
**விரிக்கும் பணுடவியரு**
**மென்பொறி யுடற்பெரும் பகுவா யராவடிவை**
**வெம்பசி யெடுத்துவெம்பிக்**

குடதிசைக் கோடையைப் பருகிக் குணக்கெழுங்
கொண்டலை யருந்தி வாடைக்
கொழுந்தையுந் தென்றலையு மள்ளிக் குடித்துக்
கொழுங்கதிரை யுண்டதினியுன்
னிடமொழிய வேறோ ரிடமில்லை நீயதற்
கெதிர்நிற்க வல்லையல்லை
யிவனுடன் கூடிவிளை யாடிநீ யிங்கே
யிருக்கலா மிங்குவந்தா
லடல்புனையு மயிலுண் டுனக்குதவி யாகையா
லம்புலீ யாடவாவே
யாவின்முடி நெளியமயின் முதுகில்வரு குமரனுட
னம்புலீ யாடவாவே.

(இ-ள்) விடம் ஒழுகு-விஷம் ஒழுகுகின்ற, துளை-துளையுடையவாகிய, முள்ளெயிறு - முள்ளைப் போன்ற பற்களையுடைய, வன்கட்செவி-வலிய கண்களையே காதுகளாக உடைய, விரிக்கும்-விரித்துள்ள, பணாடவியரு-படங்களின் மிகுதி நீங்காத, மென்பொறி-மெல்லிய புள்ளிகளைக்கொண்ட, உடல்-உடம்பினையுடையதாகிய, பெரும்பகுவாய் - பெரிய பிளந்த வாயினதாகிய, அராவடிவை-அரவமானது தனது உருவத்தை, வெம்பசி எடுத்து வெம்பி-கொடியபசி மிக்குக்காய்தலால், குடதிசை-மேலைத்திசையிலே தோன்றுகிற, கோடையைப்பருகி-மேல் காற்றைக்குடித்து குணக்கெழும்-கிழக்கிலே எழுகின்ற, கொண்டலை அருந்தி-கீழ்காற்றை உட்கொண்டு, வாடைக்கொழுந்தையும் - வடக்கிலிருந்து வரும் இளமையான வடகாற்றையும், தென்றலையும்-தென்றிசையிலிருந்து எழுகின்ற தென்றற்காற்றையும். அள்ளிக் குடித்து-வாரி விழுங்கிவிட்டு, கொழுங்கதிரை-கிரணங்கள் மிக்க சூரியனையும், உண்டது-உட்கொண்டது, இனி - இனிமேல், உன் இடம் ஒழிய வேறோர் இடம் இல்லை-உன் இடம் அல்லாமல் வேறொரு

இடம் இல்லை, நீ அதற்கு எதிர்நிற்க வல்லையல்லை - நீ அந்த அரவத்தை எதிர்த்து நிற்கவும் வலிமையுடையாயல்லை, இங்கு வந்தால்-இங்கு வருவாயாகில், இவனுடன் கூடி விளையாடி - இவனோடு கூடி விளையாடி, நீ இங்கே இருக்கலாம்-நீ இங்கே சௌக்கியமாய் இருக்கலாம், அடல் புனையும் மயில்-வலிமையும் வெற்றியும் புனைந்த மயில், உனக்கு உதவி உண்டு-உனக்குத் துணையாக நிற்கும். ஆகையால்-ஆகையால், அம்புலீ ஆடவாவே - சந்திரனே விளையாட வருக, அரவின் முடிநெளிய மயில் முதுகில் வருகுமரனுடன் அம்புலீ ஆடவாவே.

முள் எயிறு-உவமைத்தொகை, கட்செவி-கண்ணையே காதாக உடையது என்ற பொருளிற் பாம்பிற்கே பெயராக வரும். இங்கு அங்ஙனம் வரவில்லை. பாம்பு என்ற பொருளில் இருபெயரொட்டுப் பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை, இங்கு இருபெயரொட்டு, பணாடவி-பணமாகிய காடு. ஆயிரம் படங்கள் இருப்பதால் இங்ஙனம் உரைக்கப்பட்டது. அரா-இராகு, கோடை-மேல்காற்று, கொண்டல்-கீழ்காற்று, வாடை-வடகாற்று, தென்றல்-தென்காற்று, வல்லை-முன்னிலைக் குறிப்பு முற்று அல்லை என்பது சேர எதிர்மறையாயிற்று. காற்றுகளைக் குடித்துக் கதிரவனை விழுங்கித் திங்களை நாடி வருகின்ற இராகுவின் பகைக்கு அத்திங்கள் அஞ்சாதிருக்க முருகன் துணை தக்கதாகும். முருகன் ஊர்தியாகிய மயில் அரவத்தைக் கிழித்தெரியும் ஆற்றல் படைத்ததாகையால், இங்கு வந்தால் உனக்குத் துணை மயில் உண்டு என உரைக்கப்பட்டது. கொழுந்து, சிறியிலை ஆதல்போல் வாடைக்கொழுந்து-வாடையின் இளங்காற்றும், தீக்கொழுந்து-தீயின் நுனியில் உள்ள சிறுசுடர், திங்கட்கொழுந்து-பிறை.

68 பண்டுபோ லின்னமுத மின்னங் கடைந்திடப்
பழையமந் தரமில்லையோ
படர்கடற் குண்டகழி யளறுக வற்றியிப்
பாரினிற் றிடரானதோ
விண்டலத் தமரர்களு மவரேச னுஞ்சேர
வீடிநீ ரந்தகார
மேவியெழு பகிரண்ட கூடம்வெளி யானதோ
விடமொழுகு நெட்டெயிற்று
மண்டுவா சுகிதுண்ட மானதோ வின்னமொரு
வாலிக்கு வாலில்லையோ
மதியிலா மதியமே யிவனிளங் தாலெந்த
வகைசெலா தாகையாநீ
யண்டர்நா யகனெங்கள் செந்தில்வடி வேலனுட
னம்புலீ யாடவாவே
யருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுட
னம்புலீ யாடவாவே.

(இ-ள்) பண்டுபோல்-முன்போலவே, இன் அமுதம்-இனிய தேவாமிர்தத்தை, இன்னம்-இன்னும் ஒருமுறை, கடைந்திட-கடைந்தெடுப்பதற்கு, பழைய மந்தரம் இல்லையோ-பழைய மந்தரமலை இல்லையோ, படர்கடல் குண்டு அகழி - அகன்ற கடல் என்று ஆழ்ந்த அகழி, அளறுக-சேறுகி, வற்றி - வற்றிப்போய், இப்பாரினில்-இவ்வுலகிலே, திடரானதோ-மேடாகிப்போய் விட்டதோ, விண் தலத்து அமரர்களும் - தேவலோகத்தில் உள்ள தேவர்களும், அமரேசனும்-தேவேந்திரனும், சேர வீடி-ஒருங்கே இறந்து, நீடு அந்தகாரம் மேவி-மிக்க இருள்தோன்றி, எழு பகிரண்ட கூடம் வெளியானதோ-எழு உலகங்களும் வெளியாகிவிட்டனவோ, விடம் ஒழுகு - விஷம் ஒழுகுகின்ற, நெட்டெயிறு-நீண்ட பற்களையுடைய, மண்டு வாசுகி துண்டமானதோ-பாய்ந்து வருகின்ற வாசுகி என்னும் பாம்பு துண்டமாயிற்றே, இன்னம்

ஒரு வாலிக்கு வால் இல்லையோ-இன்னொரு வாலிக்கு வால் இல்லாது போயிற்றோ, மதியிலா மதியமே-அறிவில்லாத மதியமே, இவன் நினைந்தால் - இம்முருகன் திருவுளங்கொண்டால், எந்த வகை செலாது-எவ்வகை நடவாது, ஆகையால் நீ-ஆதலால் நீ, அண்டர் நாயகன்-தேவர் தலைவனாகிய, எங்கள் செந்தில்வடிவேலனுடன்-எங்கள் திருச்செந்தூர் முருகப்பிரானோடு, அம்புலீ ஆடவாவே-சந்திரனே விளையாட வருக, அருவரைகள் - பெரிய மலைகள், கிடுகிடு என-நடுங்கும்படி, மயில் கடவு முருகனுடன்- மயிலைச் செலுத்தும் முருகனுடன், அம்புலீ ஆடவாவே - சந்திரனே விளையாட வருக.

அமரர்-மரணம் இல்லாதவர், தேவர், அமர + ஈசன், அமரேசன், தேவர் தலைவன், வீடுதல்-மரித்தல், மதியம் பாற்கடலில் பிறந்தவனாதலால், "நீ இப்பொழுது கூப்பிட்டவுடன் வராவிட்டால் இன்னொருமுறை கடைந்தும் பாற்கடலிலிருந்து உன்னைப் பெற்றுக்கொள்வோம்" என்பது தோன்ற இச்செய்யுள் அமைக்கப்பட்டது. பாற்கடல் கடைய முயன்றோரும் துணை நின்றோரும் இச்செய்யுளிற் சொல்லப்பட்டிருத்தல் சிந்திக்கத் தக்கது. திருமால் நெஞ்சிலும், அத்திரி முனிவர்கண்ணிலும், யாகாக்கினியிலும், பாற்கடலிலும், பிரமன் படைப்பிலும் சந்திரன் பிறந்தான் என்பது புராண வரலாறு.

69 வட்டமா கத்துள்வெளி வடிவுகொள லாலென்று
மானைத் தரித்திடுகையான்
மந்தா கினித்தரங் கத்துவள மெய்தலான்
மன்னுங் கணஞ்சூழ்தலா
விட்டமொடு பேரிரவில் வீறுபெற லாலுலகி
லெவருந் துதித்திடுதலா
லிரவுகண் ணுறுதலா லிடபத்திலேறலா
லேமமால் வரையெய்தலான்

முட்டமறை வேள்விக் குரித்தாகை யால்வெவ்ய
மூரியர வுக்குடைதலான்
முக்கணுமை பங்கனொ ரொக்குநீ யென்றுதிரு
முகமலர்ந் துனையழைத்தான்
அட்டபோ கம்பெறுவை செந்தில்வடி வேலனுட
னம்புலீ யாடவாவே
யருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுட
னம்புலீ யாடவாவே.

இச்செய்யுள் சிலேடையணி பெற்றது. இருபொருளும் முறையே உரைக்கப்படும். முதற்கண் சந்திரனுக்கும் பிறகு சிவபிரானுக்கும் பொருந்த உரைக்கப்படும்.

(இ-ள்) வட்டமாகத்துள்-வட்டவடிவாகத்தோன்றுகிற ஆகாயத்திலே, வெள்ளி வடிவுகொளலால்-வெண்மையான வடிவுகொண்டிருப்பதால், என்றும்மானைத்தரித்திடுகையால்-என்றும்தனது உருவத்துள் களங்கமாகிய மானை அடக்கிக் கொண்டிருத்தலால், மந்தாகினிதரங்கத்து வளம் எய்தலால்-ஆகாய வீதியில் ஓடுகிற கங்கையின் அலைகளின் வளம் பொருந்தியிருப்பதால், மன்னும்-கணம் சூழ்தலால்-நிலையாய் அமைந்த தாரா கணங்கள் சூழ்ந்திருப்பதால், இட்டமொடு - விருப்பத்தோடு, பேரிரவில் வீறுபெறலால்-பெரிய இராக்காலத்திலே பெருமை பெற்று விளங்கலால், உலகில் எவரும் துதித்திடுகையால் - உலகில் மக்கள் அனைவரும் வேத மந்திரங்களால் துதித்திடுதலால், இரவிகண்-உறுதலால்-அமாவாஸ்யைதோறும் சூரியனிடம் நெருங்குதலால், இடபத்தில் ஏறலால்-இடபராசியிலே சஞ்சரித்தலால், ஏமமால்வரை எய்தலால் - உலகின் நடுவணதாகிய பொன்மலையைச் சூழ்ந்து வருதலால், முட்டமறை வேள்விக்குரித்தாகையால்-முறைப்படி வேத மந்திரங்களை நிறையப் பிரயோகித்து இயற்றப்பெறும் யாகங்களிலே அழைத்தற்கு உரிமைபெற்றிருத்தலால், வெய்யமூரி அரவுக்கு உடைதலால்-கொடிய இராகு என்ற

பெரும் பாம்புக்கு தோற்றோடுதலால், முக்கண் உமைபங்கனர் ஒக்கும் நீ என்று - நீ முக்கண்களையுடைய உமைபங்கனாகிய சிவ பிரானுக்கு நிகராவை என்று, திருமுகம் மலர்ந்து - தனது அழ கிய முகம் மலர்ந்து, உனை அழைத்தான் - உன்னை முருகன் அழைத்தான், அட்டபோகம் பெறுவை-நீ எண் வகைச் செல் வங்களும் பெறுவை, செந்தில் வடிவேலனுடன் அம்புலீ ஆட வாவே, அருவரைகள் கிடுகிடென மயில் கடவுள் முருகனுடன் அம்புலீ யாடவாவே.

(சிவபிரானுக்கு)

வட்டம் ஆகத்துள் வெளிவடிவு கொளலால் - இலிங்காகார மாகிய தன் திருவுருவத்திலே சிதாகாச வுருவம் அமையப் பெறுதலால், என்றும் மானைத் தரித்திடுகையால்-எப்பொழுதும் மானை ஏந்தியிருக்கும் இடத்திருக்கரத்தை உடைமையால், மந் தாகினித் தரங்கத்து வளம் எய்தலால்-திருமுடியிலே பகீரதன் பொருட்டு அடக்கப்பெற்ற கங்கையலைவளம் பெற்றிருத்தலால், மன்னும் கணம் சூழ்தலால் - நிலைபெற்ற படைத்துணையாகிய சிவகணங்கள் சூழ்ந்திருத்தலால், இட்டமொடு பேரிரவில் வீறு பெறலால்-இட்டத்தொடு உலகமனைத்தும் ஒடுங்கிய ஸர்வ ஸம் ஹார காலத்திலே ஒப்பார் ஒருவருமின்றிய தனிப்பரம்பொரு ளாய் ஆனந்த தாண்டவம்புரிதலால், உலகில் எவரும் துதித் திடுதலால்-உலகில் எவரும் போற்றுதலால், இரவு கண்ணுறுத லால்-சூரியனாகிய வலக்கண்ணைப் பெற்றிருத்தலால், இடபத்தில் ஏறலால்-இடபவாகனத்தில் அமர்ந்து அருளுதலால், எம்மால் வரை எய்தலால்-பொன்மயமாகிய மாமேரு மலையை வில்லாக வளைத்து அம்பு எய்ததால், முட்டமறை வேள்விக் குரித்தாகை யால்-முற்றிலும் வைதிக யாகங்களின் பிரதான பாகத்துக்கு உரிய தலைமை பெற்றிருத்தலால், வெய்யமூரியரவு உக்கு உடை தலால்-கொடிய தாருகா வனத்து முனிவர் ஆபிசாரப் பிரயோ கத்தால் ஏவிய பெரிய பாம்பு தோற்று ஓடுதலால், முக்கண் உமைபங்கனர் ஒக்கும்.

இச்செய்யுளில் அமைந்துள்ள இவ்விரு பொருள்களின் நயமும் சிந்தித்து இன்புறத்தக்கது.

70 காதலா லெறிதிரைக் கடன்மகளிர் சிறுமகார்
கரையிற் குவித்தமுத்துங்
கருவாய் வலம்புரி யுமிழ்ந்தமணி முத்துமுட்
கண்டன்மடல் விண்டசுண்ணத்
தாதலரமடல் விளவாடை கொடுவருங்கானல்வெண்
சங்குநொந் தீற்றுளைந்து
தனியே யுகுத்தபரு முத்தமுந் தன்னிலே
சதகோடி நிலவெறிக்கு
மீதலா தொருசிறிது மிரவில்லை யெவருக்கு
மிரவில்லை நீயுமிங்கே
யேகினு னுடற் கறைதுடைத் திடுதலா
மென்பதற் கையமில்லை
யாதலா னீதிபுனை செந்தில்வடி வேலனுட
னம்புலீ யாடவாவே
யருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுட
னம்புலீ யாடவாவே.

(இ-ள்) காதலால்-அன்போடு, எறிதிரை-வீசும் அலைகளையுடைய, கடல்மகளிற்-கடலின் துறையில் வாழும் நுளைச்சியரது, சிறுமகார்-சிறு குழவியர்கள், கரையிற்குவித்த-கடற் கரையிற்குவித்துவைத்த, முத்தும்-முத்துக்களும் கருவாய்-சூல்கொண்ட, வலம்புரிஉமிழ்ந்த-வலம்புரிச்சங்குகள் ஈன்ற,மணிமுத்தும்-முத்துமணிகளும், முட்கண்டல்-முள்நிறைந்த தாழைகளின், மடல் விண்ட-மடல்கள் மலர்ந்து சிதறிய, சுண்ணத்தாதலர - மணம் நிறைந்த மகரந்தம் கலக்க, இளவாடை கொடுவரும்-இளமையாகிய வாடைக்காற்றுக்கள் கொண்டுவருகின்ற, கானல் வெண் சங்கு-கடற்கரை நிலங்களில் உள்ள வெண்சங்குகள், நொந்து

ஈற்றுளைந்து-சூலால் மிகவும் வருந்தி, தனியே உகுத்த பருமுத்தமும்-தனியே சிந்திச்சென்ற பெரு முத்தங்களும், தன்னிலே-முருகனிடம், சதகோடி நிலவெறிக்கும்-நூறு கோடி சந்திரர் ஒளியைத் தரும், ஈதலால்-அவன் வேண்டுவார் வேண்டுவதே ஈவான் ஆதலால், ஒரு சிறிதும் இரவில்லை-இங்கு ஒரு சிறிதும் யாசகம் இல்லை, எவருக்கும் இரவில்லை-எவர்க்கும் இங்கு இரா இல்லை, நீயும் இங்கே ஏகினல்-நீயும் இங்கே வந்தால், உனது உடற்கறை-துடைத்திடுதலாம் - உனது உடலில் உள்ள இருளாகிய களங்கத்தைத் துடைத்திடலாம், என்பதற்கு ஐயமில்லை-என்று கூறுதற்கு ஐயமில்லை. ஆதலால் நீதிபுனை செந்தில்வடி வேலனுடன் அம்புலீ யாடவாவே-ஆகையால் நீதியைப்புனைந்த திருச்செந்தூர் குமரனோடு அம்புலியேவிளையாடவருக, அருவரைகள் கிடுகிடெனமயில்கடவு முருகனுடன் அம்புலீயாடவாவே.

இங்கு பலவகை முத்துக்களின் ஒளியாற் பலகோடி சந்திரர் பிரகாசம் உண்டு. அம்புலியே நீ இங்கு வந்தால் உன் உடற் களங்கமும் துடைக்கப் பெறுவாய். இரவு-இரா இரவு-யாசகம். ஈதலால் இரவில்லை என்ற தொடர்க்கு இந்த ஒளியின் வெள்ளம் உண்டேயன்றி இங்கு இருள் இல்லை என்றும் உரைக்கலாம். எவருக்கும் இரவில்லை என்ற தொடர்க்கு எவர்க்கு முருகனே எவையும்நிறைவித்தால்இரக்கவேண்டியஅவசியம்இல்லைஎன்றும் பொருள் கூறலாம். திரைகளைக்கடல் மகளிராக உருவகம்செய்ததாகக் கொண்டு திரைகளில் ஊர்ந்து வந்து முத்து ஈனும் சிப்பிகளை அம்மகளிர் சிறுமகார் என்று உருவகித்ததாகவும் உரைக்கலாம்.

71 கடியவளி யெறியுந் தழைச்சிறைக் கூருகிர்க்
கருடவா கனனுமிகல்கூர்
கட்டைமுள் ளரைநாள நெட்டித ழுடுத்தபொற்
கமலயோ னியுமெழுந்து

கொடியவெங் கொலைபுரி வராகமென வொருவனெழு
குவலய மிடந்து தேடக்
குறித்தொருவ னெகினமா யண்டபகி ரண்டமுங்
கொழுதிக் குடைந்துதேட
முடியவிது காறுமவ ரறிவுறு வகைநின்ற
முழுமுதற் கடவுளடியும்
முடியுநீ கண்டனை யெனக்கருதி யின்றுதிரு
முகமலர்ந் துணையழைத்தான்
அடியவரை வாழ்வித்த செந்தில்வடி வேலனுட
னம்புலீ யாடவாவே
அருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுட
னம்புலீ யாடவாவே.

(இ-ள்) கடியவளி-பெரிய காற்றை, எறியும்-வீசுகிற, தழைச் சிறை - தழைத்த சிறகுகளையும், கூர் உகிர் - கூரிய நகங்களையும் உடைய, கருடவாகனனும்-கருடனை வாகனமாக வுடைய திருமாலும், இகல்கூர்-வலிமைமிக்க, கட்டைமுள்ளரை-பெரிய முட்களை அரைப்பகுதியில் உடைய, நாளநெட்டிதழ்-நாளத்திலே மலர்ந்த நீண்ட இதழ்களை, உடுத்த பொற்கமல யோனியும்-உடைய பொன் மயமான கமல மலரிற் பிறந்த பிரமதேவனும், எழுந்து-தம்தம் இடங்களிலிருந்து புறப்பட்டு, ஒருவன்-அவர்களுள் ஒருவனாகிய திருமால், கொடிய வெங்கொலைபுரி வராகமென-கொடுமைமிக்க கொலைகளைச்செய்யும் வராகா, எழு குவலயம்-எழு உலகங்களையும் இடந்துதேட-தனது கோட்டாற்குத்திப்பிளந்து கொண்டு தேடவும், ஒருவன்-மற்றொருவனாகிய பிரமதேவன், குறித்து - தன மனத்திலே சங்கற்பித்து, எகினமாய் - அன்னப்பறவையாய், அண்டபகிரண்டமும்-உள்ளண்டங்களையும் வெளியண்டங்களையும், கொழுதிக்குடைந்துதேட - கிண்டிக்கிளைத்துக்கொண்டுதேடவும், அவர்-அவ்விருவரும், இதுகாறும் - இன்றளவும், முடிய அறிவுறு வகை-முழுவதும் அறியக்கூடாத வகையில், நின்ற-தேஜோமய

மாய் நிமிர்ந்து நின்ற, முழுமுதற்கடவுள்-முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானது, அடியும் முடியும்-கழன் மலரையும் திருமுடியையும், நீ கண்டனை எனக்கருதி-நீ கண்டிருக்கின்றாய் என்பது கருதி, இன்று திருமுகமலர்ந்து உனை அழைத்தான் - இன்று முருகப்பிரான் தன் திருவாய்மலர்ந்து உன்னை விளையாட அழைத்தான், அடியவரை வாழ்வித்த-தன்னை அடைந்த அடியார்களைப் பெருவாழ்வுபெற அருளிய, செந்தில் வடிவேலனுடன்-அத்திருச் செந்தூர் முருகனோடு, அம்புலீ ஆடவாவே-அம்புலியே விளையாட வருக, அருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுடன் அம்புலீ ஆடவாவே.

ஆசிரியர் வைணவராயிருந்தும் இச்செய்யுளை இங்ஙனம் அமைத்திருப்பது அவரது மனத்தின் தூய்மையை விளக்குகிறது. சிவபிரான் ஒளிப்பிழம்பாய் நிமிர்ந்து நிற்க, அரியும் அயனும் வராகமும் அன்னமுமாய் அவனைப் பலவாண்டுகள் முயன்று தேடியும் அடிமுடி காணாராயினர் என்பது அருணசல புராண வரலாறு. இச்செய்தியைச் சைவச் சார்புள்ள புராணங்களும் தோத்திரச் செய்யுட்களும் வலியுறுத்தும். வைணவச் சார்பு கொண்ட நூல்களிலே இச்செய்தி கேட்கப்படுதலில்லை. முருகப் பிரானைப் போற்ற எழுந்த இந்நூலிலே முருகன் சிவபிரான் அமிசமேயாதலால் அம்புலியை அறிவுறுத்து முகத்தால் இச்செய்தி சொல்லப்பெற்றது. அரியும் அயனும் காணாத அடிமுடிகளைச் சந்திரன் கண்டுளான் என்றது இப்பருவத்து நான்காஞ் செய்யுளில் வந்த 'உன் உடலையும் புழுதியிற் றேய்த்தது என்ற புராணச் செய்தியையும் இளம் பிறையாகிச் சிவபிரான் முடியில் இயைந்திருக்க அவன் பெற்ற பேற்றையும் நினைவூட்டுவதாகும்.

72 பெரியமா கத்துணி வருவையிவன் வஞ்சகம்
பேசுமா கத்துள்வாரான்
பெருகநீ வேலையிற் புகுவா யிவன்பார்
பிளக்கவோ வேலைவிட்டான்

உரியமா குணவரையி லுறுவைநீ யிவனன்
புறுதகுண வரையேயுறான்
உடலிலே முழுமறு வுனக்குண் டிவன்றனக்
கொருமறவு மில்லைமீளக்
கரியமா முகிலிலே மறைவைநீ யிவனெடுங்
கரியமா முகிலின்மறையான்
கருதிநீ யிவையெலா முணரிவன் பெருமையைக்
கண்டுநீ யங்கிராதே
யரியமா தவனெங்கள் செந்தில்வடி வேலனுட
னம்புலீ யாடவாவே
யருவரைகள் திடுகிடென மயில்கடவு முருகனுட
னம்புலீ யாடவாவே.

(இ-ள்) நீ பெரிய மாகத்துள் வருவை-நீ பெரிய ஆகாயத்தில் வருவாய், இவன் வஞ்சகம் பேசும் ஆகத்துள் வாரான்-இவன் வஞ்சகச் சொற்களைப் பேசுவார் மனத்துள் வாரான், பெருக நீ வேலையிற் புகுவாய்-நீ மிகவும் கடலிலே குளிப்பாய், இவன் பார் பிளக்கவோ வேலைவிட்டான்-இவனோ நிலம் பிளக்கக்கடல் சுவற வேலைவிட்டான், உரியமா குணவரையில் உறுவைநீ-நீ உனக்குரிய கிழக்கு மலையில் உதித்து எழுவாய், இவன் அன்புறுத குண வரையே உறான்-இவன் அன்பிலாத குணத்தினரை அணுகான், உடலிலே முழுமறு உனக்கு உண்டு-உனக்கு உடலிலே முயற் கறையாகிய பெரிய மறு உண்டு, இவன் தனக்கு ஒரு மறுவும் இல்லை - இவனுக்கு ஒருவகைக்கறையும் இல்லை, மீள - மேலும், மீண்டுவருமாறு, கரியமாமுகிலிலே மறைவைநீ-கரியநிறமுடைய பெரிய மேகத்திலே நீ மறைவாய், இவன் நெடுங்கரிய மாமுகிலில் மறையான்-இவன் பெரிய கரிய மேகங்களால் தோல்வியுறான், கருதி நீ இவையெலாம் உணர்-ஆராய்ந்து பார்த்து நீ இவற்றை யெல்லாம் உணர்வாயாக, இவன் பெருமையைக்கண்டு-இவனது உண்மைப் பெருமையை உணர்ந்துகொண்டு, நீ அங்கிராது - நீ

அங்கே இராமல், அரிய மாதவன்-அரும்பெருந்தவனாகிய, எங்கள் செந்தில் வடிவேலனுடன் - எங்கள் திருச்செந்தூர் முருகனோடு, அம்புலீ ஆடவாவே-சந்திரனே விளையாட வருக, அருவரைகள் கிடுகிடென மயில் கடவு முருகனுடன் அம்புலீயாட வாவே.

இச்செய்யுள் முருகனுக்கும் அம்புலிக்கும் உள்ள தாரதம்யத்தைச் சொல் நயத்தோடு கூறுகின்றது. வேலைவிட்டான் முகிலில் மறையான் என்ற செய்திகள் திருவாலவாய்த் திருவிளையாடலிலே உக்கிர குமாரனாய் அவதரித்த முருகப்பிரான் செயல்களாக வரும் புராண வரலாற்றுச் செய்திகளாகும். வருணன்விட்ட மேகங்களை இங்குக் குறிப்பிட்டார்.

73 பரியநிழ றன்னைச் சுளித்துவெயி லொடுபொருது
  பாதசங் கிலியை நூறிப்
பாரிசா தத்தருவை யிடுகுள கெனக்கவுட்
  பகுவாய் புகக்குதட்டித்
தரியலர் நகர்ப்புறத் தெயிலிடு கபாடந்
  தனைத்தூள் படுத்தியவர்பொற்
றருணமணி முடியிடறி முறைமுறை யழைக்குந்
  தழைச்செவிப் பிறைமருப்புச்
சொரியுமத தாரைக் குறுங்கட் பெருங்கொலைத்
  துடியடிப் புகரொருத்தல்
துங்கவே ளிவனுடைய முன்றிற் புறத்திற்
  றளைக்கா நிமிர்த்துநிற்கு
மரியகரு நாகமென வெருவல்கொல் லிவனுட
  னம்புலீ யாடவாவே
யருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுட
  னம்புலீ யாடவாவே.

(இ-ள்) பரிய நிழல் தன்னைச்சுளித்து-பெரிய தனது நிழலைப்பார்த்துச் சினந்து, வெயிலொடு பொருது - வெயிலோடு எதிர்த்துப் போராடி, பாத சங்கிலியை நூறி-தனது காற் சங்கிலியை அறுத்தெறிந்து, பாரிசாதத்தருவை-பாரிசாத மரத்தை இடுகுளகென-தனக்கு உணவாக இட்ட இலையென, கவுட்பகு வாய் புகக்குதட்டி-கன்னத்துக்கருகில் உள்ள பிளந்தவாயிற் புகுமாறு கடித்து, தரியலர்-பகைவராகிய அவுணரது, நகர்ப்புறத்து-நகரின் வெளியிலே, எயில் இடு-அமைந்த அரணின் முன்புறம் உள்ள, கபாடம் தனைத்தூள்படுத்தி-கதவைத் தூளாக்கி, அவர்-அவர்களது, பொன்தருண மணிமுடி இடறி-இளமையான மணிகள் அழுத்திய முடிகளை இடறி, முறை முறை அழைக்கும்-பின்னும் பலரை முறைப்படி போர்க்கு அழைக்கின்ற, தழைச்செவி-அகன்ற செவியும், பிறை மருப்பு-பிறைபோல் வளைந்த தந்தமும், சொரியும் மததாரை - பொழிகின்ற மததாரையும், குறுங்கண்-சிறிய கண்களும், பெருங்கோலை-பெரிய கோலத்தொழிலும், துடியடி-உடுக்குப்போன்ற கால்களும் உடைய, புகர் ஒருத்தல்-முகப்புள்ளிகளையுடைய யானையானது, துங்கம்-பெருமை சிறந்த, வேள்-அழகனாகிய, இவனுடைய--இம்முருகனுடைய, முன்றிற் புறத்தில்-வாயிற்புறத்தே, துளைக்கரம்-தனது துளையுடன் கூடிய கையை, நிமிர்ந்து நிற்கும்-உயர்த்தி நிற்கும், அரிய கருநாகம் என வெருவல்கொல் - அதனைக்கண்டு அரிய கரும்பாம்போ என்று அஞ்சாதே, இவனுடன் அம்புலீ ஆடவாவே, அருவரைகள் கிடுகிடென மயில் கடவு முருகனுடன் அம்புலீயாடவாவே.

நிழலைச் சுளித்தல் வெயிலொடு பொருதல் முதலியன மதங்கொண்ட யானையின் செயல்களாம். ஒருத்தல் - யானை, புகர் - புள்ளி, முருகப்பிரானுக்கு யானை வாகனம் ஒன்று உண்டு என்றும் அதன் பெயர் பிணிமுகம் என்றும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறுவர். இச்செய்யுளில் அவ்யானை குறிக்கப்பட்டது என்று கொள்ளலாம். அன்றித் திருச்செந்தூர் முருகன் கோயிலில் முன்னிற்கும் யானையைக் குறிப்பிட்டதாகவும் உரைக்கலாம்.

## எட்டாவது
## சிறுபறைப் பருவம்.

---

குழவி சிறுபறை கொட்டி விளையாடுவதைத் தெரிவிக்கும் பருவம் சிறுபறைப் பருவமாம். இஃது சிறுவர்க்கு இயல்பே என்பதை இன்றும் கண்கூடாகக் காணலாம். இப் பருவத்தே சிறுபறை முழக்கியருள்கவென்ற வேண்டுகோள் ஒவ்வொரு செய்யுளிலும் வெளியிடப்பெறும்.

74 பொருவாகை சூடுமர வக்கொடிக் குருகுலப்
பூபால ரேறுமந்தப்
பூபால னுக்கிளைய துணைவர்நூற் றுவரும்பொ
ருபதினெட் டக்குரோணி
யொருவாய்மை சொற்றபடை வீருருஞ் செருவினி
லுருத்தெழலு நீதியைவ
ருடனுகை நின்றுபற் குனன்மணித் தேரினுக்
குள்ளசா ரதியாகவும்
மருவார்க டானையிற் பட்டவர்த் தனர்மகுட
வர்த்தன ரடங்கலும்போய்
மயங்கவொரு நாள்விசய னுக்குவிச யம்பெருக
மண்ணேழு முண்டுமிழ்ந்த
திருவாய் வலம்புரி முழக்குதிரு மான்மருக
சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபா நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே.

(இ-ள்) பொருவாகை சூடும்-போர்க்குரிய வாகை மாலையை அணிந்த, அரவக்கொடி-அரவம் எழுதிய கொடியையுடைய, குரு குலப் பூபாலர் ஏறும்-குருவமிசத்து அரசர் தலைவனாகிய துரியோ

தனனும், அந்தப் பூபாலனுக்கிளைய துணைவர் நூற்றுவரும் - அந்த அரசனுக்கு இளையார்களாகிய சகோதரர் நூற்றுவரும், பொரு பதினெட் டக்குரோணி - போர் புரியவந்த பதினெட்டு அக்குரோணி கணக்கினராகிய, ஒருவாய்மை சொற்றபடை வீரரும்- உண்மை கூறிய படைவீரர்களும், செருவினில் உருத்து எழவும்- போரில் எதிர்த்து எழுந்து வரவும், நீதிஐவர் உடனாக நின்று- நீதியைக் கடைப்பிடித்த பாண்டவர் பக்கத்தில் நின்று, பற்குனன்-அர்ச்சுனனது, மணித்தேரினுக்கு - அழகிய தேருக்கு, உள்ள சாரதியாகி-ஏற்ற சாரதியும் ஆகி, அம்மருவார்கள் தானையில்-அந்தப் பகைவர்களது படையிலே, பட்டவர்த்தனர்-மகுடவர்த்தனர் அ...ங்கலும் - பட்ட வர்த்தனரும் மகுட வர்த்தனரும் பிறரும் ஆகிய எல்லாப் படைஞர்களும், போய் மயங்க-மயங்கும்படி, ஒருநாள் விசயனுக்கு விசயம் பெருக-அருச்சுனனுக்கு ஒரு நாள் வெற்றி பெருகும்படி, மண் எழும் உண்டு உமிழ்ந்த - எழு உலகங்களையும் உண்டு உமிழ்ந்த, திருவாய் - அழகிய வாயால், வலம்புரி முழக்கும்-வலம்புரிச்சங்கை முழக்கியருளிய, திருமால் மருக-கண்ணபிரான் மருகனே, சிறுபறை முழக்கியருள் - சிறு பறையை முழக்கியருள்வாயாக, செருவில் - போரில், எதிர் பொருத-எதிர்த்துப் போராடிய, பரநிருதர் குலகலகனே-அயல் அசுரர் குலத்தை அழித்த வீரனே, சிறுபறை முழக்கியருள்-சிறு பறையை முழக்கியருள்வாயாக.

கண்ணபிரான் பாண்டவ சகாயனாக நின்ற பாரதச் செய்தி இங்குச் சுருக்கிக் கூறப்பட்டது. பீஷ்ம பர்வத்தில் பத்தாம் போரில் பாண்டவர் படை மிகவும் கலக்கப்பட்ட நிலையிற் கண்ணபிரான், சங்கு முழக்கிய அருட்சிறப்பு விவரிக்கப்பட்டுள்ளது. இதனை வில்லிபுத்தூரார்,

"ஓதம் வந்தெழுந்ததென மேகநின்றதிர்ந்ததென ஆழியும்
[பெயர்ந்ததெனவே
மாதிரங்களுஞ் செவிடு போயகண்டமும் பொதுளி வாய்
[பிளந்த தண்டமுகடும்

சீதரன் செழுந்துளப மாதவன் றயங்கருண சீதபங்கயக்
[கொடிருவி
ஞுதன்வெஞ்சமங்கருதி யூதுகின்ற சங்கின் முழுநாதம் வந்
[தெழுந்த பொழுதே.

என்று பாடி வருணிப்பர். பற்குனன் - அர்ச்சுனன், பூபாலன்-அரசன், மருவார் - பகைவர், பட்டவர்த்தனர் - பட்டம் பெற்ற வீரர் தலைவர், மகுடவர்த்தனர் - மகுடாதிபதிகளாகிய அரசத்துணைவர்கள்.

75 முருந்தாரு மணிமுறுவ னெய்தனில மகளிரிள
முகிழ்முலை தனக்குடைந்து
முளரிமுகை நீரிற் குளித்துநின் ருெருதாளின்
முற்றியத வம்புரியவெங்
கருந்தாரை நெட்டிலைப் புகர்வே லெனப்பொருங்
கட்கடைக் குள்ளுடைந்து
காவிமலர் பங்கப் படக்கருங் குழல்கண்டு
கரியமுகி லுடல்வெளுத்துப்
பொருந்தாம லோடியந் தரசாரி யாயொரு
பொருப்பேற வளமையேறும்
புகழேற வாழுந் திருச்செந்தி லாயுனது
பொற்ருள் வணக்கமுற்றுத்
திருந்தார்க ணெஞ்சம் பெருப்பறை முழக்கநீ
சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே.

(இ-ள்) முருந்து ஆரும் - மயிலிறகின் அடிக் குருத்துப் போன்ற, மணிமுறுவல்-அழகிய பற்களையுடைய, நெய்தல் நில மகளிர்-நெய்தல் நிலத்தில் வாழும் பெண்களது, முகிழ் முலை

தனக்கு உடைந்து - முகிழ்போன்ற தனங்களுக்குத் தோற்று, முளரி முகை - தாமரை மொட்டு, நீரிற்குளித்து - தண்ணீரிலே குளித்து, ஒருதாளில் நின்று - ஒருதாளிலே நின்று, முற்றிய தவம் புரிய-முதிர்ந்த தவம்புரிய, வெங்கருந்தாரை - விரும் பத்தக்க கருநிறமும் கூர்மையு முடைய, நெட்டிலை - நீண்ட இலையுருவமுள்ள, புகர்வேல்எனப்பொரும்-உயர்வுள்ள வேல் போலப் பிறழ்கின்ற, கட்கடைக்கு-அப்பெண்டிர் கடைக்கண் களுக்கு, உள் உடைந்து-தோற்று, காவிமலர்-குவளைமலர், பங்கப் பட-சிறுமையடைய, கருங்குழல் கண்டு-அப்பெண்டிரது கரிய கூந்தலைக்கண்டு, கரிய முகில்-கரிய மேகங்கள், உடல்வெளுத்து- தம்உடல் வெளுப்புற்று, பொருந்தாமல்ஓடி-ஒரு இடத்தில் நில்லாமல் ஓடி, அந்தரசாரியாய்-ஆகாச ஸஞ்சாரியாய், ஒரு பொருப்பேற-ஒரு மலையின் மேல்ஏற, வளமையேறும்-செல்வம் மிக்கதால் வரும், புகழேற-புகழ் மிகப் பெற்றுள்ள, திருச்செந்தி லாய்-திருச்செந்தூர்த் திருப்பதியிற் கோயில் கொண்ட முருகப் பெருமானே, உனது பொற்றாள் வணக்கமுற்று-உனது அழகிய பாதங்களை வணங்கி, திருந்தார்கள் கொஞ்சம் பெரும்பறைமுழக்க பகைவர் மனமானது அஞ்சி நடுங்குவதாற் பெரும் பறைமுழக்க, நீ சிறு பறை முழக்கியருளே-நீ சிறுபறை முழக்கியருள்க, செருவில் எதிர் பொருதபரநிருதர் குலகலகனே சிறுபறை முழக்கியருள்.

முளரி முகை நீரிற்குளித்து ஒருதாளில் நிற்றல் இயல்பே யாயினும் அச்செய்கை இங்கு நெய்தனில மகளிர் தனங்களுக்கு உடைந்து முளரி தவஞ்செய்யும் செயலாக வருணிக்கப்பட்டது. காவிமலர் சேற்றிலிருத்தல் இயல்பே. அது பங்கப்பட்டது கட் கடைக்கு உடைந்ததனுல் என்றது கவிஞர் கருத்தாம். பங்கம்- சேறு, சிறுமை-முகில், கரியவுடல் வெளுத்தலும் அந்தரசாரியா தலும் பொருப்பேறுதலும் இயல்பே. அச் செய்கைகள் இப் பெண்டிர் குழலுக்கு உடைந்தமையால் நேர்வனவே என்றது புலவர் கருத்தாம். பெரும்பறை முழக்கச்சிறுபறை முழக்கி

யருள் என்றது சொல் முரண் ஆகும். இச்செய்யுளிள் முற்பகுதி தற்குறிப்பேற்ற வணிபெற்றது. முருந்து-மயில் இறகின் அடியில் வெண்ணிறமாகத் தோன்றும் குருத்து, முகிழ் - முகிழ்ப்பது, அரும்பு, முளரி-தாமரை, தாரை-கூர்மை, புகர்-உயர்வு, சிறப்பு.

76 கங்கையணி யுஞ்சடையில் வைத்தகுழ விப்பிறைக்
கடவுளா லயமனைத்தும்
கங்குற் கருங்கடல் கழிந்தவை கறையிற்
கலித்தவால் வளைமுழக்கும்
பங்கய மலர்ப்பொகுட் டிதழ்வாய் துளிக்கும்
பசுந்தேற லுண்டுமெள்ளப்
பலகோடி சஞ்சரீ கப்படலை பெடையொடு
படிந்துபல கான்முழக்கும்
வெங்கய முடக்கும் புழைக்கர நிமிர்த்துவெளி
மேகநீ ரைக்குடித்து
வீதிவாய் நின்றுபிளி றித்தின முழக்கும்வெறி
வெண்டிரைக் குண்டகழியிற்
செங்கயன் முழக்குந் திருச்செந்தில் வேலனே
சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே.

(இ-ள்) கங்கை அணியும் சடையில்-கங்கை நதியை அணிந்த சடாபாரத்திலே, வைத்த-பொருத்திவைத்த, குழவிப்பிறைக் கடவுள்-இளம்பிறையை உடைய சிவபெருமானது, ஆலயம் அனைத்தும்-திருக்கோயில்களிலெல்லாம், கங்குற் கருங்கடல்-இருள் என்னும் கரியகடல், கழிந்த வைகறையில்-கழிந்த பிறகு வரும் விடியற்காலத்தில், கலித்த-ஒலிமிக்க, வால் வளை முழக்கும் - வெள்ளிய சங்குகள் முழக்கம் செய்யும், பங்கய மலர்ப்பொகுட்டு இதழ்

வாய் துளிக்கும்-தாமரையின் அழகிய அரும்பின் இதழிலிருந்து துளிக்கின்ற, பசுந்தேறல் உண்டு-பசுந்தேனை உண்டு, மெள்ள-மெல்ல, பலகோடி சஞ்சரீகப் படலை - கோடிக்கணக்கான வண்டின் கூட்டங்கள், பெடையொடு படிந்து பலகால் முழக்கும்-பெண் வண்டுகளோடு கலந்து உறவாடிப் பலமுறை பாடல் முழக்கும், வெங்கயம்-கோபம் மிக்க யானைகள், முடக்கும்-வளைந்திருக்கிற, புழைக்கரம் நிமிர்த்து - துவாரமுள்ள தும்பிக்கையை நிமிர்த்து, வெளி மேக நீரைக் குடித்து-ஆகாயத்திலே சஞ்சரிக்கும் மேகத்தின் நீரைக் குடித்து, வீதிவாய் நின்று பிளிறி - வீதியிலே நின்று பிளிறிக்கொண்டு, தினம் முழக்கும்-தினந்தோறும் முழக்கம் செய்யும், வெறி வெண் திரை-நாற்றம்மிக்க வெண்மையான அலைகளையுடைய, குண்டு அகழியில் - ஆழ்ந்த கடலிலே, செங்கயல் முழக்கும் திருச்செந்தில் வேலனே - செந்நிறமான கயல் மீன்கள் ஓடும் விரைவால் முழங்குகிற திருச்செந்தூரிற் கோயில்கொண்ட முருகப்பிரானே, சிறுபறை முழக்கியருள்-செருவில் எதிர்பொருத பரநிருதர் குலகலகனே சிறுபறை முழக்கியருள்.

முழக்கும், முன்னையன முற்றுக்கள், இறுதியது எச்சம், சஞ்சரிகம்-வண்டு.

77 காவான பாரிசா தத்தருக் குலநிழற்
கடவுடெரு வீதிதோறும்
கடிமணப் புதுமங் கலத்தொனி முழக்கமுகை
கட்டவிழ்த் திதழுடைக்கும்
பூவா ரிலைத்தொடைய லளகா புரேசன்
புரந்தொறுங் குளிறுமுரசம்
பொம்மென முழக்கமன் மதனுடைய பல்லியப்
பொங்குதெண் டிரைமுழக்க

பாவாணர் மங்கலக் கவிவாழி பாடிப்
பரிந்துதிண் டிமமுழக்கப்
பாவரிய திருவிழா வென்றுபல பல்லியம்
பட்டினந் தொறு முழக்கத்
தேவாதி தேவருயர் சதுமறை முழக்கநீ
சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே.

(இ-ள்) கா ஆன-கற்பகச்சோலையிலே வளர்ந்த, பாரிசாதத் தருக்குல நிழல்-பாரிசாத மரக்கூட்டங்களின் நிழலிலே வீற்றிருக்கும், கடவுள்-இந்திரனது, தெருவீதி தோறும்-அமராவதி நகரத்து வீதிகள்தோறும், கடிமணப் புதுமங்கலத் தொனி முழக்க-மணவினைக்குரிய புதுமையான மங்கள வாத்தியங்கள் முழங்க, முகை கட்டவிழ்த்து இதழ் உடைக்கும்-அரும்புகளின் கட்டை அவிழ்த்து மலரச்செய்யும் நிலையில் உள்ள, பூவார் இலைத் தொடையல்-பூக்கள் நிறைந்த இலைகளால் தொடுத்த மாலையை அணிந்த, அளகாபுரேசன் புரந்தொறும் - அளகாபுரி அரசனாகிய குபேரனது நகரங்களிலெல்லாம், குளிறு முரசம்-முழங்குகின்ற முரசம், பொம் என முழக்க-பொம் என்னும் ஒலியோடு முழங்க, மன்மதனுடைய பல்லியம்-மன்மதனுடைய முரச வாத்தியமாகிய பொங்கு தெண்டிரை முழக்க-பொங்குகிற தெளிந்த அலைகளையுடைய கடல் முழங்க, பாவாணர்-புலவர்கள், மங்கலக்கவி வாழி பாடி-மங்களமான வாழ்த்துக் கவிகள் பாடி, பரிந்து திண்டிமம் முழக்க-அன்பொடு உனது வெற்றியைக் குறித்து திண்டிமம் என்ற சிறு முரசை முழக்க, பாவரிய திருவிழா என்று-புகழ்தற்கரிய திருவிழா என்று, பல பல்லியம்-பலவகை வாத்தியங்கள், பட்டினந்தொறும் முழக்க-பட்டினங்களிலெல்லாம் முழங்க, தேவாதி தேவர்-தேவர் தலைவரும் பிற தேவர்களும், உயர் சதுமறை முழக்க-உயர்ந்த நான்கு வேதங்களை முழக்க, நீ சிறுபறை முழக்

யருள், செருவில் எதிர்பொருத பரநிருதர் குலகலகனே சிறு பறை முழக்கியருள்.

தருநிழற் கடவுள் - இந்திரன், மன்மதனுடைய பல்லியம்- கடல் முரசு.

78 வரைவாய் முழக்குங் கடாயானை வெங்கூன்
மருப்பில்விளை முத்துமிளவேய்
மணிமுத்து மடுபாலை வனசுரத்திற்கரு
வராகத்தின் முத்துமண்ட
ருரைவாய் முழக்கும் பெரும்புறவி லுந்திரத்
துமிழுமணி முத்துமள்ள
ரொளியரு மருதவே லிச்செந்நெல் கன்னறரு
மொளுமுத்து மோங்குநெய்தற்
கரைவாய் முழக்குமுட் கூனல்வெண் பணிலங்
கடுஞ்சூ லுளைந்துகான்ற
கதிர்முத்து மொக்கக்கொழித்துவருபொருநையாய்
கழிதொறுங் கயல்குதிக்கத்
திரைவாய் முழங்குந் திருச்செந்தில் வேலனே
சிறுபறை முழக்கி யருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே.

(இ-ள்) வரைவாய்--மலையினிடம், முழக்கும்--பிளிறுகின்ற, கடாயானை-மதயானைகளின், வெங்கூன் மருப்பில்-கொடுமையும் வளைவும் உள்ள கொம்பிலே, விளைமுத்தும்-விளைந்த முத்தும், இளவேய் மணிமுத்தும் - இளமையான மூங்கிலின் மணிமுத்தும், அடுபாலைவன சுரத்தில் - அடைந்தவர்களைக் கொல்கிற பாலை நிலத்திலே தோன்றும், கருவராகத்தின் முத்தும் - கரும்பன்றி

யின் கோட்டில் விளையும் முத்தும், அண்டர் உரை வாய்முழக்கும்-ஆயர்கள் தமக்குரிய சொற்கள் பேசி வாழ்கின்ற, பெரும்புறவில்-பெருங்காட்டிலே, உந்தி நந்து உமிழு மணிமுத்தும்-உந்திப்போய்ச் சங்குகள் ஈனுகிற அழகிய முத்தும், மள்ளர்-உழவர் வாழ்கிற, ஒளி அரு-ஒளிகுறையாத, மருத வேலி-மருத நிலத்திலே, செந்நெல் கன்னல்தரும் ஒளி முத்தும் - செந்நெல்லும் கரும்பும் தருகின்ற ஒளிமிக்க முத்தும், ஓங்கு நெய்தற் கரைவாய்-மணல் உயர்ந்த நெய்தல் நிலத்துக் கடற்கரையிடத்தே, முழக்கும்-முழங்குகிற, முட்கூனல் வெண் பணிலம் - முள்ளும் வளைவும் பொருந்திய வெண் சங்குகள், கடுஞ்சூல் உளைந்து-கடுமையான கருப்ப வேதனையடைந்து, கான்ற-ஈன்ற, கதிர்முத்தும்-ஒளிமிக்க முத்தும், ஒக்கக் கொழித்து வரு பொருநையாய்-ஒருசேரக்கொழித்து வருகிற பொருநையாற்றின் தலைவனே, கழிதொறும் கயல் குதிக்க-கழிகளிலே கயல் மீன்கள் குதித்தலால், திரைவாய் முழக்கும் திருச்செந்தில் வேலனே-அலைகள் மிக்க முழக்கம் செய்யும் திருச்செந்தூர் முருகனே, சிறுபறை முழக்கியருள், செருவில் எதிர்பொருத பரநிருதர் குல கலகனே சிறு பறை முழக்கியருள்.

இச் செய்யுளில் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்ற நானில முத்தங்களும் பொருநையில் வரும் என்பது குறிப்பிடப் பட்டுளது.

79 முனைவாளை வடிவேலைவடுவைவெங் கடுவையிதழ்
முளரியைப் பிணையைமதவேள்
மோகவா ளியையடு சகோரத்தை வென்றுகுழை
முட்டிமீ ளுங்கண்மடவார்
நினைவாளை வாண்முறுவ லாடியிள முலையாளை
நேர்நேர் நிறுத்திநெய்த
னீடுமள காடவி வனத்திற் பிணித்துவெண்
ணித்தில வடங்தெரிந்து

புனைவாளை நாண்முடி விளம்பிநடு வாளைமென்
போதிலுறை வாளையொப்புப்
பொலிவாளை நின்றுகளை களைவாளை நாடிவிளை
போங்கழி கடந்துமெள்ளச்
சினைவாளை பாயுந் திருச்செந்தில் வேலனே
சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே.

(இ-ள்) முனை வாளை-கூரிய வாட் படையையும், வடிவேலை-தீட்டப்பெற்ற வேலையும், வடுவை-மாவடுவையும், வெங்கடுவை-கொடிய விடத்தையும், இதழ் முளரியை-பல இதழ்களையுடைய தாமரை மலரையும், பிணையை-பெண்மானையும், மதவேள்-மன்மதனது, மோக வாளியை-மோகத்தைத் தரும் நீலோற்பலம் என்னும் மலரம்பையும், அடு சகோரத்தை-பிரிந்தவர் மனத்தை வாட்டும் சக்கரவாக பட்சியையும், வென்று-அழகால் வென்று, குழை முட்டி மீளும்-காதணியில் மோதி மீளுகின்ற, கண் மடவார்-கண்களையுடைய பெண்டிருள், நினைவு ஆளை - தன்னிடம் நினைவு கொண்ட ஆண் மகனை, வாள் முறுவல் ஆடி-ஒளிமிக்க பற்களால் நகைத்து, இள முலைபாளை-இளமையான தனங்களை, நேர் நேர் நிறுத்தி - நேர் நேராக நிறுத்திக்கொண்டு, நெய்தல் நீடும்-நெய்தல் மலர்களால் மிகவும் அலங்கரிக்கப்பெற்ற, அளகாடவி வனத்திற் பிணித்து-கூந்தற் காட்டின் அழகால் வசப்படுத்தி, வெண்ணித்தில வடம் தெரிந்து புனைவாளை-வெண்மையான முத்துமாலைகளை ஆய்ந்தெடுத்து அணிபவளை, நாள்-நல்ல நாளிலே, முடி-நெல் முடிகளை, நடுவாளை-நடுபவளாகிய உழத்தியை, மென்போதில் உறைவாளை-மெல்லிய தாமரைப் பூவில் வீற்றிருக்கும் திருமகளை, ஒப்புப்பொலிவாளை-ஒப்பாகி விளங்குபவளை, நின்று களைகளைவாளை-வயல்களில் நின்று களை பிடுங்குகின்றவளை, நாடி-எதிர்பார்த்து, விளை-உப்புவிளைகின்ற, போங்கழி கடந்து-நீண்ட உப்பங்கழிகளைக்கடந்து, மெள்ள-மெல்ல,

சினைவாளை பாயும்-கருமுதிர்ந்த வாளை மீன்கள் பாய்கின்ற, திருச்செந்தில் வேலனே சிறுபறை முழக்கியருள் - செருவில் எதிர் பொருத பரநிருதர் குலகலகனே சிறுபறை முழக்கியருள்.

இச்செய்யுளில் நெய்தல் நிலப்பெண்டிர் பெருமைமிகுத் துரைக்கப்பட்டது. கண்களுக்கு உவமையாக வுரைக்கும்பொருள் களுள் சக்கரவாகம் முன்னைய நூல்களில் இல்லையாயினும் இவ் வாசிரியர் ஆண்டது புதியன புகுதலாம் போலும். போம் கழி-நீண்ட கழி, போகு என இச்சொல் மணிமேகலையில் நீண்ட என்ற பொருளில் வழங்கியுள்ளது. இங்கு போம் எனவே வந் துளது. பிணையை உவமிப்பது பிணையின் விழியைக் கருதியே யாகும். பிணை - பெண்மான், மன்மதனுக்குரிய ஐந்தம்புகள், தாமரை, மாம்பூ, அசோகு, முல்லை, நீலோற்பலம் என்பன. இவற்றுள் நீலோற்பலமே மோகாந்தகாரத்தில் மூழ்குவிக்கும் என்பதைப் பின்வரும் செய்யுளால் அறியலாம்.

நினைக்கும் அரவிந்தம் நீள்பசலை மாம்பூ
அனைத்துணர்வும் போக்கும் அசோகு - வனத்திலுறு
முல்லை கிடைகாட்டும் மாதே முழுநீலம்
கொல்லு மதனம்பின் குணம்.

இங்குக் கொல்லும் என்றது உபசார வழக்கு பெண்கள் விழிக்கு நிகர் எனப்படுவது நீலோற்பலமே.

80 அறந்தரு புரந்தரா தியருலகி லரமகளி
ராடுமணி யூசல்சிற்றி
லம்மனை கழங்குபழ செறியுந் தடஞ்சார
லருவிபாய் பரங்கிரியுமுட்
புறந்தரு புளிற்றுவெள் வளைகடற் றிரைதொறும்
பொருதசீ ரலைவாயுமென்
போதுகமழ் திருவா வினன்குடியு மரியமறை
புகலுமே ரகமுமினிமைக்

குறந்தரு கொடிச்சியர் பெருங்குரவை முறைகுலவு
குன்றுதோ றாடலுந்தண்
கொண்மூ முழங்குவது கண்டின மெனக்காட
குஞ்சரம் பிளிறுமரவஞ்
சிறந்தபழ முதிர்சோலை மலையும் புரந்தநீ
சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே.

(இ-ள்) அறம்தரு--தருமத்தினாற்பெறும் பேறாகிய, புரந்தராதியர் உலகில்-இந்திரன் முதலிய தேவர் வாழ்கின்ற உம்பருலகிலேயுள்ள, அரமகளிர்-அரம்பை முதலியோர், ஆடும்-விளையாடுகின்ற, மணியூசல்-நவமணி பதித்த ஊசல்களும், சிற்றில்-பொன்னாற் சமைந்த சிறு வீடுகளும், அம்மனை கழங்கு பல செறியும்-அம்மானைக்காய்களும் கழற்காய்களும் பலபலவாய் நிறைந்துள்ள, தடஞ்சாரல்-அகன்ற சாரல்களையுடையதும், அருவிபாய் - மலை அருவிபாய்வதுமாகிய, பரங்கிரியும்-திருப்பரங்குன்றம் என்னும் திருப்பதியும், முட்புறந்தரு - முள் அமைந்த புறப்பகுதியையுடைய, புனிற்றுவெள்வளை-கருக்கொண்ட வெண்ணிறச்சங்குகள், கடல்திரை தொறும் பொருத-கடல் அலைகள்தோறும் பாய்ந்தேறுகின்ற, சீரலைவாயும்-திருச்சீரலைவாய் என்னும் திருப்பதியும், மென்போது கமழ் திருவாவினன்குடியும்-மெல்லிய மலர்களின் மணம் கமழ்கின்ற திருவாவினன்குடி என்னும் திருப்பதியும், அறிய மறை புகலும் ஏரகமும்-அரிய வேதங்கள் முழங்குகின்ற திருவேரகம் என்னும் திருப்பதியும், இனிமைக் குறம்தரு-இனிமையான குறவள்ளைப் பாட்டுப்பாடுகின்ற, கொடிச்சியர்-குறப்பெண்டிரது, பெருங்குரவை முறை குலவு-பெரிய குன்றக்குரவை முறைகள் விளங்குகின்ற, குன்றுதோறாடலும் - குன்றுகள் தோறும் கோயில்கொண்டருளும் கோலமும், தண்கொண்மூ முழங்குவது கண்டு-குளிர்ந்த மேகம் முழங்குவது கண்டு, இனமென-தமது இனமென்று கருதி, காட குஞ்சரம் பிளிறும்-மதங்

கொண்ட களிறுகள் பிளிறுகின்ற, அரவம் சிறந்த - முழக்கம் சிறந்த, பழமுதிர் சோலையும்-பழமுதிர் சோலை என்னும் திருப்பதியும், புரந்தநீ-ஆண்டுகொண்ட நீ, சிறுபறை முழக்கியருள், செருவிலெதிர் பொருத பரநிருதர் குலகலகனே சிறுபறை முழக்கியருள்.

இச்செய்யுளில் முருகவேளுக்குரிய, திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோருடல், பழமுதிர்சோலை என்னும் ஆறுபடை வீடுகளும் முறையே புகழப்பட்டன. திருமுருகாற்றுப்படையில் அமைந்துள்ள முறைக்கிணங்க இவை இங்கு அடுக்கப்பட்டுள்ளன.

81 எழுமிரவி மட்கவொளி தருமணிய முத்துமுடி
யிமையவர்ம கிழ்ச்சிபெறவே
யிருகுழைபி டித்தவிழி யரமகளிர் சுற்றிநட
மிகுவெனந டித்துவரவே
வழுவறுத மிழ்ப்பனுவன் முறைமுறையு ரைத்துவெகு
வரகவிஞ ருட்குழையவே
மகபதியு மிக்கமுனி வார்கணமு மிச்சையுடன்
வழியடிமை செப்பியிடவே
பொழுதுதொறு மொக்கவிதி முறையுனைய ருச்சனைசெய்
புனிதசிவ விப்ரருடனே
புகலரிய பத்தசன மரகரவெ னக்குலவு
புரவலர்வி ருப்பமுறவே
செழுமறைமு ழக்கவரு முருககும ரக்கடவுள்
சிறுபறைமு ழக்கியருளே
திரளுமணி முத்தையலை யெறியுநக ருக்கதிப
சிறுபறைமு ழக்கியருளே.

(இ-ள்) எழும் இரவி-உதிக்கிற சூரியன், மட்க-ஒளி குறைய, ஒளிதரும்-ஒளிவீசுகிற, மணி அழுத்தும்-நவமணிகள் அழுத்திய, முடி-கிரீடங்களையுடைய, இமையவர்-தேவர்கள், மகிழ்ச்சிபெற-சந்தோஷம் பெறவும், இருகுழை பிடித்த விழி-இருகாதணிகளிலும் போய்ப் பாய்கின்ற விழிகளையுடைய, அரமகளிர்-தேவமகளிர், சுற்றி-சூழநின்று, நடம் இதுவென-நர்த்தனம் இதுவேயென்று, நடித்துவரவே-நடித்துவரவும், வழுவறு தமிழ்ப்பனுவல்-குற்றமற்ற தமிழ்ச் செய்யுட்களை, முறைமுறையுரைத்து-முறைப்படி சொல்லி, வெகு வரகவிஞர் உட்குழையவே-பல வரகவிகள் மனம் உருகவும், மகபதியும்-இந்திரனும், மிக்க தவத்தாற் சிறந்த, முனிவரர் கணமும் - இருடிகணங்களும், இச்சையுடன் - பக்தியுடன், வழியடிமை செப்பியிடவே - தங்கள் வழியடிமையைச் சொல்லிக்கொள்ளவும், பொழுதுதொறும்-உரிய காலங்களிலெல்லாம், ஒக்க-கிரமப்படி, விதிமுறை-ஆகம விதிக்கிணங்க, அருச்சனைசெய்-உனக்கு அருச்சனைசெய்கின்ற, புனித-பரிசுத்தர்களாகிய, சிவவிப்ரருடனே-சிவத் துவிஜர்களோடு, புகலரிய-சொல்வதற்கரிய, பெருமை பூண்ட, பத்தசனம்-பக்தர் கூட்டங்கள், அரகர என-ஹர ஹர என்று முழங்கவும், குலவு புரவலர்-விளங்குகிற அரசர்கள், விருப்பம் உற-உன்னிடம் மிக்க அன்பு பூணவும், செழுமறை முழக்க வரு முருக-செழுமையாகிய நான்கு வேதங்களையும் உலகில் முழக்கும் பொருட்டுத் திருவவதாரம் செய்த முருகப்பெருமானே, குமரக்கடவுள்-என்றும் இளமையேயுடைய தெய்வமே, சிறுபறை முழக்கியருள்-நீ சிறுபறை முழக்கியருள்வாயாக, திரளுமணிமுத்தை-திரண்ட உருவமுள்ள முத்துமணிகளை, அலை எறியும்-அலைகள் எடுத்து வீசுகிற, நகருக்கதிப-திருச்செந்தூர் நகருக்குரிய தலைவனே, சிறுபறை முழக்கியருள்-நீ சிறுபறை முழக்கியருள்வாயாக.

சுப்பிரமணியன் என்னும் வடசொல்லுக்கு வேதத்தை நிலைநிறுத்தியவன் என்பது பொருளாதலால் வேத மார்க்கத்தை உலகில் நிலைநிறுத்தவே முருகன் திருவவதாரம் நிகழ்ந்தது என்று இச்செய்யுளிற் குறிப்பிடப்பட்டுளது.

82 தவனனிர தப்புரவி வலமுறையில் வட்டமிடு
தருணவட வெற்பசையவே
தமரதிமி ரத்துமித மெறியுமக ரப்பெரிய
சலதியொலி யற்றவியவே
புவனமுழு தொக்கமணி முடிமிசையி ருத்துபல
பொறியுரக னச்சமுறவே
புணரியிடை வற்றமொகு மொகுமொகுவெ னப்பருகு
புயலுருமு வெட்கியிடவே
பவனனுமி குத்தகடை யுகமுடிவெ னப்பெருமை
பரவியடி யிற்பணியவே
படகநிபி டத்துழனி யசுரர்வெரு விக்கரிய
பரியவரை யிற்புகுதவே
சிவனருண்ம திக்கவரு முருககும ரக்கடவுள்
சிறுபறைமு ழக்கியருளே
திரளுமணி முத்தையலை யெறியுநக ருக்கதிப
சிறுபறைமு ழக்கியருளே.

(இ-ள்) தவனன்-சூரியனது, இரதப்புரவி-தேறிற் பூட்டிய குதிரைகள், வலமுறையில்-வலப்பக்கமாக, வட்டமிடு-சுற்றிவருகிற, தருண வடவெற்பு-புதுமைபொருந்திய வடமேரு மலையானது, அசைப-அசையவும், தமரதிமிரத் துமிதம் எறியும்-மிக்க முழக்கத்தோடு நீர்த்துளிகளை வீசுகிற, மகரப்பெரிய சலதி-சுறுமீன்களையுடைய பெரிய கடலானது, ஒலியற்று அவிய-ஒலி யின்றி அடங்கிக்கிடக்கவும், புவனம் முழுது ஒக்க-உலகம் முழுவதையும் ஒரு சேர, மணிமுடிமிசை இருத்து-மாணிக்கங்கள் பொருந்திய தனது ஆயிரம் பணமுடிகளின்மேல் தாங்குகின்ற, பலபொறி உரகன் அச்சமுறவே-பல புள்ளிகளையுடைய உடல்கொண்ட ஆதிசேடன் பயங்கொள்ளவும், புணரியிடை வற்ற-கடலிடைநீர்வற்றியதால்,மொகுமொகுமொகுஎனப்பருகு-மொகுமொகு என்று நீர் பருகுகிற, புயல் உருமு வெட்கியிட-

மேகத்தினின்றெழுகின்ற இடி வெட்கப்படவும், பவனனும்-வாயு தேவனும், மிகுத்த கடையுக முடிவென-பூதங்கள் கரைகடக்கும் கடையுகத்தின் முடிவுக்காலமோ என்று, பெருமை பரவி-நினது பெருமையைப் பாராட்டி, அடியிற் பணியவே-உன் பாதங்களில் வீழ்ந்து பணியவும், படக நிபிடத் துழனி-படகம் என்னும் இசைக் கருவியின் மிக்க முழக்கத்தைச் செய்யும், அசுரர் வெருவி-அசுரர்கள் அஞ்சி, கரிய பரிய வறையிற் புகுத-தங்களுக்குரியதாகிய பெரிய மலையிற் புகுந்துகொள்ளவும், சிவனருள் மதிக்க வரு முருக-சிவபிரான் திருவருளை உலகத்தார் மதிக்குமாறு திருவவதாரஞ் செய்தருளிய முருகப்பிரானே சிறுபறை முழக்கியருள், திரளும் மணிமுத்தை அலை எறியும் நகருக்கதிப சிறுபறை முழக்கியருள்.

முருகன் சிறுபறை முழக்குதலால் "வடவெற்பு அசையும்; சலதி ஒலியற்று அவியும்; உரகன் அச்சமுறும்; உருமு வெட்கும்; பவனன் அடியிற் பணியும், அசுரர் வரையிற் புகுவர்;" என்று கூறினர். தருணம்-இளமை புதுமை, தமரம்-ஒலி, திமிரம்-இருள் கருமை-இங்கு ஒலியைக் குறிக்கிறது. துமிதம்-நீர்த்துளி, நிபிடம்-நெருக்கம், சிவனருள் மதிக்க வருகுமரன் என்றது, அசுரரால் நேர்ந்த இடுக்கண் களையுமாறு தேவர் வேண்ட முருகன் திருவவதாரம் நேர்ந்த அருட் செயலை விளக்குவதாம்.

83. சகரமக ரச்சலதி யுலகுதனி லிப்பொழுது
சருவியபு றச்சமய நூல்
தலையழிய முத்திதரு சிவசமய முத்தர்பெறு
தவநெறித ழைத்துவரவே
யகரவுக ரத்தில்விளை பொருளடையு பத்தியுறு
மடியவர்த மக்கருளவே
யமரருல கத்தவரு மெவருமரு விப்பரவி
யடியிணைத னைப்பணியவே

பகரவுநி னைத்திடவு மரிதுனது சொற்பெருமை
பரகதிய ளிக்குமெனவே
பலபலமு னித்தலைவ ரனைவரு முனக்கினிய
பணிவிடைத னைப்புரியவே
சிகரபர வெற்பில்வரு முருககும ரக்கடவுள்
சிறுபறைமு ழக்கியருளே
திரளுமணி முத்தையலை யெறியுநக ருக்கதிப
சிறுபறைமு ழக்கியருளே.

(இ-ள்) சகர மகரச்சலதி உலகுதனில் - சகரரால் தோண்டப்பட்ட சுறுமீன்கள் நிறைந்த கடலாற் சூழ்ந்த உலகத்திலே, இப்பொழுது-இந்நாளில், சருவிய-வளர்ந்திருந்த, புறச்சமய நூல் தலையழிய-சமண பௌத்த மத வாதங்கள் அடியோடு அழியுமாறும, முத்திதரு சிவசமய முத்தர்-அடைந்தார்க்கு முத்தியை அருளும் சைவசமய முத்தர்களாகிய அப்பரும் சம்பந்தரும் மணிவாசகரும், பெறு - உலகிற்கு அருளிச்செய்த, தவநெறி-தபோ மார்க்கமாகிய அருணெறியானது, தழைத்துவர-வளர்வுற்று வரவும், அகர உகரத்தில் விளைபொருள்-அகார உகார அக்ஷரங்களால் அமைந்த ஓங்காரத்தில் உள்ள தத்வார்த்தத்தின், அடைவு-அமைதியை, பத்தியுறும் அடியவர் தமக்கு அருளவே-பக்தி மிக்க பக்தர்களுக்கு அருள்புரியும் பொருட்டும், அமரர் உலகத்தவரும் - தேவலோக வாசிகளும், எவரும்-பிறர் எவரும், மருவிப் பரவி அடியிணை தனைப்பரவ - நெருங்கி வந்து துதித்து இரண்டு பாதங்களையும் வணங்கவும், பகரவும்-சொல்லவும், நினைத்திடவும்-நினைப்பதற்கும், அரிது உனது சொல் பெருமை - அரியதாகிய உனது மந்திரத்தின் மகிமையானது, பரகதி அளிக்கும் எனவும்-சிவகதியை அருளும் என்று, பலபல முனித்தலைவர்-பல முனீசுவரர்கள், அனைவரும் - எல்லோரும், உனக்கு இனிய - உனக்கு உகந்த, பணிவிடைதனைப்புரிய - பணிவிடைகளைப்புரியவும், சிகரபரவெற்பில் வரு முருக குமரக்கடவுள் - சிகரங்களையுடைய திருப்பரங்குன்றத்திலே எழுந்தருளிய முருகப்பிரானே

குமரக்கடவுளே, சிறுபறை முழக்கியருள் திரளுமணி முத்தை யலை யெறியு நகருக்கதிப சிறுபறை முழக்கியருள்.

புறச்சமயங்கள் தலையழிய முயன்ற பெருமை, அப்பர் சம்பந்தர் மணிவாசகர் என்ற மூவர்க்கு உண்டு. முத்தர் என்றது அம்மூவரையுமாம்-சுந்தரர் இங்ஙனம் புறச்சமயம் அழிந்த பின்னர்த்தம் திருப்பணியை இயற்றினர். சொல் என்றது முருகன் மந்திரம் - இதனையே அருணகிரி நாதர் திருப்புகழில் பல படப் புகழ்ந்தார்-பரவெற்பு திருப்பரங்குன்றம் - திருச்செந்தூர்ப் பெருமானைத் திருப்பரங்குன்றில் வாழ்வானுகத் துதித்தது பொருத்தமே. சிகரம்-சிவம் என்றும் உரைக்கலாம். அப்பொருள் கொள்ளுங்கால், சிவவுருவமாக அமைந்த திருப்பரங்குன்றம் என்று இயையும். அகரம் உகரம் மகரம் என்ற மூன்றும் இயைந்தே பிரணவம் ஆகும். இங்கு அகர உகரம் எனப்பட்டது மெய்யைத் தனிப்பட எண்ணுத வழக்குப்பற்றிப் போலும். சகரமகாச்சலதி—சூரிய வமிசத்துச் சகரகுமார் தோண்டிய கடல்.

## ஒன்பதாவது
## சிற்றிற்பருவம்

---

சிறுமியர் சிறு சோறடுதற்பொருட்டுத் தமது சிறு கைகளால் அமைக்கும் மணற் சிறு வீடுகளைக் குழவிப்பருவத்தானுகிய பாட்டுடைத்தலைவன் தனது சிறு கால்களால் சிதைப்பான் என உட்கொண்டு அங்ஙனம் அவன் சிதையாதிருக்குமாறு வேண்டுமுகத்தாற் செய்யுள் அமைத்துத் துதிக்கும் பருவம் சிற்றிற்பருவமாம். பரமாத்மாவை நாயகன் என்று கொள்ளும் முறையால் ஜீவாத்மாவை நாயகியாக உபசரிக்கும் வழக்கு உளது. பலவேறு உருவங்களை உலகிலே பெற்று உழல்கின்ற ஜீவான்மா தன்னைச்சிறு பெண்ணுகப் பாவித்துத் தனது உடலைச் சிற்றிலாகக் கருதிப் பரமான்மாவை ஆண்மகனுக விளித்து 'ஐய நீ எம் சிற்

றிலைச் சிதையாதி நன்கு பயன்படுமாறு அருளுதி' என்று வேண்டிக்கொள்ளும் குறிப்பு இப்பருவத்தில் இருப்பதாகவும் கூறலாம்-சிற்றில் அமைப்பது பெண் மக்கட்கே உரிய விளையாட்டு என்பதையும் அச்சிற்றிலைச் சிதைத்தல் ஆண்மக்கட்கே யுரிய விளையாட்டு என்பதையும், இன்றும் கண்டு அறியலாம் - சிற்றில் மணலால் அமைவதாகப் பாடுவதே பெரும்பான்மையான வழக்கு. இந்நூலில் இப்பருவத்தே, உருக்கம் மிக்க செய்யுட்கள் சில அமைந்திருப்பதைக் காண்கின்றோம்.

84 பொன்னின் மணக்கும் புதுப்புனலிற்
புடைசூழ் பணில முத்தெடுத்துப்
புறக்கோட் டகமுண் டாக்கிவலம்
புரியைத் தூதைக் கலமமைத்துக்
கன்னி மணக்குங் கழனியிற்செங்
கமலப் பொகுட்டு முகையுடைத்துக்
கக்குஞ் செழுந்தே னுலையேற்றிக்
கழைநித் திலவல் சியைப்புகட்டிப்
பன்னி மணக்கும் புதுப்பொழிலிற்
பலபூப் பறித்துக் கறிதிருத்திப்
பரிந்து சிறுசோ றடுமருமை
பாரா யயிரா வதப்பாகன்
சென்னி மணக்குஞ் சேவடியாற்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே

(இ-ள்) பொன்னின் மணக்கும் - பொன்போல் மணக்கிற, புதுப்புனலில்-புதுநீரிலே, புடைசூழ்-பக்கங்களிலே சூழ்ந்திருக்கிற, பணிலமுத்து எடுத்து-சங்கின் முத்துக்களை யெடுத்து, புறக்

கோட்டு அகம் உண்டாக்கி-வெளிப்புறத்தே கரையமைந்த சிறு வீடு ஒன்று அமைத்து, வலம்புரியை - வலம்புரிச்சங்கத்தை, தூதைக்கலம் அமைத்து-சமையலுக்கு உதவும் சிறு மட்கலமாய் வைத்துக்கொண்டு, கன்னி மணக்கும் கழனியில்-இளம் பயிரின் மணம் கமழ்கின்ற நெல்வயல்களில், செங்கமலப்பொகுட்டு முகை உடைத்து-செந்தாமரையின் அரும்புகளை மலரவைத்து, கக்கும் செழுந்தேன்-அதிலிருந்து வெளியாகும் செந்தேனை, உலை ஏற்றி-உலையின்மேல் தண்ணீராய் ஏற்றி, கழை நித்தில வல்சியைப்புகட்டி-கரும்பில் விளையும் முத்தாகிய அரிசியை அதனுள் இட்டு, பன்னி மணக்கும் புதுப்பொழிலில்--பனிநீரின் மணம் நிறைந்த புதுச்சோலையில் உள்ள, பல பூப்பறித்துக் கறிதிருத்தி-பல வகைப்பூக்களைப் பறித்துக் கறியாக அமைத்து, பரிந்து-அன்பும் விருப்பமும் கொண்டு, சிறுசோறு அடும் அருமைபாராய்-நாங்கள் சிறுசோறு ஆக்கும் அருமையைப்பாராய், அயிராவதப் பாகன் - அயிராவதத்தை ஊர்தியாகவுடைய இந்திரனது, சென்னி மணக்கும் சேவடியால் - தலைமணக்கும் சிவந்த கழல் களால், சிறியேம் சிற்றில் சிதையேல்-சிறிய எங்களது சிறுவீடு களை உதைத்து அழியாதே, திரைமுத்து எறியும் - அலைகள் முத்தை வீசுகிற, திருச்செந்தூர்ச் செல்வா - திருச்செந்தூர் முருகனே, சிற்றில் சிதையேல் - எமது சிறு வீட்டை அழியாதே.

பொன் மணக்கும் புதுப்புனல் - பொன்னிறமுள்ள புதுநீர். சிறு வீடுஅமைக்கும்சிறுமியர் இடையிலே வீடு ஒன்றும்சுற்றிலும் நெடுஞ்சுவர்போன்ற கரை ஒன்றும் எடுப்பது வழக்கம் ஆதலாற் புறக்கோட்டகம் எனப்பட்டது. கோடு - கரை, புறக்கோட்டகம்-வெளியே கரையுள்ள வீடு. கன்னி - இளமையுள்ள பெண், இங்கு இளம்பயிரைக் குறித்தது. தூதைக்கலம்-சிறு மண்பாண் டம், வல்சி - சோறு இங்கு அரிசியைக் குறிக்க வந்தது. பனிநீர் பன்னீர், பன்னி என மரூஉமொழியாதலால் பன்னி என்பது பனிநீரைக் குறித்தது. திருத்துதல் - அரிந்துவைத்தல் அயிராவ

தப்பாகன் சென்னிமணக்கும் சேவடி இந்திரன் வணங்கி வாழ்வு பெற்ற கழல்கள்-சூரபதுமனுதியரால் நேர்ந்த இடுக்கண் களையுமாறு இந்திரன் குறையிரந்ததை நினைப்பிப்பது.

85 தையன் மடவா ரிழைத்தவண்டல்
தன்னை யழிக்கு மதுக்கல்ல
தரள முறுத்தி யுனதுபொற்பூந்
தண்டைத் திருத்தா டடியாதோ
துய்ய தவளப் பிறைமுடிக்குஞ்
சோதி யெடுத்து முகந்தணைத்துத்
தோளி லிருத்தும் பொழுதுமணித்
தோளிற் புழுதி தோயாதோ,
வைய மனைத்து மீன்றெடுத்தும்
வயது முதிரா மடப்பாவை
மடியி லிருத்தி முலையூட்டி
வதனத் தணைக்கி லுன்கழற்காற்
செய்ய சிறுதூள் செறியாதோ
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே.

(இ-ள்) தையல் மடவார் - இளம் பெண்கள், இழைத்த-செய்துவைத்த, வண்டல் தன்னை-மணற் சிறுவீட்டை, அழிக்கும் அதுக்கல்ல - அழிப்பதற்காக நாங்கள் இது கூறவில்லை, தரளம் உறுத்தி - முத்துக்கள் அழுத்துதலால், உனது பொன் பூந் தண்டைத்திருத்தாள் - உனது அழகிய பொன்தண்டை அணிந்த பாதம், தடியாதோ - வருந்தாதோ, துய்ய - பரிசுத்தமான, தவளப்பிறை - வெண்ணிறமான இளம் பிறையை, முடிக்கும்-

சடைக்கண் முடித்த, சோதி-சோதியுருவுள்ள சிவபெருமான், எடுத்துமுகந்து அணைத்து - வாரி எடுத்து அணைத்து, தோளில் இருத்தும்பொழுது - தோள்மேல் வைத்துக்கொள்ளும்போது, மணித்தோளிற் புழுதி தோயாதோ-அவரது அழகிய தோளிலே புழுதி படாதோ, வையம் அனைத்தும் ஈன்றெடுத்தும் - உலகில் உள்ள உயிர்களையெல்லாம் ஈன்று எடுத்தும், வயதுமுதிரா - கன்னிமை நீங்காமல் இருக்கிற, மடப்பாவை - இளம் பெண்ணாகிய பார்வதிதேவியார், மடியில் இருத்தி - தமது மடியில் உன்னை அமர்த்தி, முலையூட்டி - பால்கொடுத்து, வதனத்து அணைக்கில் - முகத்தோடு முகம் அணைத்துக்கொள்ளும்போது, உன் கழற்கால் - உனது வீரகண்டாமணி அணியும் கால்களிலிருந்து எழும், செய்ய சிறு தூள் - செந்நிறமான சிறியபுழுதி, செறியாதோ - மேலேபடாதோ, சிறியேம் சிற்றில் சிதையாதோ - ஆதலால் எமது சிற்றிலைச் சிதையாதிருப்பாயாக, திரைமுத்தெறியும் திருச்செந்தூர்ச் செல்வா சிற்றில் சிதையேல்.

வண்டல்-மணலில் மகளிர் விளையாடும் விளையாட்டு. நீரிற் குளித்தும் மணலிற் புரண்டும் மணலிலே சித்திரங்கள் அமையுமாறு விளையாடுவது என்பர் சிலர். மணலிலே சிறு வீடு கட்டுதல் ஓடியொளிதல் முதலியனவும் வண்டல் விளையாட்டு ஆகுமென்பர் சிலர். இங்கு வண்டல் என்றது, மணலால் அமைந்த சிற்றில்லை யாகும். "நீ எங்கள் வண்டலை அழிக்கின்றாயே என்பதற்காக நாங்கள் உன்னை நோக்கிச் சிற்றில் சிதையாதே என்று கூறவில்லை. நீ இங்ஙனம் நினது சிறு கழல்கள் மணல்படிய விளையாடுதலால் உனது கழல் வருந்துமே, உன் தாய் தந்தையர் உன்னைச்சீராட்டிப் பாராட்டும்போது அவர்கள் மேற் புழுதி படுமே அதன் பொருட்டாக உன்னை இங்ஙனம் செய்யாதே என்று வேண்டுகின்றோம்" என்று பெண்கள் கூறுமாறு இச்செய்யுள் அமைந்துளது. வையமனைத்தும் ஈன்றெடுத்தும் வயது முதிரா மடப்பாவை என்று உமாதேவியாரைக் கூறியது, உலகனைத்துக்கும் தாயாய் இருப்பினும் என்றும் கன்னியாய் விளங்கும் பொருட்டாகும். இதன்

தத்துவப்பொருள் மாணிக்கவாசகரால் திருச்சாழலில் நன்கு விளக்கப் பட்டுளது. விநாயகர் முருகன் என்னும் இருவர்க்கும் உலகத்துள்ள பல்கோடி யுயிர்கட்கும் தாயேயாயினும் ஒருவரை யாயினும் பெற்று முலையூட்டி வளர்த்தாள் என்று சொல்லப் படாமையாலும் அங்ஙனம் வளர்ப்பதே கன்னிமை யழியக்காரண மாமாதலாலும், ஸாக்ஷிமாத்திரமாய் உள்ள ஈஸ்வரனது சக்தி யாய் எவைக்கும் தாயாய் இலங்கும் உண்மையே அவளது நிலை யாதலாலும் இங்ஙனம் உரைக்கப்பட்டது.

86 தௌவுங் கரட மடையுடைக்குந்
தந்திப் பகடு பிடிபட்டுத்
தருவு மமுது மிருநிதியுந்
தனியே கொள்ளை போகாம
லெவ்வ முறவிட் புலத்தமரா
ரேக்க முறும லயிராணி
யிடுமங் கலநா ணழியாம
லிமையோ ரிறைஞ்சு மாமகளிர்
பௌவ மெறியுந் துயராழிப்
பழுவத் தழுந்தி முழுகாமற்
பாக்குஞ் சுருதித் துறைவேள்வி
பழுதா காமற் பரவரிய
தெவ்வர் புரத்தை யடுஞ்சிறுவா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே.

(இ-ள்) தௌவும்-பாய்ந்தோடுகிற, கரடம்-மதநீர், மடை உடைக்கும்-மடைகளை உடைக்கிற, தந்திப்பகடு-ஆண் யானையாகிய ஐராவதமானது, பிடிபட்டு-அசுரர் கையிலே பிடியுண்டு, போகா

மலும், தருவும்-பஞ்சதருக்களும், அமுதும்-தேவாமுதமும், இரு நிதியும்-சங்கநிதி பதுமநிதி என்னும் நிதிகளும், தனியே கொள்ளை போகாமல்-காப்பாரின்றிக் கொள்ளை போகாமலும், எவ்வமுற-துன்பமுற்று, விட்புலத்து அமரர்-விண்ணுலகத்தில் வாழும் தேவர்கள், ஏக்கம் உறுமல்-வருந்தாமலும், அயிராணி இடும் மங்கல நாண்-இந்திராணி அணிகின்ற திருமங்கல நாண், அழியாமல்-அறுந்து விடாமலும், இமையோர் இறைஞ்சும்-தேவர்வணங்குகிற, அரமகளிர்-தேவமகளிர், பௌவம் எறியும் துயராழிப் பழுவத்து-அலைவீசுகிற துயர் என்னும் ஆழ்கடலிலே அழுந்தி முழுகாமல் பரக்கும்-அளவு கடந்து விரிந்துள்ள, சுருதித்துறை-வேத மார்க்கத்துக் கிணங்கவே இயற்றப்பெறுகிற, வேள்வி பழுதாகாமல்-யாகங்கள் பழுதுபடாவண்ணமும்,பரவரிய-நின்னைப்பணிந்து புகழ்தல் இல்லாத, தெவ்வர் புரத்தை-பகைவராகிய அசுரர் வாழ்ந்த அரண்களோடு கூடிய பெரிய நகரத்தை, அடும் சிறுவா-அழித்த குழந்தாய், சிறியேம் சிற்றில் சிதையேல்-சிறியேமாகிய எங்கள் சிறுவீட்டைக் காலால் உதைத்து இடியாதே. திரைமுத்தெறியும் திருச்செந்தூர்ச் செல்வா சிற்றில் சிதையேல்.

இங்குத் தெவ்வர் புரம் என்றது சூரபதுமன் நகரத்தையாம். நீ சிறுவனேயாயினும் தெவ்வர் புரத்தை அடும் வலி படைத்தாய். அப்புரத்தை அட்டதால், தேவர் வாழ்வு அழியாமலும் அயிராணி மங்கலநாண் அறுமல் நிலைபெறவும் அருளினாய். அத்தகைய வல்லானாகிய முருகப்பெருமானே, நீ எங்கள் சிற்றில் சிதைக்கலாகுமோ என்று கேட்டது சிந்தித்து இன்புறற்குரியது.

87 ஆடுங் கொடித்தே ரெழுபுரவி
யருண னடத்து மகலிடத்தை
யடைவே படைத்தும் படைத்தபடி
யளித்துந் துடைத்து முத்தொழிலுங்

கூடும் பெருமை யுனக்குளது
கூடார் புரத்தைக் குழாம்பறிக்கக்
கொள்ளுங் கருத்து நின்கருத்துக்
கொங்கை சுமந்து கொடிமருங்குல்
வாடுங் கலக விழிமடவார்
மலர்க்கை சிவப்ப மணற்கொழித்து
வண்ட லிழைத்த மனையழிக்கை
வன்போ சுரரும் மகவானுந்
தேடுங் கமலத் திருத்தாளாற்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே.

(இ-ள்) ஆடும் கொடித்தேர் - ஆடுகின்ற கொடிகளையுடைய ஒற்றையாழித்தேரில், எழு புரவி-எழு புரவிகளைப் பூட்டி, அருணன் நடத்தும்-சூரியன் நடத்துகிற, அகலிடத்தை-அகன்ற உலகங்கள் அனைத்தும், அடைவே-முறைப்படி படைத்தும், படைத்த படி-படைத்தவண்ணமாகவே, அளித்தும் துடைத்தும்-காத்தும் அழித்தும், முத்தொழிலும் கூடும் பெருமை - மூன்று தொழில்களையும் இயற்றும் பெருமை, உனக்கு உளது-உனக்கு இருக்கிறது, கூடார் புரத்தை-பகைஞர் நகரை, குழாம் பறித்துக்கொள்ளும் கருத்து நின்கருத்து-அங்கு வாழ்ந்த அசுரர் கூட்டத்தோடு அழிக்கும் கருத்தே உன் கருத்தாகும், கொங்கை சுமந்து - கொங்கைகளைச் சுமப்பதாற், கொடிமருங்குல் வாடும்-கொடிபோன்ற இடை வாடுகிற, கலக விழிமடவார் - கலகம் புரியும் விழிகளையுடைய பெண்கள், மலர்க்கை சிவப்ப-மலர்போன்ற தமது கைகள் சிவக்கும்படி, மணல் கொழித்து - மணலைக் கொழித்து, வண்டல் இழைத்த-வண்டல் விளையாடுதற்கு அமைத்த, மனை அழிக்கை-

சிற்றிலை அழிப்பது, வன்போ-உன் வலிமை அழகாமோ, சுரரும் மகவானும்-தேவர்களும் தேவேந்திரனும், தேடும் கமலத் திருத் தாளால்-தேடுகிற தாமரை மலர்போன்ற அழகிய பாதங்களால், சிறியேம் சிற்றில் சிதையேல்-சிறியேமாகிய எமது சிற்றிலை அழியாதே. திரைமுத்து எறியும் திருச்செந்தூர்ச் செல்வா சிற்றில் சிதையேல்.

பிரணவப் பொருள் வினவி நான்முகனைச் சிறையிட்ட பொழுது முருகன் படைப்புத் தொழிலைத் தானே நடத்தினு ஞதலால், முத்தொழிலும் கூடும் பெருமை அவனுக்கு உளது எனப்பட்டது. கூடார் புரத்தைக் கொள்ளும் கருத்துடையான் மடவார் இழைத்த மணற் சிறுமனையை அழித்தல் வன்பாகாது’ என்றூர். முருகன் வன்பும் அவன் தாட்சிறப்பும் சொல்லப்பட் டது. சுரரும் மகவானும் தேடும்தாள் இச்சிற்றில் சிதைக்க லாமோ’’ என்றூர்.

88 புற்றி லரவங் தனைப்புனைந்த
புனித ருடனே வீற்றிருக்கப்
பொலியுங் திகிரி வாளகிரிப்
பொருப்பை வளர்த்துச் சுவராக்கிச்
சுற்றில் வளர்ந்த வரையனைத்துஞ்
சுவர்க்கா லாக்கிச் சுடரிரவி
தோன்றி மறையுஞ் சுருப்பைவெளி
தொறுங்தோ ரணக்கா லெனநாட்டி
மற்றி லுவமை யெனுங்கனக
வரையைத் துளைத்து வழியாக்கி
மாக முகிலை விதானமென
வகுத்து மடவா ருடன்கூடிச்

சிற்றி லிழைத்த பெருமாட்டி
சிறுவா சிற்றில் சிதையேலே
திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே.

(இ-ள்) புற்றில் அரவம்தனை-புற்றில் வாழ்கின்ற அரவத்தை, புனைந்த-அணியாக அணிந்த, புனிதருடனே வீற்றிருக்க-தூய்மை பொருந்திய சிவபரஞ்சுடரோடு அமர்ந்திருக்கும் பொருட்டு, பொலியும் - அழகுவிளங்குகிற, திகிரி வாளகிரிப் பொருப்பை - சக்கர வாளகிரியென்னும் மலையை, வளர்த்துச் சுவராக்கி - வளர்த்துச் சுவராக அமைத்து, சுற்றில்வளர்ந்த வரையனைத் தும் - சுற்றிலும் வளர்ந்த பெருமலைகளையெல்லாம், சுவர்க்கால் ஆக்கி - அச்சுவர்க்குக் கால்களாக அமைத்து, சுடர் இரவி - ஒளி பொருந்திய சூரியன், தோன்றி மறையும் சுருப்பை - தோன்றி மறைகிறஉதயகிரி அத்தகிரியென்னும் இருகிரிகளையும், வெளி தோறும் தோரணக்கால் என நாட்டி - வெளியெல்லாம் தோர ணக்காலாக நிறுத்தி, மற்று இல் உவமை எனும்-வேறு உவமைப் பொருளே இல்லையென்னும், கனகவரையைத் துளைத்து-மகா மேரு மலையைத் துளைத்து, வழியாக்கி-வழியாகச்செய்து, மாக முகிலை விதானம் என வகுத்து - விண்ணிலுள்ள மேகத்தை விதானமாக அமைத்து, மடவாருடன் கூடி-கலைமகள் திருமகள் என்ற பெண்டிருடன் கூடி, சிற்றில் இழைத்த பெருமாட்டி சிறுவா--சிற்றில் அமைத்து விளையாடிய உமாதேவியார் மைந் தனே, சிற்றில் சிதையேல்-எமது சிற்றிலைச் சிதையாதே, திரை முத்தெறியுந் திருச்செந்தூர்ச் செல்வா சிற்றில் சிதையேல்.

உமாதேவியார் அமைத்து விளையாடிய சிற்றில் இயைபை வகுத்துக் காட்டி, 'அத்தகைய தாயின் மைந்தனாகிய முருகப் பெருமானே, நீ எங்கள் சிற்றிலைச் சிதையாதே' என்று இங்கு கூறப்பட்டுளது. சக்கர வாளகிரி, சுவர்; மற்ற மலைகள், சுவர்க் கால்; உதயகிரி அத்தகிரி, தோரணக்கால்; கனகவரை, வழி என அமைத்துச் சிற்றில் விளையாடிய தேவியின் மைந்தன் என்றார்.

89 மிஞ்சுங் கனக மணித்தொட்டில்
மீதே யிருத்தித் தாலுரைத்து
வேண்டும் படிசப் பாணிகொட்டி
விருப்பாய் முத்தந் தனைக்கேட்டு
நெஞ்சு மகிழ வரவழைத்து
நிலவை வருவா யெனப்புகன்று
நித்த லுனது பணிவிடையின்
நிலைமை குலையே நீயறிவாய்
பிஞ்சு மதியி னொருமருப்புப்
பிறங்கு மிருதாட் கவுட்சுவடு
பிழியுங் கரட மும்மதத்துப்
பெருத்த நால்வாய்த் திருத்தமிகு
மஞ்சு காக்குஞ் சரத்துணையே
யடியேஞ் சிற்றி லழியேலே
யலைமுத் தெறியுந் திருச்செந்தூர்
அரசே சிற்றில் அழியேலே.

(இ-ள்) மிஞ்சும்-ஒளியும் அழகும் மிக்க, கனக மணித்தொட்டில்மீது-பொன்னாலும் நவரத்தினங்களாலும் அமைந்த தொட்டிலின்மேல், இருத்தி-அமர்வித்து, தால் உரைத்து-தாலாட்டுப் பாடி, வேண்டும்படி-விருப்பம்போல, சப்பாணிகொட்டி-சப்பாணி கொட்டிக்காட்டி, விருப்பாய்-ஆசையோடு, முத்தம் தனைக்கேட்டு-முத்தம் அருளவேண்டும் என்று பிரார்த்தித்து, நெஞ்சு மகிழ-மனம் மகிழ, வரழைத்து-வருக வருக என்று அழைத்து, நிலவை வருவாய் எனப்புகன்று - அம்புலியை நின்னொடு விளையாட வருமாறு சொல்லி, நித்தல் - தினந்தோறும், உனது பணிவிடையின் நிலைமை குலையேம்-உனது பணிவிடையின் முறையிலே நாங்கள் குலையாமல் இருக்கிறோம், நீ அறிவாய்-இதனை நீயே அறிவாய், பிஞ்சு மதியின்-இளம் பிறையைப்போல, ஒருமருப்புப் பிறங்கும்-ஒருகொம்பு விளங்குகிற, இருதாள்-இரண்டு பாதங்களையுடைய,

கவுட் சுவடு பிழியும் கரடமும் மதத்து-கபோலத்தில் உள்ள பள்ளங்களின் வழியே பிழிந்துவருகிற மூவகையாகிய மதங்களை யுடைய, பெருத்த நால்வாய்-பெருத்த தொங்குகிற வாயை யுடைய, திருத்தமிகும்-பரிசுத்த மிக்க, அஞ்சுகரம்-ஐந்து கரங்களையுடைய, குஞ்சுரத்துணையே - ஆனைமுகம் உள்ள விநாயகற்கு இளையோய், அடியேம் சிற்றில் அழியேல் -அடியேமாகிய எமது சிற்றிலை அழியாதே, அலைமுத்து எறியும்-அலைகள் முத்தை வீசுகிற, திருச்செந்தூர் அரசே-திருச்செந்தூர்ப் பெருமானே, சிற்றிலை அழியேலே-எங்கள் சிற்றிலை அழியாதே.

இச்செய்யுளில், தாலுரைத்தல் சப்பாணிகொட்டல் முத்தம் கேட்டல், வரவழைத்தல், நிலவை வரப்புகலுதல், என்னும் செயல்கள் சிற்றில் அமைக்கும் சிறுமிகளால் தம் செயலாகச் சொல்லப்பட்டிருப்பது ஆராய்ச்சிக்குரியது. விநாயகன் ஒரு மருப்புக்குப் பிஞ்சுமதி உவமையாக்கப் பெற்றிருப்பது முன்னோர் முறை தழுவியதேயாம். அஞ்சுகரக் குஞ்சரத்துக்கு அமைந்த அடைமொழிகள் சொற்சுவை மிக்கவை.

90 துன்று திரைக்குண் டகழ்மடுவிற்
சூர னொளிக்கப் பகைநிருதர்
தொல்லைப் பதியு மவரிருந்து
துய்த்த வளமுந் தூளாக்கி
வென்று செருவிற் பொருதழித்தாய்
வேதா விதித்த விதிப்படியே
விலக்கி வெகுண்டு மீண்டளித்தாய்
வேண்டு மடியார் வினையொழித்தாய்
கன்று மமணர் கழுவேறக்
காழிப் பதியில் வந்துதித்துக்
கள்ளப் பரச மயக்குறும்பர்
கலக மொழித்துக் கட்டழித்தாய்

அன்று தொடுத்துன் வழியடிமை
யடியேஞ் சிற்றி லழியேலே
யலைமுத் தெறியுந் திருச்செந்தூர்
அரசே சிற்றி லழியேலே.

(இ-ள்) துன்றுதிரை-மிகுந்த அலைகளையுடைய, குண்டு அகழ் மடுவில் - ஆழம் மிக்க கடலிலே, சூரன் ஒளிக்க - சூரபதுமன் ஒளிந்துகொள்ள, பகை நிருதர்-பகைவராகிய அசுரரது, தொல் லைப் பதியும்-பழமையான நகரமும், அவர் இருந்து துய்த்த வளமும்-அவர்கள் இருந்து அனுபவித்த செல்வமும், தூள் ஆக்கி-பொடியாகும் வண்ணம் அழித்து, செருவில் பொருது வென்று அழித்தாய்-போரிலே போராடி வென்று அழித்தாய், வேதா விதித்த-பிரமன் விதித்த, விதிப்படியை-விதிமுறையை, விலக்கி-மாற்றி, வெகுண்டு-அவனைச் சினந்து, மீண்டு அளித்தாய்-திரும்பவும் அவனுக்குப் படைப்புத்தொழிற்குரிய நிலைமையைக்கொடுத்தாய், வேண்டும் அடியார்-பக்தி செய்கிற அடியார்களது, வினை ஒழித்தாய் - புண்ணிய பாவ கருமங்களை அழித்து அருளினாய், கன்று சமணர்-பகைத்து நின்ற சமணர்கள், கழுவேற-கழுவேறி ஒழியுமாறு, காழிப்பதியில் வந்து உதித்து-சீர்காழித்திருப்பதியில் திருஞானசம்பந்த மூர்த்தியாய் அவதரித்து, கள்ளப்பரசமயக் குறும்பர் - வஞ்சமிக்க பௌத்த சமணமாதிய அயல் மதங்களைத் தழுவிய குறும்பர்களின், கலகமொழித்து-கலகத்தைமுற்றிலும் அழித்து, கட்டு அழித்தாய் - அவர்களை வேரோடு அழித்தாய், அன்று தொடுத்து உன் வழியடிமை - அன்று முதல் நாங்கள் உனக்கு வழி வழி அடியார் ஆவோம், அடியேம் சிற்றில் அழியேல் - அலைமுத்து எறியும் திருச்செந்தூர் அரசே சிற்றில் அழியேல்.

இச்செய்யுளில் முருகனாக நின்று, சூரசம்மாரம் செய்ததும், பிரமனுக்குப் பிரணவம் உரைத்தருளியதும் திருஞான சம்பந்தப் பெருமானாக அவதரித்துப் பரசமயக் குறும்பர் கலகம் ஒழித்ததும் விளக்கப்பட்டன. அன்று தொடுத்து உன் வழியடிமை

என்றது சிந்தித்த இன்புறற்குரியது. கழுஏற என்ற சொற் பிரயோகத்தால் சமணர் தம் சூள் பொய்த்தமையால் தாமே கழுவேறி இறந்தனர் என்பதும் அருளே உருவமாகவுடைய சம்பந்தப்பெருமான் கூன் பாண்டியனைத் தூண்டி சமணரைக் கழுவேற்றுவித்தார் என்று சிலர் கருதுவது பொருந்தாது என்பதும் விளக்கமாகும். இது தக்கயாகப்பரணியில் நன்கு விளக்கப்பட்டுளது. இந்நூலிலும் முன் ஒருமுறை வந்துளது. கட்டழித்தல்,பரசமயக்குறும்பர்,என்ற தொடர்கள் நயமுடையவை. குறும்பு, சிறுபகை, சிற்றரசு முதலிய பலபொருள் தரும்சொல், இங்கு சமணர் பௌத்தராகிய சிறுபகைவரைக் குறித்தது.

91 களிப்பா ருனைக்கண் டவரவரே
கண்ணு மனமும் வேருகிக்
கள்ள னிவனை நம்முடைய
காதல் வலையிற் கட்டுமென
விளிப்பார் விரக மங்குரித்த
வேடப் பலிப்பைப் பாரென்று
மெள்ள நகைப்பா ரிவருடனே
விளையா டாமல் வேருகித்
துளிப்பார் திரைக்குண் டகழுடுத்த
தொல்லைப் பதியும் பகிரண்டத்
தொகையுந் தொகையில் பல்லுயிருந்
தோற்ற மொடுக்கந் துணையாய்நின்
றளிப்பா யழிக்கை கடனலக்கா
ணடியேஞ் சிற்றி லழியேலே
யலைமுத் தெறியுந் திருச்செந்தூர்
அரசே சிற்றி லழியேலே.

(இ-ள்) உனைக்கண்டு-உன்னை மனக் கண்ணாற் கண்டு, களிப்பார் - மகிழ்வார், அவர் அவர் கண்ணும் மனமும் வேறு ஆகி-அவரவர் கண்ஒன்று காண மனம் ஒன்று நினைக்க, கள்ளன் இவனை - நம் மனதைக் கொள்ளைகொண்ட இக்கள்வனை, நம்முடைய காதல் வலையில் - நம்முடைய அன்பு வலையினாலே, கட்டும் என - பிணிப்போம் என்று, விளிப்பார் - ஒருவரையொருவர் அழைத்துக் கூறிக்கொள்வர், விரகம் அங்குரித்த-விரகவேதனைக் குறிகள் முளைத்தெழுந்த, வேடப் பலிப்பைப்பார் என்று - எனது வேடமைப்பைப் பாராய் என்று, மெள்ள நகைப்பார்-மெள்ளச் சிரிப்பார், இவருடனே - இத்தன்மையுள்ள இளம் பெண்டிருடனே, விளையாடாமல் - நீயும் உடன் சேர்ந்து விளையாடாமல், வேறாகி - இவர்கள் கருத்தின் வேறுபட்டவனாகி, துளிப்பார் - நீர் துளித்தல் நிறைந்த, திரை - அலைகளையுடைய, குண்டு அகழ் உடுத்த-ஆழ்ந்த கடல் அகழியைஉடுத்த, தொல்லைப்பதியும் - இப் பழமையான திருச்செந்திற் பதியையும், பகிரண்டத் தொகையும்-பூமி என்னும் அண்டத்துக்கு வெளியில் உள்ள பிற அண்டத் தொகுதிகளையும், தொகையில் பல்லுயிரும்- எண்ணற்ற பலவகை உயிர்களையும், தோற்றம் ஒடுக்கம் துணையாய் நின்று - அவ்வவற்றின் தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்கும் துணையாய் நின்று, அளிப்பாய்-காக்கும் கருணாமூர்த்தியே, அழிக்கை கடனல காண்-நீ இவர்கள் சிற்றிலை அழிப்பது முறையன்று கண்டாய், அடியேம் சிற்றில் அழியேல், அலைமுத்து எறியும் திருச்செந்தூர் அரசே சிற்றில் அழியேல்.

சிறுமியர் ஈடுபாட்டை விளக்கி அவர் அமைத்த சிற்றிலை அழியாதே என்று வேண்டுவதாக இச்செய்யுள் அமைக்கப் பட்டுளது. களிப்பார், விளிப்பார், நகைப்பார், இவருடனே நீ விளையாடாமல் வேறாகி அழிக்கை கடனலகாண் என்று வினை முடிவுபெறும். நின்பெருந்தகைமைக்கு இச்சிற்றில் சிதைத்தல் தகுவதென்று என்பதை விளக்க, 'தொல்லைப்பதியும் பகிரண்டத் தொகையும் பல்லுயிரும் தோற்றம் ஒடுக்கம் துணையாய் நின்று அளிப்பாய்' என்று விளித்தார். அளிப்பாய் அழிக்கை கடனல

காண் என்ற சொல்லமைப்பில் உள்ள நயம் சிந்தித்து இன்புறற் குறியது. விளையாடாமல் என்பதைச் சிறுமியர் செயலாகவே கூறித்துளிப்பார் என்ற சொல்லுக்குக் கண்ணீர் துளிப்பார் என்று பலர் பால்வினை முற்றாகக்கொண்டு பொருளுரைப்பாரு முளர். துளிப்பு ஆர்திரை என்று பிரித்துப் பொருள் செய்தல் இயற்கையொடு பொருந்துமாறும் இவருடனே விளையாடாமல் என்பதை முருகன் செயல் ஆக்குதல் நன்கு பொருந்துமாறும் உணர்ந்துகொள்க.

92 கூவிப் பரிந்து முலைத்தாயர்
கூட்டி யெடுத்து முலையூட்டிக்
குடுமி திருத்தி மலர் சொருகிக்
கோலம் புனைந்து கொண்டாடிப்
பூவிற் பொலிந்த திருமேனிப்
புனிதா வண்டற் புறத்தெயிலிற்
புகுந்தா லினியுன் னுடலேறப்
புழுதி யிறைத்துப் போகாமற்
காவிக் குறுந்தோட் டிதழ்நெருக்குங்
கண்ணி தனைக்கொண் டோச்சிவளைக்
கானற் றரளத் தொடையாலுன்
கைத்தா மரையைக் கட்டிவிடோ
மாவித் துணையே வழியடிமை
யடியேஞ் சிற்றி லழியேலே
யலைமுத் தெறியுந் திருச்செந்தூ
ரரசே சிற்றி லழியேலே.

(இ-ள்) பரிந்து கூவி - அன்போடு அழைத்து, முலைத்தாயர் - பாலூட்டும் தாயர், கூட்டி எடுத்து - உன்னை ஆறுருவும் ஒன்று மாறு கூட்டிஎடுத்து அணைத்து, முலையூட்டி - முலைப்பால் கொடுத்து, குடுமி திருத்தி - உனது குஞ்சியை நன்கு அமைத்து,

மலர் சொருகி - மணமலர்களைச் சொருகி, கோலம் புனைந்து - பலவகை அலங்காரங்களும் செய்து, கொண்டாடி - பலபடப் பாராட்டுதலால், பூவிற் பொலிந்த - பூவைப்போல் விளங்குகிற, திருமேனி - அழகிய திருமேனியையுடைய, புனிதா - பரிசுத்தனாகிய முருகப்பிரானே, வண்டற்புறத்து - யாம் வண்டல் விளையாடும் இடத்தில்உள்ள, எயிலிற் புகுந்தால் - எமது சிற்றிலின் வெளி மதிற் பக்கம் நீ வந்து புகுந்தால், இனி உன உடல் எற - இப்பொழுது உன் உடல் முழுவதும், புழுதி இறைத்துப்போகாமல் - புழுதி படிந்து திரும்பா வண்ணம், காவிக்குறுந்தோட்டு இதழ் நெருக்கும் கண்ணிதனைக்கொண்டு - சிறிய நீல மலர்களின் இதழ்களால் நெருக்கித் தொடுக்கும் மாலைகளைக்கொண்டு, ஓச்சி - ஓங்கி, வளைக்கானல் தரளத் தொடையால் - கானலில் விளையும் சங்கமுத்து மாலையால், உன் கைத்தாமரைக் கட்டிவிடோம் - உனது கையாகிய தாமரை மலரைக் கட்டிவிடமாட்டோம், ஆவித்துணையே, எங்கள் உயிர்த்துணையே, வழியடிமை - யாம் உனது வழியடிச்சியராவோம், அடியேம் சிற்றில் அழியேல், அலைமுத்து எறியும் திருச்செந்தூர் அரசேசிற்றில் அழியேல்.

கொண்டாடி என்னும் வினையெச்சம் பொலிந்த என்னும் பெயரெச்சத்தைக் கொண்டு முடிந்தது. கட்டிவிடோம் என்னும் சொல் ஒன்ருய் நின்று கட்டமாட்டோம் எனவும், இரண்டாய்ப் பிரிந்து கட்டி, விடமாட்டோம் எனவும் பொருள்தரும். "உள் உடலிற் புழுதி யேருவண்ணம், யாம் உன்னைக் காவிக்குறுந் தோட்டிதழ் நெருக்குங் கண்ணியால் ஓச்சி, கானல்வளைத் தரளத் தொடையால் உன் கைத்தாமரையைப் பிணித்து உன்னை விடமாட்டோம். நீ எமது ஆவித்துணை, யாம் உனது வழியடிமை, ஆதலால் எம் செயலைப் பொறுத்து எம் சிற்றிலைச் சிதையாது செல்க" என்று வேண்டியவாறும். "நீ எம் சிற்றிலைச் சிதையாதே என்று வேண்டுகின்ருேம். சிதைப்பினும் யாம் உன்னைப் பிணித்து வருத்தோம்" என்று கூறியதாகவும் கொள்ளலாம். சொருகி என்னும்சொல் நூல் வழக்கில் செருகி என்று வழங்கு

வதே பெரும்பான்மையாம். சொருகி என்பது உலக வழக்கு நெறி பற்றியதாம்.

93 பொய்யா வளமை தரும்பெருமைப்
பொருநைத் துறையில் நீராட்டிப்
பூட்டுங் கலன்கள் வகைவகையே
பூட்டி யெடுத்து முலையூட்டி
மெய்யா லணைத்து மறுகுதனில்
விட்டா ரவரை வெருமலுனை
வெறுக்க வேறு கடனுமுண்டோ
விரும்பிப் பரலைக் கொழித்தெடுத்துக்
கையா லிழைத்த சிற்றிலைநின்
காலா லழிக்கை கடனலகாண்
காப்பா னழிக்கத் தொடங்கிலெங்கள்
கவலை யெவரோ டினியுரைப்போம்
ஐயா வுனது வழியடிமை
யடியேஞ் சிற்றி லழியேலே
யலைமுத் தெறியுந் திருச்செந்தூர்
அரசே சிற்றில் அழியேலே

(இ-ள்) பொய்யா வளமைதரும் - பொய்யாத வளத்தைக் கொடுக்கிற, பெருமை-பெருமையையுடைய, பொருநைத் துறையில்-தாமிர வருணித்துறையில், நீராட்டி-நீராடுவித்து, பூட்டும் கலன்கள்-அணிவித்தற்குரிய பொன்மணிப் பூண்களை, வகைவகையேபூட்டி-வகைவகையாய்ப் பூண்பித்து, எடுத்து முலையூட்டி-கையில் எடுத்து முலைப்பால் கொடுத்து, மெய்யால் அணைத்து-உடம்போடு அணைத்துக்கொண்டு, மறுகுதனில் விட்டார்-வீதியில் விட்டார்கள், அவரை வெருமல்-அவர்களை வெறுக்காமல், உன்னை வெறுக்க வேறு கடனுமுண்டோ - உன்னை வெறுக்க முறையுண்டோ, விரும்பி - ஆசையோடு, பரலை - பருக்கைக் கற்களை, கொழித்து எடுத்து - கொழித்து எடுத்து எறிந்துவிட்டு,

கையால் இழைத்த - யாம் கைவருந்தி அமைத்த, சிற்றில - சிறு மனையை, நின் காலால் அழிக்கை - நின் காலால் அழிப்பது, கடனல காண் - முறையன்று கண்டாய், காப்பான் அழிக்கத் தொடங்கில் - எங்களைக் காத்தருளும் கடம்பூண்ட நீயே அழிக்கத்தொடங்கிவிட்டால், எங்கள் கவலை எவரோடு இனி உரைப்போம் - எங்கள் கவலையை யாரோடு இனிச் சொல்வோம், ஐயா, உனது வழியடிமை - ஐயா, யாம் உனது வழியடிமை, அடியேம் சிற்றில் அழியேல், அலைமூத்தெறியும் திருச்செந்தூர் அரசே சிற்றில் அழியேல்.

பொய்யா வளமை என்றது, "வான் பொய்ப்பினும் தான் பொய்யா மலைத்தலைய கடற்காவிரி" என்ற சான்றோர் வாக்கை நினைப்பிப்பதாம். மறுகுதனில் விட்டார் அவரை வெறுமல் உனை வெறுக்கக் கடனுண்டோ, என்றது,

நீயும் தவறிலை நின்னைப்புறங்கடைப்
போதர விட்ட நுமரும் தவறிலர்
நிறையழி கொல்யானை நீர்க்குவிட்டாங்குப்
பறையறைந் தல்லது செல்லற்க வென்னா
விறையே தவறுடையான்"

என்ற சான்றோர் செய்யுளை நினைப்பிக்கும். கையால் இழைத்த சிற்றிலின் அருமை, பரலைக்கொழித்து என்று விசேடணத்தால் நன்கு விளக்கப்பட்டது. கையால் இழைத்தல்-கையால் வருந்திச் சிறிது சிறிதாய் அமைத்தல், 'கையால் இழைத்ததைக் காலால் அழித்தல்' நயமுள்ள தொடையமைப்பாம். காப்பான் அழிக்கத்தொடங்கில் எங்கள் கவலை எவரோடு இனியுரைப்போம் என்றது மிகவும் உருக்கம் உள்ள சொற்பொருள் நயம் பொருந்திய தொடையாம். பிறவும் ஆய்ந்தறிக.

## பத்தாவது
## சிறு தேர்ப் பருவம்.

மட நடை பெயரும் பருவத்திராகிய இளங் குழவியர் தமது நடைப்பயிற்சிக்கு உறுதுணையாக உதவும் பொருட்டுச் சிறுதேருருட்டும் இயற்கை நலத்தை விளக்கிப் பாடும் பருவம் சிறு தேர்ப் பருவமாம். இப்பருவமே ஆண்பாற் பிள்ளைத் தமிழில் இறுதியில் அமைவதாம்.

94 தண்டே னுடைந்தொழுகு மருமாலை நீண்முடி
தரிக்குஞ் சதக்கிரது செந்
தருணமணி யாசனத் தேறமா தலிசெழுந்
தமனியத் தேரு ருட்டப்
பண்டே பழம்பகை நிசாசரர்க ளூட்கப்
பரப்புநிலை கெட்ட தென்று
பரவுங்கு பேரன்வட பூதாம் பொருபுட்
பகத்தே ருருட்ட வீறு
கொண்டே யுதித்தசெங் கதிரா யிரக்கடவுள்
குண்டலந் திருவில்வீசக்
கோலப்ர பாமண்ட லச்சுடர் துளக்கமுட்
கோலெடுத் தருண வருணன்
றிண்டே ருருட்டவளர் செந்தில்வாழ் கந்தனே
சிறுதே ருருட்டி யருளே
சேவற் பதாகைக் குமாரகம் பீரனே
சிறுதே ருருட்டி யருளே.

(இ-ள்) தண்டேன்-குளிர்ச்சி பொருந்திய தேன், உடைந்து ஒழுகு-மலர்கள் மலர்தலால் ஒழுகுகிற, மருமாலை - மணமிக்க

மாலையை அணிந்த, நீண்முடி தரிக்கும்-நீண்ட கிரீடத்தைச் சூடிய, சதக்கிரது-இந்திரன், செந்தருண மணியாசனத்தேற-செம்மையும் அழகும் பொருந்திய மணிகள் அழுத்திய அரியணையில் வீற்றிருக்க, மாதவி-இந்திரன் தேர்ப்பாகனாகிய மாதவி, செழும் தமனியத்தேர் உருட்ட-செழுமையான பொன்னால் அமைந்த தேரை நடத்த, பண்டே பழம்பகை-முன்பே பழம் பகையாகிய, நிசாசரர்கள் உட்க-அசுரர் அஞ்ச, பரப்பு நிலை - நிலப்பரப்பின் நிலைமை, கெட்டது என்று-சீர் கெட்டதே என்று, பரவும் குபேரன்-உன்னைத் துதிக்கும் குபேரன், வடபூதரம் பொரு-வடக்கின் கண் உள்ள மாமேரு மலையை நிகர்த்த, புட்பகத் தேர் உருட்ட-புட்பகம் என்னும் பெயரினதாகிய தனது விமானத்தைச் செலுத்த, வீறுகொண்டு-ஒளிமிக, உதித்த-உதயமாகிய, செங்கதிராயிரக் கடவுள் - ஆயிரம் செங்கிரணங்களையுடைய சூரியனது, குண்டலம் திருவில்வீச-காதணி நல்லொளிசெய்ய, கோலப்ரபா மண்டலச் சுடர் துளக்க-அழகிய ஒளிவட்டமாகிய பரிவேடத்தின் சுடர் அசைய, முட்கோல் எடுத்து-முள் அமைந்த கோலைக் கையில் தாங்கி, அருணவருணன்-செந்நிறம் உள்ள சூரியன் தேர்ப்பாகனாகிய அருணன், திண்டேர் உருட்ட-திண்ணிதாகிய சூரியன் தேரை உருட்ட, வளர்-அருள்புரிந்து கோயில்கொண்ட, செந்தில் வாழ் கந்தனே - திருச்செந்திற் குமரப்பெருமானே, சிறு தேர் உருட்டியருள் - நீ உனது சிறு தேரை உருட்டியருள்க, சேவற் பதாகை - சேவற்கொடியையுடைய, குமார கம்பீரனே - கம்பீரமான தோற்றமுள்ள குமரக்கடவுளே, சிறுதேர் உருட்டியருள்-நீ உனது சிறியதேரை உருட்டியருள்வாயாக.

மாதவி தேருருட்டக் குபேரன் புட்பகத்தேர் உருட்ட, அருணன் தேருருட்ட நீ சிறுதேருருட்டி யருள்க என்று வினை முடிவு பெறும். நின் அருளாலே தேவர் வாழ்வு நிலைபெறும் என்பது கருத்து.

95 வாராரு மிளமுலை முடைத்துகிற் பொதுவியர்
மனைக்குட் புகுந்து மெல்ல
வைத்தவெண் டயிருண்டு குடமுருட் டிப்பெருக
வாரிவெண் ணெயையுருட்டிப்
பாராம லுண்டுசெங் கனிவாய் துடைத்துப்
பருஞ்சகடு தன்னையன்று
பரிபுரத் தாளா லுருட்டிவிளை யாடுமொரு
பச்சைமான் மருகபத்தி
யாராமை கூருமடி யவர்பழ வினைக்குறும்
பறவே யுருட்டி மேலை
யண்டபகி ரண்டமு மனைத்துலக முஞ்செல்லு
மாணையா ழியையுருட்டிச்
சேராநி சாசரர் சிரக்குவ டுருட்டுநீ
சிறுதே ருருட்டி யருளே
சேவற் பதாகைக் குமாரகம் பீரனே
சிறுதே ருருட்டி யருளே.

(இ-ள்) வார் ஆரும்-கச்சு அணிந்த, இளமுலை-இளமையான தனங்களையுடைய, முடைத்துகில்-கொச்சைநாற்றம் வீசும் ஆடைகளையுடைய, பொதுவியர் மனைக்குள்-ஆய்ச்சியர் இல்லங்களுள், மெள்ளப்புகுந்து-மெல்ல நுழைந்து, வைத்த வெண்டயிர் உண்டு-அங்கு அவர்கள் வைத்திருந்த வெண்மையான தயிரை உண்டு, குடமுருட்டி-அத்தயிர்க் குடங்களை யுருட்டி, பெருக வாரி-மிகவும் வாரி, வெண்ணெயை உருட்டி-வெண்ணெயைக் கையால் திரட்டி, பாராமல் உண்டு-பிறர் பாரா வண்ணம் அதனை விழுங்கி, செங்கனிவாய் துடைத்து-செந்நிறக் கொவ்வைக் கனிபோன்ற வாயைத்துடைத்து, பருஞ்சகடு தன்னை-பெரிய சகடமாக வந்த அவுணனை, அன்று-தனது இளம்பருவத்தே, பரிபுரத்தாளால்-சிலம்பு அணிந்த தனது பாதங்களால், உருட்டி விளையாடும்-உருட்டித் திருவிளையாடல் புரிந்த, ஒரு பச்சைமால் மருக-ஒப்பற்ற

பசுமைநிறங் கொண்ட திருமால் மருகனே, பத்தி ஆராமைகூரும் அடியவர்-பத்தியின் ஆராமை மிக்க அடியவர்களது, பழவினைக் குறும்பு-முன்னைய பிறவிகளில் இயன்ற வினைகளாகிய பகைகளை, அறவே உருட்டி-அழியுமாறு உருட்டி, மேலை அண்ட பகிரண்டமும் அனைத்துலகமும்-பழமையான அண்டத்திலும் பகிரண்டங்களிலும் பிற எல்லா உலகங்களிலும், செல்லும் ஆணை யாழியை உருட்டி-செல்லுகிற ஆஞ்ஞா சக்கரத்தை உருட்டி, சேரா நிசாசரர்-பகைவராகிய அசுரரது, சிரக்குவடு உருட்டும் நீ-தலைகளாகிய மலைச் சிகரங்களை நிலத்திற் புரள உருட்டிய நீ, சிறு தேர் உருட்டியருள் -உனது சிறிய தேரை உருட்டி யருள்வாயாக. சேவற் பதாகைக் குமார கம்பீரனே சிறுதேர் உருட்டியருள்.

பொதுவியர் மனைக்குட் புகுந்து, தயிர் உண்டு; குடம் உருட்டி, வெண்ணெயை உருட்டிச் சகடுதன்னைத் தாளால் உருட்டி, விளையாடிய பச்சைமால் மருகனே, அடியவர் பழவினைக் குறும்பு அறவே உருட்டி, ஆணையாழியை உருட்டி, நிசாசரர் சிரக்குவடு உருட்டும் நீ சிறுதேர் உருட்டியருள் என்று வினை முடிவுபெறும்.

மாமனும் மருகனும் ஒரு தன்மையராய் இருப்பர் என்னும் உலகவியலை விளக்குமாறு திருமால் உருட்டிய செயல் மூன்றும் முருகன் உருட்டிய செயல் மூன்றும் இங்குக் குறிப்பிடப்பட்டன. ஆராமை - கண்டும் கேட்டும் நினைந்தும் துதித்தும் தொழுதும் வணங்கியும் மனம் திருப்தியுறாமை-தெவிட்டா அமுதம் ஆராவமுதன் என்னும் தொடர்களால் இப்பொருள் விளங்கும்.

96 கொந்தவிழ் தடஞ்சாரன் மலயமால் வரைநெடுங்
குடுமியில் வளர்ந்த தெய்வக்
கொழுந்தென்ற லங்கன்று மாடகப் பசுநிறங்
கொண்டுவிளை யும்பரு வரைச்
சந்தன நெடுந்தரு மலர்ப்பொதும் பருமியற்
றண்பொருநை மாநதி யுமத்
தண்பொருநை பாயவிளை சாலிநெற் குலையுமச்
சாலிநெற் குலைபடர்ந்து

முந்தவிளை யும்பரு முளிக்கரும் பும்பரு
முளிக்கரும் பைக்கறித்து
முலைநெறிக் கும்புனிற் றெருமைவா யுஞ்சிறுவர்
மொழியும் பரந்தவழியுஞ்
செந்தமிழ் மணக்குந் திருச்செந்தில் வேலனே
சிறுதே ருருட்டி யருளே
சேவற் பதாகைக் குமாரகம் பீரனே
சிறுதே ருருட்டி யருளே.

(இ-ள்) கொந்து அவிழ்-பூங்கொத்துக்கள் மலர்கின்ற, தடம் சாரல் - அகன்ற மலர்ச்சாரலையுடைய, மலயமால்வரை - பெரிய பொதிய மலையின், நெடுங்குடுமியில் - பெருஞ் சிகரத்தில், வளர்ந்த-தோன்றி வளர்ந்த, தெய்வக் கொழுந்தென்றலங்கன் றும்-தெய்விக சக்தி வாய்ந்த கொழுமையான இளந்தென்றலும், ஆடகப் பசுநிறங்கொண்டு விளையும்-பொன்னின் பசுமை நிறம் கொண்டு விளைகின்ற, பருவரைச் சந்தன நெடுந்தரு மலர்ப் பொதும்பரும்-அப்பெரிய மலையில் உள்ள நீண்டு வளரும் சந்தன மரங்கள் அடர்ந்த மலர்ச் சோலையும், இயல்தண் பொருநை மாநதியும் - இயற்கை வளமும் குளிர்ச்சியும் பொருந்திய தாமிர வருணி நதியும், அத்தண் பொருநை பாய விளை சாலி நெற்குலை யும்-அந்தத் தாமிர வருணி பாய்தலால் விளைகின்ற செந்நெற்குலை யும்,அச் சாலி நெற்குலை படர்ந்து-அந்த நெற்குலையோடு படர்ந்து, முந்த விளையும்-ஓங்கி வளர்கிற, பரு முளிக்கரும்பும்-பெரிய முற் றிய கரும்பும், பரு முளிக்கரும்பைக் கறித்து - அக்கரும்பைக் கடித்து, முலை நெறிக்கும்-தனது மடுவை நெறிக்கின்ற, புனிற் றெருமை வாயும்-ஈன்ற அணிமையையுடைய எருமையின் வாயும், சிறுவர் மொழியும்-இளஞ்சிறார் சொற்களும், பரந்த வழியும் - அகன்ற வழிகளும்; செந்தமிழ் மணக்கும் - செந்தமிழ் மணம் மணக்கின்ற, திருச்செந்தில் வேலனே-திருச்செந்தூரிற் கோயில் கொண்ட முருகப்பிரானே, சிறு தேருருட்டியருள், சேவற்பதா கைக் குமார கம்பீரனே சிறுதேர் உருட்டியருள்.

"தென்றற்கன்றும் சந்தனப் பொதும்பரும், பொருநை நதியும் சாலி நெற்குலையும் கரும்பும் எருமைவாயும் சிறுவர் மொழியும் பரந்த வழியும் செந்தமிழ் மணக்கும் திருச்செந்தில் வேலனே சிறுதேர் உருட்டியருள்" என்று வினைமுடிவு பெறும்.

97 பெருமையுட னீடலத் திருவர்பர சமயமும்
பேதம் பிதற்றி விட்ட
பிறைமருப் புக்கரும் படுகமுந் நீரிற்
பிழைத்துநீள் கரையி லேறப்
பொருவருஞ் சந்நிதியி லெய்துவது போன்மணி
புடைக்குமிள நீரிரண்டு
புணரியின் மிதந்துசந் நிதியேற விந்நாட்
பொருந்தவிளை யாடி முன்னாள்
இருதிரையி னிற்சந் தனக்கொடி மரத்தினை
யிழுத்துவரு மெருமையேற்றை
யெப்பொழுது முதியகற் பகடாக வுலகத்தில்
யாவருங் காண வென்று
திருவுள மகிழ்ந்திரு விளையாடல் கண்டநீ
சிறுதே ருருட்டி யருளே
சேவற் பதாகைக் குமாரகம் பீரனே
சிறுதே ருருட்டி யருளே.

(இ-ள்) பெருமையுடன் நீள்தலத்து-பெருமையோடு ஓங்கி வளர்ந்த திருச்செந்தூர்த் திருப்பதியிலே, இருவர் பரசமயமும்-சமணர் பௌத்தர் என்ற இரு திறத்தாரது புறமதக் கொள்கைகளும், பேதம் பிதற்றிவிட்ட - சைவசமயத்துக்கு வேறுபாடும் மாறுபாடும் ஆகவுள்ள பொருள்களை வழக்கு நெறியாற் பிறழக் கூறி, விட்ட-(தம் கொள்கைகளே வெல்லும் என்னும் கருத்தால்) அனுப்பிய, பிறை மருப்பு-பிறை போன்ற கொம்புகளையுடைய, கரும்பகடு-கரிய பெரிய யானை யொன்று, முந்நீரிற் பிழைத்து-கடலில் மூழ்கி இறவாது உயிரோடு பிழைத்து, நீள் கரையில்

ஏற-நீண்ட திருச்செந்திற் கரையில் ஏற, பொருவருஞ் சந்நிதியில் எய்துவது போல்-ஒப்பற்ற ஆலயத்திருமுன்பு அடைவது போல, மணி புடைக்கும் இளநீர் இரண்டு-முத்து முளைத்த இரண்டு இளநீர்கள், புணரியில் மிதந்து-கடலிலே மிதந்து வந்து, சந்நிதியேற-சந்நிதியில் வந்து சேருமாறு, இந்நாள்-இந்நாளிலே, பொருந்த விளையாடி-பொருத்தமாக விளையாடி, முன்னாள்-பூர்வ காலத்தில், இருதிரையினில்-பெரிய அலையிலே, சந்தனக்கொடி மரத்தினை இழுத்துவர-சந்தன மரத்தால் இயன்ற கொடிக்கம்பத்தை, இழுத்துவரும் எருமையேற்றை-கோயில் வாயில் வரையில் இழுத்து வந்த எருமைப் போத்தை, எப்பொழுதும் - எக்காலத்திலும், முதியகற் பகடாக-கல்லினாற் சமைந்த பழமையான எருமையாக, உலகத்தில் யாவரும் காண என்று-உலகிலுளோர் யாவரும் காணவேண்டும் என்று, திருவுளம் மகிழ்ந்து-மனத்தில் விருப்பமுற்று, திருவிளையாடல் கண்டநீ - திருவிளையாடல் செய்தருளிய நீ, சிறுதேர் உருட்டியருள், சேவற் பதாகைக் குமார கம்பீரனே சிறுதேர் உருட்டியருள்.

இச் செய்யுளில் அமைந்த வரலாறுகள் திருச்செந்தூர்த் தலத்தின் சரித்திரத்தோடு தொடர்புபெற்றவையாய் இருக்க வேண்டும் என்பது இச் செய்யுட் போக்கால் விளங்குகின்றது. ஆனால், திருச்செந்தூர்ப் புராணத்திலே இவ்வரலாறுகள் இடம் பெற்றிருப்பதாகச் சொல்ல வியலவில்லை. சைவப்பெருமையை விளக்கவும், செந்திற் பெருமையை விளக்கவும் இவ் வரலாறுகள் துணை நிற்பனவாம்.

சமணரும் பௌத்தரும் சைவரோடு வாதாடிக் கடலிலே ஒரு களிற்றையனுப்பி 'இது மீண்டு வருமாறு செய்யவல்லோரே மெய்க்கொள்கையைப் பின்பற்றினோராவர்' என்று சூளுரைத்துக்கொண்டு கரையில் நிற்கையில், புறமதத்தார் செயலால் அக்களிறு மீளாது முருகனருளால் மீண்டு 'சைவத்தின் மேற் சமயம் வேறு இலை' 'சிவத்தின்மேல் தெய்வம் வேறிலை' என்ற உண்மையை விளக்கியது என்பது முதற்கண் குறித்த வரலா

றுகும். இரண்டு இளநீர்கள் அற்புதக்காட்சியாகக் கடலில் மிதந்து முருகன் திருக்கோயிலுக்கு வந்து அவனுக்கு உரிய பணி பூண்பனவாயின என்பது இரண்டாவது செய்தியாம். கடல் நடுவில் மிதந்ததொரு சந்தன மரத்தினை எருமைப்போத்து ஒன்று தன்னந்தனியே இழுத்துவந்து முருகன் திருக்கோயிலுக் குரிய கொடிக் கம்பம் ஆக்க உதவி புரிந்தது என்பதும் அவ் வெருமை இவ்வருஞ் செயல் காரணமாக இன்றும் திருச்செந் திலிற் கல்லாற் சமைந்து போற்றத்தகுவதாயுள்ளது என்பதும் மூன்றும் செய்தியாம். இவற்றுள் முன்னிரண்டு செய்திகளும் புதியவையாம். பின்னது பண்டைய வரலாறுகும் என்பது பிள்ளைத் தமிழாசிரியர் கருத்தாகும்.

98 ஆதிநூன் மரபாகி யதனுறும் பொருளாகி
யல்லவை யனைத்து மாகி
யளவினுக் களவாகி யணுவினுக் கணுவா
யனைத்துயிரு மாகி யதனின்
சாதியின் பிரிவாகி வெவ்வேறு சமயங்க
டானுகி நானுகிமெய்ச்
சாலோக சாமீப சாரூப சாயுச்ய
தன்னொளியி லீலை யாகி
யோதிய தனைத்தினு மடங்காமல் வேறுகி
யுள்ளும் புறம்புமாகி
யொளியிலொளி யாகிமற் றிரவுபக லற்றவிட
மொப்புவித் தெனை யிருத்தித்
தீதினை யகற்றிநின் றிருவருள் புரிந்தவா
சிறுதே ருருட்டி யருளே
சேவற் பதாகைக் குமாரகம் பீரனே
சிறுதே ருருட்டி யருளே.

(இ-ள்) ஆதிநூல் மரபாகி-வேத சாஸ்திரத்தின் அமைதி யாகி, அதன் உறும் பொருளாகி-அதனுள் அமைந்த பொருளாகி,

அல்லவை அனைத்தும் ஆகி-அங்ஙனம் இயம்பப்பெறாத பிற பொருள் எல்லாம் ஆகி, அளவினுக்களவு ஆகி-உண்மைப் பொருள்களை அளந்தறியும் அளவை நூல்களுக்கு அளவு கற்பிப்பதாய், அணுவினுக்கு அணுவாய்-அணுவினுள் உறையும் பரமாணுவாகி, அனைத்துயிரும் ஆகி-எல்லா உயிர்களும் ஆகி, அதனின்-அவ்வுயிர்களுள், சாதியின் பிரிவாகி-பலதிறப்பட்ட சாதிப் பிரிவுகள் ஆகி, வெவ்வேறு சமயங்கள் தானாகி-வெவ்வேறு மதங்களாகி, நானாகி-நான் ஆகி, மெய்-உண்மையான, சாலோக சாமீப சாரூப, சாயுச்சிய தன்னொளியிலீலையாகி-சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்ற நால்வகையாய் அமைந்த தன் ஒளியின் திருவிளையாடலாகி, ஓதியது அனைத்தினும்-மேற்கூறிய எல்லாவற்றிலும், அடக்காமல் வேறாகி-அடங்காமல் அவற்றின் வேறாகி, உள்ளும் புறம்புமாகி-அகமும் புறமுமாகி, ஒளியில் ஒளியாகி-ஒளியினுள் மிக்க ஒளியாகி, இரவு பகல் அற்றவிடம்-இரவும் பகலும் இல்லா ஒரு இடத்தே, ஒப்புவித்து எனை இருத்தி-என்னைச் சேர்த்து நிறுத்தி, தீதினை அகற்றி - தீங்கை நீக்கி, நின் திருவருள் புரிந்தவா-நினது திருவருளைப்புரிந்த தெய்வமே, சிறுதேர் உருட்டியருள், சேவற் பதாகைக் குமார கம்பீரனே சிறுதேர் உருட்டியருள்.

ஆதிநூல்-வேதம், மரபு-முறை, வேத மரபும் வேதப்பொருளும் அல்லவை அனைத்தும் ஆயவன் எனப்பட்டான், சுப்பிரமணியனாதலால். "எல்லாப் பொருளும் இதன் கண் உள, இதன் கண் இல்லாத எப்பொருளும் இல்லை" என்பதே வேதத்தின் சிறப்பாம். ஆயினும் இங்கு அல்லவை எனப்பட்டது வேதத்துக்குப் புறம்பாகிய பொருளெனக் கொள்ளவேண்டும். வெவ்வேறு சமயங்கள் தானாகி என்றது, அகச்சமயம் அகப்புறச் சமயம் புறச்சமயம் புறப்புறச்சமயம் என்னும் எவற்றையும் அடக்கிய வாறும். 'நானாகி' என்றது "நட்ட நடுவே யிருந்த நானென்பர் சிலர்" என்று தாயுமானவர் இழித்துரைத்ததும் கந்தபுராணமுடையார் மாயாவாதம் என்று இகழ்ந்ததுமாகிய அத்துவித மதக்கருத்தை விளக்குவதாம். ஆசிரியர் விசிட்டாத்துவைதி

யாய் இருந்தும் நூல் முருகன் புகழ் மாலையாய் இருந்தும் இச் சொல் இங்கு இடப்பெற்றது பரவச வுணர்ச்சியால் என்று கூறல் வேண்டும். "யானும் தானாய் தானாய் யிருந்தோனை யாதும் எவர்க்கும் முன்னோனை" என்ற பெரியார் வாக்கு இங்கு சிந்திக்கத் தக்கது. சாலோகம் - அவன் உலகில் வாழ்ந்து அவனைக் கண்டுகளிகூர இடம் பெறுதல், சாமீபம்-அவன் அருகில் அணுக்கத்தொண்டனாய் அடிமைபூண்டிருக்கும் பேறு பெறுதல், சாருபம் - அவன் உருவத்தில் உள்ள சின்னங்களைத்தானும் பெற்று அருள் வெள்ளத்திலாடல், சாயுச்சியம் - அவனுக்கு நிகராக அமைந்த நிலையில் ஆனந்த மயமாக வாழும் பேறு பெறுதல். இரவு பகல் அற்றவிடம்-தத்துவாதீத நிலை. தீதினை அகற்றி என்றது ஆகாமி சஞ்சித கருமங்களை ஒழித்து அருள்புரியும் அருட்சிறப்பை விளக்குவதாகும். பிராரப்தம் உடம்போடு துய்த்தே கழித்தற்கும் மனவலிமை அருள்வதும் அவன் செயலே யாகும். தன்னொளி இலீலை என்றது: சச்சிதானந்த ஸ்வரூபமாகிய தனது ஒளியால் நிகழும் திருவிளையாடல் யாவும் தன்னை விளக்கவே உதவுவனவாம் என்னும் உண்மையைத் தெரிப்பதாம். இங்கு ஒளி என்றது அவனருட் சக்தியை எனலாம்.

99 புலமை வித்தக மயூரவா கனவள்ளி
போகபூ ஷணசூரன்
சலமொ ழித்தவ நிசாசரர் குலாந்தக
சடாக்ஷர காங்கேய
குலவு கொற்றவ குமாரகண் டீரவ
குருபர புருகூத
னுலக ளித்தவா செந்தில்வாழ் கந்தனே
யுருட்டுக சிறுதேரே
யுரக நாயகன் பஃறலை பொடிபட
வுருட்டுக சிறுதேரே.

(இ-ள்) புலமை வித்தக-இயற்புலமையிற் சிறந்த பெரும் புலவ, மயூர வாகன - மயில்வாகனமுடையாய், வள்ளி போக பூஷண-வள்ளி தேவியார் போகத்தைப் பூஷணமாக வுடையாய்,

சூரன் சலம் ஒழித்தவ - சூரபதுமனால் நல்லோர்க்கு நேர்ந்த இடுக்கண்களை ஒழித்தருளிய தேவசேனாபதியே, நிசாசரர் குலாந்தக-அசுர குலங்களுக்குக் கூற்றுவனே, சடாக்ஷர-சரவண பவ என்ற ஆறெழுத்துருவோய், காங்கேய - காங்கேயனே, குலவு கொற்றவ-விளங்குகின்ற வெற்றியுடையாய், குமார-குமரக் கடவுளே, கண்டீரவ-சிங்க நிகர்ப்போய், குருபர - பரமகுருவே, புருகூதன் உலகு அளித்தவா-இந்திரன் உலகைக் காத்தருளிய தலைவனே, செந்தில்வாழ் கந்தனே-திருச்செந்தூர்த் திருப்பதி யில் வாழும் கந்தனே, சிறுதேர் உருட்டுக-சிறுதேர் உருட்டுவா யாக, உரக நாயகன் பஃறலை பொடிபட-அரவத் தலைவனாகிய ஆதிசேடனது ஆயிரம் பணாமுடிகளும் பொடிபடும் வண்ணம், சிறுதேர் உருட்டுக-சிறுதேர் உருட்டுவாயாக.

இச்செய்யுள், வடசொற்கள் பல அமையப்பெற்று முருகப் பெருமானைப் பலவாறு விளிப்பதாய் அமைந்திருப்பது காண்க.

100 **வீதி மங்கல விழாவணி விரும்பிய**
**விண்ணவ ரரமாதர்**
**சோதி மங்கல கலசகுங் குமமுலை**
**தோய்ந்தகங் களிகூரச்**
**சாதி மங்கல வலம்புரி யினமெனத்**
**தழைச்சிறை யொடுபுல்லி**
**யோதி மந்துயில் செந்தில்வாழ் கந்தனே**
**யுருட்டுக சிறுதேரே**
**யுரக நாயகன் பஃறலை பொடிபட**
**வுருட்டுக சிறுதேரே**

(இ-ள்) வீதிமங்கல விழா அணி-வீதியிலே திருவுலாப் புறப் படுகிற மங்களமான நினது திருவிழாக் கோலத்தை, விரும்பிய-காண விரும்பிய, விண்ணவர்-தேவர்கள், அரமாதர் - தேவமகளி ரது, சோதிமங்கல கலச குங்கும முலை-ஒளிபொருந்திய மங்கள மான கலசம்போன்ற குங்குமச்சேறு எழுதிய தன பாரங்களை, தோய்ந்து அகம் களிகூர-தழுவி மனமகிழ்ச்சி மிக, சாதிமங்கல

வலம்புரி இனம் என-மங்களப்பொருளாகிய உயர்ந்த சாதி வலம் புரிச் சங்கினங்கள்போல, தழைச்சிறையொடு - தழைத்த சிற கோடு, புல்லி - ஒன்றையொன்று தழுவிக்கொண்டு, ஓதிமம் துயில் - அன்னங்கள் துயில்கின்ற, செந்தில்வாழ் கந்தனே-திருச்செந்தூரில் வாழும் முருகப்பெருமானே, உருட்டுக சிறு தேர், உரகநாயகன் பஃறலை பொடிபட வுருட்டுக சிறுதேர்.

அன்னங்கள் வலம்புரிக்கு நிகர் எனப்பட்டன, வெண்மை நிறம் உருவவமைப்பு முதலிய காரணங்களால் குங்குமமுலை என்றது குங்குமச் சேற்றால் அலங்கரிக்கும் இயல்பை விளக்குவ தாம். 'குங்கும வருணம் கொங்கையின் இழைத்து,' என்றார் இளங்கோவடிகள். இயற்கைச் செந்நிறம் குறித்ததும் ஆகலாம்.

101 விரைத்த டம்பொழில் வரைமணி யாசனத்
திருந்துவிண் ணவர்போற்றி
வரைத்த டம்புரை மழவிடை யெம்பிரான்
மனமகிழ்ந் திடவாக்கால்
இரைத்த பல்கலைப் பரப்பெலாந் திரட்டிமற்
றிதுபொரு ளெனமேனா
ளுரைத்த தேசிகா செந்தில்வாழ் கந்தனே
யுருட்டுக சிறுதேரே
யுரக நாயகன் பஃறலை பொடிபட
வுருட்டுக சிறுதேரே.

(இ-ள்) விரைத்தடம் பொழில்-மணம் மிக்க அகன்ற சோலைகள் சூழ்ந்த, வரைமணி யாசனத்திருந்து-மலையாகிய சிங் காதனத்து வீற்றிருந்து, விண்ணவர் போற்றி - தேவர்வணங்க, வரைத்தடம்புரை-பெரு மலைபோன்ற, மழவிடை-இளமையான இடபவாகனத்தையுடைய, எம்பிரான்-எம் ஆண்டவனாகிய சிவ பெருமான், மனம் மகிழ்ந்திட-மனம் மகிழும் வண்ணம், வாக் கால்-திருவாய் மலரால், இரைத்த-முழங்குகிற, பல்கலைப்பரப் பெலாம் திரட்டி-பலதிறப்பட்ட நூற்பெருக்கங்களின் உட்கருத் தையெல்லாம் ஒருங்கு சேர்த்து, மற்றிது பொருளென - அவற்

றின் பொருள் இதுவேயாகும் என்று, மேல் நாள்-முன்னுளிலே உரைத்த தேசிகா - பிரணவப் பொருளை யுணர்த்திய குரு மூர்த்தியே, செந்தில்வாழ் கந்தனே - திருச்செந்தூரில் வாழும் முருகக்கடவுளே, உருட்டுக சிறுதேர்-நீ உனது சிறுதேர் உருட்டுவாயாக, உரக நாயகன் பஃறலை பொடிபட வுருட்டுக சிறுதேர்.

போற்றி என்னும் எச்சம் போற்ற எனப்பொருள் படுமாறு நின்றது. மழவிடைக்கு வரைத்தடம் உவமையாயிற்று. பிரணவப்பொருளே ஸர்வ சாஸ்திரார்த்தம் என்ற உண்மை விளக்கப்பட்டது.

102 மாது நாயக மெனவடி வுடையசீர்
வள்ளிநாயகமண்ணில்
ஈது நாயக மெனவுனை யன்றிவே
றெண்ணநா யகமுண்டோ
போது நாயகன் புணரியி னுயகன்
பொருப்புநா யகன்போற்றி
யோது நாயக செந்தில்வாழ் கந்தனே
யுருட்டுக சிறுதேரே
யுரக நாயகன் பஃறலை பொடிபட
யுருட்டுக சிறுதேரே.

(இ-ள்) மாது நாயகம் என - பெண்கள் நாயகம் என, வடிவுடைய சீர் - அழகுடைய சிறப்பமைந்த, வள்ளிநாயக - வள்ளி தேவியார் தலைவனே, மண்ணில் - நிலவுலகிலே, ஈது நாயகம் என எண்ண - இதுவே தலைமைத்தெய்வம் என்று எண்ண, உனையன்றி வேறு நாயகம் உண்டோ - உன்னையல்லாது வேறு தெய்வம் உண்டோ, போது நாயகன் - தாமரையில்வாழும் பிரமதேவனும், புணரியின் நாயகன் - பாற் கடலில் வாழும் திருமாலும், பொருப்பு நாயகன் - கயிலைமலையில் வாழும் சிவபிரானும், போற்றிஓதும் நாயக-வணங்கித் துதிக்கும் தலைவனே, செந்தில் வாழ் கந்தனே, உருட்டுக சிறுதேர், உரகநாயகன் பஃறலை பொடி பட வுருட்டுக சிறுதேர்.

நாயகம் என்னும் சொல் இச்செய்யுளிற் பன்முறை யடுக்க நயந்தந்து விளங்குதல் காண்க. கலியுகத்திற் கண்கண்ட தெய்வம் என்று பொது மக்கள் புகழ்ந்து பாடும் முருகப்பிரானை, "உனையன்றி வேறுஎண்ண நாயகம் உண்டோ" என்று கேட்டது இயல்பே.

103 தக்க பூசனைச் சிவமறை யோர்பெருந்
தானநா யகர்தம்பேர்
திக்க னைத்தினு மெண்முத லிமையோர்
தேவர்தந் திருமேனி
மிக்க மாலிகை தருபவர் அடியவர்
மின்னனார் சமயத்தோர்
ஒக்க வாழ்கெனச் செந்தில்வாழ் கந்தனே
யுருட்டுக சிறுதேரே
யுரக நாயகன் பஃறலை பொடிபட
வுருட்டுக சிறுதேரே.

OFFICE OF THE ... 5 MAY ... MADRAS

(இ-ள்) தக்க பூசனை - ஆகம விதிப்படியமைந்த பூஜா கைங்கரியத்தை மேற்கொண்ட, சிவமறையோர் - ஆதி சைவர்களும், பெருந்தான நாயகர் - பெருமைபடைத்த கோயில் உரிமையாளராகிய ஸ்தானிகர்களும், தம்பேர் - தம்பெயரை, திக்கனைத்தினும் எண் முதலிமையோர் - எட்டுத் திக்குக்களிலும் எண்ணும் பெருமைபெற்ற முதற்குலத்தோராகிய பூதேவர்களும், தேவர் தம் திருமேனி மிக்க மாலிகை தருபவர் - தேவர் பிரான் திருமேனிக்குரிய சிறந்த பூமாலைகளைத் தொடுத்துக் கொடுப்பவர்களும், அடியவர் - பிற சிவனடியார்களும், மின்னனார் - மின்போன்ற எழிலுடைய தேவதாசிபரும், சமயத்தோர் - பிற அகச்சமயத்தோரும், ஒக்க வாழ்கென - ஒருங்கு வாழ்வாராக என்று, செந்தில் வாழ்கந்தனே உருட்டுக சிறுதேர், உரக நாயகன் பஃறலை பொடிபட வுருட்டுக சிறுதேர்.

இச்செய்யுள் இந்நூலின் இறுதிச் செய்யுளாதலால் முருகன் அடியார் பலரும் வாழ்வு பெறுமாறு வாழ்த்தும் வாழ்த்தாக அமைந்துளது.